வரு.74 இல. 48 ★

www.vaaramanjari.lk

/ Thinakaran.lk / ThinakaranLK

REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA

# தினகரன் வாரமஞ்சரி

THINAKARAN VAARAMANJARI

24 பக்கங்கள் 100/-

2022 நவம்பர் 27ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை

November 27 Sunday, 2022




05
இக்காலத்துக்கு பொருந்தும் பட்ஜட்!



08
பெண்களை வேட்டையாடும் கும்பல்!



09
இனப்பிரச்சினைக்கான தீர்வில் தீவிர அக்கறையுடன் ஜனாதிபதி



24
சாமிக்க கவனம்!



## தேர்தல் தொடர்பில் எவரும் அச்சமடைய வேண்டாம்

**புதிய சட்டமூலம் விரைவில் பாராளுமன்றுக்கு**



**லோரன்ஸ் செல்வநாயகம்**

உள்ளூராட்சி சபை தேர்தல் தொடர்பான புதிய சட்டமூலமொன்று விரைவில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுமென மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி சபைகள் இராஜாங்க அமைச்சர் ஜானக்க வக்கும்புர பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

06

**மாகாணசபைத் தேர்தல் நடத்தப்படும் வரை**

## மாகாண மட்டத்தில் M.P க்கள் குழுவை அமைத்து அபிவிருத்தி

**மக்களுக்கான சேவை குறித்து பிரதமர் விளக்கம்**




**லோரன்ஸ் செல்வநாயகம்**

மாகாண சபை தேர்தல் நடத்தப்படும் வரை அந்தந்த மாகாணங்களை பிரதிநிதித்துவப்படுத்தும் பாராளுமன்ற உறுப்பினர்களைக் கொண்ட சபைகளை அமைத்து அப்பகுதியில் மக்களுக்குத் தேவையான அபிவிருத்திப் பணிகளை முன்னெடுத்துச் செல்ல முடியுமென பிரதமர் தினேஸ் குணவர்த்தன

06

**மாத்தளை, ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலய**

## சிவானந்த குருக்களின் இறுதிக்கிரியை இன்று



விபத்தில் மரணமான மாத்தளை ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயத்தின் பிரதம குருவும் சிலாபம் முன்னேஸ்வரம் வடிவாம்பிகா சமேத முன்னைநாதர் தேவஸ்தானத்தின் மகோற்சவ குருவுமான சிவஸ்ரீ சிவானந்த குருக்களின் இறுதிக் கிரியைகள் இன்று ஞாயிற்றுக்கிழமை நடைபெறும். இன்று 27 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 09.00 மணிக்கு களுதாவளை,

06

**எதிர்காலத்தில் அரச ஊழியர்களுக்கு**

## வீட்டுக்கு அண்மித்த அலுவலகங்களில் வேலை

**அரசு விசேட கவனம் செலுத்த முடிவு**

போக்குவரத்துச் செலவுகள் அதிகரித்துள்ளதால், அரச ஊழியர்களை வீட்டுக்கருகாமையிலுள்ள அலுவலகங்களில் பணிக்கமர்த்துவதில் அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ளது.

இதன்படி, வீட்டுக்கண்மித்த பிரதேசங்களிலுள்ள அரச அலுவலகங்களுக்கு அரச ஊழியர்களை இடமாற்றம் செய்யும் முறைமை ஏற்படுத்தப்படவுள்ளது.

ஜனாதிபதியின் சிரேஷ்ட பொருளாதார ஆலோசகர் டாக்டர் ஆர்.எச்.எஸ். சமரதுங்க மற்றும்

06

**சமஷ்டி அடிப்படையில் அரசுடன் பேசி தீர்வைக் காணத் தயார்**

# தமிழ்க் கட்சிகள் ஓரணியில்



**கடும் நிபந்தனைகளுடன் ஜனாதிபதியின் அழைப்பை சாதகமாக பயன்படுத்திக்கொள்ள வடக்கு கிழக்கின் அனைத்து தமிழ்த் தேசிய கட்சிகளும் இணைந்து செயற்பட முடிவு**

சமஷ்டி அடிப்படையில் அரசாங்கத்துடன் பேச்சுநடத்தி இனப்பிரச்சினைக்கான தீர்வைக் காண வடக்கு, கிழக்கை பிரதிநிதித்துவம் செய்யும் தமிழ்க் கட்சிகள் தயாராகி வருகின்றன. இதற்கென அனைத்து தமிழ்க் கட்சிகளும் ஓரணியில் செயற்படவும் இணங்கியுள்ளன. சமஷ்டி அடிப்படையில் அதிகாரப் பகிர்வை தமிழ் மக்களுக்கு வழங்கும் வகையிலான புதிய அரசியலமைப்பை

06

## இலங்கைக்கு சீனா தொடர்ந்தும் ஆதரவளிப்பதாக உறுதியளிப்பு

**ஜனாதிபதி ரணிலை சந்தித்த சீனத் தூதுவர் தெரிவிப்பு**



இலங்கை தற்போது எதிர்கொண்டுள்ள நெருக்கடிகளிலிருந்து மீள்வதற்கு தனது முழுமையான ஒத்துழைப்பை வழங்குமென சீனா உறுதியளித்துள்ளது. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் இலங்கைக்கான

06

## எங்கள் கருத்து...

### அப்பாவிப் பெண்களை இலக்கு வைக்கும் காட்டுமிராண்டித்தனம்!

மத்திய கிழக்கு நாடுகளுக்கு வீட்டுப்பணிப்பெண் தொழிலுக்காகச் செல்கின்ற இலங்கைப் பெண்கள் எதிர்கொள்கின்ற துன்பங்கள் தொடர்ந்து கொண்டே செல்கின்றன. குடும்ப வறுமையைப் போக்கிக் கொள்வதற்காக பல்வேறு இன்னல்களைத் தாங்கியவாறு அந்நாடுகளுக்குச் செல்கின்ற இலங்கைப் பெண்களில் பலர் அனுபவிக்கின்ற வேதனைகள் விபரிக்க இயலாதவையாகும்.

அவர்கள் அனுபவித்துள்ள சித்திரவதைகள் பலவற்றை நாம் இதுவரை அறிந்துள்ளோம். ஏற்கனவே உறுதியளிக்கப்பட்டவாறு வேதனம் வழங்கப்படாமை ஒருபுறமிருக்க, உடலளவிலும் மனதளவிலும் இலங்கைப் பணிப்பெண்கள் பலர் அனுபவிக்கின்ற நெருக்கடிகள் அதிகம்.

உடலெங்கும் இரும்பு ஆணிகள் ஏற்றப்பட்ட நிலையில் இலங்கைப் பணிப்பெண் ஒருவர் மத்தியகிழக்கு நாடொன்றிலிருந்து தாயகம் திரும்பியிருந்த செய்தியையும் நாம் முன்னர் அறிந்துள்ளோம். உடலில் தீக்காயங்களுக்குள்ளான மற்றும் மோசமாகத் தாக்கப்பட்ட பெண்கள் பலர் அந்நாடுகளில் தொழில்புரிய முடியாமல் இலங்கை திரும்பியுள்ளனர். அங்கு பாலியல்ரீதியில் உபத்திரவங்களை எதிர்கொள்ள வேண்டிய நிலைமையும் உள்ளதாக தகவல்கள் வெளிவருகின்றன.

கொடுமைக்குள்ளான பெண்களில் பலர் அங்குள்ள இலங்கைத் தூதரகத்தினால் பராமரிக்கப்பட்டு தாயகத்துக்கு அனுப்பி வைக்கப்பட்ட சம்பவங்களும் அதிகமுள்ளன. பணிப்பெண்கள் மீதான அநீதிகள் தொடர்பாக உரிய நடவடிக்கை மேற்கொள்வதில் சிக்கல்கள் உள்ளதனால், இந்நிலைமை தொடர்ந்து கொண்டே செல்கின்றது.

06

## QR முறைமையில் எந்த மாற்றமுமில்லை



**வதந்திகளை மறுத்து கஞ்சன டுவிட்டர் பதிவு**

எரிபொருள் விநியோகத்துக்கான QR முறைமை அடுத்த மாதத்திலிருந்து இரத்துச் செய்யப்படுமென வெளியாகியுள்ள செய்தி உண்மைக்கு

06

**புதிய ஜனநாயக முன்னணி ஏற்பாட்டில்**

## மும்பை தாக்குதலுக்கு கொழும்பில் போராட்டம்



மும்பை தாக்குதலை நினைவுகூர்ந்து, பயங்கரவாதத்துக்கு முடிவு கட்ட நடவடிக்கை எடுக்க கோரி இலங்கையிலுள்ள பாகிஸ்தான்

06

## மது பாவனையில் 30% வீழ்ச்சி; வருமானத்தில் 20% அதிகரிப்பு

**நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய**



நாட்டில் மது பாவனை குறைந்துள்ள போதிலும் கலால் திணைக்களத்தின் வருமானம் அபரிமிதமாக அதிகரித்துள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

மதுபான போத்தல்களுக்கு பாதுகாப்பு ஸ்டிக்கர் ஒட்டப்பட்டதையடுத்து வருமானம் அதிகரித்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

ஜனவரி 3ஆம் திகதி முதல் நாட்டில் உரிமம் பெற்ற மதுபான உற்பத்தி நிலையங்கள் பாதுகாப்பு ஸ்டிக்கர்களை ஒட்டுவது

06

**சென்னை, மதுரை, கோவை, திருவனந்தபுரம், கொச்சி**

## யாழ்.பலாலியிலிருந்து விரைவில் 'ஃபிட்ஸ் எயார்' சேவை ஆரம்பம்

**நிறுவன துணைத் தலைவர் பீட்டர் ஹில் தெரிவிப்பு**

- டிசம்பர் 08 முதல் திருச்சி – கொழும்பு
- வாரத்தில் 03 விமான சேவைகளும் ஆரம்பம்



**திருச்சி எம்.கே. ஷாகுல் ஹமீது**

சென்னைக்கு யாழ்ப்பாணத்திலிருந்து புதிய விமான சேவைகளை தொடங்கும் திட்டமும், பயணிகளிடமிருந்து கிடைக்கும் வரவேற்பின் அடிப்படையில்

06

**04 மில். அவு.டொலர் செலவில் மெல்பெர்ன் நகரில்**

## முதலாவது இலங்கை பள்ளிவாசல் நிர்மாணம்



அவுஸ்திரேலியாவின் முதலாவது இலங்கை பள்ளிவாசல் மெல்பெர்ன் நகரில் 04 மில்லியன் அவுஸ்திரேலிய டொலர் செலவில் நிர்மாணிக்கப்பட்டுள்ளது. இப்பள்ளிவாசலின் திறப்பு

06

## சைவமங்கையர் மாணவிகள் மீண்டுமொருமுறை சாதனை

**29 பேருக்கு 09A, 19 பேருக்கு 08A**

கொழும்பு சைவமங்கையர் வித்தியாலய மாணவிகள் நேற்று முன்தினம் வெளியான சாதாரண தர பரீட்சை பெறுபேற்றில் மீண்டும் ஒரு முறை சாதனை படைத்துள்ளனர். அவ்வகையில் 9A பெறுபேற்றினை

06



# மதிசுதாவின் வெந்து தணிந்தது காடு

நான் யுத்தம் நிகழ்ந்து கொண்டிருக்கும் காலங்களிலேயே யாழ்ப்பாணத்தில் பிறந்தேன். அக்கம்பக்கத்தினரோடு என்னை ஒரு அட்டைப்பெட்டியில் போட்டுக் கொண்டு பதுங்கு குழிகளில் (பங்கர்களில்) பதுங்கி இருந்த கதைகளையும் ஷெல் துண்டுகள் பட்டு பக்கத்தில் இருப்பவர்களின் கை,கால்களில் ரத்தம் ஆறாக ஓடும் கதைகளையும், கையை பிடித்துக் கொண்டு பின்தொடரும் மரணம் பற்றியும் எனது அம்மா என்னிடம் அடிக்கடி கூறி இருக்கிறார்.

அது எப்படி இருக்கும் என்பதோ யாழ்ப்பாணத்தில் வாழ்பவர்கள் எத்தனை துயரங்களுக்கு மத்தியில் வாழ்ந்தார்கள் என்பதோ என்னால் உணர்ந்து பார்க்க முடியாத ஒரு உணர்வாகவே இருந்து வந்தது.

ஏனெனில் பிள்ளைகளை பாதுகாக்கும் பொருட்டு என் பெற்றோர் இடம் பெயர்ந்து விட்டனர். அதனால் நான் நேரடியாக பாதிக்கப்படவில்லை என்றாலும், எனது அம்மா, அம்மாவின் சகோதரர், பெற்றோர் என எல்லோரும் அந்த வாழ்க்கையை வாழ்ந்திருக்கிறார்கள், என் அம்மாவின் மூத்த தம்பி, என் மாமா யுத்தத்தின் போது காணாமல் போன பல லட்சங்களில் ஒரு ஜீவன். சாப்பிட உணவில்லாமல், போக்குவரத்து வசதி இல்லாமல், அம்மா என்னை வயிற்றில் சுமந்து கொண்டு பல மைல் தூரம் நடந்து வந்த கதை எல்லாம் கேட்டிருக்கிறேன். எனது இருபதுகளின் தொடக்கத்தில் நானும் ஒருமுறை சந்தேகத்தின் பேரில் கொழும்பில் பிடிபட்டு ஒரு இரவு முழுதும் பொலிஸ் நிலையத்தில் இருந்திருக்கிறேன், எனது அடையாள அட்டையில் பிறந்த இடம் "யாழ்ப்பாணம் " என்றிருந்ததால்.

யுத்தத்தை பற்றிய செய்திகளும், புத்தகங்களும், கவிதைகளும், படங்களும் எனக்குள் மிகுந்த பாதிப்பை ஏற்படுத்தியிருந்தன, ஒரு கட்டத்துக்கு மேல் என்னால் யுத்தம் தொடர்பான எந்த படைப்பையும் பார்ப்பதோ வாசிப்பதோ பெரும் சவாலாக இருந்தது. அதை கற்பனை செய்து பார்ப்பதே கொடூரமானதாக இருந்தது.

ஒருநாள் மாலையில் மதிசுதாவிடமிருந்து ஒரு அழைப்பு வந்தது. "வெந்து தணிந்தது காடு" திரைப்படத்தின் மொழி பெயர்ப்பில் ஒரு சில மாற்றங்களை செய்யவேண்டுமென்று, நானும் மகிழ்ச்சியுடன் வேலையைத் தொடங்கினேன். இதுவரை 28க்கும் அதிகமான விருதுகளை பெற்றிருக்கும் இந்தப் படத்தில் அப்படி என்ன தான் இருக்கிறது என்ற ஆர்வம் வேறு,






மிக ஆறுதலாக ஒவ்வொரு காட்சியாக மனதை ஒரு நிலைப்படுத்தி பார்த்தேன்.

கொஞ்சம் கொஞ்சமாக அது ஒரு சினிமா என்பதை மறந்து எம்மக்களின் வாழ்க்கை என்பதை உணரத்தொடங்கினேன்.

பாத்திரங்களின் தெரிவு அத்தனை கச்சிதமாய் பொருந்தி இருக்கிறது, அதைப்பற்றி படத்தின் இயக்குனரிடம் கேட்டபோது படத்தில் நடித்தவர்களில் பெரும்பாலானோர் தாம் வாழ்ந்த வாழ்க்கையையே இன்னொருமுறை கேமரா முன்னிலையில் வாழ வேண்டியிருந்தது என்றார்.

திரை மொழி மிக தீர்க்கமானதாகவும், புரிந்துகொள்ளும் வகையிலும் இருந்தது.

படத்தின் கலைஞர்கள் மிக மிக தேர்ச்சி பெற்றவர்களாக, புதியவற்றை கற்றுக் கொள்ளும் ஆர்வமுள்ளவர்களாக இருக்கிறார்கள் என்பது படத்தின் மூலம் புரிந்தது.

இன்னும் இலங்கையில் உத்தியோக பூர்வமாக வெளியாகாத திரைப்படம் ஆகையால் சில காட்சிகளின் நேர்த்தியையும் ரசனையையும் இங்கே குறிப்பிட முடியாமல் உள்ளது. அன்பும் மனிதநேயமும் சமத்துவமும் கற்பிக்கும் பல காட்சிகளை இந்த படத்தில் அவதானித்தேன்.

இந்த திரைப்படத்தில் நியாயம், தர்மம், என்பதெல்லாம் அவரவர்க்கான அவ்வப்போதைய சூழ்நிலையைப் பொறுத்தது என்பதும் அழகாக எடுத்துக்காட்டப்படுகிறது.

மரணத்தை எப்போதும் எதிர்கொள்ளத் தயாரான இந்த மக்கள் காதல் கொள்கிறார்கள், உறவுகளை நேசிக்கிறார்கள், மற்றவரை பற்றி சிந்திக்கிறார்கள், எல்லோரையும் ஒன்று போல சேர்த்துக்கொள்கிறார்கள்.

ஒரு நல்ல கலைப் படைப்பானது அதை பார்ப்பவர்களுக்குள் ஒரு அதிர்வினை ஏற்படுத்த வேண்டும். அந்த அதிர்வு கட்டாயமாக வன்முறையைத் தூண்டுவதாக இருக்கக்கூடாது என்பது என் எண்ணம். சில சமயங்களில் ஒருவர் மீது ஏற்படும் மரியாதையாகவோ, கருணையாகவோ ஏன் குற்றவுணர்ச்சியாகக் கூட இருக்கலாம். சகமனிதர் இத்தனை துயருற்றிருக்கிறார்களே என கண்ணீர் சிந்தவும் வைக்கலாம்.

பாதிக்கப்பட்ட ஒருவனால் அல்லது ஒரு சிலரால் வன்மத்தைக் கடத்தாது தமது வலிகளை ஒரு திரைப்படமாக்க முடியுமானால் அது ஒரு உன்னதமான படைப்பாகிறது.

எனக்கு மதிசுதாவின் "வெந்து தணிந்தது காடு" ஒரு உன்னதமான படைப்பு.

நமது வெந்து தணிந்தது காடு திரைப்படமானது இதுவரை 15 நாடுகளில் 28 சர்வதேச விருதுகளை பெற்றிருக்கின்றது. ஈழத்தின் பழம்பெரும் பாடகியான பார்வதி சிவபாதம் பிரதான பாத்திரம் ஏற்று நடித்திருந்ததுடன் 2 நாடுகளில் சிறந்த நடிகைக்கான சர்வதேச விருதையும் பெற்றிருக்கின்றார்.

இலங்கையில் இத்திரைப்படமானது 3 வரலாற்று சாதனைகளைப் புரிந்திருக்கிறது.

ஐபோனில் உருவாக்கப்பட்டு வெளியாகும் முதலாவது இலங்கைத் திரைப்படம்.

அதிகளவான மக்கள் இணைந்து முதலிட்டுத் தயாரித்த திரைப்படம்.

அதிகளவான விருதைப் பெற்ற கைப்பேசித் திரைப்படம்.

திரைப்படத்தை நிச்சயமாக திரையரங்குகளுக்கு ச் சென்று பாருங்கள். நிச்சயமாக உங்கள் பணத்தை விட பலமடங்கு அனுபவமும் திருப்தியும் பெற்று வருவீர்கள்.

**நிரோஜினி ரொபர்ட்**

## திருமண நாளில்...
# மனைவிக்கு ஒரு மடல்

இருபது வயதிலேயே
திருமணம்பேசி என்னை
" ஆண் பார்க்க " வந்தார்கள்
என்னோடு அப்போது
ஒட்டி உறவாடிய
பண்ணோடு ஊர்வலம் வந்த
பசுமையான காலமது

எட்டுத் திசையிலும்
கொட்டும் இசை ( பண) மழை
குளித்து குதூகலித்த தருணம்

ரசிகைகள் சிலர்...
நாட்டுப் பாடகனை
வீட்டுப் பாடகனாக
அழகு பார்க்க
விண்ணப்பம்செய்தார்கள்...

நான் வசித்த தெருவிலேயே
என்னை வாசித்த
ஒரு குடும்பம்
பெண்ணை தருவதற்கு
என் –
அன்னை இல்லத்திற்கு
அணிவகுத்து வந்தது

வந்தவர்கள் தங்கமானவர்கள்
மாதாவும் பிதாவும்
மனதார சம்மதித்து
" சேதாரம் " தேவையில்லை
செல்வ மகளைத் தருகிறோம்
வாக்குறுதியோடு
வழியனுப்பிவைத்தார்கள்

" தாரம் வரணும் பின்னே
பொருளாதாரம்
வளரணும் முன்னே "
எனது இலட்சிய
புது மொழி வழியிவ்
பயணித்துக்கொண்டிருந்தேன்

அந்த நிலாவும்
நட்சத்திரங்களும்
ஐந்தாண்டுகள் காத்திருந்தன

ஒரு கார்த்திகை 26 ( NOVEMBER)
இருபத்து ஐந்தும்
இருபதும்
இரண்டறக் கலந்தன....

குரல் போலவே
இவள்
இறை அருள் எனக்கு
" கலா கதிர் " வெளிச்சமாகியது
அல்ஹம்துலில்லாஹ்

பாட்டுத் தொழில் மாப்பிள்ளை
நம்பி கை பிடித்தாள்
மூன்று முத்துக்களை
பெற்றுத்தந்தாள்
வாரிசு பரிசாக
மகராசி வந்த மறுமலர்ச்சி
அரசு சொகுசு வீடு தருகிறது
பாடகன் ...
வியர்வை விதைத்து
வர்த்தகனாகிறான்

எப்போதாவது
வெந்நீராய் கொதிக்கும்போது
பன்னீராய் மாற்றுகிறாள்
சோக இருளில்
சுழலும்போது
சந்தோச ஒளி ஏற்றுகிறாள்

எத்தனை இரவுகள்
நித்திரை இழந்த
விடியல்கள் உனக்கு
பத்தரை மாற்றுத் தங்கமே

பிரியமானவளே....
புரிந்துணர்வு (understanding)
வெற்றிக் கிண்ணத்திற்கு
உன்னை
பரிந்துரை செய்கிறேன் கண்ணே
வாழ்க்கை கலையை
கற்றுத்தந்த பேராசிரியை நீ
ஒற்றுமை கயிற்றைப்
பற்றிக்கொண்டே
சொர்க்கத்திலும்
ஒன்றாய் வசிப்போம் வா...



இப்படிக்கு
காதலுடன்
கணவன் / கலைஞன்
**கலைக்கமல்**

# நேத்திரங்கள் பொழியும் நினைவேந்தல்!

(இரங்கற்பா)

(கலாபூஷணம் மாத்தளை பெ.வடிவேலன்)



அம்பிகையின் திருக்கோயிலை அலங்கரித்த அண்ணலே !
அல்லும்பகலும் அயராதுழைத்த அருஞ்சுடரே
அம்பிகையின் திருநாமத்தினை அகிலமெங்கும் ஓங்கச்செய்தவரே
"அஞ்சாதீர்" என்று அருள்வாக்கினை நித்தம் உதிர்த்தவரே !

ஆயிரமாயிரம் பூஜைகளால் அம்மனை அர்ச்சித்தவரே !
ஆன்மிகப் பெருங்கடலே ஆசி, பகன்ற அருளாளரே
இன்முகத்துடன் இறைபணி புரிந்த ஏந்தலே
ஈடில்லை உம் இறைபணிக்கு நிகரேதுமில்லை இவ்வுலகில் !

உள்ளத்தில் கள்ளமில்லா உவகையின் நன்நாயகரே..!
ஊன் உறக்கமின்றி கண்ணியமாய் கடமையாற்றியவரே
எண்ணில்லா யாகங்கள், ஹோமங்கள் வளர்த்த தவப் புத்திரரே
என்றும் உம் நினைவு நெஞ்சை விட்டகலாது, ஏந்தலே !

ஏங்கித் தவிக்கின்றோம், தாங்கமுடியவில்லை, உம் பிரிவை !
ஏனென்று கேட்பவருக்கு என்னபதில் சொல்வேன் ஐயா?
"ஓம்" என்னும் பிரணவத்தை ஓயாது ஒலித்த நா தளர்ந்ததேன்?
ஔடதம் போல் விளங்கும், உம் அறிவுச் சுரங்கச் சுடர் !

ஔவை உரைத்த மந்திரமாய் ஒலித்த, உம் அறிவுரைகள் !
அன்னை முத்துமாரிக்கு ஐயா ஆற்றிய பூஜைகளில் மகிழ்ந்த
விண்ணுலகத்தினரும் "சிவானந்த ஐயா" வேண்டும் தமக்கென
விரைந்தே இங்குவந்து தேடி அழைத்து சென்றனரோ !

தேற்றுவார் யார்? நெஞ்சம் பதறுதைய்யா – எங்கள் !
நேத்திரங்கள் மழையெனப் பொழியும் கண்ணீரே.....!
போற்றி உம் புகழ்பாடும் அழியாக் காவியங்கள்
சாஸ்திரங்கள் நீர் படைத்தாய் சரித்திரமாய்.....!

எம் நேத்திரங்கள் அருவியாய் பொழியும் நீரே
நினைவேந்தலாகும் !

# மாத்தளை மகா விருட்சம் சாய்ந்ததுவோ !

மாத்தளை மகா விருட்சம் சாய்ந்ததுவோ !

மறையா நினைவுகளுடன் எம் நெஞ்சில் நிறைந்து வாழும் வானுறையும் தெய்வம்

''வேதாகம கிரியா மாமணி''

"சக்திபூஜாதுரந்தரர்"

"சிவாகம கிரியா பூஷணம் "

"சிவாகம வித்வ சிரோன்மணி"

"சக்தி பூஜா விசாரத"

சிவஸ்ரீ சு . சிவானந்தக் குருக்கள் ஐயா வின் ( மாத்தளை அருள்மிகு ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலய பிரதமகுரு ) மறைவு மாத்தளை நகருக்கு பேரிழப்பாக இருப்பது மட்டுமல்ல அனைத்து இடங்களிலும் இருந்து அம்பிகையை தரிசிக்க வரும் அடியவர்கள் அனைவருக்கும் சிவா ஐயாவின் இழப்பு என்பது தாங்க முடியாத பேரிழப்பாகும்.

சிவஸ்ரீ சுப்பிரமணியக் குருக்கள் சிவகாம சுந்தரி அம்மா தம்பதியினரின் புதல்வராக அவதரித்து இந்துமதத்துக்கும் சைவத்துக்கும் தொண்டாற்றியதோடு இனமத பேதமின்றி அனைவரையும் அன்பாக அரைவணைத்து இறைபணியாற்றிய பெரியார் எங்கள் சிவா ஐயா .

எல்லோர் மனதிலும் நிறைந்து வாழ்பவர் அனைவராலும் சிவாசாமி என அன்போடு அழைக்கப்பட்டு வந்தார் .

அன்னை பராபட்டாரிஹா ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலய பிரதமகுருவாக மஹோற்ஸவ குருவாக பரம்பரையாக அம்பிகைக்கு தொண்டாற்றி ஸ்ரீமுத்துமாரியம்பிகை ஆலயத்தில் பூஜைகள் நிகழ்த்தும் அந்த அற்புதக்காட்சியைக் காணக் கண்கள் ஆயிரம் வேண்டும் . அம்பிகைக்கு செய்யும் பணிவிடைகள் சொல்லில் அடங்காதவை ஒரு தாய் தன் குழந்தையை எவ்வாறெல்லாம் அழகுபடுத்திப் பார்க்க முடியுமோ அவ்வாறு குருக்கள் ஐயா அம்பிகையை அழகுபடித்தி எழுந்தருளச் செய்யும் அற்புதக்காட்சியை சொல்லில் வர்ணிக்க முடியாது.

அழகுக்கு ஒப்பில்லாத வல்லி எம் தாய் முத்துமாரியம்மை . அந்தத் தாய்க்கு மேலும் அழகு சேர்க்க பட்டுச் சேலைகள் , மலர்மாலைகள், ஆபரணங்கள் ஆகியவற்றால் அலங்கரித்து சர்வலங்காரநாயகியாக எம்பெருமாட்டியை எழுந்தருளச்செய்து முத்துமாரியம்பிகையை பூஜிக்கும் சிறப்பு எமது குருக்கள் ஐயாவையே சாரும். குருக்கள் ஐயாவின் தீபாராதனையில் அம்பிகை அருள்ஒளி எங்கும் பரவும் உணர்வை எம்மால் மாத்தளை பதியில் உணரமுடியும் . அம்பிகையின் ஆலயத்தில் கும்பாபிஷேகம், மகோற்சவம் , நித்திய நைமித்திய கிரியைகளை மிகவும் பக்திபூர்வமாக நிகழ்த்துவதுடன் ஆலய வளர்ச்சியிலும் பெரும் பணியாற்றி வந்தார் .

மாத்தளை மற்றும் சிலாபம் முன்னேஸ்வரம் ஆலய மகோற்சவம் மற்றும் இலங்கையின் பல இடங்களிலும் மகோற்சவம், கும்பாபிஷேகம் என்பவற்றை ச்செய்து தன்னிகரில்லாத் தொண்டாற்றினார்.

அத்தகைய பெரியார் இன்று அம்பிகையை



சரண்புகுந்தார் . ஐயா பஞ்சணையில் அமைதியாகப் படுத்துறங்குவதைப் பார்க்கையில் நித்திரையோ என ஒருகணம் ஒரு நினைப்பு எம் மனதில் தோன்றி மறைய, அடடா ஐயகோ! வாய் மூடித் தூங்கும் எங்கள் ஐயாவை எப்பிறப்பில் இனிக் கண்போம் !

குருமணியின் இழப்பினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினர் மற்றும் உறவுகள் அனைவருடனும் நாமும் துயர் பகிர்வதுடன் மறந்தும் மறையா நினைவுகளுடன் எம் நெஞ்சில் நிறைந்து வாழும் குருமணியின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல அன்னை ஸ்ரீ முத்துமாரி அம்பாள் பாதம் பணிந்து பிரார்த்திக்கின்றோம்.

**சர்வேஸ்வர ஐயர் பத்மநாபன்**
பீடாதிபதி,
இந்து சமய கற்கைகள் பீடம்
யாழ். பல்கலைக்கழகம்



நிந்தவூர் கமு/ அல்மஸ்ஹர் பெண்கள் உயர்தரபாடசாலை (தேசியப் பாடசாலை ) யின் மாணவத் தலைவர்களுக்கு சின்னம் சூட்டும் நிகழ்வு (25) கல்லூரி வளாகத்தில் நடைபெற்றது. கல்லூரி அதிபர் ஏ.எல்.நிஸாமுதீன் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் கௌரவ அதிதியாகக் கலந்துகொண்ட நிந்தவூர் கோட்டக் கல்வி அதிகாரி எம்.சரிப்தீன் மாணவத் தலைவி. ஏ.ஆர்.மதீஹா றபீக்குக்கு நினைவுச் சின்னம் வழங்குகையில் பிடிக்கப்பட்டபடம்.



பேருவளை சீனன் கோட்டையைச் சேர்ந்த சமூக செயற்பாட்டாளர் ஏ.எம். முஹம்மத் ஸப்வான் தர்கா நகர் தேசிய கல்வியற் கல்லூரியின் தலைவர் எஸ்.பவானந்தனுக்கு, இலங்கை முஸ்லிம் சமூக மூத்த உலமா அஷ்ஷெய்க் முப்தி யூஸுப் ஹனிபா எழுதிய "ஆசிரியம் ஓர் இறைவணக்கம்" என்ற நூலின் பிரதியை அண்மையில் தேசிய கல்வியியற் கல்லூரி அலுவலகத்தில் வைத்து அன்பளிப்புச் செய்த போது எடுக்கப்பட்ட படம். நிகழ்வில் கல்லூரி மாணவிகளும் கலந்து கொண்டனர்.

# கரிகாற்சோழன் விருதுவிழா

தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் சிங்கப்பூர் முஸ்தபா தமிழ் அறக்கட்டளை நிறுவியுள்ள தமிழ்வேள் கோ.சாரங்கபாணி ஆய்விருக்கைக்காக இலங்கை, மலேசியா சிங்கப்பூர் ஆகிய நாடுகளின் இலக்கியப் படைப்புகளுக்கான "கரிகாற்சோழன்" (2018, 2019 மற்றும் 2020 ஆண்டுக்கான) விருதுகள் வழங்கும் விழா 28.11.2022 மாலை 5.00 மணிக்கு தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழக பனுவல் அரங்கத்தில் தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழகம் துணை வேந்தர் முனைவர் வி. திருவள்ளுவன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இவ்விழாவில் தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழக பதிவாளர் முனைவர் சி.தியாகராஜன், சிங்கப்பூர் முஸ்தபா தமிழ் அறக்கட்டளை நிறுவனர் எம் எம். முஸ்தபா, தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழக வளர் தமிழ்ப்புல முதன்மையர் உ.பாலசுப்பிரமணியன் ஆகியோர் கலந்து கொள்ள, வரவேற்புரையை அயல் நாட்டுத் தமிழ்க்கல்வித் துறை தலைவர் இரா. குறிஞ்சி வேந்தன் நிகழ்த்தவுள்ளார்.

விருதுகளை அளித்து வாழ்த்துரை வழங்குகிறார் தஞ்சாவூர் மாநகராட்சி முதல்வர் சண்.இராமநாதன்.

சிறப்புரையை பாடலாசிரியர் கவிஞர் நெல்லை ஜெயந்தா, பாடலாசிரியர் கவிஞர் சிநேகன் ஆகியோர் வழங்குவர்.

நன்றியுரையை 'சிராங்கூன் டைம்ஸ் முதன்மை ஆசிரியர் மு. ஷாநவாஸ் நிகழ்த்துவார்.

இவ்விருது விழாவில் இலங்கையைச் சேர்ந்த மூன்று படைப்பாளிகள் தங்கள் படைப்புகளுக்காக விருது பெறுகிறார்கள்.

2018 ஆண்டுக்காக 'சாகித்ய ரத்னா' தி. ஞானசேகரன் எழுதிய எரிமலை நாவல்.

2019 ஆண்டுக்காக மு.இ.அச்சிமுகமட் எழுதிய எனது நிலமும் நிலவும், 2020 ஆண்டுக்காக அருணா செல்லத்துரை எழுதிய பண்டாரம் வன்னியனார் (கி.பி 1783_ 1811)

**தகவல் கே. பொன்னுத்துரை.**

# சாதனையாளர் விருது பெறும் மாத்தளை மலரன்பன்



மாத்தளை அரச கலாசார மத்திய நிலையத்தின் ஏற்பாட்டில் இம்மாவட்டத்தில் சிறுகதை, நாவல், தொலைக்காட்சி, சினிமா, மெல்லிசைப் பாடல்களுக்கு சிறப்பான பங்களிப்பினை செய்துள்ள சாதனையாளர்களுக்கான விருது வழங்கும் வைபம் டிசம்பர் மாதம் இரண்டாம் திகதி மாவட்ட செயலக வீர கெப்படிப்பொல நினைவு மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இவ்விருதுக்காக தமிழில் நோர்த் மாத்தளையைப் பிறப்பிடமாகக் கொண்ட மாத்தளை மலரன்பன் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

மலரன்பன் தனது படைப்புகளுக்காக அரச தேசிய சாகித்திய விருது மூன்று முறையும், கொடகே தேசிய சாகித்திய விருது மூன்று முறையும் பெற்றுள்ளார். இந்து கலாசார அமைச்சு, கல்வி அமைச்சு மத்திய மாகாண அமைச்சு, மாவட்ட பிரதேச சபை சிறப்பு விருதுகளுடன்,

கண்டி இந்திய துணைத் தூதரகத்துடன் இணைந்து தமிழ்ச்சங்கம் வழங்கிய விருது, மட்டக்களப்பு எழுத்தாளர் ஊக்குவிப்பு மையத்தின் தமிழியல் விருது, மாத்தளை இஸ்லாமிய கலை இலக்கிய பேரவையின் விருது உட்பட பலவிருதுகள் பெற்றவர். சிறுகதை, நாவல், மொழிபெயர்ப்பு, வானொலி நாடகம், மெல்லிசைப் பாடல்கள் என பலதுறைகளில் பங்களிப்பினை செய்துள்ளார். சிங்களத் திரைப்படங்களான 'ஆதர மீனா', 'ஹலோ மிஸ்டர் மம டிரக்டர்' இரண்டிலும் வெகுவிரைவில் திரையிடப்படவுள்ள 'அப்பாவிக் கண்' என்ற தமிழ் திரைப்படத்திலும் மலரன்பன் இயற்றியுள்ள பாடல்கள் இடம்பெற்றுள்ளன.











# சுற்றுலா வீசாவில் மனித விற்பனைக்கு இரையாகும் இலங்கைப் பெண்கள்



போதைப்பொருள் கடத்தல், போதைப்பொருள் விற்பனை என்பவற்றை போல மனித வியாபாரமும் விரைவாக வளர்ந்து அதிக வருமானத்தைப் பெற்றுத்தரும் குற்றச்செயலாக காணப்படுகின்றது. இதில் மக்கள் பண்டங்களைப் போல விற்கப்படுகின்றனர். அதிகளவில் மூன்றாம் உலக நாடுகளைச் சேர்ந்தவர்களே மனித வியாபாரத்தால் பாதிக்கப்படுகின்றனர். அதுவும் பாலியல் தேவைகளுக்காக அப்பாவிப் பெண்கள் விற்கப்படுவது பிரதானமாக இடம்பெற்றுவருகின்றது. இலங்கை மனித வியாபாரம் இடம்பெறும் ஆரம்ப இடமாக காணப்படுவதுடன் மனித வியாபாரத்துக்காக ஆட்களை பெற்றுக்கொள்வதற்குநியமிக்கப்பட்டநாடுகளில்ஒன்றாகக் காணப்படுகின்றது.

அந்தவகையில் இலங்கையிலிருந்து ஓமான், துபாய் போன்ற நாடுகளுக்கு பெண்கள் சுற்றுலா வீசாவில் அழைத்துச் செல்லப்பட்டு பாலியல் தொழிலுக்காக விற்பனை செய்யப்பட்ட சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. ஓமான், துபாய் போன்ற நாடுகளில் இலங்கை பெண்களுக்கு அதிக கிராக்கி நிலவுவதாக தெரிவிக்கின்றனர். இதனாலேயே இலங்கை பெண்களை பண்டங்கள் போல அனுப்புவதற்கு மனிதவிற்பனையாளர்கள் ஆர்வம் காட்டிவருகின்றனர். அதுவும் சட்டச் சிக்கல்களை தவிர்ப்பதற்காக அண்மைக்காலத்தில் சுற்றுலா வீசாவில் மத்தியகிழக்கு நாடுகளுக்கு செல்வதற்கு வழங்கப்பட்ட அனுமதியை இவர்கள் தமக்குச் சாதகமாக பயன்படுத்திக் கொண்டுள்ளனர். இலங்கையிலுள்ள மனித விற்பனையாளர்கள் தொழிலை பெற்றுத்தருவதாக கூறி ஓமான், துபாய் போன்ற நாடுகளுக்கு சுற்றுலா வீசாவிலேயே அதிகளவில் பெண்களை அழைத்துச் செல்கின்றனர். அதாவது தொழிலுக்காக மத்தியகிழக்கு நாடுகளுக்கு பணிப்பெண்ணாக செல்பவர்கள் கட்டாயம் இலங்கை வேலைவாய்ப்பு பணியகத்தில் கட்டணம் செலுத்தி தம்மை பதிவுசெய்யவேண்டும். இரண்டாவது வெளிநாடு செல்லும் போது வயதெல்லை கவனத்தில் எடுத்துக்கொள்ளப்படும். இதற்கு மேலதிகமாக குடும்பப் பின்னணி அறிக்கையை பெற்றுக்கொள்ள வேண்டும். இவ்விடயத்தில் 5 வயதுக்குக் குறைந்த பிள்ளைகள் இல்லாமை மற்றும் 5 வயதிலும் கூடிய பிள்ளைகள் இருப்பின் அவர்களின் பாதுகாப்பு மற்றும் நலன்புரி நடவடிக்கைகளுக்கு பொறுப்பாக வீட்டில் வயதுவந்த ஒருவர் இருத்தல், என்பன கவனத்தில் கொள்ளப்படும். மேலும் தொழில் வீசாவில் பணிப்பெண்ணாக மத்திய கிழக்கு நாடுகளுக்கு செல்பவர்கள் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தினால் வழங்கப்படுகின்ற பயிற்சிநெறியை பூர்த்தி செய்திருத்தல் வேண்டும். இப்பயிற்சிகளின் போது வெளிநாட்டில் முகம் கொடுக்கவேண்டிய கலாசார, காலநிலை, மொழி மற்றும் ஏனைய பிரச்சினைகளுக்கான ஆலோசனைகள், தீர்வுகள் தொடர்பாக விளக்கமளிக்கப்படும். அதன்பின்னரே தொழில் ஒப்பந்தம் கைச்சாத்திடப்படும். இதனால் ஏஜன்சிகளும் கூட சட்டத்திட்டங்களுக்கு கட்டுப்பட்டு செயற்பட வேண்டும் என்ற நடைமுறை காணப்படுகின்றது. எனவே, இங்கிருந்து செல்பவர்களுக்கு ஓரளவேனும் சட்டப்பாதுகாப்பு கிடைக்கும். ஆனால் இது மனித விற்பனையாளர்களுக்கு சுதந்திரமாக தமது தொழிலை செய்வதற்கு தடையாக இருப்பதாலும் எதிர்காலத்தில் தமக்கு சட்டச்சிக்கல்களை எதிர்கொள்ள நேரிடும் என்பதாலும் சுற்றுலா வீசாவில் பெண்களை அனுப்புவதில் ஆர்வம் காட்டுகின்றனர்.

ஓமான், துபாய் போன்ற நாடுகளுக்கு பெண்கள் பாலியல் தொழிலுக்கு விற்படுகின்ற சம்பவம் தொடர்பில் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் கொன்சியூலர் பிரிவின் பணிப்பாளர் நாயகத்தினால் விசேட கவனம் செலுத்தப்பட்டது. அதன் விளைவாகவே துரிதமாக விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டு இதன் மர்ம முடிச்சுகள் அவிழ்க்கப்பட்டன. வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் கொன்சியூலர் பிரிவின் ஊடாக மனிதக் கடத்தல், வர்த்தகம் மற்றும் சமுத்திரவியல் குற்றப்புலனாய்வுப் பிரிவினருக்கு அறிவுறுத்தப்பட்டு, கடந்த மார்ச் மாதம் 29ஆம் திகதி இப்பிரிவின் ஊடாக விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டன. குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் கீழ் மனித கடத்தல் தொடர்பில் விசாரணைகள் மேற்கொள்வதற்காக தனியான பிரிவொன்று ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. உலகெங்கிலும் மனித விற்பனை பரவலாக நடைபெறும் விதம் தொடர்பில் சர்வதேச ரீதியில் பயிற்சிகளை பெற்ற அதிகாரிகளை கொண்ட குழுவினரே இப்பிரிவில் கடமையாற்றுகின்றனர். எனவே இலங்கை பெண்கள் ஓமான் நாட்டுக்கு பாலியல் தொழிலாளிகளாக விற்கப்படுகின்றமை தொடர்பில் தகவல்களை ஆராய்ந்து கொண்டிருக்கும் போதே ஓமான் இலங்கை தூதரகத்தின் கீழ் அமைக்கப்பட்டுள்ள பாதுகாப்பு இல்லங்களில் சுற்றுலா வீசாவில் சென்று நிர்க்கதியான பெண்கள் தஞ்சமடைந்துள்ளதாக தகவல்கள் கிடைத்தன. இதனைத் தொடர்ந்தே ஓமானில் நடைபெறும் பாரிய மனித விற்பனையின் சூத்திரதாரியை கண்டுபிடிப்பதற்காக ஐவர் அடங்கிய குழுவொன்றை ஓமானுக்கு அனுப்புவதற்கு ஆட்கடத்தல், வர்த்தகம் மற்றும் சமுத்திரவியல் குற்றப்புலனாய்வு பிரிவின் பணிப்பாளர் பொலிஸ் பரிசோதகர் சமரகோன் பண்டார தீர்மானித்தார். அதற்கமையவே அக்குழு கடந்த ஒக்டோபர் மாதம் 3ஆம் திகதி ஓமான் மஸ்கட் நகரிலுள்ள இலங்கை தூதரகத்தின் பாதுகாப்பு இல்லத்துக்கு சென்றனர்.

அங்கு பாதுகாப்பு இல்லங்களில் தங்கவைக்கப்பட்டுள்ள 45 பெண்களிடம் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டன. அவ்விசாரணைகளின் போதே 45 பேரும் சட்டவிரோதமாக மனித விற்பனையாளர்களினால் சுற்றுலா வீசாவில் அழைத்து வரப்பட்டவர்கள் என்பது தெரியவந்தது. இதில் 18 பேர் மனித விற்பனையாளர்களால் துபாய் ஊடாக ஓமானுக்கு அழைத்து வரப்பட்டுள்ளனர். சுற்றுலா வீசாவில், துபாய் வரை அழைத்துவரப்பட்டு அபுதாபியில் சில நாட்கள் தங்கவைக்கப்பட்டு ஓமானுக்கு குறுக்குவழியாக எல்லைகள் ஊடாக வீசா இன்றி அழைத்து வரப்பட்டுள்ளனர். இவர்களில் 26பேர் நேரடியாக இலங்கை விமானத்தில் சுற்றுலா வீசாவில் ஓமானுக்கு அழைத்துவரப்பட்டவர்கள். இதில் ஒருவர் மட்டுமே சுற்றுலா வீசாவில் இந்தியாவுக்கு அழைத்துவரப்பட்டு அங்கிருந்து ஓமானுக்கு வந்தவர் என விசாரணைகளிலிருந்து தெரியவருகின்றது. இதில் சுற்றுலா வீசாவில் மனித விற்பனையாளர்களினால் துபாய் ஊடாக ஓமானுக்கு கொண்டுவரப்பட்ட 18 பெண்களும் பண்டாரநாயக்க விமான நிலையத்திலுள்ள இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் காரியாலயத்தில் பதிவு செய்யப்பட்டே வந்ததாக பாதுகாப்பு இல்லங்களில் தங்கியுள்ள பெண்கள் தெரிவிக்கின்றனர்.

"சுற்றுலா வீசாவில் ஓமானுக்கு அழைத்துவரப்படுகின்றோம் என்று எங்களுக்குத் தெரியாது. பாஸ்போர்ட், டிக்கட் எங்களிடம் இருக்கவில்லை. அது தொழில் வீசாவா?, சுற்றுலா வீசாவா? எனவும் தெரியாது. ஏஜன்சிக்காரர்கள் சொல்லியவர்களை நாங்கள் விமானநிலையத்துக்கு வந்தே சந்தித்தோம். அதன்பின்னரே எங்களை பதிவுசெய்தனர்" என பாதுகாப்பு இல்லங்களில் தங்கியிருந்த பெண்களில் ஒருவர் அதிகாரிகளிடம் தெரிவித்திருந்தார்.

இவ்விசாரணைகளின் போது மனித வியாபாரத்துக்காக அதிகளவில் பொருளாதார ரீதியில் பின்தங்கிய குடும்பங்களைச் சேர்ந்த பெண்கள் இரையாக்கியுள்ளமை தெரியவந்துள்ளது. அதுவும் பெருந்தோட்டப் பகுதிகளைச் சேர்ந்த பெண்கள் அதிகளவில் விற்பனை செய்யப்பட்டுள்ளதாகவும் அதிகாரிகள் தெரிவிக்கின்றனர். மேலும் ஓமானில் பாலியல் தொழிலாளிகளாக இலங்கை பெண்களை மாற்றுவதற்கு அந்த நாட்டில் அதிகமான ஏஜன்சிகள் இயங்கிவருகின்றமையும் தெரியவந்துள்ளது. இதில் இலங்கையர்களே அதிகளவில் வேலைசெய்கின்றனர். அவர்களே இங்கிருந்து செல்லும் பெண்களை பாலியல் தொழிலாளிகளாக மாற்றி விற்பனை செய்கின்றனர். ஓமான் நாட்டு எஜன்மானர்களிடம் இங்கிருந்து செல்லும் பெண்களை 20, 30 என வரிசையில் நிற்கவைத்து விரும்பிய ஒருவரை தெரிவுசெய்யும் படி ஓமான் நாட்டிலுள்ள எஜமானர்களுக்கு சந்தர்ப்பம் வழங்குவார்கள். இலங்கை நாணயப்பெறுமதியின் படி இலங்கை பெண்ணொருவர் 15 முதல் 20 இலட்சத்துக்கு விற்பனைசெய்யப்படுவதாக தெரியவருகின்றது. அதுவும் ஓமான் நாட்டிலுள்ள எஜன்மானர்கள் வீட்டுப் பணிப்பெண் என்ற போர்வையிலேயே இந்தப் பெண்களை பெற்றுக்கொள்கின்றனர். ஒரு பெண்ணை எஜமானரிடம் 15 அல்லது 20 இலட்சத்துக்கு விற்பனை செய்ததன் பின்னர் அங்குள்ள ஏஜன்சிக்காரர் இதுதொடர்பில் இலங்கையிலுள்ள முகவருக்கு அறிவிப்பார். அதன்பின்னர் இரண்டு, மூன்று இலட்சத்தை ஓமானிலுள்ள ஏஜன்சிக்காரர் வைத்துகொண்டு மிகுதிப் பணத்தை இலங்கையிலுள்ள முகவருக்கு அனுப்பிவைப்பார். அந்த பணத்தில் ஒருசிறுதொகையை அடிமட்டத்தில் வேலைசெய்யும் பெண்களை அழைத்துவரும் தரகர்களுக்கு வழங்குவதுடன் மிகுதிப் பணத்தை அந்த முகவர் தன்வசம் வைத்துக்கொள்வார். இலங்கையிலுள்ள ஏஜன்சி முகவரே தூரப்பிரதேசங்களிலிருந்து பெண்களை அழைத்துவருவதற்கான போக்குவரத்து செலவு, விமான டிக்கட், பாஸ்போட் செய்வதற்கான செலவுகள், தங்குமிட செலவுகள் என்பவற்றை பார்த்துக் கொள்வார்.

தங்குமிடங்களில் வைத்தும் பெண்கள் ஏஜன்சிக்காரர்கள், தரகர்களினால் பாலியல் துஷ்பிரயோகத்துக்குட்படுத்தப்படும் சந்தர்ப்பங்களும் உண்டு. அவ்வாறான சம்பவங்களுடன் தொடர்புடைய 6 ஏஜன்சிக்காரர்களை மனித கடத்தல், வர்த்தகம் மற்றும் சமுத்திரவியல் குற்றப்புலனாய்வு பிரிவு அதிகாரிகள் அடையாளம் கண்டுள்ளனர். அதில் இரண்டு பேர் கைதுசெய்யப்பட்டு விசாரணைகளுக்காக தற்சமயம் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

மேலும் சில இடங்களில் ஓமானுக்கு சுற்றுலா வீசாவில் சென்ற பெண்களை அந்த நாட்டைச் சேர்ந்த எஜமானர்கள் தொழில் வீசா வழங்கி வீட்டு வேலைகளுக்கு அமர்த்தியுள்ளனர். எனினும் அதிக வேலை, மொழி, கலாசாரம், உபகரணங்களை கையாளத் தெரியாமை போன்ற காரணங்களினாலும் தாம் தொழில் செய்யும் வீடுகளிலிருந்து தப்பி பாதுகாப்பு இல்லங்களில் அவர்கள் தஞ்சமடைந்துள்ளதாகவும் மனிதக் கடத்தல், வர்த்தகம் மற்றும் சமுத்திரவியல் குற்றவியல் விசாரணைப் பிரிவினருக்கு தகவல்கள் கிடைத்துள்ளன.

அதுமட்டுமின்றி ஓமானிலுள்ள இலங்கை தூதரகத்தைச் சேர்ந்த அதிகாரியொருவர் மீதும் இச்சம்பவம் தொடர்பில் குற்றம் சுமத்தப்படுகின்றது. ஓமானில் வீடுகளிலிருந்து பல்வேறு துன்புறுத்தல் காரணமாக தப்பிவரும் பெண்களை அதே ஏஜன்சிகளிடம் திருப்பி ஒப்படைக்கும் நடவடிக்கைகளில் இவர் ஈடுபட்டுள்ளதாகவும் இவர் பல பெண்களுடன் பாலியல் தொடர்பு கொண்டிருந்ததாகவும் அதிகாரிகளுக்கு தகவல்கள் கிடைத்துள்ளன.

இவர் பல ஏஜன்சிகளுடன் நெருங்கிய தொடர்பினை பேணிவந்துள்ளார். சுற்றுலா வீசாவில் மனித விற்பனையாளர்களால் அழைத்துவரப்படும் பெண்களை பல்வேறு இடங்களில் அலையவிட்டு பாலியல் தொழிலாளியாக மாற்றுவதற்கு இவரும் உடந்தையாக இருந்ததாக அதிகாரிகள் தெரிவிக்கின்றனர். ஓமான் நாட்டின் சட்டத்திட்டங்களுக்கமைய வீசா இன்றி நாட்டுக்குள் தங்கியிருந்தால் 500 தினார் அதாவது இலங்கை நாணயப் பெறுமதிபடி 5 இலட்சம் ரூபா தண்டப் பணமாகச் செலுத்த வேண்டும். இதுதவிர இலங்கைக்கான விமான டிக்கட்டுக்கும் பணம் தேவைப்படும். எனினும் இந்த பணத்தை செலுத்தமுடியாத நிலையிலேயே பாதுகாப்பு இல்லங்களை நாடி அப்பாவிப் பெண்கள் செல்கின்றனர். ஆனால் அங்கிருந்த அதிகாரி அந்த பெண்களிடம் எப்படியாவது பணத்தை தேடிகொள்ளுங்கள் இல்லையென்றால் இலங்கைக்கு செல்லமுடியாது என அவர்களை அலைக்கழித்து விபசாரத்தில் ஈடுபடுவதற்கு நிர்ப்பந்திப்பதாகவும் மனிதக் கடத்தல், வர்த்தகம் மற்றும் சமுத்திரகுற்றவியல் விசாரணைப் பிரிவினருக்கு பாதுகாப்பு இல்லங்களில் தங்கியுள்ள பெண்களில் இருவர் வாக்குமூலம் வழங்கியுள்ளனர்.

இதனையடுத்து ஓமானிலுள்ள இலங்கை தூதரக அதிகாரி பணி இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளதாக வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.


தற்சமயம் பாதுகாப்பு இல்லங்களில் தங்கிவைக்கப்பட்டுள்ள பெண்களை இலங்கைக்கு அழைத்துவருவதற்கான நடவடிக்கைகள் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தினால் மேற்கொள்ளப்பட்டு வருவதுடன் மனிதக் கடத்தல், வர்த்தகம் மற்றும் சமுத்திரகுற்றவியல் விசாரணைப் பிரிவினர் மிகவும் சூட்சுமமான முறையில் விசாரணைகளை முன்னெடுத்துவருகின்றனர்.

இவ்வாறு சென்றவர்களில் அதிகமானவர்கள் மிகவும் பின்தங்கிய பிரதேசங்களைச் சேர்ந்த குடும்பங்களைச் சேர்ந்தவர்களாக இருப்பதுடன், சிலருக்கு 5 வயதுக்கும் குறைவான வயதில் பிள்ளைகள் இருப்பதாகவும் தெரியவருகின்றது.

பாதுகாப்பு இல்லங்களில் தங்கியுள்ள இந்த 45 பேர் மட்டுமே மனித விற்பனையாளர்களால் பாதிக்கப்பட்டவர்கள் அல்ல. இன்னும் அதிகமானோர் விற்கப்பட்டிருப்பதாகவும் தெரியவருகின்றது. வெளிநாட்டுக்கு பணிப்பெண்களை அனுப்புவதற்கான சட்டங்களை கடுமையாக்கியும் தொடர்ந்தும் இவ்வாறாக பெண்கள் விற்கப்படுவது தொடரத்தான் செய்கின்றது. அப்படியானால் இதற்கு முற்றுப்புள்ளி வைப்பதுதான் எப்படி?

**வசந்தா அருள்ரட்ணம்...**









நாட்டிய கலா மந்திர் நடன நிறுவனத்தின் 46 ஆண்டு கால பூர்த்தி கடந்த 12ஆம் திகதி சனிக்கிழமை வெள்ளவத்தை இராமகிருஸ்ண மிஷன் மண்டபத்தில் கலாசூரி வாசுகி ஜெகதீஸ்வரன் தலைமையில் நடைபெற்றது. இந் நிகழ்வுக்கு பிரதம அதிதியாக இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் யதுகுலசிங் அனிருத்தனன் கலந்து கொண்டார். நிகழ்வில் ஆசிரியருக்கான கௌரவம் வழங்கப்படுவதையும், மாணவர்களின் காலை நிகழ்வையும் காணலாம்.






நாடு எதிர்கொண்டுள்ள பிரச்சினையைத் தீர்ப்பதற்கான அடித்தளத்தை இடும் வகையில் 2023ஆம் ஆண்டுக்கான வரவுசெலவுத் திட்டம் தயாரிக்கப்பட்டிருப்பதாக நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய எமக்கு வழங்கிய பேட்டியின் போது தெரிவித்தார். சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகளுக்கு அமைய வரவுசெலவுத் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது என்ற குற்றச்சாட்டை நிராகரிப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.



# இன்றைய வேளையில் இதைவிட சிறப்பாக எவராலும் பட்ஜட் தயாரிக்க முடியாது!

**நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய**

**கேள்வி: 2023 வரவுசெலவுத் திட்டத்தில் மிகவும் சவாலான அம்சம் என்ன?**

பதில்: உண்மையில் இந்த வரவுசெலவுத் திட்டத்தில் குறிப்பிட்டதொரு சவாலான அம்சம் கிடையாது. மேலும் இது ஒட்டு மொத்த சவாலாகவே உள்ளது. நடப்பு நிதியாண்டு அடுத்த ஆண்டு பட்ஜெட்டை தாக்கல் செய்வதற்கான அடிப்படையாகவும் அடித்தளமாகவும் அமைகிறது. அதிக பணவீக்கம், அந்நிய கையிருப்பு வீழ்ச்சி, நாணயப் பெறுமதியில் வீழ்ச்சி மற்றும் வங்கி வட்டி வீதங்கள் மூன்று மடங்காக அதிகரித்துள்ளமை போன்றவை நாட்டின் பொருளாதார அடித்தளத்தை சிதைத்துள்ளன. இதனால் நாம் மிகக் குறைந்த வருவாயைப் பெறும் நாடாக மாறிவிட்டோம்.

எனவே நாங்கள் நிலையான நிதிநிலையில் இல்லை. இந்த அரிக்கப்பட்ட அடித்தளத்தில் இருப்பதால், அடுத்த ஆண்டுக்கான திட்டங்களைத் தயாரிக்க வேண்டும். அப்படியானால் நாம் மிகவும் விவேகமான முறையில் செயற்பட வேண்டும். நாட்டின் மொத்த குடும்பங்களின் எண்ணிக்கையில் 60 சதவீதம் பேர், தங்களுக்கு ஏதாவது நலத்திட்ட உதவிகள் மற்றும் அவர்களின் வாழ்க்கைக்கு நிவாரணம் வழங்குமாறு கேட்கின்றனர். முழு வரவுசெலவுத்திட்டமும் எங்களுக்கு சவாலாக மாறியுள்ளது. மேலும், நியாயமான புள்ளிவிபரங்களுடன் தாக்கல் செய்வதும் எங்களுக்கு சவாலாக மாறியது.

**கேள்வி: வரவுசெலவுத் திட்டத்தில் மக்களுக்கு எந்தவித நிவாரணமும் வழங்கப்படவில்லை என்ற விமர்சனம் உள்ளது. அதுபற்றி உங்கள் கருத்து என்ன?**

பதில்: இது வெறும் அரசியல் ஆர்வமுள்ள ஒருவரால் சுமத்தப்படும் குற்றச்சாட்டாக இருக்கலாம். அடுத்த ஆண்டுக்கான அரசின் செலவு சுமார் ரூ. 7885 பில்லியன். அதில் 10 சதவீதம் சமூக நலத்துறைக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. இது கல்வி மற்றும் சுகாதாரத்திற்கான செலவினங்களைவிட அதிகமாகும். கல்வி மற்றும் சுகாதாரத்திற்கு 1,000 பில்லியன் ரூபாவுக்கு மேல் ஒதுக்கப்பட்டுள்ளது. அதற்கு மேல் அரசாங்கத்தால் எதுவும் செய்ய முடியாது என்று நினைக்கிறேன். நலத்திட்ட உதவிகளைப் பெறுவதற்காக பதிவுசெய்யப்பட்ட 5.8 மில்லியன் குடும்பங்களில், சுமார் 3.4 மில்லியன் குடும்பங்கள் நலத்திட்ட உதவிகளைப் பெறும் நிலையில் உள்ளன.

தகுதியான குடும்பங்களைத் தேர்ந்தெடுக்கும்போது இந்த எண்ணிக்கையில் குறிப்பிட்ட தொகை குறைக்கப்படும். இந்த சதவீதம் குறிப்பிட்ட அளவு குறைக்கப்பட்டாலும், அந்த அம்சத்தையும் கருத்தில் கொண்டு இந்த வரவுசெலவுத்திட்டத்தைத் தயாரித்துள்ளோம். எனவே, வரவுசெலவுத் திட்டம் மக்களுக்கு நிவாரணம் அளிக்கவில்லை என்று யாராவது கூறினால், அதை ஏற்க முடியாது. இந்த வரவுசெலவுத்திட்டத்தின் மூலம் அரச ஊழியர்களின் சம்பளத்தை அதிகரிக்க முடியவில்லை.

அவர்களின் சம்பளமும் குறிப்பிட்ட தொகையால் குறைக்கப்படும் என்ற தவறான எண்ணம் அரசு ஊழியர்கள் மத்தியில் ஏற்படுத்தப்பட்டது. ஆனால், அரசு ஊழியர்களின் சம்பளத்தை குறைக்காமல் இந்த சுமையை அரசு ஏற்றுள்ளது. அரச உத்தியோகத்தர்களுக்கு ஜனாதிபதி முக்கியத்துவம் அளித்துள்ளதுடன், அவர்கள் எதிர்நோக்கும் இன்னல்களை நாங்கள் நன்கு அறிவோம்.

நாட்டில் நிலவும் பிரச்சினைகள் அடுத்த ஆண்டு இறுதி காலாண்டில் தீர்க்கப்படும் என்று நம்புகிறோம். அப்போது சில கொடுப்பனவுகளை வழங்கி அரச உத்தியோகத்தர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு தீர்வு காண முடியும். இந்த தருணத்தில் இதைவிட சிறப்பாக யாராலும் செய்ய முடியும் என்று நான் நினைக்கவில்லை. இல்லையெனில், யாராவது குறைந்தபட்சம் 50 பில்லியன் அமெரிக்க டொலர்களை இலவசமாகப் பெற வேண்டும். இவ்வாறான பின்னணியில் இதனைவிட சிறந்த வரவுசெலவுத்திட்டத்தை எவராலும் தயாரிக்க முடியும் என நான் கருதவில்லை.

**கேள்வி: சில அரசியல்வாதிகள் மற்றும் தொழிலதிபர்கள் வெளிநாடுகளில் பதுக்கி வைத்துள்ள பணத்தை மீட்க நடவடிக்கை எடுக்காமல் மக்கள் மீது இன்னமும் அதிக வரிகளை அரசாங்கம் சுமத்தியிருப்பதாக விமர்சனம் முன்வைக்கப்படுகிறது. இது பற்றி என்ன கூற விரும்புகிறீர்கள்?**

பதில்: அது தவறு. நாங்கள் யாரையும் விசேடமாகக் கவனிக்கவில்லை. ஒவ்வொரு பாராளுமன்ற உறுப்பினருக்கும் வரிக்கான கோப்பு ஒன்றைத் திறக்க முயற்சிக்கின்றோம். தற்போது, பெரும்பாலானவர்கள் வரிகளுக்கான கோப்புகளைக் கொண்டுள்ளனர். சமூகம் பெரும்பாலும் சூதாட்ட வணிகர்களைப் பற்றி பேசுகிறது. எவ்வாறாயினும், கசினோக்களுக்கு விதிக்கப்படும் வருடாந்த வரி 200 மில்லியனில் இருந்து 500 மில்லியனாக அதிகரிக்கப்பட்டது. அது மாத்திரமன்றி இலங்கையர் ஒருவர் சூதாட்ட விடுதிக்கு சென்றால் அவருக்கு அடுத்த வருடம் ஜனவரி 01 ஆம் திகதி முதல் 200 அமெரிக்க டொலர்கள் அறவிடப்படும். இலங்கை நாணயத்திற்கு அதனை மாற்றும் போது, அது சுமார் ரூபா 70,000. இதையெல்லாம் செய்யும் போது, கசினோ உரிமையாளர் இலாபம் ஈட்டினால், அந்த மொத்த இலாபத்தில் 40 சதவீதத்தையும் திரும்பப் பெறுவோம். எனவே சில பிரிவுகளுக்கு நாங்கள் உதவி செய்தோம் அல்லது சலுகைகளை வழங்கியுள்ளோம் என்று யாராவது கூற முடியுமா? மேலும், 36 சதவீத புதிய நிறுவன வரியும் விதிக்கப்பட்டுள்ளது.

இது நிறுவனங்கள் ஈட்டும் வருடாந்த இலாபத்தில் 36 சதவீதத்தை அரசாங்கம் வசூலிக்க முன்மொழியப்பட்டது. வரவுசெலவுத்திட்டம் மீதான இந்த விமர்சனங்களில் பெரும்பாலானவை சில பிரிவினரால் முன்வைக்கப்படும் வெறும் அரசியல் ரீதியான கோஷங்கள் என்று நான் கருதுகின்றேன். சில அரசியல்வாதிகள், தொழிலதிபர்கள் வெளி நாடுகளில் பதுக்கி வைத்துள்ள பணத்தை மீட்க வேண்டுமானால் புதிய சட்டங்களை கொண்டு வர வேண்டும். தற்போது நாட்டில் நிலவும் சட்டங்களைப் பயன்படுத்தி இந்த விடயங்களை நாம் கையாள வேண்டியுள்ளது.

முன்னதாக, சீனி ஊழல் வரி குறித்து பெரும் பரபரப்பு ஏற்பட்டது. அரசாங்கம் இறக்குமதியாளர்களிடமிருந்து வரியாக 16 பில்லியன் ரூபாவை வசூலிக்க வேண்டும். ஆனால், அந்தப் பலன் மக்களுக்கு வழங்கப்படவில்லை என்பதுடன் சீனியின் விலையும் குறையவில்லை. அப்படியானால் பணத்தை மீட்பது எப்படி? அந்த வரியை மீண்டும் விதிக்க முடியாது. சட்டத்தை வகுத்தவர்கள், பொருட்களின் விலையை குறைக்கும் நோக்கத்தில்தான் அதை செய்ததாக கூறுகிறார்கள்.

வருமான வரி ஒன்று மட்டுமே மேற்கூறிய பெருந்தொகையைத் திரும்பிப் பெற்றுக் கொள்வதற்கான ஒரேயொரு வழியாகும். இந்தப் பணத்தை எவ்வாறு மீளப்பெறப் போகிறோம் என்ற அறிக்கையையும் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தேன். எனவே, நாங்கள் யாரையும் பாதுகாக்கப் போகிறோம் என்ற குற்றச்சாட்டை எவரும் முன்வைக்க முடியாது. நாட்டில் தற்போதுள்ள சட்ட கட்டமைப்பைப் பயன்படுத்தி இந்தப் பணத்தை மீட்டெடுக்க வேண்டும். தற்போதைய சட்டங்கள் வரி கட்டமைப்பை வலுப்படுத்த போதுமானதாக இல்லை என்றால், அவற்றையும் மாற்றலாம்.


**கேள்வி: சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகளுக்கு அமைய வரவுசெலவுத்திட்டம் தயாரிக்கப்பட்டிருப்பதாக மற்றுமொரு கருத்து முன்வைக்கப்படுகிறது. இது பற்றி என்ன கூற விரும்புகிறீர்கள்?**

பதில்: தொடர்ச்சியாக முன்வைக்கப்படும் அரசியல் ரீதியான கோஷங்களில் இதுவும் ஒன்றாகும். சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகள் எதுவும் இதில் இல்லை. நமது நாட்டின் ஒரு பகுதியை அவர்களுக்கு வழங்க வேண்டும் என்று சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனை ஏதும் உள்ளதா? பொருளாதார ரீதியாக, தற்போதைய பொருளாதாரப் பிரச்சினைகளைத் தீர்க்க நாம் என்ன செய்ய வேண்டும் என்பதற்கான சில வழிகாட்டுதல்களை மட்டுமே நாணய நிதியம் வழங்குகிறது. சர்வதேச நாணய நிதியத்தின் பரிந்துரைகளை நாங்கள் ஏற்கவில்லை. அவர்களுடன் விரிவான விவாதங்கள் மற்றும் வாதங்களுக்குப் பிறகு ஒருமித்த கருத்துக்கு வர முயற்சிக்கிறோம். உண்மையில், ஒருமித்த கருத்து நமது நலனுக்காக எட்டப்பட்டதே தவிர அவர்களின் நலனுக்காக அல்ல. சர்வதேச நாணய நிதியத்தின் நலன்களைப் பூர்த்தி செய்யும் வகையில் வரவுசெலவுத்திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது என்று யாராவது குற்றஞ்சாட்டினால் அது காலாவதியான குற்றச்சாட்டாகும். அதைத் திட்டவட்டமாக நிராகரிக்கின்றோம்.

**'நாட்டில் நிலவும் பிரச்சினைகள் அடுத்த ஆண்டு இறுதியில் தீர்க்கப்படும்**



**'சர்வதேச நாணய நிதியத்தின் நலன்களைப் பூர்த்தி செய்யும் வகையில் வரவுசெலவுத் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது என்று யாராவது குற்றஞ்சாட்டினால் அது காலாவதியான குற்றச்சாட்டாகும். அதைத் திட்டவட்டமாக நிராகரிக்கின்றோம்.'**



மலரும் யுகத்திற்கு புதியதோர் வடிவம்

மிலிந்த மொரகொட

# மாற்றத்தை ஏற்படுத்துவதற்கு முன்னர் சிந்திக்க வேண்டிய முக்கிய விடயம்!

அமைப்பு பற்றிய எதிர்ப்பானது அமைப்பை மாற்றுவதற்கு வழிவகுக்கும். வேரூன்றிப் போயுள்ள பழைமைவாதத்தில் இருந்து விடுபட்டு புதிய கட்டமைப்புக்குள் நுழைய வேண்டும் என்பது அண்மைய காலத்தில் வலியுறுத்தப்படும் விடயமாகும்.

சந்தர்ப்பத்தை இழந்த சமூகத்தில் முறைகள் குறித்த எதிர்ப்புகள் உள்ளன. மாற்றத்தை கட்டாயப்படுத்துவதற்கான அழுத்தத்தை இது உருவாக்குகிறது. 'சிஸ்டம் சேன்ஞ்' கோருகின்ற சித்தாந்தம் அதன் பலனேயாகும். மாற்றங்களை செய்வதற்கான உந்துதல் அதிகமாக காணப்படலாம். இந்த மாற்றங்களை செய்வதால் ஏற்படும் ஆபத்துகளை பற்றி அச்சம் கொள்ளும் பிரிவினரும் இருப்பதை மறந்து விடக்கூடாது.

மாற்றத்தைக் கோரும் புதிய தலைமுறையை நினைவில் வைத்து முடிவெடுப்பது அவசியம். மக்களின் கோரிக்கைகளை மாற்றுவதற்கான களத்தை அமைக்கும் பொறுப்பு தலைவர்களுக்கு உள்ளது. மத, சமூக, அரசியல் தலைவர்கள் பரந்துபட்ட பார்வையின் அடிப்படையில் முடிவுகளை எடுக்க வேண்டும். அரசியல்வாதிகள் மற்றும் அரசியல் முறைகள் பலவீனம் அடைந்துள்ளதோடு, தனிநபர்கள் பற்றிய நம்பிக்கையும் சீர்குலைந்துள்ளது. சுதந்திரத்துக்குப் பின்னர் இன்றுவரை நாட்டை ஆட்சி செய்த வர்க்கத்தினர், தாங்கள் பின்பற்றிய முறைகளே தற்போதைய நிலைமைக்கு காரணமென்பதை பொறுப்புடன் கூற வேண்டியுள்ளது. அத்திவாரத்தை மாற்றி புதிய அடிப்படையில் மீண்டும் தயாரிப்பதற்காக முறைகளை மாற்ற வேண்டுமென வலியுறுத்தும் சமூகத்தின் கருத்துகளை புறந்தள்ளக் கூடாது.

உலகில் எல்லா நாடுகளிலும் நியாயமற்ற முறைகள் மற்றும் அநீதிக்கு எதிர்ப்புகள் உள்ளன. அவை பல வழிகளிலும் வெளிப்படுத்தப்படுகின்றன. அநீதி மீதான எதிர்ப்புக் காணப்படுகின்றது. ஒரு சமூகம் விடயங்களை அறியும்போது, தொழில்நுட்ப ரீதியாக மேம்பட்ட பின்னணியில் இருக்கும்போது கேள்விகள் கேட்கப்படுகின்றன.

'சிஸ்டம் சேன்ஞ்' அணுகுமுறைக்கு முன்பதாக இலங்கை பின்பற்றுகின்ற ஜனநாயக ஆட்சி முறை குறித்து ஆய்வு செய்ய வேண்டும். அதற்கு நீண்ட வரலாறு உண்டு. சமூகத் தேவைகளுக்காக ஒழுங்கமைக்கப்பட்ட நிர்வாகத்தை அடையும் நோக்கத்துடன் பிரதிநிதித்துவ ஜனநாயக முறை பின்பற்றப்படுகின்றது. அதில் பல்வேறு பலவீனங்கள் உள்ளன.

சமீபத்தில் காலமாக இந்திய பிரபல வாக்காளரான ஷியாம் சரண் தெஹி இதை தனக்கு ஏற்றுவாறு வரையறுத்துள்ளார்.

"ஒரு குடிமகனுக்கு சுதந்திரமாக வாக்களிக்கும் உரிமை உள்ளதோடு, தவறான நபர்களை அரசியலில் இருந்து வெளியேற்றியதன் மூலம் இந்தியா வளர்ச்சி அடைந்துள்ளது" என அவர் சுட்டிக்காட்டினார். திறமையானவர்கள் அரசியலுக்குள் நுழைய வேண்டும் என அவர் குறிப்பிட்டுள்ளார். அது தன்னைப் போன்ற வாக்காளர்களின் கடமை என்று அவர் 105 ஆவது வயதை நிறைவு செய்யும் தினத்தில் நடைபெற்ற ஊடக கலந்துரையாடல் ஒன்றின் போது தெரிவித்தார்.

அண்மையில் அமெரிக்காவில் நடைபெற்ற இடைக்கால தேர்தலும் அதற்கு நல்ல சான்று. இந்தத் தேர்தல் முடிவுகள் வெளிவருவதற்கு முன்னரே மீண்டும் அடிப்படைவாத அரசியலுக்குள் அமெரிக்கா தள்ளப்படக் கூடும் என்ற அனுமானம் காணப்பட்டது. முதியோர் சமூகம் அதனை விவாதத்திற்கு உள்ளாக்கியது. டிமொகிரடிக் மற்றும் ரிபப்ளிக் கட்சி இரண்டிலும் மத்தியஸ்த, மிதவாத நபர்களை தெரிவு செய்து அனுப்ப அமெரிக்க வாக்காளர்களால் முடிந்தது. அது சர்வதேச கவனத்தையும் ஈர்த்த விடயமாகும். செல்வம், அதிகாரம், தனிப்பட்ட ஆதாயத்தை கருதாது எதிர்கால சந்ததிக்காக முடிவுகளை எடுக்கக்கூடிய முதிர்ச்சி அடைந்த நபர்களை தெரிவு செய்வதே சிஸ்டம் சேஞ்ச்சின் முதலாவது நடவடிக்கையாகும்.

தேர்தலை நடத்துவது மக்களின் இறையாண்மையை பாதுகாக்கும். மக்கள் தங்கள் பிரதிநிதிகளை தேர்ந்தெடுக்கும் அதிகாரத்தை பெற்றிருக்க வேண்டும். உள்ளூராட்சி, மாகாண சபைகள் மற்றும் பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்துவதற்கு பொருத்தமான வேட்பாளரை தெரிவு செய்வதில் அண்மைக்காலமாக பல தாமதங்கள் ஏற்பட்டுள்ளன . அரசியலமைப்பு திருத்தங்கள், தேர்தல் எல்லைகளை மாற்றுவதற்கான ஏற்பாடுகள்,கொவிட் மற்றும் பொருளாதாரப் பிரச்சினையும் அதற்குப் பாதிப்பை ஏற்படுத்தியது. மக்களின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றும் திறன் கொண்ட மக்கள் பிரதிநிதித்துவம் நாட்டில் இல்லை என்ற கருத்து சமூகத்தில் ஏற்பட்டதன் விளைவு இதுவாகும். அனுபவம் உள்ளவர்களையும் பிரச்சினைகளை வெவ்வேறு கோணங்களில் பார்க்கக் கூடியவர்களையும் 'சிஸ்டம் சேன்ஞ்' செய்வதற்காக இணைத்துக் கொள்ள வேண்டும்.

தமிழில்: **வீ.ஆர்.வயலட்**

### கண்டி தமிழ், முஸ்லிம் வர்த்தக சங்கம்

# இணைந்து நடத்தும் நூல் வெளியீடும், பாராட்டு விழாவும்

மாவத்தக தினகரன் நிருபர்

கண்டி முஸ்லிம் வர்த்தக சங்கம், தமிழ் வர்த்தக சங்கம் இணைந்து நடாத்தும் தென்கிழக்குப் பல்லைக் கழக தமிழ் மொழித் துறை தலைவர் பேராசிரியர் கலாநிதி எம். ஏ. எஸ். எப். ஸாதியா பௌஸர் எழுதிய "மலையகக் கவிதைகளில் மக்களும்" மற்றும் "மலையகக் கவிதைகளில் பெண்களும் சிறுவர்களும் "எனும் இரு நூல்களின் வெளியீடும், அவர் அண்மையில் பேராசிரியராக பதவி உயர்வு பெற்றதைப் பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வும் இன்று 3.00 மணிக்கு கண்டி ஜின்னா ஞாபகார்த்த மண்டபத்தில் இடம் பெறும்.

பேராதனைப் பல்கலைக்கழக தமிழ் மொழித் துறை முன்னாள் தலைவர் பேராசிரியர் துரை மனோகரன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பிரதம அதிதியாக தென்கிழக்குப் பல்கலைக் கழக உபவேந்தர் பேராசிரியர் றமீஸ் அபூபக்கர், பேராதனைப் பல்கலைக்கழக தமிழ் மொழித் துறை முன்னாள் தலைவர் பேராசிரியர் எம். ஏ. நுஹ்மான் ஆகியோர் பிரதம அதிதிகளாக கலந்து கொள்கின்றனர்.

இந்நிகழ்வின் முதல் அரங்கில் வரவேற்புரையினை கண்டி தமிழ் வர்த்தக சங்கத்தின் தலைவர் ஆர். அன்பழகன், வாழ்த்துரையினை கண்டி முஸ்லிம் வர்த்தக சங்கத்தின் என். எம். எம். மன்சூர், தமிழ் வர்த்தக சங்கத்தின் முத்தையாப் பிள்ளை ஸ்ரீ காந்தன் ஆகியோர் நிகழ்த்துவர். நூல் அறிமுகவுரையினை கிழக்குப் பல்கலைக்கழக தமிழ் மொழித் துறை முன்னாள் தலைவர் செ. யோகராசா நிகழ்த்துவார்.

இந்நிகழ்வில் இரண்டாவது அரங்கில் பாராட்டுரையினை தென்கிழக்குப் பல்கலைக்கழக தமிழ் மொழித் துறை முன்னாள் தலைவர் பேராசிரியர் றமீஸ் அப்துல்லா, ஏற்புரையினை தென்கிழக்குப் பல்கலைக்கழக தமிழ் தொழித் துறைத் தலைவர் பேராசிரியர் கலாநிதி எம். ஏ. எஸ். எப். ஸாதியா பௌஸர், நன்றியுரையை கண்டி முஸ்லிம் வர்த்தக சங்கத்தின் செயலாளர் ஏ. சி. எம். ரஹ்மான் ஆகியோர் நிழ்த்துவர்.



சர்வதேச இந்து மத பீட ராமச்சந்திர குருக்கள், வைத்தீஸ்வர குருக்கள் ஆகியோர் மாத்தளை ஸ்ரீ முத்துமாரி அம்பாள் ஆலய பரம்பரை வழி பிரதம குரு, சிவஸ்ரீ சுப்ரமணிய குருக்கள் சிவானந்த சிவாச்சாரியாரின் பூவுடலுக்கு இறுதி அஞ்சலி செலுத்திய போது...

## O/L பெறுபேறுகளில் வடபகுதி மாணவர் 551 பேருக்கு 09 A

2021 ஆம் ஆண்டில் கல்வி பொதுத் தராதர சாதாரண பரீட்சை பெறுபேறுகளின் அடிப்படையில் வட மாகாணத்தில் 551 மாணவர்கள் 09 பாடங்களிலும் ஏ தரத்தில் சித்தி பெற்று சாதனை படைத்துள்ளனர்

வட மாகாணத்திலிருந்து 16,564 மாணவர்கள் பரீட்சைக்குத் தோற்றினர். இவர்களில் 551 மாணவர்கள் 9 பாடங்களிலும் ஏ தரத்தில் சித்திய பெற்றுள்ளனர்

யாழ்ப்பாணம் கல்வி வலயத்தில் 3,006 மாணவர்கள் பரீட்சைக்கு தோற்றினார் அதில் 193 மாணவர்கள் 09 பாகங்களிலும் ஏ தரத்தில் சித்தியடைந்துள்ளனர்

வவுனியா தெற்கு கல்வி வலையத்தில் 56 பேருக்கும் வடமராட்சி கல்வி வலையத்தில் 56 பேருக்கும் வலிகாமம் கல்வி வலையத்தில் 53 பேருக்கும் கிளிநொச்சி கல்வி வலையத்தில் 49 பேருக்கும் முல்லைத்தீவு கல்வி வலையத்தில் 47 பேருக்கும் மன்னார் கல்வி வலையத்தில் 39 பேருக்கும் தென்மராட்சி கல்வி வலையத்தில் 36 பேருக்கும் வவுனியா வடக்கு கல்வி வலையத்தில் 12 பேருக்கும் துணுக்காய் கல்வி வலையத்தில் ஒன்பது பேருக்கும் தீவக கல்வி வலையத்தில் ஒருவருக்குமென 09 ஏ தர சித்திகள் கிடைத்துள்ளன

## கல்வி அமைச்சின் மாணவர்களின் உள விழிப்பு சபையின் உறுப்பினராக பாபு சர்மா நியமனம்



உளவிழிப்பு அறக்கட்டளை மற்றும் கல்வி அமைச்சு ஆகியவை பாடசாலை மாணவர்களுக்கு உள விழிப்பை அறிமுகப்படுத்தும் திட்டத்தை செயல்படுத்த ஏற்பாடுகளை செய்துள்ளன. இது தொடர்பில் கல்வி அமைச்சர் கலாநிதி சுசில் பிரேமஜயந்தவின் ஆலோசனையின் பேரில் சர்வமத குழுவொன்று நியமிக்கப்பட்டது. அந்த குழுவின் உறுப்பினராக கலாநிதி சிவ ஸ்ரீ ராமச்சந்திர குருக்கள் பாபு சர்மா நியமிக்கப்பட்டுள்ளார்.

பாபுசர்மா முன்னாள் கல்வி அமைச்சர் பந்துல குணவர்தன காலத்திலும் தற்போதைய கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த காலத்திலும் இந்து சமய பாடநெறியின் ஆலோசகராக இருக்கின்றமையும் குறிப்பிடத்தக்கது.

## சிறுகதைப் போட்டி பரிசளிப்பு நிகழ்வு; புரவலர் ஹாசிம்உமர் பிரதம அதிதி

புதிய அலை கலை வட்டம் வருடாந்தம் நடத்திவரும் கலாசாரப் போட்டித் தொடரான எவோட்ஸ் 2022 இன் சிறுகதைப் போட்டிக்கான பரிசளிப்புவிழா, இன்று மாலை 4 மணிக்கு கொழும்பு10 கெத்தாராம பகுதியில் அமைந்துள்ள லக்செத் செவன சனசமூக நிலைய மண்டபத்தில் நடைபெறும். வட்டத்தின் நிறுவனரும் கலைஞரும் ஊடகவியலாளருமான ராதாமேத்தா தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்விற்கு பிரதம அதிதியாக புரவலர் ஹாசிம் உமர் கலந்து சிறப்பிக்கின்றார். இப் போட்டியில் முதலாம் இடத்தை மட்டக்களப்பை சேர்ந்த எஸ்.சபீனாவும், இரண்டாம் இடத்தை மன்னாரைச் சேர்ந்த கே.அதிவீரனும், மூன்றாம் இடத்தை பதுளையைச் சேர்ந்த பி.ஜெயபிரியாவும் பெற்றுள்ளன.

### சைவமங்கையர் மாணவிகள் ...

29 மாணவியரும் , 8A பெறுபேற்றினை 19 மாணவியரும், 7A பெறுபேற்றினை 16 மாணவியர்களும் பெற்றுள்ளனர். மேலும் இம்முறை பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களில் 96 சதவீதமான மாணவர்கள் சித்தியடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

### வீட்டுக்கு அண்மித்த ...

ஜனாதிபதியின் ஆலோசகர் அகில விராஜ் காரியவசம் ஆகியோர் இது தொடர்பில் கலந்துரையாடலை மேற்கொண்டனர்.

போக்குவரத்துக் கட்டணங்கள் உயர்வால் பஸ்களில் கடமைக்குச் செல்ல முடியாமல் அரச ஊழியர்கள் சிரமத்துக்குள்ளாகியுள்ளதாக அகிலவிராஜ் காரியவசம் தெரிவித்துள்ளார்.

### மும்பை தாக்குதலுக்கு...

தூதரகத்துக்கு முன்பாக போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது.

மும்பையில் 2008ஆம் ஆண்டு நவம்பர் 26ஆம் திகதி அடுத்தடுத்து பயங்கரவாத தாக்குதல்கள் நடைபெற்றன. பாகிஸ்தானில் செயல்பட்டு வரும் லஷ்கர்இதொய்பா பயங்கரவாத அமைப்பை சேர்ந்த பயங்கரவாதிகள் இந்த தாக்குதலை நடத்தினர். மும்பை பயங்கரவாத தாக்குதலில் வெளிநாட்டை சேர்ந்தவர்கள் உட்பட 166 பேர் உயிரிழந்தனர்.

தாக்குதல் நடத்திய 09 பயங்கரவாதிகள் பாதுகாப்பு படையினரால் சுட்டு வீழ்த்தப்பட்டனர். இந்த சம்பவம் அப்போது பரபரப்புடன் பேசப்பட்டது. இந் நிலையில், மும்பை பயங்கரவாத தாக்குதலின் நினைவு தினம் நேற்று (26) அனுஷ்டிக்கப்பட்டது.

இதனை முன்னிட்டு இலங்கையிலுள்ள பாகிஸ்தான் தூதரகத்துக்கு முன்பாக புதிய ஜனநாயக முன்னணி கட்சியின் பொது செயலாளர் என். ரவிக்குமார் தலைமையில் போராட்டம் நடந்தது. இந்த போராட்டத்தின்போது 'பயங்கரவாதத்தை ஒழிக்க வேண்டும்' 'பயங்கரவாதத்துக்கு முடிவு கட்ட பாகிஸ்தான் ஆதரவளிக்க வேண்டும்' 'பாகிஸ்தானிய பயங்கரவாதம் தெற்காசியா மட்டுமின்றி ஒட்டுமொத்த உலகத்துக்கும் ஓர் அச்சுறுத்தலாக உள்ளது' போன்ற கருப்பொருள்களை அடிப்படையாக கொண்டு இந்த போராட்டம் நடந்தப்பட்டது.

### சிவானந்த குருக்களின்...

சுதுகங்கவத்த, 03 ஆம் ஒழுங்கை, இல. 5/1 இல் அமைந்துள்ள அண்ணாரின் இல்லத்தில் இறுதிக்கிரியைகள் ஆரம்பிக்கப்பட்டு அதனைத் தொடர்ந்து அன்னாரின் பூதவுடல் களுதாவளை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

### 04 மில். அவு.டொலர் செலவில்...

விழா கடந்த 05ஆம் திகதி அவுஸ்திரேலிய அரசின் அமைச்சர்கள் மற்றும் உலமாக்கள், முக்கியஸ்தர்கள் தலைமையில் நடைபெற்றது.

04ஆம் திகதி நடைபெற்ற ஜும்ஆப் பிரசங்கத்தை அகில இலங்கை ஜம்மியத்துல் உலமா தலைவர் அஷ்ஷேக் ரிஸ்வி முப்தி நிகழ்த்தினார்.

சில வருடங்களுக்கு முன் இந்தப் பள்ளிசாவலுக்கான அடிக்கல்லை ஜாமிஆ நளீமியா பணிப்பாளர் அஷ்ஷேக் அகார் முஹம்மத் நட்டு வைத்தது குறிப்பிடத்தக்கது.

பள்ளிவாசல் திறப்பு விழாவில் அவுஸ்திரேயாவின் கல்வி அமைச்சர் நடாலி ஹன்சின் சன் பாராளுமன்ற உறுப்பினர் விவ்வியன் நகுயன், மெல்பன் மேயர் மெல்டன் லாரா, ஷேக் முப்தி ஷியாத் ராமத், முப்தி ராயிஸ் அப்துல் அஸீஸ், முகவத்தே தர்ம ரத்ன தேரர் உட்பட பல பிரமுகர்கள் கலந்து கொண்டனர்.

அவுஸ்திரேலிய இலங்கையர் சங்கத்தின் தலைவர் பஷீர் சனூர்தீனின் ஏற்பாட்டில் இந்தப் பள்ளிவாசலும், சனசமூக நிலையமும் திறந்து வைக்கப்பட்டது.

அவுஸ்திரேலியாவில் புலம்பெயர்ந்து வாழும் இலங்கையர் பயனடையக்கூடிய வகையில் இந்த பள்ளிவாசலும், சனசமூக நிலையம் நிர்மாணிக்கப்பட்டதாக அவுஸ்திரேலியாவில் புலம்பெயர்ந்து வாழும் அகில இலங்கை வை.எம்.எம்.ஏயின் முன்னாள் தலைவர் ஜிப்ரி ஹனீபா தெரிவித்துள்ளார்.

### QR முறைமையில் எந்த மாற்றமுமில்லை...

பறம்பானதென மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேக்கர தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று உரையாற்றும் போதே இவ்விடயத்தை தெரிவித்துள்ளார். "மிகவும் நெருக்கடியான நிலையில் தான் எரிபொருள், எரிவாயு இறக்குமதி செய்யப்படுகிறது.

அமைச்சு மட்டத்திலான முறையான முகாமைத்துவத்தினால் தற்போது எரிபொருள் விநியோகம் சீரமைக்கப்பட்டுள்ளது.

எனினும் ஊடகங்கள் தவறான விடயங்களை சமூகமயப்படுத்துகின்றன. QR முறைமை எதிர்வரும் மாதம் முதல் இரத்துச் செய்யப்படுமென வெளியாகியுள்ள செய்தி அடிப்படையற்றது எனவும் தெரிவித்துள்ளார்.

### மது பாவனையில் 30% வீழ்ச்சி; ...

அல்லது மதுபான போத்தல்கள் மற்றும் கேன்களில் டிஜிட்டல் பாதுகாப்பு முத்திரைகள் ஒட்டும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக கலால் திணைக்களத்தின் ஊடகப் பேச்சாளர் கபில குமாரசிங்க தெரிவித்துள்ளார்.

மதுபான போத்தல்கள் மற்றும் கேன்களில் மொத்த விற்பனைக் நிலையங்கள் மற்றும் சேமிப்புக் கிடங்குகள் மற்றும் மதுபானம் விற்பனை செய்யும் உரிமம் பெற்ற சில்லறை விற்பனை நிலையங்களிலும் ஸ்டிக்கர்கள் ஒட்டப்படுகின்றன.

ஜனவரி 1 ஆம் திகதி முதல் சந்தையில் உள்ள அனைத்து மதுபான போத்தல்கள் மற்றும் கேன்களில் ஸ்டிக்கர் ஒட்டுவதற்கு சட்ட விதிகளுக்கு மூன்று மாத கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

மதுபானங்கள் மீது விதிக்கப்படும் வரிகளை அரசாங்கம் எவ்வித முரண்பாடுகளும் இன்றி வசூலிக்க முடியும் என்பதை உறுதிப்படுத்துவதே இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். அதன்படி, ஸ்டிக்கர் அறிமுகப்படுத்தப்பட்டதைத் தொடர்ந்து, திணைக்களம் தனது வருமானத்தை அதிகரிக்க முடிந்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

2021 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில், ஆண்டின் முதல் 10 மாதங்களில், வருமானம் 20 வீதத்தால் அதிகரித்துள்ளது. தரவுகளின்படி, பல்வேறு காரணங்களால் மது தேவை சுமார் 30 வீதத்தால் குறைந்துள்ளதாக தெரியவந்துள்ளது.

### யாழ்.பலாலியிலிருந்து விரைவில் ...

சென்னை, மதுரை, கோவை, கேரளத்தில் திருவனந்தபுரம், கொச்சி உள்ளிட்ட தென்னிந்திய பகுதிகளை இணைக்கும் வகையிலும் புதிய விமானசேவைகள் இயக்கப்படுமென இலங்கையின் 'ஃபிட்ஸ் எயார்' நிறுவனத் துணைத் தலைவரும் தலைமை நிர்வாக அதிகாரியுமான பீட்டர் ஹில் தெரிவித்தார்.

இது குறித்து திருச்சியில் வெள்ளிக்கிழமை செய்தியாளர்களுக்கு அவர் மேலும் தெரிவித்ததாவது.

இலங்கையின் 'ஃபிட்ஸ் எயார்' என்ற தனியார் விமான நிறுவனம், டிசம்பா 08 ஆம் திகதி முதல் திருச்சி கொழும்பு இடையே தனது முதல் விமான சேவையைத் தொடங்கவுள்ளது. முதல்கட்டமாக வியாழன், சனி, ஞாயிறு என வாரத்தில் 03 சேவைகளை வழங்க திட்டமிட்டுள்ளது. இந்தியாவிலுள்ள மற்ற விமான நிலையங்களுடன் ஒப்பிடுகையில், திருச்சி, இலங்கை இடையே பயணிகள் அதிகரித்து வருவதால் விமான சேவைகளும் அதிகரிக்க வேண்டியுள்ளது. திருச்சியை எங்கள் வரைபடத்துடன் இணைப்பதன் மூலம் இந்தியாவுடனான முதல் சேவையை தொடங்கியுள்ளோம் இவ்வாறு அவர் கூறினார்.

'ஃபிட்ஸ் எயார்' நிறுவன முகாமையாளர் (சென்னை) ஜி. கிருஷ்ணன், பொது விற்பனைப் பிரிவு முகவர் பி.திலக், திருச்சி விற்பனைப் பிரிவு மேலாளர் எஸ்.அபிராமி உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

திருச்சி, கொழும்பு இடையே தற்போது தினமும் ஒரு சேவை என்ற வகையில் ஸ்ரீலங்கன் ஏர்லைன்ஸ் வாரம் 07 சேவைகளை வழங்கி வருகிறது. மேலும் தற்போது 'ஃபிட்ஸ் எயார்' வாரம் 03 சேவையென தொடங்கவுள்ளதுடன் வாரம் 10 சேவைகள் திருச்சி, கொழும்பு இடையே இயக்கப்படும் என்பது குறிப்பிடத்தக்கது.

### தமிழ்க் கட்சிகள் ஓரணியில்...

உருவாக்க வேண்டுமென்ற தீர்மானமும் தமிழ் தேசியக் கட்சிகளுக்கிடையே எட்டப்பட்டுள்ளது.

இனப்பிரச்சினைத் தீர்வு தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை சந்திக்கும் போது வலியுறுத்த வேண்டிய விடயங்கள் குறித்து தமிழ்த் தேசியக் கட்சிகள் வெள்ளிக்கிழமை கூடி தீர்மானங்களை எடுத்துள்ளன.

கடந்த 25 ஆம் திகதி வெள்ளிக்கிழமை தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தலைமையில் கொழும்பில் சந்திப்பொன்றுநடைபெற்றபோதேதமிழ்க் கட்சிகளால் இவ்வாறு தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

இதன்போது தமிழ் மக்களின் காணிகள் விடுவிக்கப்பட வேண்டும், மாகாண சபைத் தேர்தல் நடத்த வேண்டும், அதிகாரப் பரவலை வழங்க வேண்டும் போன்ற விடயங்கள் தொடர்பில் அரசாங்கத்தை வலியுறுத்துவது உள்ளிட்ட பல விடங்கள் தமிழ் தேசியக் கட்சிகளுக்கிடையில் இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இனப்பிரச்சினை தீர்வு தொடர்பாக தமிழ்த் தேசியக் கட்சிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தப்படுமென ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அண்மையில் அறிவித்திருந்தார்.

அத்துடன், எதிர்வரும் டிசம்பர் 11ஆம் திகதி இனப்பிரச்சினை தீர்வு தொடர்பில் எடுக்க வேண்டிய தீர்மானங்கள் குறித்து சர்வகட்சி மாநாடொன்றுக்கும் அவர் அழைப்பு விடுத்துள்ளார்.

இதனையடுத்தே, தமிழ் மக்களின் அபிலாஷைகளை முன்னிறுத்தும் வகையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடனான பேச்சுவார்த்தையின் போது கோரிக்கைகளை முன்வைப்பதற்காக நேற்று முன்தினம் தமிழ் தேசியக் கட்சிகள் கொழும்பில் கூடின.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் தலைமையில் கூடிய இந்தக் கூட்டத்தின் போது காணி அபகரிப்பு நிறுத்தப்பட்டு அபகரிக்கப்பட்ட காணிகள் உடனடியாக விடுவிக்கப்பட வேண்டும், அதிகாரப் பகிர்வு சம்பந்தமான அரசியலமைப்பு மற்றும் சட்டங்களை அமுல்படுத்தி மாகாண சபை தேர்தல்கள் உடனடியாக நடத்தப்பட்ட வேண்டும், உள்ளக சுயநிர்ணய அடிப்படையில் தமிழ் மக்கள் வரலாற்று ரீதியாக வாழ்ந்து வந்த வடக்கு, கிழக்கு பிரதேசத்தில் சமஷ்டி அடிப்படையில் அதியுச்ச அதிகாரப் பகிர்வுடனான புதிய அரசியலமைப்பு உருவாக்கப்பட வேண்டும்.

இந்த ஒழுங்குமுறை நாட்டின் ஏனைய பகுதிகளிலும் நடைமுறைப் படுத்துவதை நாம் வரவேற்கிறோம் போன்ற தீர்மானங்கள் ஒருமித்த கருத்தில் எடுக்கப்பட்டன.

அத்துடன், நேற்று முன்தினம் நடைபெற்ற கூட்டத்தில் பங்கேற்காத ஏனைய தமிழ்த் தேசியக் கட்சிகளின் ஆலோசனைகளையும் உள்ளடக்கி அதனை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் வலியுறுத்துவதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

ஜனாதிபதியின் பேச்சுக்கான அழைப்புக்கு தமிழ்த் தரப்பு பதில் வழங்குவதாகவும் இதன் அடிப்படையிலேயே பேச்சுக்களை முன்னெடுக்க முடியுமெனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இக் கலந்துரையாடலில் கூட்டமைப்பு அங்கத்துவக் கட்சிகளின் தலைவர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் , நீதியரசர் சீ.வி விக்கினேஸ்வரன் மற்றும் சுரேஸ் பிரேமச்சந்திரன் ஆகியோர் கலந்துகொண்டுள்ளனர்.

இம்முடிவுகளை ஏனைய தமிழ்த் தேசியக் கட்சிகளுடனும் கலந்துரையாடி இணக்கப்பாட்டை எட்டவும் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, நேற்றைய கூட்டத்தில் இலங்கை தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா, பாராளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன், தர்மலிங்கம் சித்தார்த்தன், எம்.ஏ.சுமந்திரன், சி.வி.விக்கினேஸ்வரன், கோவிந்தம் கருணாகரன், வினோநோகராதலிங்கம், எஸ்.சிறிதரன் மற்றும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமசந்திரன் ஆகியோர் பங்கேற்றனர்.

### தேர்தல் தொடர்பில் எவரும் ...

பாராளுமன்றத்தில் நேற்று எதிர்க்கட்சி பிரதம கொரடா லக்ஷ்மன் கிரியெல்ல எம்.பி எழுப்பிய கேள்வியொன்றுக்குப் பதிலளிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

உள்ளூராட்சி சபை தேர்தலை அரசாங்கம் உரிய காலத்தில் நடத்த வேண்டுமென வலியுறுத்தி கடந்த சில தினங்களாக பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சி எம்.பிக்கள் பலரும் கோரிக்கைகளை முன்வைத்து வந்தனர். நேற்று பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சி பிரதம கொரடா லக்ஷ்மன் கிரியெல்ல எம்.பி உள்ளூராட்சி சபை தேர்தல் தொடர்பில் கேள்வி ஒன்றை எழுப்பிய போதே இராஜாங்க அமைச்சர் இவ்வாறு பதிலளித்தார். உள்ளூராட்சி சபை தேர்தல் தொடர்பில் எவரும் அச்சமடையத் தேவையில்லை. வரவு செலவுத் திட்டம் முடிவடைந்ததும் அது தொடர்பான புதிய சட்டமூலத்தை பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதே எமது எதிர்பார்ப்பென்றும் இராஜாங்க அமைச்சர் இதன் போது தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற வரவு செலவுத் திட்டத்தின் பொதுநிருவாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள், உள்ளூராட்சி மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சுகளுக்கான நிதி ஒதுக்கீட்டு குழு நிலை விவாதத்தின் போதே எதிர்க்கட்சி பிரதம கொரடா மேற்படி கேள்வியை எழுப்பினார்.

இராஜாங்க அமைச்சர் சானக வக்கும்புர அது தொடர்பில் மேலும் தெரிவிக்கையில், அரசாங்கம் உள்ளூராட்சி சபை தேர்தல் தொடர்பில் கவனம் செலுத்தி வருகின்றது.

அது தொடர்பான புதிய சட்டமூலமொன்றை விரைவில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்போம். இதனால் தேர்தல் தொடர்பில் எவரும் அச்சமடைய தேவையில்லை

எவ்வாறெனினும் வரவு செலவுத் திட்டம் முடிவடைந்த பின்னர் அதனை கொண்டு வர தீர்மானித்துள்ளோம் என்றும் மேலும் தெரிவித்தார்.

# எங்கள் கருத்து

## அப்பாவிப் பெண்களை இலக்கு வைக்கும் காட்டுமிராண்டித்தனம்!

இவ்வாறான சம்பவங்களையெல்லாம் மீறியதாக ஓமானில் இலங்கைப் பெண்களுக்கு நேர்ந்த கொடுமை தொடர்பாக சமீப நாட்களாக திடுக்கிடும் தகவல்கள் வெளிவந்து கொண்டிருக்கின்றன. இலங்கையிலிருந்து சுற்றுலா விஸாவில் ஓமானுக்கு அழைத்துச் செல்லப்பட்ட பெண்கள் பலர் அந்நாட்டில் பாலியல் தொழிலுக்குப் பயன்படுத்தப்பட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

இப்பெண்கள் முதலில் சுற்றுலா விசாவில் அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர். அதன் பின்னர் அவர்களுக்கு தொழில் புரிவதற்கான விஸா பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளது. அங்கு அவர்கள் பாலியல் தொழிலுக்குப் பயன்படுத்தப்பட்டுள்ளனர். இக்குற்றச்செயல் தொடர்பாக இலங்கை சி.ஐ.டி பொலிசார் தற்போது தீவிர விசாரணையை முன்னெடுத்து வருகின்றனர். இதன் பின்னணி குறித்து பல தகவல்கள் வெளிவரலாமென்று எதிர்பார்க்கப்படுகின்றது.

குடும்ப வறுமையைப் போக்கிக் கொள்வதற்காக பெண்கள் தொழில் முயற்சிகளில் இறங்குவது தவறானதல்ல. ஆனால் எதிர்கால ஆபத்துகளை நன்கறிந்து சட்டரீதியான முறையில் வெளிநாட்டுக்கு வேலைவாய்ப்புக்காகச் செல்வதே பொருத்தமாகும். வெளிநாடுகளுக்கு பணிப்பெண்களை அனுப்புகின்ற முகவர்களில் பலர் தவறான நோக்கம் கொண்டவர்களாகவே உள்ளனர். அவர்களது வலையில் விழுந்து விடாமல் பெண்கள் மிகவும் அவதானமாகச் செயற்படுவது அவசியம்.

### மாகாண மட்டத்தில் M.P க்கள்...

பாராளுமன்றத்தில் நேற்று தெரிவித்தார்.

13 ஆவது அரசியலமைப்புத் திருத்தத்தின் 154ஆவது சரத்தில் மாகாண சபையொன்று அமைக்கப்படும் வரை அந்த மாகாணத்துக்குரிய பாராளுமன்ற உறுப்பினர்களை கொண்ட சபையொன்றை அமைத்து அந்த சபை ஊடாக நடவடிக்கைகளை முன்னெடுக்க முடியும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது என்பதை சுட்டிக் காட்டிய பிரதமர்,

அந்த வகையில் தேர்தல் நடத்தப்படும் வரை மாகாணத்திலுள்ள பாராளுமன்ற உறுப்பினர்களை இணைத்துக் கொண்டு அது தொடர்பான நடவடிக்கைகளை முன்னெடுக்க முடியும் என்றும் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற வரவு செலவுத் திட்டத்தின் பொதுநிருவாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள், உள்ளூராட்சி மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சுகளுக்கான நிதி ஒதுக்கீட்டு குழு நிலை விவாதத்தில் உரையாற்றும் போதே பிரதமர் இவ்வாறு தெரிவித்தார்.

சபையில் தொடர்ந்தும் உரையாற்றிய பிரதமர்,

அரசியலமைப்பில் இடையில் சேர்க்கப்பட்ட 13 ஆவது திருத்தம் நடைமுறைப்படுத்தப்பட்டு 35 வருடங்கள் கடந்துள்ளன. மாகாண சபைகளுக்கு மக்கள் பிரதிநிதிகள் இல்லாத சந்தர்ப்பத்தில் பாராளுமன்றத்தினூடாகவே நிதி அனுமதிக்கப்பட்டு வருகிறது.

கடந்த அரசாங்கம் மாகாண சபைகளுக்கான எல்லை நிர்ணய திருத்தத்தை கொண்டு வந்த போது அதனால் தேர்தலே நெருக்கடிக்குள்ளாகுமென சுட்டிக்காட்டியிருந்தோம்.

அந்த சிக்கல்கள் இன்று வரை அவிழ்க்க முடியாத ஒன்றாகியுள்ளது.

இந்நிலையில் உள்ளூராட்சி சபை தேர்தல் விடயத்தில் உறுப்பினர்களின் எண்ணிக்கையை குறைப்பது தொடர்பில் கலந்துரையாடல்கள் நடத்தப்பட்டு வருகிறது. பலர் அதற்கு இணக்கம் தெரிவித்தும் உள்ளனர். கலந்துரையாடல்கள் தொடர்ந்தும் இடம்பெற்று வருகின்றன.

இதேவேளை உள்ளூராட்சி சபைகளின் பல நகர சபைகள் மாநகர சபைகளாக மாற்றம் பெறுவதற்கான வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

உள்ளூராட்சி அமைச்சின் அதிகாரத்துக்கமைய உள்ளூராட்சி சபைகளின் பதவிக் காலத்தை நீடிக்கும் போது எவரும் எதிர்க்கவில்லை. இப்போது எல்லை நிர்ணய செயற்பாடுகள் நடைபெற்று வருகின்றன. தேர்தல்கள் ஆணைக்குழுவே தேர்தலை நடத்த வேண்டும். அதன்படி உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமென்றும் தெரிவித்தார்.

### இலங்கைக்கு சீனா தொடர்ந்தும்...

சீனத் தூதுவர் கியூ சென் ஹொங் ஆகியோருக்கிடையிலான விசேட சந்திப்பொன்று வெள்ளிக்கிழமை (25) நடைபெற்றது. இந்த சந்திப்பின் போதே சீனத் தூதுவரால் இவ்வாறு உறுதியளிக்கப்பட்டுள்ளது.

இந்த சந்திப்பின் போது இலங்கையின் கடன் மறுசீரமைப்பு நடவடிக்கைகள் தொடர்பில் முற்போக்கான இருதரப்பு மற்றும் பலதரப்பு பேச்சுவார்த்தைகள் தொடர்பிலும் அவதானம் செலுத்தப்பட்டுள்ளது.

இதேவேளை கடன் மறுசீரமைப்பு தொடர்பில் , சீனா குறித்து வெளிநாட்டு ஊடகங்களில் வெளியாகியுள்ள போலிச் செய்திகள் தொடர்பிலும் சீனத் தூதுவர் ஜனாதிபதிக்கு விளக்கமளித்துள்ளார்.

சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து கடனுதவியைப் பெற்றுக் கொள்வதற்கான அதிகாரிகள் மட்ட இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ள போதிலும் , இதனை தொடர்ந்தும் முன்கொண்டு செல்வதற்காக கடன் வழங்கும் நாடுகளுடன் கடன் மறுசீரமைப்பு தொடர்பில் இலங்கை பேச்சுவார்த்தைகளை முன்னெடுக்க வேண்டுமென்று நிபந்தனை விதிக்கப்பட்டுள்ளது.

இலங்கையின் பிரதான கடன் வழங்குனர்களான இந்தியா, ஜப்பான் மற்றும் சீனாவுடன் இந்த பேச்சுவார்த்தைகளை முன்னெடுக்க வேண்டியுள்ளது.

இந்தியா மற்றும் ஜப்பான் என்பன இவ்விடயத்தில் சாதகமான பதிலை வழங்குவதாகக் குறிப்பிட்டுள்ள போதிலும் , சீனா ஸ்திரமாக எதனையும் அறிவிக்கவில்லை. மாறாக நெருக்கடிகளிலிருந்து மீள்வதற்கு இலங்கைக்கு தொடர்ந்தும் ஒத்துழைப்புக்களை வழங்குவதாகவே குறிப்பிட்டுள்ளது. இவ்வாறானதொரு பின்னணியில் ஜனாதிபதிக்கும் சீனத் தூதுவருக்குமிடையிலான சந்திப்பு நடைபெற்றுள்ளது.

# 'மின்சாரக் கண்ணா' என வாஞ்சையுடன் அழைக்கப்பட்ட முத்து சிவலிங்கம்

இ.தொ.கா என்றால் பெருந்தோட்டங்களில் வசிக்கும் மண்ணின் மைந்தர்களை பிரதிநிதித்துவப்படுத்தும் அமைப்பு என்பதே அதற்கான சரியான பதவுரையாக இருக்கும். சௌமியமூர்த்தி தொண்டமான் தனது தொழிற்சங்கத்தை நடத்திச் செல்வதற்கு கொழும்பில் ஆள் பிடிக்க முனையவில்லை. தான் சார்ந்த, தன் மக்கள் வாழும் மண்ணில் இருந்தே மைந்தர்களைத் தெரிவு செய்து அவர்களை முன்னணி செயல்வீரர்களாக்கினார். பி.பி தேவராஜ், சதாசிவம், ஏ.எம்.டி ராஜன், சென்னன் மற்றும் ராஜரட்ணம் ஆகியோர் தொண்டமானால் அரவணைத்து வளர்க்கப்பட்டவர்கள். இவர்களில் காலஞ்சென்ற முத்து சிவலிங்கம் முக்கியமானவர். கட்சியின் உபதலைவர்கள் கட்சியை விட்டு விலகிச் சென்றபோது கட்சியில் தொடர்ந்தும் நீடித்தவர்தான் முத்து சிவலிங்கம்.

இ.தொ.காவின் முக்கிய தலைவர்கள் அனைவருமே சௌமியமூர்த்தி தொண்டமான் மீது அசைக்க முடியாத விசுவாசம் கொண்டிருந்தவர்கள். கோபம் வந்தால் அவர்களை தொண்டமான் திட்டித் தீர்ப்பதுண்டு. அதை அவர்கள் பொருட்படுத்துவதில்லை. அப்பா மகனைத் திட்டிய மாதிரி என எடுத்துக் கொள்வார்கள்.

முத்து சிவலிங்கம் இறுதிவரை சௌமியமூர்த்திக்கும் இ.தொ.காவுக்கும் விசுவாசமானவராகவே விளங்கினார். இ.தொ.கா நிர்வாகத்தில் தலைமையுடன் அவருக்கு பிரச்சினைகள் ஏற்பட்ட போதும் தன் கட்சி விசுவாசத்தை அவர் கைவிட்டதில்லை.

இ.தொ.கா அடிப்படையில் ஒரு தொழிற்சங்கம் என்ற வகையில் மலையகத்தில் அதன் வேர்கள் ஆழமாக பதிந்திருக்க வேண்டும். பழையவர்கள் சென்ற பின்னர் இ.தொ.காவின் வேராக செயல்பட்டவர் முத்து சிவலிங்கம். தினமும் சௌமியபவனுக்கு தோட்டங்களில் இருந்து பலர் பல்வேறு பிரச்சினைகளுடன் வருவார்கள். தூர இருந்து வருபவர்கள் முதல்நாள் இரவே வந்து தங்கி விடுவதும் உண்டு. முத்து சிவலிங்கத்தை அவர்கள் பார்க்க வரும்போது அவர்களைக் கூர்ந்து பார்ப்பார்.

"நீ கணேசன் மகன் முத்து இல்ல? மேமலையில அந்த வளைவில ஒரு பெரிய மரம் இருக்குமே, அதுக்கு பக்கத்தில உள்ள லயம் தானே?" என்று சரியாக அடையாளம் சொல்ல அவரால் முடியும். இவ்வாறு பார்க்க வருபவர்கள் மீது முத்து எரிந்து விழுவதில்லை. தொலை தூரத்தில் இருந்து, பிரச்சினைகளைத் தீர்க்கும் இடம் என நம்பி சௌமிய மூர்த்தி பவனுக்கு வருபவர்கள் மீது 'வள்'ளென பாய்ந்து விழும் போது அவர்கள் இப்படி இடிந்து போய் விடுவார்கள் என்பதை முத்து சிவலிங்கம் அறிந்து வைத்திருந்தார்.

முத்து சிவலிங்கம் யாருடனும் மிக எளிமையாகப் பழக்கூடியவர் என்பது அவரது தனிச் சிறப்பு. ஒருவர், அதுவும் தலைமைப் பதவிகளில் உள்ளவர் மனித நேயம் கொண்டவராக இருக்கிறாரா இல்லையா என்பதே முக்கியம். முத்து சிவலிங்கம் அவ்வாறு வேர்களை மறக்காதவர்.

புதன் தினங்களில் சௌமிய பவனில் ஆறுதலாக அவரைச் சந்திக்கலாம். தாராளமாக மனம் விட்டுப் பேசுவார். ஒரு முறை வண்ணவானவில் இதழ்களை எடுத்துச் சென்று அவரிடம் கொடுத்தேன். ஒவ்வொரு பக்கத்தையும் ஆறுதலாகப் புரட்டிப் பார்த்தார். ரொம்ப நன்றா இருக்கே என்றவர் ஒரு ஆழமான பார்வையை என்மீது வீசிவிட்டு, வாசிக்க மாட்டேன் என்று நினைக்கிறீங்களா? என்றார்.

"நான் காலையிலேயே பேப்பர் பார்த்து விடுவேன். புத்தகம் சஞ்சிகை என நன்றாகவே வாசிப்பேன். வானவில்லை தொடர்ந்து மினிஸ்ட்ரிக் அனுப்புங்கள்" என்று சொன்னவர், தன் ஆரம்ப காலம், தொண்டமானை சந்தித்தது, தனது இந்தியப் பயணங்கள். எம்.ஜி.ஆர்., சிவாஜியை கருணாநிதியை சந்தித்தது என தன் ருசிகரமான அனுபவங்களை பகிர்ந்து கொள்ளத் தொடங்கினார். இவ்வளவு எளிமையான மனிதரா என வியந்து போனேன்.



> இவரின் மறைவு
> மற்றொரு மலையக ஆலமரத்தின்
> சரிவாகவே
> கொள்ளப்பட வேண்டும்

"இந்த அனுபவங்களை எல்லாம் தினகரனில் ஒரு தொடராக எழுதலாமே! நானே தொகுத்து எழுதுகிறேன். மாதம் இரண்டுமுறை சந்தித்துவிட்டுப் போகிறேன். பொருத்தமான படங்களைத் தேடித் தர வேண்டும்" என்றேன் உற்சாகமாக. படங்கள் நுவரெலிய வீட்டில் இருப்பதாகவும் தேடி எடுக்க வேண்டும் என்றும் கூறியவர், திடீரென தன் நிலைப்பாட்டில் இருந்து மாறினார்.

"இப்போதைக்கு இந்தத் தொடர் வேண்டாம். பிறகு பார்ப்போம்" என்றார். எழுத்தில் கட்டாயமாக வந்திருக்க வேண்டிய ஒரு பதிவு வராமல் போனது துரதிர்ஷ்டமே!

இப்படிப் பேசிக் கொண்டிருந்தபோது கைக் கடிகாரத்தைப் பார்த்தவர், நேரமிருக்கு... ஒரு தேத்தண்ணி குடிப்போம் என்றார். என்னை அழைத்து வந்தவரைப் பார்த்து, "தேத்தண்ணி கொண்டு வா" என்றவர் பேச்சைத் தொடர்ந்தார். நேரம் கழிந்தது. அவருக்கு ஒரு கப் டீ வந்தது. சில நிமிடங்களாகியும் அவர் டீயை உறிஞ்சவில்லை.

மேலும் சில நிமிடங்கள் கழிய, அவரை மீண்டும் அழைத்து" டீ கொண்டு வரச் சொன்னேன் கொண்டு வந்தியா?" என்றார். கொண்டு வந்தேனே, இதோ சேர் இருக்கு" என்றார் அவர், என்னைக் காட்டி, இவருக்கு எங்கே டீ என்று மறுபடியும் கேட்டார் முத்து சிவலிங்கம்.

"இதோ இங்க இருக்கு சேர்' என்று என் முதுக்குப் பின்னால் இருந்த சிறிய மேசையை சுட்டிக் காட்டினார் அந்த உதவியாளர்.

ஆத்திரம் பீறிட்டுக் கிளம்பியது. சிவலிங்கத்தின் முகத்தில். அவரை நன்றாகத் திட்டிய அவர் தேனீரை என் முன்பாக வைக்கச் சொன்னார். தேனீர் கோப்பை எனக்கு முன்பாக வைக்கப்பட்ட பின்னரேயே, குடிங்க தம்பி என்றபடியே தன் தேனீரை எடுத்து உறிஞ்சினார் சிவலிங்கம்.

இச் சம்பவம் இரண்டு விஷயங்களை உணர்த்தியது. முதலாவது, உயர் பதவிகளை வகித்தாலும் வேற்றுமை பார்க்காமல் மனிதர்களை மனிதர்களாக மதிக்கும் அவருடைய பண்பு. மனித நேயம் இரண்டாவது, தமிழனிடம் அடிமை மனப்பான்மையும் வேற்றுமைப் படுத்திப் பார்க்கும் தன்மையும் மண்டிக் கிடப்பது.

அவருடைய நுவரெலிய வீட்டுக்குப் போனால் நன்றாக உபசரிப்பார். ஒருமுறை அங்கே அவருடன் பேசிக் கொண்டிருந்தபோது கோட்டை மாதிரி விசாலமான வீட்டைக் கட்டியிருக்கிறீர்களே என்றேன்.

"பலரிடமும் உள்ள கேள்விதான் இது... சாதாரண தொழிலாளர் குடும்பத்தில் இருந்து வந்தவன் நான். சிறு வயதில் தோட்டத்தில் வாழ்ந்தபோது தோட்டத் துரைமார் பங்களாக்களைப் பார்த்து பிரமித்துப் போவேன். முடிந்தால் இப்படி ஒரு வீடு கட்டி வாழவேண்டும் என மனக் கோட்டை கட்டுவேன். பிற்காலத்தில் வசதி வந்தபோது முன்னர் நான் பார்த்து வியந்து போன துரை பங்களாக்களின் சாயலில் இதைக் கட்டினேன். இப்படியான கனவுகள் இளைஞர்களிடம் இருக்க வேண்டும். வெளிநாடு போய் வரும் தோட்ட இளைஞர்களும் தோட்ட பங்களா சாயலில் வீடுகளைக் கட்டியிருப்பதை நான் பார்த்திருக்கிறேன்" என்றார் முத்து சிவலிங்கம்.

நுவரெலியாவில் இவரை 'மின்சாரக் கண்ணா' என்றும் அழைப்பார்கள். பெருந்தோட்டங்களுக்கு மின்சாரம் வழங்கப்பட வேண்டும் என முடிவெடுக்கப்பட்டபோது, மின்சாரம் காடு மலை தாண்டி தோட்டக் குடியிருப்புகளைச் சென்றடைந்ததற்கு இவரது கடின உழைப்பு உறுதுணையாக இருந்ததால், அவரை இப் பெயரில் வாஞ்சையுடன் அழைத்தார்கள்.

முத்து சிவலிங்கம் ஓய்வு பெற்று நுவரெலியாவில் தங்கிவிட்ட பின்னர் அவரது வாழ்க்கை அனுபவங்களை பதிவு செய்வதில் தடை இருக்காது என்று கருதி என் யோசனையை சொன்னபோது சம்மதம் தெரிவித்தார். எனினும் நுவரெலியா சென்று இரண்டு மூன்று நாட்கள் தங்கி இதைச் செய்து முடிப்பதில் சில சங்கடங்கள் இருந்ததாலும், கொவிட் கட்டுப்பாடு, அவரது உடல் நிலை காரணமாகவும் இது சாத்தியப்படவில்லை.

1943ஜுலை 20ஆம் திகதி ரப்பான என்ற 'டலோஸ்' தோட்டத்தில் முத்து கருப்பன் வீராயி தம்பதிக்கு நான்காவது பிள்ளையாகப் பிறந்தவர் முத்துசிவலிங்கம். உடபுசல்லாவை வித்தியாலயத்திலும் பின்னர் நுவரெலியா கிறிஸ்தவக் கல்லூரியிலும் கல்விபயின்ற அவர் 1962ம் ஆண்டு தலவாக்கலையில் சௌமியமூர்த்தியாரின் அழைப்பில் இ.தொ.காவில் இணைந்தார். அங்கு அவருக்கான முதல் மாத சம்பளம் 42.50 சதம் தான். அக் காலம் மலையகத் தமிழர்களில் 80சதவீதமானோர் குடியுரிமை இழந்த நாடற்றவர்கள். எனவே தேசிய அரசியலில் அவர்களுக்கு எந்தப் பங்களிப்பும் கிடையாது.

பொன்னியின் செல்வன் பழுவேட்டரையரை 64 விழுப்புண் தாங்கியவர் என்றெழுத்தியுள்ளார் கல்கி. முத்து சிவலிங்கம், சதாசிவம் போன்றோர் போராட்டங்களில் விழுப்புண் ஏந்தியவர்கள்தான். இவ்வாறு கடினமான காலங்களைக் கடந்து வந்தவர்களில் ஒருவரே முத்து சிவலிங்கம்.

ஐந்து ஜனாதிபதிகளின் கீழ் பணியாற்றியிருக்கும் முத்து சிவலிங்கத்தின் துணைவியார் பெயர் ராஜேஸ்வரி. இவர்களுக்கு ஒரு மகன் இரண்டு மகள்மார். கடினமான காலங்களைக் கடந்து வந்த அவர் நீண்ட ஆயுளை பெற்றவராக இருந்திருக்க வேண்டும். எனினும் ஐந்து வருடங்களாகவே தளர்ந்து போனார்.

நிச்சயமாக அவரது மறைவு ஒரு வெற்றிடத்தை ஏற்படுத்தி இருக்கிறது. அவர் தொழிலாளர் சமூகத்தில் இருந்து வந்தவர். அச்சமூகத்தின் இதயத்துடிப்பை அறிந்தவர். தொழிற்சங்க அரசியலை நன்கு அறிந்தவரும் கூட. இன்று இவ்வாறானவர்கள் தொழிற்சங்க அரசியல் பரப்பில் குறைவு. தொழிற்சங்க அரசியல் இன்று வேறு ஒரு பரிமாணத்தை எட்டியிருக்கிறது. அதே சமயம் முதலாளித் தரப்பும் பலம் பொருந்தியதாக மாறியிருப்பதால், தொழில் பிணக்குகளை அரசியல் பலம்/ செல்வாக்கு மற்றும் சட்ட ரீதியாக வெற்றி கொள்ளும் நிலை காணப்பட்டாலும் காணி, வீடு, சம்பளம், தொழில் உரிமைகள், பெருந்தோட்டங்களின் எதிர்காலம், அரசியல் உரிமைகள் எனப் பல மலையளவு பிரச்சினைகள் உள்ளன. ஊடக விளம்பரங்கள் மூலம் எல்லாம் ஒழுங்காக நடப்பது போல காட்டிக் கொள்வது வேறு முக்கிய பிரச்சினைகள் தீர்க்கப்படாமல் கிடப்பில் போட்டப்பட்டிருப்பது வேறு.

மலையக தொழிற்சங்கங்கள், பொதுவான பிரச்சினைகளில் ஒன்றிணைந்து செயல்பட வேண்டும் என்ற கோரிக்கை வலுப்பெற்றுவரும் ஒரு சூழலில், தொழிற்சங்கத்துக்கும் அரசியலுக்கும் வேறுபாடு தெரியாமல் சிலர் இவற்றைக் கையாளும் ஒரு நேரத்தில், தொழிற்சங்க முதலாளித்துவம் மேவி வரும் ஒரு சூழலில் முத்து சிவலிங்கம் மறைந்திருக்கிறார். பழையது கழிதலும் புதியன புகுதலும் இயல்பே. ஆனால் புதியன புதிய சவால்களை ஏற்கக் கூடியதாக, தறிகெட்டுப் போகாமல் இருக்க முத்து சிவலிங்கம் போன்ற அனுபவஸ்தர்களின் வழிகாட்டல் அவசியம்.

அருள் சத்தியநாதன் ...

---

கருணாகரன்

# இலங்கையின் இனப்பிரச்சினை முஸ்லிம்களையும் உள்ளடக்கியதே

## எல்லாக் கட்சிகளும் ஒருமுகப்பட்டே இனப்பிரச்சினைக்கு தீர்வு காணலாம்

இனப்பிரச்சினைக்குத் தீர்வு என்ற வகையில் அதிகாரப்பரவலாக்கம் பற்றி அரசாங்கம் பேசத்தொடங்கியுள்ளது. வரவு செலவுத்திட்ட விவாதத்தின்போது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இதைப்பற்றிப் பகிரங்கமாகப் பேசியுள்ளார். அவருடைய அறிவிப்பின்படி எதிர்வரும் டிசெம்பர் 11ஆம் திகதி பேச்சுகள் ஆரம்பிக்கப்பட வேண்டும். அதற்கேற்றவாறு தமிழ்த்தரப்புகள் ஒருமுகப்பட்டு பேசத்தயாராக வேண்டும் என்று கேட்டுள்ளார் ஜனாதிபதி. மக்களுடைய எதிர்பார்ப்பும் இதுதான். எல்லாக்கட்சிகளும் ஒருமுகப்பட்டு, பிரச்சினைக்குத் தீர்வு காண முயற்சிக்க வேண்டும் என்பதாகும்.

இதற்கேற்ற மாதிரி, இந்தப் பத்தியை எழுதிக் கொண்டிருக்கும்போது (25.11.2022) கொழும்பில் சம்பந்தனின் வீட்டில் தமிழ்த் தேசிய அடையாளக் கட்சிகள் பலவும் கூடிப் பேசுகின்றன. இதைப்போல சிங்களத் தரப்பிலுள்ள கட்சிகளின் நிலைப்பாட்டைப் பற்றியும் ஜனாதிபதி பகிரங்கமாகவே கேட்டுள்ளார். சஜித் பிரேமதாச அன்று பாராளுமன்றத்தில் பிரசன்னமாகியிருக்கவில்லை. அதனால் லஷ்மன் கிரியல்லவே பதிலளித்தார். தலைவர் சஜித்துடன் கலந்து பேசி இதைப்பற்றிச் சொல்வோம் என்றார்.

அதேவேளை பிரதமர் தினேஷ் குணவர்த்தன, இந்த அதிகாரப் பகிர்வுக்குத் தயாரா? என்று லஷ்மன் கிரியல்ல கேள்வி எழுப்பியிருந்தார். ஏனென்றால் கடந்த காலத்தில் அதிகாரப் பகிர்வுக்கு எதிரான நிலைப்பாட்டைக் கொண்டவர் தினேஷ் குணவர்த்தன என்ற அடையாளம் அவர் மீது உண்டு. ஆகவேதான் அவரிடம் இதைப்பற்றி திரும்பத்திரும்ப லஷ்மன் கிரியல்ல கேள்வி எழுப்பினார். இதேவேளை முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடத்திலும் கேள்வி எழுப்பப்பட்டது. 13 பிளஸ் வரை செல்லலாம் என்று அறிவித்தவர் மஹிந்த ராஜபக்ஷ. அதிகாரப் பகிர்வுக்கு தாம் தயார் என்று கையைக் காட்டித் தம்முடைய சம்மதத்தைத் தெரிவித்தார் மஹிந்த. தமிழ்த்தரப்பில் சுமந்திரன், மனோ கணேசன் போன்றோரும் இதற்கு தமது ஆதரவைத் தெரிவித்தனர். ஆதரவைத் தெரிவித்தனர் என்று சொல்வதை விட அப்படி நடந்தால் அது நல்லது. மகிழ்ச்சி என்றனர்.

ஆனால், முஸ்லிம்களின் தரப்பில் இருந்து இதைப்பற்றிக் கேள்விகள் எழுப்பப்பட்டன. இது குறித்து நாம் கூடிய கவனம் செலுத்த வேண்டும். ஏனென்றால், இனப்பிரச்சினைக்கான தீர்வில் முஸ்லிம் மக்களின் பிரச்சினையையும் கவனத்திற் கொள்ள வேண்டும். வடக்குக் கிழக்குப் பிரச்சினை என்பது முஸ்லிம்களையும் உள்ளடக்கியதுதான். ஆகவே நிச்சயமாக இதைப்பற்றி நாம் கூடிய கவனமெடுத்துச் செயற்பட வேண்டியுள்ளது. சம்பந்தன் வீட்டில் கூடியிருக்கும் தமிழ்க்கட்சிகள் இதைக்குறித்தும் சிந்திக்க வேண்டும்.

அன்று சபையில் ஜே.வி.பி இருக்கவில்லை. ஏனைய சிறிய கட்சிகளும் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியும் தெளிவாக இதற்கான பதிலைச்சொல்லவில்லை. ஆனால் சஜித் பிரேமதாச இதற்கான பதிலைப் பின்பு சொல்லியுள்ளார். ஒற்றையாட்சிக்கும் அதிகாரப் பகிர்வு என்றால் அதற்குத் தாம் தயார் என.

இப்பொழுது உள்ள பிரச்சினை, இந்த அதிகாரப் பகிர்வு எந்த அடிப்படையில் நடக்கப்போகிறது? மாகாண சபைகளுக்கான அதிகாரத்தை அதிகரிப்பதன் வழியாகவா? அதாவது 13 ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவதா? அல்லது சந்திரிகா குமாரதுங்க பரிந்துரைத்த – நீலன் திருச்செல்வம் உருவாக்கிய தீர்வு யோசனைகளின் வழியாகவா? அல்லது வேறு ஒன்றா? அவர்களை எப்படி நம்புவது? என்ற விதமாகவே உள்ளது.

ஆகவே எல்லாவற்றுக்கும் அப்பால், ஜனாதிபதியின் அறிவிப்பை நம்பலமா? என்ற கேள்விதான் இப்பொழுது பெரிதாக முன்னெழுந்து நிற்கிறது. ஆனால்



இதில் தமிழ்த்தரப்புகள் என்ன நிலைப்பாட்டை எடுக்கப்போகின்றன? என்பது மிகப் பெரிய கேள்வி. தமிழ்த்தரப்பில் தீவிர நிலைப்பாட்டைக் கொண்ட அகில இலங்கைத் தமிழ்க்காங்கிரஸ் (கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தரப்பு), ஸ்ரீகாந்தா – சிவாஜிலிங்கம் போன்றோர் என்ன நிலைப்பாட்டை எடுப்பர் என்று தெரியவில்லை. இதுவரையிலுமான அவர்களுடைய மனப்பதிவு ரணில் விக்கிரமசிங்க அதிகாரப் பகிர்வை செய்ய விரும்பினாலும் இப்பொழுதுள்ளது பொதுஜன பெரமுன அரசாங்கம். ஆகவே

"அரசியல் என்பதே அப்படியானதுதான்" என்பதே இதற்குப் பதில்.

அது நண்பர்களுடன் தேநீர் குடிக்கும் விருந்தல்ல. எதிர்த்தரப்புடன் கவனமாகவும் திறமையாகவும் ஆடப்பட வேண்டிய ஆட்டம் அது. அதற்கேற்ப பல வழிகளிலும் பல முனையிலும் நம்மைத் தயார் செய்ய வேண்டும். அந்தத் தயார்ப்படுத்தலுடன் களத்தில் இறங்க வேண்டும். அப்படி இறங்கினால் நாமும் அரசியலில், நம்முடைய இலக்கில் வெற்றியடைய முடியும்.

இந்தியா, இங்கிலாந்து போன்ற பெரும் நாடுகளும் கிரிக்கெற் போட்டியில் கலந்து கொள்கின்றன. இலங்கை, பங்களாதேஷ் போன்ற சிறிய நாடுகளும் கலந்து கொள்கின்றன. பெரிய நாடுகளின் வீரர்களோடு எப்படி நாங்கள் போட்டியிடுவது என்று எந்த அணியும் சொல்வதில்லை. எந்த வீரரும் பின்னிற்பதில்லை. இங்கே பெரிது சிறிது என்பதல்ல பிரச்சினை. திறமை, நம்பிக்கை, துணிவு, ஆற்றல் போன்றவையே முக்கியமாகும்.

ரணில் விக்கிரமசிங்க முதிர்ந்த அரசியல் தலைவர். இலங்கையின் கொந்தளிப்பு மிக்க ஐம்பது ஆண்டுகால அரசியலில் அரைவாசிக் காலத்துக்கும் மேலாக பெரும்பொறுப்பில் இருந்தவர். பேச்சுவார்த்தைகளிலும் உடன்படிக்கைகளிலும் ஈடுபட்டவர். ஆட்சியில் பல நெருக்கடிச் சூழலை எதிர்கொண்டவர். கட்சிக்குள் பல சிக்கல்களைச் சந்தித்தவர். வெற்றி – தோல்வி எல்லாவற்றிலும் தாக்குப் பிடித்து நின்றவர். இப்பொழுது ஜனாதிபதியாகியதும் பதவியில் தொடர்ந்து நீடிப்பதும் கூட அவருடைய தனியாற்றலினால்தான். அல்லது சூழலைத் தனக்கிசைவாக மாற்றிக் கொள்ளும் திறனால். முக்கியமாக எதிர்த்தரப்பையே தனக்கிசைவாக மாற்றிக் கொள்ளும் திறனால். இது இப்போது பொதுஜன பெரமுன, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை மட்டுமல்ல, கடந்த மைத்திரி – ரணில் நல்லாட்சிக் காலத்திலும் எதிர்க்கட்சியாக இருந்த தமிழ்த்தேசியக் கூட்டமைப்பை – தமிழரசுக் கட்சியை – தனக்கிசைவாக வளைத்துப் போட்டிருந்தவர்.

ஆகவே அப்படியானவருடன் பேச்சுக்களில் ஈடுபடுவதென்பது மிகச் சவாலான ஒன்றே. இதைப் புரிந்து கொண்டு, இதற்கு, இதை எதிர்கொள்வதற்கு தயாராக வேண்டும். அதுவே செய்ய வேண்டியது. அவர் எப்படிப் பிராந்திய சக்தியாக இந்தியாவையும் சர்வதேச சமூகம் என்ற மேற்குலகையும் கையாள்வாரோ அதை விட நுட்பமாக தமிழ் – முஸ்லிம் தரப்புகள் விவேகமாக இந்தத் தரப்புகளைக் கையாளக் கூடியதாக இருக்க வேண்டும். அவர் எதிர் பாராத கோணங்களில் விடயங்களை நகர்த்த வேண்டும்.

இதற்கு முற்றிலும் புதிய முறையில் விடயங்களைக் கையாளும் சிந்தனை தேவை. அதாவது புதிய சிந்தனை முறை வேண்டும். அதில் நம்பிக்கை வேண்டும். அந்த நம்பிக்கையில் துணிவை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும்.

ஆனால், இப்பொழுது என்ன நடக்கிறது என்றால், ரணில் விக்கிரமசிங்க பேச்சுக்கு வருமாறு அழைத்தால், தமிழ்த்தரப்புகள் தொடை நடுக்கம் கொள்கின்றன. தமிழ்த்தரப்பிலுள்ள அரசியல்வாதிகள் மட்டுமல்ல, தமிழ் ஊடகவியலாளர்கள், தமிழ்ப் புத்திஜீவிகள், தமிழ் ஆய்வாளர்கள் எல்லோருமே தடுமாறுகின்றனர். இந்தப் பலவீனத்தை மறைத்துக் கொள்வதற்காக "அரசை நம்ப முடியாது" என்று சொல்லித் தப்ப முயற்சிக்கின்றனர்.

அரசியல் என்பதே தந்திரோபாயங்கள் நிறைந்ததுதான். அதைக் கையாள்வதற்கான சாணக்கியம் வேண்டும். இராஜதந்திரம் வேண்டும். புத்திக்கூர்மையான, அதிரடியான நடவடிக்கைகள் வேண்டும். எந்தத் தந்திரசாலியென்றாலும் வரட்டும். அவருடன் விளையாடிக் காட்டுகிறோம் என்ற உற்சாகம் வேண்டும். அதைத் தமிழ் முஸ்லிம் தரப்புகள் வளர்த்துக் கொள்ளட்டும்.

அவ்வகையான உபாயங்களில் முக்கியமானது, இலங்கையின் அரசியலமைப்பில் பல்லினத்தன்மையையும் பன்மைத்துவத்தையும் கொள்ள வைத்தலாகும்.

இன்னொன்று வழமையான கோரிக்கைகள், வழமையான அணுகுமுறைகளின் வழியாக இந்தப் பேச்சினை அணுக முற்படாமல் வேறு முறையில் தொடருதல். கடந்த 30 ஆண்டுகளாக அரசாங்கத்துடனான பேச்சுவார்த்தைகளில் புலிகளே ஈடுபட்டு வந்தனர். அவர்களே யார் யார் பேச்சில் கலந்து கொள்வது? என்னென்ன விடயங்களைப் பேசுவது? அதை எந்த ஒழுங்கில் எப்படிப் பேசுவது? போன்ற எல்லாவற்றையும் தீர்மானித்தனர். இப்பொழுது முதற்தடவையாக தமிழ் மிதவாத அரசியற் தரப்பின் கைகளுக்கு வந்துள்ளது. தமிழ்த்தரப்பு இதில் தனியே ஈடுபட முடியாது. முஸ்லிம்களையும் இணைத்துக் கொள்ள வேண்டும். இப்படிப் பல கோணங்கள் உண்டு.

எல்லாவற்றுக்கும் முதலில் எதிர்த்தரப்பைப் பார்த்துப் பயப்படுவதை விடுத்து, துணித்து களமாட முன்வர வேண்டும். ஆயிரமாயிரம் களங்களைக் கண்டவர் தமிழர் என்று பெருமை பேசிக் கொண்டிராமல் துணிந்து யதார்த்த வெளியில் களமாட வேண்டும்.

யார் இதற்கு முதற்குரலை எழுப்புவது?

# வறுமையை சாதகமாக பயன்படுத்தி பெண்களை வேட்டையாடும் கும்பல்!

## இலங்கைப் பெண்கள் ஓமானுக்கு கடத்தப்பட்டதில் வெளிவருகின்ற திடுக்கிடும் தகவல்கள்!

**நாட்டின் பொருளாதாரத்துக்குப் பெண்களின் பங்களிப்பு கணிசமானளவு காணப்படுகிறது. ஆரம்பத்தில் பெருந்தோட்டத்துறையிலும் அதன் பின்னர் திறந்த பொருளாதாரக் கொள்கை அறிமுகப்படுத்தப்பட்ட பின்னர் ஆடை உற்பத்தித் துறையிலும் எனப் பெண்களின் பங்களிப்பு படிப்படியாக அதிகரித்தது.**



அதன் பின்னரான காலப் பகுதியில் பெண்கள் வெளிநாடுகளுக்குப் பணிப்பெண்களாகச் செல்வது அதிகரித்திருந்ததுடன், இதனால் நாட்டுக்கு கணிசமான அந்நிய செலாவணி வருவாய் கிடைத்தது. இன்னுமொரு நாட்டுக்குப் பணிப் பெண்களாக அனுப்பப்படும் இலங்கையர்கள் அனுபவிக்கும் துன்பங்கள் ஒருபுறமிருக்க, பாலியல் ரீதியான தொழிலுக்காகப் பெண்களைக் கடத்திச் சென்ற சம்பவம் நாட்டு மக்கள் அனைவரையும் கவலைக்கு உட்படுத்தியுள்ளது.

சுற்றுலா விசாவின் ஊடாக ஓமான் நாட்டுக்கு அழைத்துச் செல்லப்பட்ட 90 இலங்கைப் பெண்கள் பாலியல் தொழிலுக்காகப் பல மில்லியன் ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளனர் என்ற செய்தி முழுநாட்டையும் உலுக்கியுள்ளது. சட்டவிரோதமான வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர்களாகச் செயற்படுபவர்கள் இந்த மோசடியுடன் தொடர்புபட்டிருப்பதுடன், இவ்விடயம் தொடர்பாக சந்தேகத்தின் பேரில் இருவர் கைது செய்யப்பட்டு விசாரிக்கப்பட்டு வருகின்றனர்.

நாட்டில் தற்பொழுது நிலவும் பொருளாதார நெருக்கடியைப் பயன்படுத்தும் சில மோசடிக்காரர்களின் சதிவலைகளில் சிக்கியுள்ள பெண்கள் இவ்வாறு பாதிக்கப்பட்டுள்ளனர். ஓமான் மற்றும் துபாய் போன்ற நாடுகளுக்கு விசா வழங்கும் நடைமுறை இலகுபடுத்தப்பட்டிருப்பதால் விருந்தினர் விசாவில் சென்று பின்னர் தொழிலுக்கான விசாவாக அதனை மாற்றும் செயற்பாட்டை தொழில்முகவர்கள் ஏற்படுத்திக் கொடுக்கின்றனர்.




இவ்வாறு விருந்தினர் விசாவில் சென்று ஓமானில் பாலியல் தொழிலுக்காக விற்பனை செய்யப்பட்டு பரிதவிக்கும் நிலையில் உள்ள இலங்கைப் பெண்கள் குறித்த தகவல்கள் வெளியாகியிருந்தன.

## மத்தியகிழக்கு நாடுகளில் இலங்கைப் பணிப்பெண்கள் துன்புறுத்தப்படுவது முடிவுக்குக் கொண்டு வரப்பட வேண்டும்!

நாட்டில் நிலவும் வறுமை மற்றும் தேவைகளை பூர்த்தி செய்வதில் அதிகரித்து வரும் விரக்தியின் காரணமாக பலர் நாட்டைவிட்டு வெளியேறுவதைத் தெரிவாகக் கொண்டுள்ளனர். இதனால் கடவுச்சீட்டு அலுவலகத்துக்கு வெளியே நீண்ட வரிசைகள் காணப்படுகின்றன. பெரும்பாலும் படித்த மற்றும் ஆங்கில மொழியை சரளமாகக் கையாளக் கூடியவர்கள் மாணவர் விசாவில் மேலைத்தேய நாடுகளுக்குச் செல்ல முயற்சிக்கின்றனர்.

படிப்பது அன்றி, சம்பளத்தில் வேலை தேடுவது அவர்களின் நோக்கமாக இருக்கின்றது. அதேநேரம், நாளாந்த வாழ்வாதாரத்தை முன்னெடுத்துச் செல்ல எப்படியாவது பணம் சம்பாதிக்க வேண்டும் என்ற நோக்கில் பலர் உரிய பயிற்சிகள் இன்றி மத்திய கிழக்கு நாடுகளுக்குச் செல்ல முயற்சிக்கின்றனர். இதனால் மத்திய கிழக்கில் முறையற்ற மற்றும் சட்டவிரோதமான முறையில் ஏழைப் பெண்கள் ஆபத்தான சூழ்நிலைகளை எதிர்கொள்கின்றனர்.

ஓமானில் பரிதவிக்கும் நிலையில் உள்ள பெண்களில் பெரும்பாலானவர்கள் கஷ்டப் பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் என்பது தெரியவந்துள்ளது. மக்களின் வறுமையைப் பயன்படுத்திக் கொண்டு பணம் சம்பாதிக்கும் நபர்கள் இவ்வாறான முறைகேடான செயற்பாடுகளில் ஈடுபடுகின்றனர்.

மருதானை பகுதியில் தொழில் வாய்ப்பு முகவர் நிலையத்தை நடத்திவரும் ஒருவர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் கைது செய்யப்பட்டிருந்தார். அதேபோல அவிசாவளை பகுதியில் மற்றுமொரு சந்தேகநபர் கைது செய்யப்பட்டிருந்தார். ஓமானுக்குப் பெண்களைக் கடத்தும் இந்த சட்டவிரோத செயற்பாடு பாரியதொரு வலைப்பின்னலுடன் நடைபெற்று வருகின்றமை ஆரம்பகட்ட விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது.

ஓமானில் உள்ள இலங்கைத் தூதரகத்தின் அதிகாரியொருவரும் தொடர்புபட்டுள்ளமை தெரியவந்துள்ளது. குறித்த அதிகாரியின் கடவுச்சீட்டை மீளப் பெற்றுக் கொண்டு அவரை நாட்டுக்கு அழைக்கும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவில் வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் அதிகாரிகள் அழைக்கப்பட்ட போது, இவ்விடயம் குறித்தும் கலந்துரையாடப்பட்டது. ஓமானில் பணி நீக்கம் செய்யப்பட்ட அதிகாரி தொடர்பில் பெப்ரவரி மாதம் வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் முன்னாள் தலைவர் முறைப்பாட்டை மேற்கொண்டிருந்த போதும், அவர் மீது நடவடிக்கை எடுக்கப்படவில்லையென்பதும் இங்கு புலப்பட்டிருந்தது.

குற்றப் புலனாய்வுப் பிரிவினரின் அறிக்கைக்கு அமைய வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் குறித்த அதிகாரி தொடர்பில் உள்ளக விசாரணையை ஆரம்பித்திருந்த போதும், அதில் குற்றச்சாட்டுக்குப் போதுமான சாட்சியங்கள் கிடைத்திருக்கவில்லையென்பதும் விசாரணைகளில் தெரியவந்தது. இது விடயத்தில் சம்பந்தப்பட்ட தரப்பினர் விரைந்து செயற்பட்டிருந்தால் இந்த சட்டவிரோத ஆட்கடத்தல் வியாபாரத்தைத் தடுத்திருக்க முடியும்.

அதேநேரம், இலங்கைக்கு அந்நிய செலாவணியைக் கொண்டுவரும் துறைகளில் ஒன்றான வெளிநாட்டு வேலைவாய்ப்புத் துறையில் பயிற்சி அளிக்கப்பட்ட பணியாளர்களை வெளிநாட்டுக்கு அனுப்புவது தொடர்பில் சரியான பொறிமுறையொன்று உருவாக்கப்பட வேண்டும். நாட்டில் தற்பொழுது காணப்படும் பொருளாதார நெருக்கடியின் காரணமாக எப்படியாவது நாட்டைவிட்டு வெளியேற வேண்டும் என்ற எண்ணத்தில் பலர் இருப்பதால் இதனைச் சாதகமாகப் பயன்படுத்தும் சட்டவிரோத ஆட்கடத்தல் வியாபாரிகள் மக்களை தேவையற்ற சிக்கல்களுக்குள் தள்ளி விடுகின்றனர்.

## வெளிநாட்டுக்கு பணிப்பெண்களை அனுப்புகின்ற முகவர்கள் தீவிரமாகக் கண்காணிக்கப்படுவது அவசியம்!

இது விடயத்தில் இடம்பெறுகின்ற ஊழல்களைக் கட்டுப்படுத்தி மோசடியாகச் செயற்படுபவர்களைக் கண்டறிந்து அதனைத் தடுப்பதற்கு வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் மற்றும் சட்டத்தை நிலைநாட்டும் தரப்பினர் உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டியதும் கட்டாயமாகும்.

மறுபக்கத்தில், ஏற்கனவே பல்வேறு சூழ்நிலைகளால் பாதிக்கப்பட்டுள்ள மக்கள் போலியான மற்றும் சட்டவிரோதமான தொழில் முகவர்களிடம் ஏமாறாமல் இருப்பது தொடர்பில் கவனம் செலுத்த வேண்டும்.

இதுஇவ்விதமிருக்க, தாதியர் மற்றும் பராமரிப்புத் துறைகளில் கனடா போன்ற நாடுகளில் அதிகமான வேலைவாய்ப்புக்கள் இருக்கின்றபோதும் அதற்குத் தேவையான பயிற்றுவிக்கப்பட்ட ஆளணி இலங்கையில் காணப்படாமல் இருப்பதும் துரதிர்ஷ்டமாகும். பயிற்றுவிக்கப்பட்ட ஆளணியினர் என்பதற்கு அப்பால் மொழி தொடர்பான குறைபாடு காணப்படுகின்றன.

குறிப்பாக ஆங்கில மொழிதொடர்பில் பணியாளர்களுக்கு பயிற்சிகளை வழங்குவது தொடர்பிலும் சம்பந்தப்பட்ட தரப்பினர் அக்கறை காண்பிக்க வேண்டும். துறைசார் பயிற்சி நிலையங்கள் மற்றும் மொழி தொடர்பான பயிற்சிகளை வழங்கி முறைசாரா பணியாளர்களை வெளிநாட்டுக்கு அனுப்புவதே காலத்தின் தேவையாகவுள்ளது.

**பி.ஹர்ஷன்...**

---

# இந்தியாவின் வெளியுறவு கொள்கை உலக நாடுகளுக்கே முன்னுதாரணம்

**இந்தியாவின் வெளியுறவுத்துறை கடைப்பிடித்து வருகின்ற கொள்கைகள் சிறப்பானவையென்று உலக நாடுகள் பாராட்டுத் தெரிவித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. இந்தியாவின் வெளியுறவுக் கொள்கைகள் எளிதாகவும், சுதந்திரமாகவும் இருக்கிறது என்று பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் இம்ரான் கான் சமீபத்தில் பாராட்டுத் தெரிவித்துள்ளமையும் இங்கு சுட்டிக்காட்டத் தக்கதாகும்.**

இந்திய வெளியுறவுக் கொள்கையானது உலகுக்கு முன்னுதாரணமென்றும் அவர் குறிப்பிட்டார்.



## பாகிஸ்தானின் பலவீனத்துடன் ஒப்பிட்டு இந்தியாவைப் பாராட்டும் இம்ரான் கான்

பாகிஸ்தானின் முன்னாள் பிரதமரும், பாகிஸ்தான் தெஹ்ரிக் கட்சியின் தலைவருமான இம்ரான் கான், இஸ்லாமாபாத்தில் சமீபத்தில் நடைபெற்ற கூட்டமொன்றில் உரையாற்றுகையிலேயே இந்தியா மீது புகழாரம் சூட்டியுள்ளார்.

பாகிஸ்தானுடன் சமகாலத்திலேயே இந்தியாவும் சுதந்திரம் பெற்றிருந்தது. ஆனால் பாகிஸ்தானுடன் ஒப்பிடுகையில், இந்தியாவின் வெளியுறவுத்துறைக் கொள்கையானது சுதந்திரம் மிக்கதாகவும், அமெரிக்காவின் எதிர்ப்பையும் மீது ரஷ்யாவிடம் இருந்து எரிபொருள் வாங்கும்படியாக துணிச்சல் மிக்கதாகவும் உள்ளதாக இம்ரான் கான் பாராட்டியுள்ளார்.

இம்ரான் கான் தனது உரையின் போது, "நான் இந்தியாவை உதாரணமாக நோக்குகிறேன். இந்திய நாடு நம்மோடு சுதந்திரம் பெற்றது. அதன் வெளியுறவுக் கொள்கைகளைப் பாருங்கள். இந்தியாவுக்கு சுதந்திரமான வெளியுறவுக் கொள்கை உள்ளது. ரஷ்யாவிடம் எரிபொருள் வாங்கும் தனது முடிவில் இந்தியா உறுதியாக இருக்கிறது.

உக்ரைன் நாட்டுடனான போர் காரணமாக ரஷ்யாவிடம் இருந்து எரிபொருள் இறக்குமதி செய்யக் கூடாது என்று அமெரிக்கா மற்றும் மேற்குலக நாடுகள் கொடுத்து வரும் அழுத்தங்களையும் மீறி, இந்தியா தனது தேசநலனில் அக்கறை கொண்டு ரஷ்யாவிடம் தொடர்ந்து எரிபொருள் வாங்கி வருகிறது" என்று பாராட்டியுள்ளார் பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் இம்ரான் கான்.

"குவாட் கூட்டமைப்பில் இந்தியாவும் அமெரிக்காவும் நட்பு நாடுகளாக இருந்தாலும், நாட்டு மக்கள் மீதான நலன் கருதி ரஷ்யாவிடம் இருந்து எரிபொருள் வாங்க இந்திய அரசு முடிவு செய்தது. பாகிஸ்தானில் பிரதமர் ஷாபாஸ் ஷரீப் தலைமையிலான ஆட்சி அமைக்கப்பட்டு பல மாதங்களாகியும் நாட்டின் பொருளாதார, அரசியல் குழப்பங்கள் தீரவில்லை. பாகிஸ்தான் அரசாங்கம் மக்களின் நலனுக்காக முக்கிய முடிவுகளை எடுக்க வேண்டும்" என்று வலியுறுத்தி இருக்கிறார் இம்ரான் கான்.

இதேவேளை இக்கூட்டத்தில் உரையாற்றுவதற்கு முன்பாகவும் சில தடவை இந்திய அரசை இம்ரான் கான் பாராட்டி இருந்தமை குறிப்பிடத்தக்கது.

கடந்த ஒக்டோபர் மாதமும் இந்தியாவின் வெளியுறவுத்துறைக் கொள்கையை பாராட்டிப் பேசியிருந்தார் இம்ரான் கான்.

"புதுடில்லியால் ரஷ்யாவிடம் இருந்து எரிபொருள் இறக்குமதி செய்ய முடிகிறது. ஆனால், பாகிஸ்தானோ மேற்கத்திய நாடுகளுக்கு அஞ்சி அடிமையாக மாறி மக்கள் நலனுக்காக துணிச்சலான முடிவுகளை எடுக்க மறுக்கிறது. இந்தியா சுயமான முறையில் துணிச்சலான முடிவுகளை மேற்கொள்கிறது" என்று பாராட்டினார் அவர்.





## ரஷ்யாவிடமிருந்து எரிபொருள் வாங்குவது இந்தியாவின் துணிச்சலான முடிவு!

இவையெல்லாம் ஒருபுறமிருக்க, இந்தியாவின் பொருளாதார மற்றும் இராணுவ வல்லமை குறித்தும் உலக நாடுகள் பாராட்டுத் தெரிவித்து வருகின்றன. இந்நிலையில் 100 ஆவது சுதந்திர தினத்தில் இந்தியா வல்லரசாக உயர்ந்து விடும் என்று இந்திய மத்திய இணை அமைச்சர் எல்.முருகன் திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளார்.

இந்தியா எல்லாத் துறைகளிலும் முன்னேற்றப் பாதையில் பயணித்துக் கொண்டிருப்பதாக கூறி பெருமிதம் தெரிவித்தார் இணையமைச்சர் முருகன்.

இந்திய மத்திய அரசின் சாதனைகளையும், பிரதமர் நரேந்திர மோடியின் செயற்பாடுகளையும் பட்டியலிட்டு அவர் பெருமிதம் தெரிவித்தார்.

மத்திய அரசு எதைச் சொல்கிறதோ அதைத்தான் செய்து வருவதாக அவர் பாராட்டுத் தெரிவித்தார். மத்திய அரசு முன்னெடுத்துள்ள பல்வேறு திட்டங்களால் இந்தியாவில் புதிய தொழில்முனைவோர் பலர் உருவாகியிருக்கிறார்கள் என்றும் அவர் பெருமிதம் தெரிவித்தார்.

இந்தியா எல்லாத் துறைகளிலும் முன்னேற்றப் பாதையில் பயணித்துக் கொண்டிருப்பதாக கூறிய அவர், 100 ஆவது சுதந்திர தினத்தில் இந்தியா வல்லரசு ஆகும் என நம்பிக்கை பொங்கக் கூறியிருக்கிறார். இது பெருமைக் கொள்ள வேண்டிய விஷயம் எனத் தெரிவித்த அவர், மத்திய அரசின் முன்னேற்றகரமான திட்டங்கள் குறித்தும் சுட்டிக்காட்டினார்.

**எஸ்.சாரங்கன்...**

**சுதந்திர இலங்கையின் பவளவிழா (75 ஆவது வருட நிறைவு) அடுத்த வருடம் கொண்டாடப்படுவதற்கு முன்னர் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண அனைத்துத் தரப்பினரும் முன்வர வேண்டும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அழைப்பு விடுத்துள்ளார்.**

வரவுசெலவுத் திட்டம் தொடர்பான விவாதங்கள் பூர்த்தியடைந்ததும், இதற்கான பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்கவிருப்பதாகவும், இதில் கலந்து கொள்ள அனைத்துக் கட்சிகளும் முன்வர வேண்டும் என்றும் அவர் பாராளுமன்றத்தில் பகிரங்க அழைப்பு விடுத்தார்.

வரவுசெலவுத் திட்டத்தில் ஜனாதிபதி செயலகம், சுயாதீன ஆணைக் குழுக்கள் உள்ளிட்ட செலவுத் தலைப்புக்கள் குறித்த குழுநிலை விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி இந்த அழைப்பை விடுத்தார்.

ஜனாதிபதி இவ்வாறான அழைப்பை விடுப்பது இது முதல் தடவையல்ல. அண்மைய காலப் பகுதியில் பல தடவை இந்த அழைப்பை அவர் விடுத்துள்ளார். கடந்த சில வாரங்களுக்கு முன்னர் பாராளுமன்றத்தில் உரையாற்றிய போது வடக்கு மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் தமிழ் அரசியல் கட்சித் தலைவர்களுடன் பேச்சுவார்த்தையொன்றை நடத்தவிருப்பதாகக் கூறியிருந்த ஜனாதிபதி, அண்மையில் வவுனியா சென்றிருந்த போதும் இந்தக் கருத்தை வலியுறுத்தியிருந்தார்.

இவ்வாறான பின்னணியில் ஜனாதிபதி இனப்பிரச்சினைத் தீர்வு குறித்துப் பேச்சு நடத்த எதிர்த்தரப்பிலுள்ள அனைவரையும் வருமாறு மீண்டும் அழைத்துள்ளார்.


நாடு தற்பொழுது எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடியை சமாளிப்பதற்குப் பல்வேறு முயற்சிகள் எடுக்கப்பட்டு வரும் நிலையில், அரசியல் ஸ்திரத்தன்மையை ஏற்படுத்தும் ஒரு முயற்சியாகவே ஜனாதிபதியின் இந்த அழைப்பை நோக்க முடியும்.

தமிழர்களின் நீண்டகாலப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் விடயத்தில் ஜனாதிபதி அக்கறையுடன் செயற்பட்டு வருகின்றமை கடந்த காலங்களில் முன்னெடுக்கப்பட்ட நடவடிக்கைகளின் ஊடாக நன்கு புலப்படுகிறது. பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் நீண்ட காலமாகத் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்கள் படிப்படியாக விடுவிக்கப்பட்டு வருகின்றனர்.

குறிப்பாக முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவை இலக்கு வைத்து நடத்தப்பட்ட தாக்குதல் சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்டு தண்டனை விதிக்கப்பட்ட இந்துமதகுரு ஒருவர் சுமார் 22 வருடங்களின் பின்னர் விடுவிக்கப்பட்டிருந்தார். இவ்வாறான செயற்பாடுகள் நல்லெண்ண சமிக்ஞைகளாகப் பார்க்கப்படுகின்றன.

தியிருந்தாலும் ரணில் விக்கிரமசிங்கவின் அரசியல் இதிலிருந்து மாறுபட்டதாகவே காணப்பட்டு வந்தது.

இருந்தபோதும், அதிகாரப் பகிர்வு தொடர்பான விடயங்களில் எதிர்த்தரப்பிலிருள்ள ஒரு சிலர் சந்தேகக் கண்கொண்டு பார்ப்பதையும் காணக் கூடியதாகவே உள்ளது. பிரிக்கப்படாத ஒற்றையாட்சிக்குள் அதிகாரப் பகிர்வு குறித்த நகர்வுகள் தவிர வேறெந்த முறையிலான அதிகாரப் பகிர்வுக்கும் தயார் இல்லையென தென்பகுதி பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் சபையில் கூறியிருந்தார்.



## இலங்கையின் விமோசனத்துக்கு சுதந்திர பவளவிழா வழியைத் திறக்குமா?

ளவர்கள் அதனைக் குழப்புவது அல்லது முட்டுக்கட்டையிடுவதையே செய்து வந்தனர்.

எனினும், இம்முறை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பொதுஜன பெரமுன கட்சியின் ஆதரவுடன் ஆட்சியமைத்துக் கொண்டு அழைப்பு விடுத்திருப்பதால் ஆளும் தரப்பிலிருந்து குழப்பங்கள் ஏற்படுவதற்கான வாய்ப்புக்கள் குறைவாக இருக்கும்

போயுள்ள இனப்பிரச்சினையைத் தீர்ப்பதன் ஊடாக அரசியல் ஸ்திரத்தன்மையை ஏற்படுத்த முடியும் என்பதற்கு அப்பால் சர்வதேச நாடுகள் இலங்கையின் செயற்பாடுகள் குறித்து உன்னிப்பாக அவதானித்து வருகின்றன.

எனவே, இலங்கையில் மேற்கொள்ளப்படுகின்ற ஒவ்வொரு காய்நகர்த்தல்களும் மிகவும் உன்னிப்பாக முன்னெடுக்கப்பட வேண்டியவையாகும். இலங்கையில் ஏற்படுத்தப்படுகின்ற சாதகமான மாற்றங்கள் சர்வதேச ரீதியில் நாடு குறித்த நற்பெயரை மேம்படுத்துவதற்கும், சர்வதேச உதவிகளைத் தொடர்ந்து பெற்றுக் கொள்வதற்கும் உறுதுணை

# இனப்பிரச்சினைக்கான தீர்வில் தீவிர அக்கறையுடன் ஜனாதிபதி

**தமிழ் அரசியல் தரப்பின் ஒற்றுமையுடனான ஒத்துழைப்பும், தென்னிலங்கை அரசியல் கட்சிகளின் ஆதரவும் கிடைக்குமானால், 75 வருடங்களாகத் தொடருகின்ற புரையோடிப் போயுள்ள பிரச்சினைக்கு இறுதித் தீர்வு!**

## வார இறுதி அரசியல் குறிப்பேடு

சம்யுக்தன்

வரவுசெலவுத் திட்டத்துக்கு எதிராகத் தாம் அனைவரும் கருத்துக்களை முன்வைத்திருந்தாலும், வாக்கெடுப்பில் அதனை எதிர்த்து வாக்களிக்காது வாக்களிப்பிலிருந்து விலகத் தீர்மானித்திருந்ததாக அவர் கூறியிருந்தார். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் இந்த நிலைப்பாடு வரவேற்கத்தக்கதாக இருக்கின்றது. இதுபோன்று ஏனைய தமிழ் அரசியல் கட்சிகளும் இந்தச் சந்தர்ப்பத்தை சரியாகப் பயன்படுத்திக் கொள்வது காலத்தினதும், தமிழ் மக்களினதும் தேவையாகும்.

**வடக்கு, கிழக்கு மக்களுக்கு நிரந்தர விமோசனத்தைப் பெற்றுக் கொடுப்பதற்கு அங்குள்ள மக்கள் பிரதிநிதிகள் முன்வருவது இவ்வேளையில் அவசியம்**





அண்மையில் பொதுமன்னிப்பில் விடுதலை செய்யப்பட்ட தமிழ் அரசியல் கைதி ஒருவர் (சிவப்பு மேல்சட்டை அணிந்தவர்) தனது குடும்பத்தினருடன் காணப்படுகின்றார்.

"இனப்பிரச்சினை உள்ளிட்ட விடயங்களை 1984ஆம் ஆண்டு முதல் நாம் அனைவரும் அறிவோம். புதிதாகப் பேசுவதற்கு ஒன்றும் இல்லை. இதற்கான தீர்வுகளையே தற்பொழுது காண வேண்டும். அடுத்த வருடம் 75 ஆவது சுதந்திரதினம் கொண்டாடப்படும் போதாவது இதற்கான தீர்வுகளைக் காண வேண்டும். இல்லையெனில் 2048 ஆம் ஆண்டிலும் நாடு இப்படியேதான் இருக்கும்" என ஜனாதிபதி தனது உரையில் திட்டவட்டமாகக் குறிப்பிட்டார்.

அது மாத்திரமன்றி எதிர்க்கட்சியிலுள்ள பிரதான கட்சிகளிடம் வரவுசெலவுத்திட்ட விவாதம் முடிவடைந்ததும் "பேச்சுக்கு வர நீங்கள் தயாரா?" என ஜனாதிபதி பகிரங்கமாகக் கேட்டார்.

இதற்குப் பெரும்பாலான கட்சிகள் தமது சம்மதத்தைத் தெரிவித்திருந்தன. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவைப் பொறுத்தவரையில் கடந்த காலத்தில் அதிகாரத்தில் இருந்த போதும் சிறுபான்மையினர் விடயத்தில் சாதகமான நிலைப்பாட்டைக் கொண்டிருந்ததை நாம் மறுக்க முடியாது. தென்னிலங்கை அரசியல்வாதிகள் பலர் இனவாதத்தை தமது அரசியல் ஆயுதமாகப் பயன்படுத்

இவ்வாறான எதிர்நிலைப்பாடுகள் முன்வைக்கப்படுவதற்கான வாய்ப்புக்கள் பல காணப்படுகின்றன. அத்துடன், 13 ஆவது திருத்தச்சட்டத்தை நீக்குவது தொடர்பில் தாம் எந்த நிலைப்பாட்டையும் கொண்டிருக்கவில்லையென்ற கருத்தையும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சபையில் தெரிவித்திருந்தார்.

இவற்றை அடிப்படையாகக் கொண்டு பார்க்கும்போது தனது பதவிக்காலத்தில் இனப்பிரச்சினைக்குத் தீர்வொன்றை ஏற்படுத்தி அனைவரும் இந்நாட்டு மக்கள் என்ற எண்ணத்தில் பாகுபாடின்றி வாழ்வதற்கான சூழ்நிலையை ஏற்படுத்துவதில் அவர் உறுதியாக இருக்கின்றார் என்பது புலனாகிறது. இவ்வாறான நிலையில் ஜனாதிபதியின் இந்த நல்லெண்ண சமிக்ஞையை சரியாகப் பயன்படுத்தி தமிழ் அரசியல் தரப்பினரும் விட்டுக்கொடுப்புடன் பேச்சுக்களில் கலந்து கொள்வது எதிர்காலத்துக்குத் தேவையானதாகும். பேச்சுக்கள் குறித்த ஜனாதிபதியின் அழைப்பின் மீது நம்பிக்கை வைத்து நல்லெண்ண சமிக்ஞையாக வரவுசெலவுத்திட்டம் மீதான இரண்டாவது மதிப்பீட்டு வாக்கெடுப்பை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தவிர்த்திருந்தது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளார் எம். ஏ.சுமந்திரன் இதனை அறிவித்திருந்தார்.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் விடயத்தில் தமிழ் அரசியல் தரப்பைப் போன்று தென்னிலங்கை அரசியல் தரப்பினரும் இதயசுத்தியுடன் செயற்பட்டாலேயே உண்மையில் முடிவொன்றை எட்ட முடியும். குறிப்பாக தமிழ் அரசியல் தரப்பினரைப் பொறுத்தவரையில் இதற்கு முன்னர் பல்வேறு சந்தர்ப்பங்கள் இழக்கப்பட்டிருந்தாலும், தற்பொழுது உருவாகியுள்ள வாய்ப்பை சரியாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். கடந்த கால அரசியல் வரலாற்றில் ஆளும் கட்சியில் உள்ளவர்கள் ஏதாவது பேச்சுக்களை ஆரம்பித்தால் எதிர்க்கட்சியில் உள்

**தமிழர் விவகாரத்தில் ஜனாதிபதியின் நல்லெண்ண வெளிப்பாடுகள்; அரசியல்கைதிகளின் விடுதலையும், இனப்பிரச்சினைத் தீர்வுக்கான அழைப்பும் அதற்கான சமிக்ஞைகள்**

என்றே எதிர்பார்க்கப்படுகிறது.

மறுபக்கத்தில் தமிழர்கள் விடயத்தில் தீர்வு காண்பதற்கு எதிர்க்கட்சித் தலைவர் ஏற்கனவே இணங்கியிருப்பதால் பிரதான எதிர்க்கட்சி மற்றும் ஜே.வி.பி போன்ற கட்சிகளிலிருந்து எவ்வித எதிர்ப்பும் தோன்றப் போவதில்லை. இருந்தபோதும், ஆளும் கட்சியிலிருந்து பிரிந்து தற்பொழுது எதிர்க்கட்சியில் அமர்ந்துள்ள விமல் வீரவன்ச போன்றவர்கள் இதனை தமது அரசியலுக்குப் பயன்படுத்துவதற்கான வாய்ப்புக்கள் இருந்தாலும் அவர்களுக்கான பலம் குறைவாக இருக்கிறது.

எனவே, இந்தச் சந்தர்ப்பத்தை முறையாகப் பயன்படுத்தி ஒரு சில விட்டுக்கொடுப்புக்களை மேற்கொண்டாலும் எதிர்கால சந்ததியினருக்கு அமைதியான சூழலை வழங்கும் வகையில் பிரச்சினையைத் தீர்க்க அனைவரும் முன்வர வேண்டும்.

பொருளாதார நெருக்கடிகளுக்குத் தீர்வு காண்பதற்கு சர்வதேச நாணய நிதியம் போன்ற அமைப்புக்கள் மற்றும் சர்வதேச நாடுகளிடம் இலங்கை உதவிகளைக் கோரியிருப்பதால், நிச்சயமாக உள்நாட்டில் அரசியல் ஸ்திரத்தன்மையை உருவாக்க வேண்டிய தேவைப்பாடு உள்ளது. நீண்ட காலமாகப் புரையோடிப்

யாகவும் இருக்கும் என்பதை அரசியல் தலைவர்கள் கருத்தில் கொள்ள வேண்டும்.

இது இவ்விதமிருக்க, நாட்டில் மீண்டும் போராட்டங்களை முன்னெடுத்துக் குழப்புவதற்கு இடமளிக்கப் போவதில்லையென்றும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கூறியுள்ளார். ஜனநாயக ரீதியில் எதிர்ப்புப் போராட்டங்களை முன்னெடுப்பதற்கு உரிமை இருந்தாலும், நாட்டை மீண்டும் அராஜகமான நிலைக்குக் கொண்டு செல்வதற்கு எதிராக இராணுவத்தினரையும், அவசரகாலச் சட்டத்தையும் பயன்படுத்தத் தயங்கப் போவதில்லையென அவர் கூறியுள்ளார்.

நாடு ஓரளவுக்கு சவால்களை சமாளித்து வரும் நிலையில் போராட்டங்கள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டால் அனைத்து முயற்சிகளும் வீணாகி விடும் என்பது குறித்த கவலையை அவர் வெளிப்படுத்தியுள்ளார். நாடு சவாலுக்கு உள்ளாகியிருக்கும் சந்தர்ப்பத்தில் பிரஜைகள் என்ற ரீதியில் அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டியது காலத்தின் தேவையாகும் என்பதே நாட்டு நலன் மீது அக்கறை கொண்டோரின் விருப்பமாகும்.



# கம்பளை குறுந்துவத்த உடுவெல்ல பாதை

# குறைபாடுகள் நிவர்த்திக்கப்படுமா?

## சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் கவனத்துக்கு....

கம்பளை குறுந்துவத்த உடுவெல்ல பிரதேசத்தில் இருந்து சுகதகம, விஜேகம,முஸ்வில் ஆகிய கிராமங்களுக்கு செல்லும் பிரதான பாதையையே படத்தில் காணப்படுகிறது.

இந்த பிரதான பாதையில் நடந்து கூட செல்ல முடியாத நிலையில் உடைந்து காணப்படுகிறது.

இவ் வீதி பல வருடங்களாக செப்பனிடப்பவில்லையென பிரதேச மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

மேடும் பள்ளமுமாக உடைந்து கிடக்கும் பாதையில் ஒரு முறை வாகனம் சென்றால் அடுத்த கணமே பழுதுபார்க்கும் நிலை காணப்படுகிறது.

மேடும் பள்ளமுமாக இருப்பதால் பாடசாலை வாகனங்களில் செல்லும் மாணவர்கள் பல இன்னல்களுக்கு மத்தியில் சென்று வருகின்றனர். ஒரு மாதத்தில் மூன்று நான்கு தடவை வாகனங்கள் உடைந்து போவதாக வாகன சாரதிகள் கவலை தெரிவிக்கின்றனர்.



இப் பாதையை செப்பனிட்டு தருமாறு பல அதிகாரிகள், அரசியல் வாதிகளிடம் மனு கொடுத்து கேட்டுக் கொண்ட போதும் இதுவரை எந்த பலனும் கிட்டவில்லை.

இப் பாதையை தினமும் பயன்படுத்தும் பாடசாலை மாணவர்கள், வயோதிபர்கள் மற்றும் கர்ப்பிணித் தாய்மார்கள் மிகவும் பாதிப்படைவதாக தெரிவிக்கப்படுகிறது. திடீர் நேய்க்குள்ளாவோர் கம்பளை நகர வைத்தியசாலைக்கு கொண்டு செல்வதில் சொல்லொணா துயரங்களுக்குள்ளாவதாக பிரதேச மக்கள் கூறுகின்றனர். வீதி அபிவிருத்தி அதிகார சபை இது தொடர்பில் கூடிய கவனம் செலுத்த வேண்டும்.அத்தோடு நாடு பொருளாதார நெருக்கடிக்குள் சிக்கியிருக்கும் சந்தர்ப்பத்தில் பாதை அபிவிருத்திக்கு நிதி ஒதுக்கீடு செய்ய முடியாததால் மாற்று ஏற்பாடுகளை செய்யுமாறு மக்கள் கோருகின்றனர்.

**கம்பளை நிருபர்**

---

# சீரற்ற காலநிலையால் சேதமடைந்த பாலம்;

## பாதையை புனரமைக்க தோட்ட நிர்வாகத்துக்கு தடைபோடும் அதிகாரசபை





பசுமலை நகருக்கு சொல்லும் வீதியும் பாலமும் அண்மையில் ஏற்பட்ட காலநிலை சீர்கேட்டால் பெய்த கன மழை, வெள்ளத்தில் வீதி சேதமடைந்து போக்குவரத்து செய்ய முடியாத நிலையில் காணப்படுகிறது.

லிந்துலை, நாகசேனை, டில்குல்ற்றி வழியாகவே பசுமலை நகருக்கு செல்ல வேண்டும். இப் பாதை புனரமைப்பின் போது காபட் இடப்பட்டு வாகனங்கள் செல்லக் கூடிய வீதியாக காணப்பட்டது.அத்தோடு டயகம முதல் தலவாக்கலைக்கு செல்லும் பயணிகளுக்கு மிகவும் உகந்த பாதையாகவும் இருந்தது.

இந்த வீதியில் ஹற்றன் இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான பஸ் ஒன்று 02 மாதத்துக்கு முன்னர் சேவையில் ஈடுபடுத்தப்பட்டது. ஆனால் தற்போது பாதை உடைந்துள்ளதாச பஸ் சேவை இடை நிறுத்தப்பட்டுள்ளது.

கிறன்லி தோட்ட நிர்வாகம் பாலத்தை சீர்மைக்கும் வேலைகளை ஆரம்பித்து போதும், வீதி அபிவிருத்தி அதிகார சபை இவ் வீதியை புனரமைக்க வேண்டாமென அறிவுறுத்தியதால் தோட்ட நிர்வாகம் பணிகளை இடைநிறுத்தியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

வீதி அபிவிருத்தி அதிகார சபை பாதையை புனரமைக்க தோட்ட நிர்வாகத்துக்கு தடை விதித்ததற்கான காரணத்தை தெளிவுபடுத்தி பாதையை திருத்தியமைக்க ஆவன செய்யுமாறு தோட்ட மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். அத்தோடு அப்பகுதி பிரதேச சபை அரசியல் வாதிகளின் கவனத்திற்கும் கொண்டு செல்கிறோம்.

# மன்றாசி தோட்ட பிரதான மைதானம் புனரமைக்கப்படாத நிலையில்



அக்கரப்பத்தனை பிரதேசத்தில் அமைந்துள்ள மன்றாசி தோட்ட பிரதான மைதானம் புற்கள் முளைத்து கவனிப்பாரற்ற பகுதியாக காணப்படுகிறது. மைதானம் நீண்ட காலமான எவ்வித புனரமைப்பும் செய்யப்படவில்லை. தோட்ட குடியிருப்புக்களை அண்மித்து அமைந்துள்ளமையால் தோட்ட மக்கள் இணைந்து சிரமதானத்தின் மூலம் மைதானத்தை சீரமைத்து கொள்ளலாம் என்பது பொதுவான நிலைப்பாடாகும்.

பல வருடகாலமாக நடத்தப்பட்ட பல்வேறு விளையாட்டு போட்டிகள் மற்றும் இசை நிகழ்ச்சிகள், அரச விழாக்கள், மேதின விழாக்கள், களியாட்டங்கள் என பல்வேறு வகையான நிகழ்வுகளின் அரங்கமாக மன்றாசி தோட்ட பிரதான மைதானம் திகழ்ந்தது.

ஆனால் தற்போது மைதானத்தை எந்தவொரு நிகழ்வுகளுக்கும் பயன்படுத்த முடியாத நிலை காணப்படுகின்றது.

கடந்த ஒருவருடத்திற்கு முன்னரான காலப்பகுதியில் அக்கரப்பத்தனை போடைஸ் ஹற்றன் பிரதான வீதி முன்னாள் இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமானின் பணிப்புரைக்கமைய சீர்செய்யும் வேலைத் திட்டம் ஆரம்பிக்கப்பட்ட போதும் வெட்டப்பட்ட மண்ணின் பெரும் பகுதி மைதானத்தில் கொட்டப்பட்டது. எனினும் குவிக்கப்பட்ட மண் அகற்றப்படவில்லை. மைதானம்



மீள புனரமைக்கப்படவும் இல்லை. ஆரம்ப காலத்தில் நிகழ்வுகள் பல நடைபெற்ற மைதானம் தற்போது விளையாட கூட முடியாத நிலையில் காணப்படுகிறது.

இது குறித்து சம்பந்தப்பட்ட தரப்பினர் கரிசனை கொள்ளுமாறு தோட்ட மக்கள், இளைஞர்கள் வேண்டிக் கொள்கின்றனர்.




# கொழும்பின் 15 வலயங்களும் பின்புலக் கதைகளும்

ஒருபுறம் கொழும்பு என்பது கொழும்பு மாநகர சபை வலயமாகவும், அதற்கு வெளியில் உள்ள நகர சபைகளுமாக பிரிக்கப்பட்டுள்ளது. மறுபுறம் கொழும்பானது நிர்வாக வலயங்களாக பிரிக்கப்பட்டுள்ளது. அதன்படி இன்றைய கொழும்பு நகரம் 15 அஞ்சல் பிரிவுகளாக பிரிக்கப்பட்டுள்ளது. கொழும்பின் நகராக்கம் வலுவடைந்து மக்கள் செறிவும், உட்கட்டமைப்பின் விரிவாக்கமும் பரந்து விரிந்த போது இவ்வாறு அஞ்சல் பிரிவுகளாக பிரிக்கும் தேவை உருவானது.

**கொழும்பு 1 கொழும்பு கோட்டை**

கொழும்பின் உருவாக்கமே அதன் துறைமுகத்தை அடிப்படையாகக் கொண்டு உருவாகி, பின்னர் வளர்ந்தது பற்றியும், விரிவாகி நாட்டின் தலைநகராக ஆனதன் பின்புலத்தையும் இதற்கு முன்னர் பார்த்தோம். இத்துறைமுகமானது இயற்கையின் விலைமதிப்பற்ற கொடையாகும், இது வெளிநாட்டு வர்த்தகர்களை மட்டுமல்ல, படையெடுப்பாளர்களையும் ஈர்த்தது. முதலில் போர்த்துக்கேயர்கள் (1505-1656) கொழும்புத் துறைமுகத்தைச் சுற்றி ஒரு கோட்டையைக் கட்டினார்கள், இரண்டாவதாக டச்சுக்காரர்கள் (1656-1796) மற்றும் மூன்றாவதாக ஆங்கிலேயர்கள் (1796_1948) அதை மேலும் மாற்றியமைத்து மேம்படுத்தினர். இந்த மூன்று காலனித்துவ சக்திகளிலேயே கோட்டையை பலமாக கட்டி அதனைப் பேணியவர்கள் டச்சுக் காரர்கள் தான். இந்த பண்டைய கொழும்பு நகர எல்லைகள் கொழும்பு கோட்டையிலிருந்து புறக்கோட்டை வரை மட்டுமே இருந்தது.

கொழும்பில் ஆங்கிலேயர் படையெடுப்பின் போது பதினொரு காவலரண்கள் (Bastians கொத்தளங்கள் அல்லது முன்னரண் முகப்பு என்றும் கூறலாம்) இருந்தன. அவற்றில் இரண்டு பீரங்கிகள் பொருத்தப்பட்ட கொத்தளங்கள். அதைவிட கோட்டைக்குள் நான்கு பிரதான வீதிகளும் இருந்தன. போர்த்துக்கேயரிடம் இருந்து கோட்டையைக் கைப்பற்றியதும் 1656இல் டச்சுக்காரர்கள் கோட்டையை பலமாகக் கட்டினார்கள்.

11 கொத்தளக் காவலரண்களுக்கும் ஒல்லாந்திலுள்ள பிரசித்தி பெற்ற நகரங்களின் பெயர்களை அவற்றுக்கு சூட்டினார்கள். உதாரணத்துக்கு ஒல்லாந்து தலைநகரான ஆம்ஸ்டர்டாம், ரொட்டர்டாம், டெல்ப் போன்ற இடங்களைக் குறிப்பிடலாம். ஆம்ஸ்டர்டாம் என்று அன்று அவர்கள் பெயரிட்டிருந்த பகுதி இன்று கொழும்பு துறைமுகத்துக்குள் இருக்கிற சுங்கக் கட்டிடம் அமைந்திருக்கிற பகுதியைக் குறிக்கும்.

கோட்டையின் அரைவட்டப் சுற்றுப் பகுதியில் பெரிய அகழியையும் அவர்கள் கட்டியிருந்தார்கள். கடலைச் சூழ இருந்த பகுதிகளுக்கு அகழி அவசியப்படவில்லை. ஆனால் அதற்கு எதிர்ப்புறமாக நிலத்தோடு தொடர்புடைய கிழக்குப் பகுதியில் அகழி இருந்தது. ஆங்கிலேயர்கள் 1869ஆம் ஆண்டு கொழும்பு கோட்டையின் சுற்றுச் சுவர்களை அடையாளமே தெரியாதபடி இடித்துத் தள்ளினார்கள். இனி ஒரு ஆக்கிரமிப்புக்கான வாய்ப்பே இல்லை என்று அவர்கள் முடிவு கட்டினார்கள். அப்படி இடிக்கப்பட்ட சுவர்களையும் கொத்தளங்களையும் அகழியில் நிரப்பித் தான் நிலத்தை புறக்கோட்டையுடன் தொடுத்தார்கள். இன்றைய கபூர் கட்டடம், YMBA கட்டடம், அதனோடு இருக்கும் தொலைத்தொடர்பு திணைக்களத்தின் பின்புற வீதி உள்ள பகுதிகளே அவ்வாறு கோட்டையின் அகழியாக இருந்த பகுதிகள். இன்றும் கொழும்பில் வர்த்தக மற்றும் பொருளாதார மையமாகத் திகழும் பகுதிகளினூடே அலைந்து திரிந்தால் கொழும்பு கோட்டையின் சில எச்சங்களை இன்றும் காணலாம்.

**கொழும்பு 2 கொம்பனி வீதி**

கடந்த காலத்தில் கொம்பனித் தெருவின் பிரபலமான பெயர் ஸ்லேவ் ஐலன்ட் எனப்பட்டது. அதாவது அடிமைத் தீவு. இன்றும் அந்த பகுதி ஆங்கிலத்தில் (Slave Island) என்று அழைக்கப்படுகிறது. மேற்படி பிரதேசமானது இன்றைய கொல்வின் ஆர். டி சில்வா மாவத்தை அல்லது யூனியன் பிளேஸ் பிரதான நிலப்பகுதியை இணைக்கிறது.

போர்த்துக்கேயர்கள் கிட்டத்தட்ட 2000 மொசாம்பிக் காப்பிரி மக்களை (கிழக்கு ஆப்பிரிக்க கடற்கரையிலிருந்து) இந்த நாட்டிற்கு அழைத்து வந்தனர், பின்னர் டச்சுக்காரர்கள் காப்பிரி மக்களை கூலிப்படைகளாகவும், வேலைக்காரர்களாகவும், தொழிலாளர்களாகவும் பயன்படுத்தினர். அவர்கள் அடிமைகளாகவே கொண்டு வரப்பட்டு அடிமைகளாகவே நடத்தப்பட்டனர்.

அப்போது ஏற்பட்ட புகழ்பெற்ற 'காப்பிரி கிளர்ச்சி'யின் போது டச்சு அதிகாரி பேரன்ட் டி ஸ்வான் (Barent de Swan) கொல்லப்பட்டதால், டச்சுக்காரர்கள் காப்பிரி மக்களை கடுமையான பாதுகாப்பில் வைத்திருக்க சட்டங்களை அறிமுகப்படுத்தினர். அந்த கிளர்ச்சி மோசமாக ஒடுக்கப்பட்டதைத் தொடர்ந்து அடிமைகள் பேரை வாவியின் நடுவில் உள்ள தீவுக்கு அழைத்துச் செல்லப்பட்டனர், அங்கு அவர்களின் கைகள் கட்டப்பட்டு, அவர்கள் அங்குள்ள குடிசைகளிலும் அறைகளிலும் வைக்கப்பட்டனர்.

ஏரியில் உள்ள முதலைகள் அவர்கள் தப்பிக்காமல் இருப்பதை உறுதிசெய்தன, மேலும் எதிர்கால கலவரங்களை நடத்தும் அடிமைப்படுத்தப்பட்ட மக்களைக் கருத்தில் கொண்டு அங்கே தூக்கு மேடையும் நிரந்தரமாக அமைக்கப்பட்டது. அங்கே ரைபிள் ரெஜிமென்ட் (Rifle Regiment/Company) நிறுவப்பட்டதன் பின்னர் ஸ்லேவ் ஐலன்ட் என்று அழைக்கப்பட்ட இடம் பின்னர் கம்பெனி தெரு என்று பெயர் மாற்றம் பெற்றது.

**கொழும்பு 3 கொள்ளுப்பிட்டி**

1664இல் உடுநுவர அம்பன்வெல அப்புஹாமியும், சத்கோரளே மன்ன அப்புஹாமியும், அட்டகலங்கோரளே சுந்தர அப்புஹாமி ஆகியோர் இரண்டாம் இராஜசிங்க மன்னருக்கு எதிராகக் சதிக்கிளர்ச்சி செய்தனர். இறுதியில் அது தோல்வியடைந்தது. அரச விரோதச் சதிகளுக்குத் தண்டனையாக மன்ன அப்புஹாமியும், சுந்தர அப்புஹாமியும் மரணதண்டனையின் மூலம் கொல்லப்பட்டனர். ஆனால் அன்று சக்திவாய்ந்த குடும்பப் பின்னணியையும் கொண்டிருந்த அம்பன்வெல அப்புஹாமி டச்சுக்காரர்களால் ஆக்கிரமிக்கப்பட்டிருந்த கரையோரப் பிரதேசத்துக்கு நாடு கடத்தப்பட்டார். குறுகிய காலத்தில் டச்சுக்காரர்கள் அம்பன்வெல அப்புஹாமிக்கு (அம்பன்வெல ரால) கொழும்பிற்கு அருகிலுள்ள கடலோரப் பகுதியில் ஒரு பெரிய நிலத்தை வழங்கினார்கள். அதற்குப் பிரதியுபகாரமாக கண்டி இராச்சியத்தின் தகவல்களை வழங்குவதற்கும் உளவு பார்ப்பதற்கும் பயன்படுத்திக்கொண்டனர்.

அம்பன்வெல அப்புஹாமி அந்த நிலத்தில் தென்னை பயிரிட்டு, டச்சுக்காரர்களின் உதவியுடன் சுற்றுப்புறத்தில் இருந்த மக்களின் நிலங்களை கையகப்படுத்தி நிலச்சுவாந்தராகவும் பணக்காரராகவும் ஆனார். கள் உற்பத்தி செய்யும் தொழிற்சாலையையும் உருவாக்கிக் கொண்டார். வான் ரைகோஃப் (Van Rycloff) என்கிற டச்சுப் பெயரை தனக்குச் சூட்டிக்கொண்டார்.

சுற்றுவட்டார ஏழைகளின் நிலத்தை பலவந்தமாகவோ அல்லது மிகக் குறைந்த விலையிலோ அபகரித்துக் கொண்டிருந்தார் அம்பன்வெல அப்புஹாமி, அவரது செயலை எதிர்க்கும் சக்தி இல்லாத கிராம மக்கள், அந்தப் பகுதி கொள்ளையடிக்கப்பட்ட நிலம் என்பதால் “கொள்ள கே பிட்டிய” என்று அழைக்கத் தொடங்கினர். அதுவே திரிந்து பின்னர் கொள்ளுப்பிட்டி ஆனது.

கொள்ளுப்பிட்டி புனித மைக்கேல் தேவாலயமும், கல்லூரியும் இந்தக் காணியின் ஒரு பகுதியைச் சேர்ந்தது. கொள்ளுப்பிட்டி சந்தியிலிருந்து லிபர்ட்டி சுற்றுவட்டம் வரை அந்நிலப்பகுதி பரந்திருந்ததாகக் கூறப்படுகிறது. இன்றும் புனித மைக்கேல் தேவாலயம் மற்றும் புனித மைக்கேல் கல்லூரி அமைந்துள்ள காணி பொல்வத்தை என்றும் புனித மைக்கேல் கல்லூரியின் முகவரி "பொல்வத்தை, கொழும்பு 03" எனவும் அழைக்கப்படுகின்றது.

**கொழும்பு 4 பம்பலப்பிட்டி**

பம்பலப்பிட்டி என்ற பெயர் பிறந்ததற்கு அந்த பகுதியில் உள்ள மிகவும் வளமான ஜம்பு மரங்களே காரணமாகும். ஜம்போலா என்கிற சிங்களப் பெயரை சில இடங்களில் பம்பலொசி என்றும் அழைப்பார்கள். சிங்களப் பெயராக இருந்தாலும், இது தமிழில் 'பம்பலிமாசு' என்பதிலிருந்து திரிந்து போர்த்துகீச அல்லது டச்சுக் கலப்பு பெயராக திரிபடைந்து தோன்றியதாகக் கருதப்படுகிறது.

ஜம்போல, 'பாம்ப்லமூசஸ்' (பிரெஞ்சு) மற்றும் 'பொமலோ' என்றும் அறியப்படுகிற இந்த ‘ஜம்பு’ சிட்ரஸ் குடும்பத்தின் (citrus maxima) ஒரு பெரிய பழமாகும். பம்பலப்பிட்டி என்ற பெயர் இந்த வார்த்தைகளின் கலவையிலிருந்து பிறந்ததாக கொள்ளப்படுகிறது. காலி வீதியில் கொள்ளுப்பிட்டியின் முடிவெல்லையில் இருந்து பம்பலப்பிட்டி ஆரம்பிக்கிறது. தற்போது அதிக மக்கள் செறிவைக்கொண்ட இன்னொரு வணிக நகரமாக இருக்கிறது பம்பலப்பிட்டி.

**கொழும்பு 5 ஹெவ்லாக் டவுன்**

ஆர்தர் எலிபேங்க் ஹெவ்லொக் (Arthur Elibank Havelock) 1890 முதல் 1895 வரை இலங்கையின் பிரித்தானிய ஆளுநராக இருந்தவர். ஐந்து ஆண்டுகள் தான் அவர் ஆட்சி செய்தாலும் அவரின் காலத்தில் தான் கொழும்பிலிருந்து குருநாகல், பண்டாரவளை போன்ற இடங்களுக்கான ரயில் பாதை விஸ்தரிக்கப்பட்டது. அது மட்டுமன்றி அப்போது விவசாயிகளின் மீது சுமத்தப்பட்டிருந்த “நெல்வரி” அவரின் காலத்தில் தான் இரத்து செய்யப்பட்டது. கொழும்பின் ஒரு நகரத்துக்கே பெயரிடப்பட்ட ஒரே ஒரு ஆங்கிலேய ஆளுநரின் பெயர் அவரது பெயர் தான். அதுமட்டுமல்லாமல் ஹெவ்லொக் வீதி, எலிபேங்க் வீதி, ஹேவ்லாக் பிளேஸ் ஆகிய மூன்று வீதிகளும் இவரது பெயரால் சூட்டப்பட்டன. ஹவ்லாக் வீதி இன்று மாற்றப்பட்டுவிட்டது. அதன் தற்போதைய பெயர் சம்புத்தத்வ ஜெயந்தி மாவத்தை.

**கொழும்பு 6 வெள்ளவத்தை**

வெள்ளவத்தை என்பது வெலி உயன என்கிற சிங்களச் சொல்லுக்கு சமமானது. அந்தக் காலத்தில், புதைமணலால் கட்டப்பட்ட, காட்டுச் செடிகளாலும், புதர்களாலும், கடற்பரப்பிற்குச் செல்லும் பாழ்நிலமாக இந்தப் பகுதி இருந்தது. ஆனால் இன்று காலி வீதியில் அமைந்துள்ள நகரங்களிலேயே அதிக மக்கள் தொகை கொண்ட வர்த்தக நகரமாக மாறியுள்ளது. பெருந்தொகையான நீர்வழிகள் மற்றும் கால்வாய்கள் வெள்ளவத்தை ஊடாக கடலைச் சென்றடைகின்றன. கொழும்பில் அதிகமான வடக்கு, கிழக்கைச் சேர்ந்த தமிழர்கள் வாழும் பகுதியாகவும் இது கொள்ளப்படுகிறது.

**கொழும்பு 7 கறுவாத்தோட்டம்**

1765 முதல் 1785 வரை இலங்கையின் டச்சு ஆளுநராக இருந்த வில்லெம் இமாம் பால்க் (Willem Imam Falck), விவசாய நிலங்களில் கறுவாப்பட்டை பயிரிடுவது குறித்த ஆராய்ச்சியில் ஈடுபட்டார். அதற்கு முன், கறுவாப்பட்டை காட்டில் இயற்கையாக வளரும் ஒரு செடி என்று நம்பப்பட்டது. கொழும்பின் மீதான போர்த்துக்கேயரின் ஆக்கிரமிப்பு மோகத்துக்கு கறுவாப்பட்டை உற்பத்தி முக்கிய காரணியாக அமைந்ததை அறிவீர்கள். அன்று இந்தக் கறுவா பயிடப்பட்ட பகுதி தற்போதைய கொழும்பு 7 வலயத்திற்கு உட்பட்ட பகுதி உட்பட மருதானையிலிருந்து ஹெவ்லொக் டவுன் வரை 12 மைல்களுக்குள் பரவியிருந்தது. கொழும்பு 7 சிங்களத்தில் “குறுந்து வத்த” என்றும் ஆங்கிலத்தில் Cinnamon Garden என்றும் அழைக்கப்படுவதற்கு இந்த கறுவாப்பட்டையே காரணம். கொழும்பின் வசதி படைத்தவர்களும், அதிகமான வெளிநாட்டு உயர்ஸ்தானிகராலயங்களும் உள்ள பகுதி இது.

**கொழும்பு 8 பொரளை**

பொரளை என்பது சரளை (சிங்களத்தில் பொரளை) நிலத்திற்கு இணையான சொல்லாகும். சரளை மண், கற்கள் போன்றவற்றை அதிகமாகக் கொண்ட இடமாக அப்போது அறியப்பட்ட பிரதேசம் இது. போர்த்துக்கேயர்கள் இந்த இடத்தை Outeirinho das pedras (கற்களைக் கொண்ட குன்று) என்றும் அழைத்தனர். தற்போது, வார்ட் பிளேஸ், கலாநிதி டேனிஸ்டர் டி சில்வா மாவத்தை (பேஸ்லைன் வீதி), ஞானார்த்த பிரதீபா வீதி மற்றும் கலாநிதி என். எம். பெரேரா மாவத்தை (கொட்டா வீதி) என்பன ஒன்றிணையும் ஐந்து வழிச் சந்திப்பின் காரணமாக பொ ரளை ஒரு பரபரப்பான வர்த்தக நகரமாகும். நாட்டில் உள்ள குழந்தைகளுக்கான பிரதான வைத்தியசாலையான லேடி ரிட்ஜ்வே சிறுவர் வைத்தியசாலை மற்றும் மருத்துவ ஆராய்ச்சி நிறுவனம் (MRI) போன்றனவும் பொரளையில் அமைந்துள்ளன.

**கொழும்பு 9 தெமட்டகொட**

ஒரு காலத்தில் நாகப்பாம்பு விஷக்கடிக்கு மருந்தாக “தெமட்ட பந்துரு” (Gmelina Asiatica அல்லது Asiatic bushbeech) என்கிற மருந்தை பயன்படுத்தி வந்திருக்கிறார்கள். கீழே தொங்கும் மணி வடிவ மஞ்சள் பூக்கள் கொண்ட இந்த புதர்கள் பொதுவாக மூன்று மீட்டருக்கு மேல் உயரமானதாக இருக்காது. ஒருவேளை தெமட்டகொட பிரதேசமானது கடந்த காலத்தில் ஆயிரக்கணக்கான தெமட்ட புதர்கள் செழிப்பாக வளர்ந்த கிராமமாக இருந்திருக்கலாம் என்றே ஊகிக்கப்படுகிறது. அல்லது இரு மொழிகளின் இணைப்பால் இப்பெயர் பிறந்திருக்கலாம். போர்த்துக்கேய மொழியில், ‘De mata’ என்பது காடு/வனம் என்று அர்த்தம். சிங்களத்தில் 'கொட' என்பது 'Village' என்ற ஆங்கிலச் சொல்லுக்குப் பயன்படுத்தப்படும் சொல். இவை அனைத்தையும் கருத்தில் கொண்டு, தெமட்டகொட என்பது 'காட்டில் உள்ள கிராமம்' என்றும் பொருள்படலாம். லியோனார்ட் வூல்ஃப்பின் 'பத்தேகம' இந்த இடத்தில் நமக்கு நினைவுக்கு வரும். அவர் எழுதிய நூலின் சிங்களத் தலைப்பு “பத்தேகம”. (பத்தேகம கிராமம் அம்பாந்தோட்டை மாவட்டத்தைச் சேர்ந்தது.)

இன்று தெமட்டகொட ஒரு கிராமப் பிரதேசம் அல்ல. அடர்த்தியான மக்கள்தொகை கொண்ட நகர்ப்புறப் பகுதி. தேசிய இரயில்வே அருங்காட்சியகம் தெமட்டகொடயில் அமைந்துள்ளது. மேலும் தெமட்டகொடாயில் பல்பாதை மேம்பாலமும் இப்போது உள்ளது.

**கொழும்பு 10 மருதானை**

மருதானை தமிழ்ச் சொற்களின் சேர்க்கை என்றே கொள்ளப்படுகிறது. தமிழில் உள்ள மரமும், ஸ்தானமும் இணைந்து திரிந்து மருதானை ஆனதாக சிங்கள மொழிக் கட்டுரைகளிலும் குறிப்பிடப்படுகின்றன. அதாவது மருதானை 'மரங்களின் இடம்' ஆக இருக்கக் கூடுமோ?

க்ளோப் ஆதரின் (Clough's definition) வரையறையின் படி, 'மரதான' என்பது 'மணல் பள்ளத்தாக்கு' என்பதன் பொருளில் இருந்து பிறந்தது. மருதானை பிரதேசத்தின் மணல்மேடுகளில் தான் முதன் முதலில் செயற்கையாக கறுவாப்பட்டை செய்கை மேற்கொள்ளப்பட்டது. அதிலிருந்து கிடைக்கும் அறுவடை இலங்கையின் சிறந்த கறுவாப்பட்டையாகக் கருதப்பட்டது. இந்த மண்ணில் கறுவாப்பட்டை சிறந்த முதிர்ச்சி அடைய ஐந்து ஆண்டுகள் போதும், ஆனால் சாதாரண மண்ணில் ஏழு ஆண்டுகள் அல்லது அதற்கு மேல் ஆகும் என்று கூறப்படுகிறது. மருதானையின் கறுவாப்பட்டை மிகவும் பெரியதாக இருந்தது. அதன் சிறப்புக்கு உதாரணமாகக் கூறுவதாயின் டச்சுக் காலத்தில் அங்கிருந்த கறுவாப்பட்டையை திருடினாலோ, அப்பயிர்செய்கைக்கு சேதமேற்படுத்தினாலோ மரண தண்டனை வழங்கப்பட்டது. ஆனால் மற்ற பகுதிகளில், அத்தகைய குற்றம் விளைவித்தவர்களுக்கு சாட்டையடியால் மட்டுமே தண்டிக்கப்பட்டனர். இன்றைய மருதானை, இலங்கைத்தீவின் தெற்கில் இருந்து வரும் ரயில்களுக்கான சந்திப்பாக திகழ்கிறது. பிரதான கோட்டை ரயில் நிலையத்தின் பரபரப்பான வளாகத்துடன் இது இணைக்கப்பட்டிருக்கிறது. இலங்கையின் முக்கிய நகரங்களில் ஒன்றாகவும் திகழ்கிறது.

**கொழும்பு 11 – புறக்கோட்டை**

சிங்களத்தில் “பிட்டகொட்டுவ” என்பதன் தமிழ் அர்த்தம் புறக்கோட்டை என்று பொருள். ஆனால் ஆங்கிலத்தில் pettah என்று தான் அழைக்கப்படுகிறது. அந்த பெட்டா என்ற சொல் தமிழின் பேட்டை என்கிற சொல்லில் இருந்து வந்ததாகக் கொள்ளப்படுகிறது. Hobson Jobson's ஆங்கில அகராதியின்படி, Pettah (தமிழ்ப் pett□i) என்பது ஒரு கோட்டையுடன் இணைக்கப்பட்ட ஒரு புறநகர்ப் பகுதியாகும் அல்லது கோட்டையை ஒட்டிய நகரமாகும். முன்பெல்லாம் மக்கள் அதிகம் வசிக்கும் குடியிருப்புப் பகுதியாகவும், திறந்த வெளியில் கடைத் தெருவும், சந்தையும் இருந்தது. இன்று, புறக்கோட்டையில் குறுகிய முடுக்குத் தெருக்களும், குறுகிய பாதைகளும் சேரிகளின் ஒரு பிரமையைத் தருவதாக கூறப்படுவதுண்டு. இது இலங்கையின் மொத்த / சில்லறை வர்த்தகத்திற்கான முக்கிய மையமாக செயல்படுகிறது.

**கொழும்பு 12 அளுத்கடை**

1656 இல் போர்த்துக்கேயர்களுக்கு எதிரான கடைசி வெற்றிகரமான போரில் டச்சு ஜெனரல் ஜெரார்ட் ஹல்ஃப்ட் (Gerard Hulft) கொல்லப்பட்டார். 150 ஆண்டுகளுக்கும் மேலாக கொழும்பை ஆக்கிரமித்திருந்த போர்த்துகேயர்களை வெளியேற்ற அந்த நேரத்தில் கண்டியை ஆட்சி செய்த இரண்டாம் ராஜசிங்க மன்னனுடன் அவர் கூட்டணி வைத்தார். ஹல்ஃப்ட் இறப்பதற்கு முந்தைய நாள், அவர்கள் பரிசுகளை பரிமாறிக் கொண்டனர். மேலும் இரண்டாம் ராஜசிங்க மன்னர் ஜெனரல் ஹல்ஃப்ட்டின் கழுத்தில் ஒரு 'தங்க மாலையையும் தனது சொந்த மோதிரத்தை விரலிலும் அணிவித்தார் இது அவர்கள் இருவருக்கும் இடையிலான நட்பைக் குறிக்கிறது. மறுநாள் ஜெனரல் இறுதிப் போரில் பயன்படுத்தக்கூடிய முன் வரிசை அகழிகளை ஆராய்ந்து கொண்டிருந்த வேளை போர்த்துக்கேயர்கள் டச்சு மண்டபத்திற்கு தீ மூட்டினர். ஹல்ஃப்ட் மும்முரமாக பணியில் இருந்த வேளை அவரின் இதயத்தில் குண்டு பாய்ந்தது. அதே இடத்தில் அவர் இறந்தார். அவர் தனது இருப்பிடத்தை அமைத்துக்கொண்ட மேட்டுப் பகுதி பல நூற்றாண்டுகளாக ஹல்ஃப்ட் ஸ்டோர்ப் (Hulftsdorp) என்ற பெயருடன் தொடர்கிறது.

ஆங்கிலேயர்கள் புறக்கோட்டை சந்தையை இந்த மேட்டுப்பகுதியின் அடிவாரத்தில் கொண்டு வர முயற்சித்ததன் விளைவாக, அந்த இடத்திற்கு 'அழுத் கடே' என்று பெயரானது. நியூ பஸார் என்றும் அழைக்கப்படுகிறது.

இன்றைய இலங்கையின் ஏறக்குறைய அனைத்து சட்ட நிறுவனங்களும் அளுத்கடையில் அமைந்துள்ளன. அவற்றில் உயர் நீதிமன்றம், உச்ச நீதிமன்றம், நீதி அமைச்சு ஆகியவை அடங்கும்.

**கொழும்பு 13 கொட்டாஞ்சேனை**

ஒரு சிறிய மீன்பிடி கிராமமான கொட்டாஞ்சேனை, அங்கு கொட்டாங்காய் மரங்கள் (Costus Speciosus) நிறைந்திருந்ததால் அதன் பெயரைப் பெற்றதாக நம்பப்படுகிறது. போர்த்துக்கேயர் காலத்தில் இந்த இடம் கொட்டாஞ்சினா (Kottanchina) என்று அழைக்கப்பட்டது. டச்சு மொழியில், 'Korteboam' என்றால் 'குட்டையான மரங்கள்' எனப்படும். இறுதியாக, ஆங்கிலேயர்கள் கொட்டன் சைனாவாக (Cotton China) மாற்றினர்.

1760 ஆம் ஆண்டு முதலே கொட்டாஞ்சேனையில் ஒரு தேவாலயம் இருந்தபோதிலும், இந்த சிறிய கிராமம் 1838இல் புனித லூசியாஸ் கதீட்ரல் தேவாலயம் நிறுவப்பட்ட பின்னர் நகரமயமாக்கப்பட்டது.

**கொழும்பு 14 கிராண்ட்பாஸ்**

போர்த்துக்கேயர் காலத்தில் களனி ஆற்றைக் கடந்து வடக்கே செல்ல இரண்டு படகுத்துறைகள் இருந்தன. போர்த்துக்கேயர்கள் இதை 'பஸ்ஸோ' (Passo) என்று அழைத்தனர், பின்னர் ஆங்கிலேயர்கள் அதை 'பாஸ்' என்று ஆங்கிலத்தில் அழைத்தனர். முதல் படகுத்துறை இன்றைய நாகலகம் வீதியின் முனையிலிருந்தது. இது போர்த்துகேயர் காலத்தில் 'பாஸோ கிராண்டே' (Passo Grande) என அழைக்கப்பட்டு, பிற்காலத்தில் அது கிராண்ட் பாஸ் ஆனது. இரண்டாவது துறை வத்தளைக்கு அருகாமையில் இருந்தது. கிராண்ட்பாஸ் படகுச்சேவை மிகவும் பரபரப்பான இடமாகவும், அதற்கென்றே சந்தையும் வரி வசூலிப்பு நிலையமும் இருந்தது. 1822 இல் தான் படகுகளின் மேல் மிதக்கும் பாலம் (Pontoon Bridge) கட்டப்பட்டது. அதன் பின்னர் படகுச் சேவை குறைந்து பின்னர் அச்சேவை நிரந்தரமாக முடிவுக்கு வந்தது. இந்தப் பாலத்தை 21 படகுகள் தாங்கியிருந்தன. அதன் நீளம் 499 அடியைக் கொண்டிருந்தது. 1895 ஆம் ஆண்டில் 26 அடி அகலத்தில் விக்டோரியா பாலம் கட்டப்படும் வரை இப்படித்தான் அந்தப் பாலம் இயங்கியது. அதற்கு 30 வருடங்களுக்கு முன்னர் களனி ஆற்றின் குறுக்கே ரயில் பாலம் கட்டி முடிக்கப்பட்டது.

**கொழும்பு 15 – முகத்துவாரம்**

கடலுடன் வந்து கலக்கும் ஆற்றின் முனையம் முகத்துவாரம் என்று அழைக்கப்படுவது வழக்கம். அப்படி வந்தது தான் களனி கங்கை வந்து கலக்கும் இந்த முனையம். அதேவேளை போர்த்துக்கேயர், டச்சுக்காரர்களால் பயன்படுத்தப்பட்ட 'முத்வால்' என்ற சொல் இன்றும் பயன்பாட்டில் இருக்கிறது. இன்றைய முகத்துவாரப் பிரதேசத்தில் வடகொழும்பைச் சேர்ந்த மட்டக்குளி, மோதர, கதிரான, காக்கை தீவு என்பன அடங்குகின்றன.

---

## கார்த்திகைத் தீபத்திருநாளில் அவதரித்த யோகதீபம்

# மகா அவதார் பாபாஜி

பல இல்லற யோகிகளுக்கு தனது கிரியா யோகம் மூலம் ஞானாசிரியராகவும் யோகாசிரியராகவும் திகழ்ந்து வருபவரும், 16வது வயதில் சொரூப சமாதியடைந்து, முதுமையையும் மரணத்தையும், வென்று, பல மெய்யடியவர்களுக்கு இன்றும் நேரே காட்சி கொடுக்கும் கிரியா மூலகுருவின் வாழ்க்கை வரலாற்றை பாபாஜியின் ‘தெய்வீகக் குரலில்’ இருந்து பார்ப்போம்.

சிதம்பரத்தில் இருந்து 17 கிமீ தொலைவில் தற்போது பரங்கிப்பேட்டை என அழைக்கப்படும் சிற்றூரில் கி.பி 203 ம் ஆண்டு நவம்பர் மாதம் 30ம் திகதி ரோகினி நட்சத்திரத்தில் அவதரித்தார். நம்பூதிரி பிராமண குலத்தைச் சேர்ந்த இவருக்கு பெற்றோர் இட்ட பெயர் நாகராஜ். முருகனை ஒத்த பொலிவை உடைய இக்குழந்தைக்கு இள வயதிலேயே இறைவனை அறியும் வேட்கை உள்ளத்தில் கொழுந்துவிட்டெரிந்தது. கற்றறிந்த வேதங்களினாலும் சாஸ்திரங்களினாலும் ஆத்ம திருப்தி ஏற்படவில்லை. அவரது ஆன்மிகத் தேடலுக்கு குருவாக எவரும் இருக்கவில்லை. ஆத்மார்த்த உந்துதலினால் தனது 11வது வயதில் கதிர்காமம் நோக்கிப் புறப்பட்ட ஞானியர் குழுவுடன் இணைந்து கொண்டார். கால்நடையாகவும் படகுகள் மூலமும் இந்த நீண்ட கடினமான பயணத்தை மேற்கொண்டார். பாபாஜியின் இந்த பயணம் பல மாதங்கள் நீண்டது.கதிர்காமம் கோயில் சித்தர் போகநாதரால் ஸ்தாபிக்கப்பட்டது. இங்கு மூலஸ்தானத்திலுள்ள யந்திரத்தையும் அவரே உருவாக்கினார். கதிர்காமம் சென்றடைந்த பாபாஜி, அங்கு போகநாதரைச் சந்தித்தார். கண்ட மாத்திரத்தே இவரே தமது குரு என உணர்ந்தார். போகநாதரும் அவரைச் சீடராக ஏற்றுக்கொண்டு பல யோகங்களையும் தியானங்களையும் உபதேசித்தார். நாளடைவில் போகநாதரின் வழிகாட்டலில் தத்துவ சித்திகளை அறிந்தவராகி சித்தாந்தத்தின் முழு மகிமைகளையும் உணர்ந்து கொண்டார்.

சித்தாந்தத்தில் பூரண ஞானம் பெற்ற பாபாஜி, கிரியா யோகம், குண்டலினி பிராணாயாமம் மற்றும் பக்தி யோகத்திலும் தேர்ச்சி பெற விரும்பினார். இவரது விருப்பத்தை அறிந்த போகநாதர் தென்னிந்தியாவில் பொதிகை மலைச்சாரலை நோக்கிப் பயணித்து, குற்றாலம் என்ற இடத்தில், அகத்திய முனிவரிடம் அவற்றைக் கற்கும்படி பணித்தார். போகநாதரின் பணிப்பின் பெயரில் குற்றாலம் நோக்கி பயணித்து அங்குள்ள சக்தி பீடத்தை சென்றடைந்தார். அங்கு தான் சென்ற நோக்கத்தை நிறைவேற்ற ஒரு ஆசனத்தில் அமர்ந்து தியானம் செய்ய ஆரம்பித்தார். உடல், மனம், இதயம், ஆன்மா ஆகிய நான்கும் ஒன்றுபட்ட நிலையில் பல நாட்கள் தியானத்தில் இருந்தார். அகத்திய முனிவர் அவ்விடத்திற்கு வந்து தன்னைச் சீடனாக ஏற்றுக்கொள்ளும் வரை அந்த நிலையில் இருப்பதே அவரின் இலட்சியமாக இருந்தது.

சரியான ஆகாரம் இல்லாததால் நாளாக நாளாக அவரின் உடல்நிலை பலவீனமடைந்து வந்தது. ஆனால் பாபாஜி தனது உடல் தனக்குச் சொந்தமல்ல என்ற நினைவிலேயே இருந்தார். சரியாக 48வது நாள் அகத்திய முனிவர் அவர்முன் தோன்றினார். பாபாஜியை ‘நாகராஜ்’ என மென்மையாக அழைத்து கட்டியணைத்துக் கொண்டார். அவருக்கு ஆகாரமும் நீரும் கொடுத்து அவரது உடலைச் சாதாரண நிலைக்குக் கொண்டு வந்தார். பாபாஜி அங்கு வந்த நோக்கத்தை அறிந்தவராகி அவருக்கு கிரியா குண்டலினி யோக முறையை பின்பற்றுபவர்கள் கடைப்பிடிக்க வேண்டிய அனுஷ்டானங்களையும் கட்டுப்பாடுகளையும் எடுத்துக் கூறினார். காலப்போக்கில் கிரியா குண்டலினி யோகாவில் அதிஉயர் நிலையை பாபாஜி எய்தியதை உணர்ந்த அகத்தியர், அவரை இந்தியாவின் இமயமலைத் தொடரில், உத்தரகண்ட மாநிலத்தில் அமைந்துள்ள பத்ரிநாத் என்ற இடத்திற்கு சென்று சாதனையைத் தொடருமாறும், உலகம் போற்றும் மகானாக மாறுவாய் என ஆசீர்வதித்தும் அனுப்பி வைத்தார்.



பல்லாண்டு காலமாக ஞானியர்களாலும், ரிஷிகளாலும், யோகிகளாலும் புனிதப்பட்ட பதியே பத்ரிநாத் ஆகும். இத்தகைய அரிய தலத்தில் பாபாஜி 18 மாதங்கள் போகநாதரிடமும் அகத்தியரிடமும் கற்ற யோக நுட்பங்களை அனுஷ்டித்தார். 18மாத கடும் தவத்தின் பின்னர் சொரூப சமாதி நிலைக்கு வந்தார். அவரது பௌதீக உடல் தங்கம் போல் ஒளிர ஆரம்பித்தது. மூப்பு, பிணி, சாவு என்பவற்றை வென்றவராகி அதே இளமைத் தோற்றத்தில் இன்றும் பலருக்கு வழிகாட்டுகிறார். இவர் தமிழ் யோக சித்தாந்த மரபில் உள்ள 18 சித்தர்களுடன் மிக உயரிய நிலையில் வைத்துப் போற்றப்படுகிறார். இன்றும் இமயத்தில் ‘கௌரி சங்கர் பீடம்’ எனும் ஆச்சிரமத்தில் சிறிய அளவிலான சீடர்களோடு, உலகெங்கும் அவரது கிரியா யோக தீபத்தின் ஒளிபரப்பப்படுகின்றது.

கிரியா பாபாஜியின் ஸ்தூல வாழ்க்கையைப் பற்றி ஒன்றும் தெரியவில்லை. சுவையான விசயத்தைப் பற்றி இதுவரை கேட்க யாருக்கும் தைரியமில்லை. கிரியா யோகத்தின் மூலம் மனித சமுதாயம் விடுதலை பெறும் என்ற அவருடைய ஆழமான நம்பிக்கையை பற்றி மட்டுமே அவரிடம் கேட்க நமக்கு அனுமதி உண்டு. பாபாஜியின் வாழ்க்கை உண்மையில் உலகந்தழுவிய, அவரது உயர்ந்த அருட்பணியின் வரலாறு ஆகும். ஒன்பதாம் நூற்றாண்டில் ஆதிசங்கராச்சாரியார் கோவிந்த பகவத்பாதரிடம் குருகுல வாசம் செய்து பின்னர் இந்து மதத்தின் முக்கிய இடமான காசிக்குச் சென்றார். அங்கு அவருக்கு பாபாஜி கிரியா யோகத்தில் தீட்சை அளித்தார்.(இந்த நிகழ்ச்சியை பாபாஜியே லாகிரி மகாசாயருக்கும், சுவாமி கேபலானந்தருக்கும் கூறினார்.) மறைந்து போன கிரியா யோக கலையை மறுபடியும் உயிரூட்டிய பெருமை கிரியா பாபாஜியையே சேரும். இந்தியாவின் ஆன்மிக மரபின் கிரீடத்தில் கிரியா யோகம் ஒரு விலைமதிப்பற்ற இரத்தினமாகத் திகழ்கிறது.

உடலையும் உள்ளத்தையும் கட்டும் கயிறாக மூச்சு இருப்பதால் உடல், உள்ளம், ஆன்மாவை ஒரு நேர்கோட்டில் எடுக்கும் வித்தையே யோகக்கலை. இதற்குப் பல குருமார்கள் தோன்றினாலும் பதஞ்சலி, திருமூலர் போன்ற ஆதிகுருமார்கள் சிறந்த வழிகாட்டிகளாவர். இவர்தம் கருத்துக்களை நடைமுறைப்படுத்தி, சீஷ்ய பரம்பரையை ஒழுங்குபடுத்தி, கட்டமைத்து சற்குருவாகச் சீடருடன் உடன் நின்ற குருபரம்பரையில் கிரியா பாபாஜி குறிப்பிடத்தக்கவர். சாகாக்கலை என்று வடலூர் வள்ளலார் சொல்லும் மரணமில்லாப் பெருவாழ்வு பெற்ற மகாமூர்த்தி பாபாஜி என்கிறார்கள். அவரால் வழிநடத்தப்பட்ட சிஷ்ய பரம்பரையில், காரைக்குடி யோகி ராமைய்யா, தமிழ் நாட்டில் தனிச்சுடராகி உலகெங்கும் பாபாஜி புகழ் பரப்பி வழிகாட்டி நின்ற யோகியராவார். இன்று பாபாஜியின் பிறந்த நன்நாளை முன்னிட்டு அவரைப் போற்றி துதித்து அவரின் ஆசியைப் பெறுவோம்.

க. இறைவன் ...
திருமந்திரச் செல்வர்
யோகாசன பயிற்றுவிப்பாளர்

## பொருளாதார அரசியல்



கலாநிதி
எம்.கணேசமூர்த்தி
பொருளியல்துறை,
கொழும்பு பல்கலைக்கழகம்

# பணவீக்கத்துக்கு பழக்கப்பட்ட மக்கள்

## அவர்களது நுகர்வு வெகுவாகக் குறைந்து விட்டது

**இலங்கை நிலைமைகள் வழமைக்குத் திரும்புகின்றனவா? அண்மைய சில நாட்களில் பெற்றோல் நிலையங்களுக்கு முன்னால் நீண்ட வாகன வரிசைகளைக் காணமுடியவில்லை. எரிபொருள் நிரம்பல் போதியளவு இருக்கிறது. பெற்றோலியப் பொருள் விநியோகத்தில் QR முறைமை அறிமுகப்படுத்தப்பட்டதன் பின்னர் தவித்த முயல் அடிக்கும் பெற்றோலிய மாபியா குறைந்ததோடு கள்ளச் சந்தையும் அற்றுப் போனது. வாராந்தம் ஒதுக்கப்படும் பெற்றோலியக் கோட்டாவை எல்லா வாகனங்களும் பெற்றுக் கொள்வதில்லை. ஆதலால் தட்டுப்பாடு நிலவிய காலத்தில் பீதி நீங்கியபடியினால் எரிபொருளைப் பதுக்கி வைத்தல் குறைவடைந்தது. ஊக நடவடிக்கைகளால் வெகுவாக உயர்வடைந்த பெற்றோலியத்தின் கேள்வி வெகுவாகக் குறைவடைந்தது. பெற்றோலியத்தின் விலைகள் மும்மடங்குக்கும் மேலாக அதிகரிக்கப்பட்டதால் ஏற்பட்டிருக்க வேண்டிய அதன் கேள்வி இப்போதுதான் குறைவடைந்திருக்கிறது. மக்களது பயணத் தடைகள் குறைந்துள்ளன. தனிப்பட்ட வாகனங்களை வைத்திருப்போர் சிக்கன நடவடிக்கைகளை கடைப்பிடித்திருக்கின்றனர். எனவே வழமையை விடக் குறைவாக பெற்றோலியத்தை இறக்குமதி செய்வதன் ஊடாக நிலைமையைச் சமாளிக்க முடிந்துள்ளது.**

வழமையான பெற்றோலிய விநியோகத்தை உறுதி செய்தால் நாடு வழமைபோல இயங்குவது போன்ற ஒரு தோற்றப்பாட்டை ஏற்படுத்த முடியும். போக்குவரத்து நடவடிக்கைகள் வழமைக்குத் திரும்புவதன் மூலம் பொருளாதார நடவடிக்கைகள் படிப்படியாக ஆரம்பிக்கப்படும். அத்தகைய ஒரு சூழல் ஏற்படும் போது மக்கள் போராட்டம் செய்ய இறங்க மாட்டார்கள் அண்மையில் அழைப்பு விடுக்கப்பட்டிருந்த போராட்டங்கள் எதிர் பார்த்த மக்கள் கூட்டத்தை திரட்ட முடியாமல் போயிருக்கிறது. மக்கள் தமது குடும்பங்களுக்கு உயிர்வாழத் தேவையான குறைந்த பட்ச வருமானத்தைத் திரட்ட ஓடுகிறார்கள். வரிச்சுமையும் பன்மடங்கு அதிகரிக்க அந்த ஓட்டம் மேலும் அதிகரித்திருக்கிறது. எவ்வாறாயினும் நாட்டில் மின்வெட்டு தொடர்ந்து நடைபெறுகிறது. ஏதோ ஒரு வகையில் ஒரு அலாவதீன் பூதம் மின் வெட்டு அற்ற ஒரு சூழலை ஏற்படுத்தி விட்டால் மனதளவில் மக்கள் வழமைக்குத் திரும்பிவிடுவார்கள். விலைவாசிகள் குறைவடைந்து வருவதாக ஒரு தோற்றப்பாடு உருவாக்கப்பட்டு வருகிறது. அரச புள்ளிவிபரங்கள் அதைக் காட்டினாலும் கூட சந்தைகளில் பொருள் கொள்வனவுக்காகச் செல்லும் போது அத்தகைய வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதைக் காணவோ உணரவோ முடியவில்லை. சர்வதேச மட்டத்திலான சுதந்திரமான பணவீக்கக் கணிப்பீடுகள் இலங்கையின் உத்தியோகபூர்வ பணவீக்கக் கணிப்பீடுகளை விட பணவீக்கம் மிகவும் அதிகம் எனக் காட்டுகின்றன. எவ்வாறாயினும் மக்கள் பணவீக்கத்திற்கு பழக்கப்பட்டு விட்டார்கள் என்றே கூறவேண்டும். அவர்களது நுகர்வு வெகுவாகக் குறைந்து விட்டது. குறிப்பாக மக்களின் உணவு உட் கொள்ளலில் கணிசமான மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. உட்கொள்ளும் உணவின் அளவும் தரமும் மிகவும் குறைந்து விட்டன. கடைகளில் முன்பு போல சனக் கூட்டங்களைக் காண இயலவில்லை. கடந்த வெள்ளிக்கிழமை இலங்கையிலும் பல நிறுவனங்களால் கறுப்பு வெள்ளி தள்ளுபடிகளுடன் சேல்கள் (*Black Friday sales*) அறிவிக்கப்பட்டிருந்தன. ஆனால் வணிகத் தலைநகர் கொழும்பில் பல விற்பனை நிறுவனங்கள் வெறிச்சோடிக் கிடந்தமையை நேரடியாக அவதானிக்க முடிந்தது. விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்த பொருள்களின் அளவும் வெகு அற்பமாக இருந்தது. அண்மையில் மத்திய வங்கி உள்நாட்டுப் பணவீக்கம் குறைந்துள்ளதால் அதற்கேற்ப வட்டிவீதங்களில் வீழ்ச்சி ஏற்பட வேண்டும் என்றும் அதற்குரிய நடவடிக்கைகளில் ஈடுபடப் போவதாகவும் அறிவித்திருக்கிறது. ஆகவே இலங்கை நிதித்துறையில் எதிர்வரும் வாரங்களில் மாற்றங்கள் ஏற்படக்கூடிய வாய்ப்பிருக்கிறது.

| மாதம் | 2021 | 2022 | % மாற்றம் 2022/21 |
| --- | --- | --- | --- |
| ஜனவரி | 1,682 | 82,327 | 4,794.6 |
| பெப்ரவரி | 3,366 | 96,507 | 2,767.1 |
| மார்ச் | 4,581 | 106,500 | 2,224.8 |
| ஏப்ரல் | 4,168 | 62,980 | 1,441.4 |
| மே | 1,497 | 30,207 | 1,917.8 |
| ஜூன் | 1,614 | 32,856 | 1,935.7 |
| ஜூலை | 2,429 | 47,293 | 1,847.1 |
| ஓகஸ்ட் | 5,040 | 37,760 | 649.2 |
| செப்டெம்பர் | 13,547 | 29,802 | 119.9 |
| ஒக்டோபர் | 22,771 | 42,026 | 84.5 |
| நவம்பர் | 44,294 | ——— | ——— |
| டிசம்பர் | 89,506 | ——— | ——— |
| மொத்தம் | 194,495 | 568,258 | ——— |

**நாட்டில் இன்னொரு போராட்டம் இடம்பெறக் கூடாது என்று அரசாங்கம் தடுப்பதன் உள்நோக்கங்களில் ஒன்று சுற்றுலா வருவாய்களை அது பாதிக்கக் கூடாது என்ற கரிசனையும் தான் என்பதைப் புரிந்து கொள்ள முடிகிறது.**

மறுபுறம் 2021ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2022இல் இலங்கையின் சுற்றுலாப் பயணிகளின் உள்வருகை 190 சதவீதமாக கணிசமான அதிகரிப்பை பதிவு செய்திருக்கிறது. இதன் காரணமாக நாட்டுக்குள் டொலர் உள்வருகை சற்று அதிகரித்திருக்கிறது. அதேபோல வெளிநாடுகளில் இருந்து இலங்கையர்கள் அனுப்பும் டொலர் உள்வருகைகளும் சற்று அதிகரித்திருக்கின்றன. இவை அத்தனையும் இணைந்தே பெற்றோலிய இறக்குமதி உரிய காலத்தில் நடைபெறுவதைச் சாத்தியமாக்கி உள்ளன. ஆனால் நாட்டின் முக்கிய ஏற்றுமதியாகிய ஆடைத் துறை 2022இல் சுமார் 30 சதவீத வீழ்ச்சியைக் காணும் என அறிவித்துள்ளது. இவ்வருடத்தில் அதன் ஏற்றுமதி வருவாய் 6 பில்லியன் டொலர்களாக இருக்கும் என எதிர்பார்க்கப்பட்ட போதிலும் 5.5 பில்லின் டொலர்கள் மாத்திரமே பெறக்கூடியதாக இருக்கும் என மதிப்பிட்டிருக்கிறார்கள். ஆனால் 2021ஆம் ஆண்டு பெறப்பட்ட வருமானமாகிய 5.3 பில்லியன் டொலர்களுடன் ஒப்பிடுகையில் இது ஆசுவாசப்படுத்தக் கூடிய ஒரு எல்லை நிலை அதிகரிப்பாக இருக்கிறது. ஆயினும் 2023 பாதீட்டின் மூலம் அறிவிக்கப்பட்டிருக்கிற வரி அதிகரிப்புகள் இத்துறையின் சர்வதேச போட்டித் தன்மையை மிக மோசமாகப் பாதிக்கும் எனவும் ஆடை ஏற்றுமதியாளர்கள் சுட்டிக்காட்டுகிறார்கள். ஒரு புறம் பொருளாதாரத்தின் முக்கிய டொலர் வருமானம் ஈட்டும் துறைகள் சிறு முன்னேற்றத்தைக் காட்டி நிற்கும் இவ்வேளை, அரசாங்கத்தின் வரிக்கொள்கை இவற்றை அடியோடு நசுக்கி விடக் கூடாது. மாறாக வரிகளைக் குறைத்து ஏனைய ஊக்குவிப்புகளையும் ஏற்படுத்தித் தருவதன் மூலம் இந்நடவடிக்கைகள் புது வேகத்தோடு இடம்பெறச் செய்ய வேண்டும். அதன் மூலம் நாட்டுக்குள் டொலர் உட்பாய்ச்சல்கள் அதிகரிப்பதை உறுதிப்படுத்தலாம். நாட்டில் இன்னொரு போராட்டம் இடம் பெறக் கூடாது என்று அரசாங்கம் தடுப்பதன் உள்நோக்கங்களில் ஒன்று சுற்றுலா வருவாய்களை அது பாதிக்கக் கூடாது என்ற கரிசனையும் தான் என்பதைப் புரிந்து கொள்ள முடிகிறது. ஆனால் அதைவிட மோசமான விளைவுகளை உடனடியாக ஏற்படுத்தவல்ல வரி அதிகரிப்புகள் பற்றி நன்கறிந்திருந்தும், அதுகுறித்து உணர் திறனற்று செவிடன் காதில் ஊதிய சங்காகச் செயற்படுவது தான் கவலைதரும் விடயமாக இருக்கிறது.

---

# மலேசிய அரசியல் குழப்பமும் புதிய பிரதமர் அன்வர் இப்ராஹிமின் பதவியேற்பும்!



கலாநிதி
கே.ரீ.கணேசலிங்கம்
யாழ். பல்கலைக்கழகம்

**உலகளாவிய அரசியலில் நிகழும் ஆட்சி மாற்றங்கள் ஜனநாயகத்தின் பயிற்சிக்களமாக காணப்படுகின்றது. அதனை மட்டுமே ஜனநாயகம் என்று கருதும், அரசுகளும் உண்டு. அனேக ஆசிய, ஆபிரிக்க மற்றும் இலத்தீன் அமெரிக்க அரசுகள் ஜனநாயகம் என்பது ஆட்சி மாற்றம் என்றே கருதுகின்றன. அதனைக் கடந்து ஆட்சி நிர்வாகத்திலும், பொருளாதாரப் பண்பிலும், சமூக கட்டமைப்புகளிலும் ஜனநாயகத்தின் பக்கங்களை பின்பற்றும் எத்தகைய செய்முறையும் இல்லாத போக்கினைக் காணக்கூடியதாக உள்ளது. அதிலும் கீழைத்தேசங்கள் மதத்தையும் மரபுகளையும் முன்னிறுத்துவதன் மூலம் ஜனநாயகத்தின் சரியான பிரயோகத்தை சாத்தியமற்றதாக்கிவருகின்றன. அந்த வகையில் பிந்திய மலேசிய அரசின் நீண்ட இழுபறியின் பின்னர் ஏற்பட்டுள்ள ஆட்சி மாற்றத்துக்கான சூழலையும் அதன் விளைவுகளையும் தேடுவதாக இக்கட்டுரை அமைக்கப்பட்டுள்ளது.**

மலேசியாவில் கடந்த 2018ஆம் ஆண்டு முதல் அரசியல் ரீதியில் உறுதியான அரசாங்கம் அமைய முடியாத குழப்பம் நிலவுகிறது. இதுவரை மூன்று பிரதமர்கள் ஆட்சியமைத்துள்ளனர். அத்தகைய மூன்று அரசாங்கங்களும் தொங்கு பாராளுமன்றத்தினாலும் கூட்டணிக் கட்சிகளுக்குள் குழப்பத்தாலும் ஆட்சியை இழந்துள்ளன. இதனால் பாராளுமன்றம் கலைக்கப்பட்டு புதிய தேர்தலுக்கான அறிவிப்பு வெளியாகி 19.11.2022 அன்று தேர்தல் நடைபெற்றது. அதிலும் மீளவும் தொங்கு பாராளுமன்றமே அமைந்துள்ளது. அதனடிப்படையில் 222 பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான தேர்தலில் எதிர்க்கட்சித் தலைவர் அன்வர் இப்ராஹீம் தலைமையிலான சீர்திருத்தவாதக் கூட்டணி 82 இடங்களை கைப்பற்றியுள்ளது. முன்னாள் பிரதமர் முகைதீன் யாசின் தலைமையிலான தேசியவாதக் கூட்டணி 72 இடங்களில் வெற்றி பெற்றது. பரந்த மலேசிய இஸ்லாமியக் கட்சி 49 இடங்களில் வெற்றியை உறுதிப்படுத்தியது. அதேநேரம் மலேசியாவின் சுதந்திர காலத்திலிருந்து ஆட்சியமைத்த (2018) ஐக்கிய மலாய் தேசியவாதக் கூட்டணி மோசமான தோல்வியை சந்தித்துள்ளது. ஆட்சி அமைப்பதற்காக 112 இடங்கள் பாராளுமன்றத்தில் தேவை, என்ற அடிப்படையில், எந்தக் கூட்டணிக்கும் பெரும்பான்மை இல்லாத சூழலில் புதிய அரசாங்கத்தை அமைப்பதில் குழப்பம் நிலவியது. அதேநேரம் தமக்கு போதுமான பெரும்பான்மை இருப்பதாக அன்வர் மற்றும் முகைதீன் இருவரும் கூறிவருகின்ற சூழலில் மலேசியாவின் மன்னர் அன்வர் இப்ராஹீமை பத்தாவது பிரதமராக அறிவித்துள்ளார். 25.11.2022 அன்று அன்வர் பிரதமராக பதவி ஏற்றுள்ளார். 1998இல் துணைப்பிரதமராக பதவிவகித்த அன்வர் ஊழல் மற்றும் பாலியல் குற்றச்சாட்டுகளால் சிறையிலடைக்கப்பட்டிருந்தார். அரசியல் நோக்கத்தோடு அத்தகைய குற்றச்சாட்டுக்கள் தம்மீது சுமத்தப்பட்டதாக குறிப்பிட்ட அன்வர் மீளவும் நீண்ட கால போராட்டத்திற்கு பின்னர் தேர்தல் மூலம் பிரதமராக தெரிவாகியுள்ளார்.

மலேசியப் பாராளுமன்றம் உறுதியான ஆட்சியை கொடுக்க முடியாமைக்கு பல காரணங்கள் கூறப்பட்டாலும் நடைமுறையில், மலேசியாவின் இன அடிப்படையிலும் மத அடிப்படையிலும் மற்றும் மொழி அடிப்படையிலும் காணப்படும் வேறுபாடே பிரதானமான அம்சமாக தெரிகிறது. குறிப்பாக மலாயக்காரர்கள், சீனர்கள், இஸ்லாமியர்கள், இந்துக்கள் மற்றும் பௌத்தர்கள் முதன்மையானவர்களாகக் காணப்பட்டாலும், இஸ்லாமியர்களே அரசியலில் ஆதிக்கம் செலுத்தும் நிலை காணப்படுகிறது. ஆனால் அஸ்லி, டயாக், ஆனாக் நகிரி (62.5)ஆகிய மலேசியர்கள் அந்த நாட்டின் சுதேசியர்களாக உள்ளனர். இரண்டாவது நிலையில் சீனர்கள் (20.6) காணப்படுகின்றனர். பிரித்தானிய குடியேற்ற காலத்தில் குடியமர்த்தப்பட்ட இந்தியர்களும் (6.2) அரசியல் செல்வாக்குடையவர்களாக விளங்குகின்றனர்.

கூட்டாட்சி பாராளுமன்றத்தைக் கொண்ட மலேசியா அரசியலமைப்புக்குட்பட்ட மன்னராட்சியைக் கொண்ட நாடாக உள்ளது. 1948இல் மலேசியா பிரித்தானியாவிலிருந்து சுதந்திரம் பெற்றாலும் 1959இன் பின்னரே பாராளுமன்றக் கட்டமைப்பைக் கொண்ட சுதேச அரசியலமைப்பை கட்டமைத்தது. மலேசியாவின் கூட்டாட்சிக் கட்டமைப்பானது மேற்சபையான செனற்சபை எனவும் கீழ்சபையான பிரதிநிதிகள் அவையையும் கொண்ட கூட்டாண்மை அரசாங்கத்தையும் அமைத்துள்ளது. 1963இல் மேற்கொள்ளப்பட்ட உடன்பாடு கூட்டாண்மையை மேலும் பலப்படுத்துவதாக அமைந்துள்ளது. அதனடிப்படையில் 13 கூட்டாட்சி அலகுகளையும் மூன்று கூட்டாட்சி பிராந்தியங்களையும் கொண்டுள்ளது.



பொருளாதார ரீதியில் தொழில்துறையின் ஆதிக்கம் சீனர்களது கட்டுப்பாட்டில் காணப்படுகிறது. சட்டம் ஒழுங்கு முதன்மையானதாக அமைந்திருந்தாலும் மலேசியாவின் அரசியலிலும் சமூக அமைப்பிலும் தீவிரவாத அமைப்புக்களின் செல்வாக்கு காணப்படுகிறது. சுதேச பண்பாட்டைக் கொண்டிருந்தாலும் மேற்குலக நாகரீகத்தின் செல்வாக்கு அதீதமானதாக அமைந்துள்ளது. இஸ்லாமிய அடிப்படைவாதத்தின் ஊடுருவலும் மலேசியாவில் பிரதான முரண்பாட்டுக்குரிய விடயமாக தெரிகிறது. ஆயுதக்குழுக்களது செல்வாக்கு சமூக விரோத நடவடிக்கைகள் மலேசிய அரசியலை அதிகம் குழப்பும் விடயமாக தெரிகிறது. இத்தகைய நிலையிலேயே, அன்வர் இப்ராஹீம் ஆட்சி தனிப்பெரும்பான்மை இன்றி அமைந்துள்ளது. புதிய அரசாங்கத்திற்கு முன்னே உள்ள சவால்கள் அதிகமானவை. அவற்றை விரிவாக தேடுவது அவசியமானது.

முதலாவது, உறுதியான அரசாங்கம் ஒன்றினைக் கட்டமைப்பது பிரதானமான சவாலாக மலேசியாவில் எழுந்துள்ளது. இது அனைத்து நாடுகளுக்குமே பொருத்தமானதாக மாறியுள்ளது. அரசியலமைப்புக்கு உட்பட்ட முடியாட்சியைக் கொண்ட மலேசியாவின் ஆட்சி முறைமை நிறைவேற்றதிகாரத்தை பிரமரிடம் ஒப்படைத்துள்ளது. அது மட்டுமன்றி பாராளுமன்றத்தின் அதிகாரத்திற்கான உறுதிப்படுத்தலும் கூட்டாட்சியின் உறுதிப்பாடும் அரசியலமைப்புக்குட்பட்டதாக வடிவமைக்கப்பட்டுள்ளது. அதனால் உறுதியான அரசாங்கத்தை அமைப்பதில் கடந்த 2018 முதல் அதிக குழப்பத்தைக் கொண்டிருக்கும் மலேசியாவின் அரசியல் தொடர்ந்து சாத்தியமான வழிமுறைகளை உருவாக்குவது அவசியமானதாக தெரிகிறது.

இரண்டாவது, உலகப் பொருளாதார நெருக்கடியின் மத்தியில் மலேசியாவின் பொருளாதாரத்தை தக்கவைப்பது பிரதான சவாலாக தெரிகிறது. சராசரியாக 3.1 சதவீத பொருளாதார வளர்ச்சியை கடந்த காலத்தில் கொண்டிருந்த மலேசிய அரசு அதனை நிலைப்படுத்துவதும் பேணுவதும் அவசியமானதாக உள்ளது. இது ஆசியான் அமைப்பிலும் ஆசிய, பசுபிக் பொருளாதாரத்திலும் வலுவான பங்கினைச் செலுத்தும் மலேசியாவின் ஆட்சித் துறையிடமே தங்கியுள்ளது. ஆனால் மலேசிய மக்களது உழைப்பின் திறனும் போட்டித் தன்மையும் கூட்டு இருப்பின் அடையாளங்களும் அதன் பொருளாதாரத்திற்கான இருப்பை உறுதிப்படுத்துகின்றது. அந்த நாட்டின் தொழில் துறையில் சீனாவின் பங்கு மட்டுமல்ல மேற்குலகத்தினதும் இந்தியாவினதும் பங்கு உயர்வானதாக அமைந்துள்ளது. இந்திய, மலேசிய பொருளாதார ஒத்துழைப்பு பலமானதாக அமைந்துள்ளது. ஆனால் இவற்றை பாதுகாப்பது புதிய பிரதமருக்கும் அரசாங்கத்திற்கும் சவாலாகவே தெரிகிறது. அன்வர் துணைப் பிரதமராக இருந்தபோது இந்தியாவையும் சீனாவையும் சமமாக கையாளும் கொள்கையை அதிகம் கொண்டிருந்ததைக் காணக் கூடியதாக அமைந்திருந்தது. ஆனால் 25 வருட கால இடைவெளிக்குப் பின்னர் அவரது ஆட்சியும் தென்கிழக்காசிய அரசியலில் ஏற்பட்டுள்ள மாற்றங்களும் அதற்கான வாய்ப்புக்களை சாத்தியப்படுத்த உதவுமா என்பது குழப்பமாகவே உள்ளது.

மூன்றாவது புதிய அரசாங்கத்திற்கு முன்னால் உள்ள பிரதான சவாலாக அமைந்திருப்பது மலேசியாவின் அரசியல் காலாசாரத்தின் கூட்டுறவை வலுப்படுத்துவதாகும். அதுவே தற்போது அனைத்து சவாலுக்கும் தீர்வாக அமைய வாய்ப்புள்ளது. குறிப்பாக மேற்குலகத்தின் செல்வாக்கும் தழுவலும் ஒருபக்கம் அமைய, சீனாவின் ஊடுருவலும் இந்தியாவின் செல்வாக்கும் நிலையான சுதேச அரசியல் கலாசாரத்துடன் மோதுண்டு பயணிக்கிறது. மலேசியா பல்லினப் பண்பாட்டைக் கொண்டிருப்பதோடு ஒரு கூட்டாட்சித் தத்துவத்தையும் தனக்குள் வரைந்துள்ளது. அதனால் அதிக குழப்பங்களுக்குள் ஒருமைப்பாட்டையும் ஐக்கியத்தையும் கட்டிவளர்க்க வேண்டிய பொறுப்பாண்மை புதிய ஆட்சிக்கு உரியதாகும். அதனைவிட, இனங்களுக்கும் மதங்களுக்கும் எனக் காணப்படும் தனித்துவமான கட்சிகளும் அவை மத்தியிலுள்ள ஆட்சியை கட்டமைப்பதில் செலுத்தும் செல்வாக்கு பிரதான நெருக்கடியாகக் காணப்படுகிறது. அதனால் அதனை சரிசெய்வதும் கையாள்வதும் புதிய அரசாங்கத்தின் பணியாகவுள்ளது.

நான்காவது, ஜனநாயகத்தின் அங்கங்களாக அமைந்துள்ள அரசியல், சமூக, பொருளாதார குறிகாட்டிகளை மலேசியாவில் ஏற்படுத்துவது அவசியமான விடயமாக தெரிகிறது. அதனை நடைமுறைப்படுத்துவதில் சுதேச வடிவங்களும் மத அடையாளங்களும் பெரும் தடையாக அமைந்துள்ளன. அவற்றைத் தகர்த்து மலேசியாவின் இருப்பில் மாற்றத்தை சாத்தியப்படுத்த முடியுமா என்பது பிரதான கேள்வியாகும். காரணம் தென் மற்றும் தென் கிழக்காசிய நாடுகளில் தனிக்கட்சியின் ஆதிக்கம் தனிமனித சர்வாதிகாரத்தின் முதன்மை தேர்தல் மூலமான சர்வாதிகார ஆட்சியின் வடிவங்கள் என பலவிடயங்கள் முதன்மையானதாக காணப்படுகிறது. அதாவது பொருளாதார வளர்ச்சிக்கும் சட்ட ஒழுங்குக்கும் சர்வாதிகாரத் தலைமைத்துவமே பொருத்தமானது என்ற வாதத்தை இந்தோனேசியா, சிங்கப்பூர், பிலிப்பைன்ஸ், தாய்லாந்து என்பன 2000 ஆம் ஆண்டுவரை வெற்றிகரமாக செயல்பட்டு ஆட்சியதிகாரத்தை செலுத்தியதன் மூலம் நிரூபித்தன. ஆனால் அனைத்து ஆட்சியும் இருபத்தியோராம் நூற்றாண்டு அரசியலுக்குள் பிரவேசிக்கும் போது அதிக நெருக்கடிக்குள்ளாகின. ஆனால் அந்த நாடுகளது பொருளாதார இருப்பானது தனிமனித அல்லது கட்சி சர்வாதிகாரத்தால் வடிவமைக்கப்பட்டதென்பதை நிராகரித்துவிட முடியாது. அதற்கு புவிசார் அரசியலும் பௌத்த மற்றும் இஸ்லாம் மதங்களின் அடிப்படைகளும் காரணமாகக் கொள்ள முடியும். அதனோடு அப்பிராந்தியம் சோசலிஸத்தினதோ அல்லது சீனா, சோவியத்தினதோ செல்வாக்கு வலயமாகிவிடக் கூடாது என்பதன் பிரதிபலிப்பாகவும் அத்தகைய பொருளாதார செழிப்பும் சாத்தியமானது. அதனால் மேற்குலகம் தனிமனித மற்றும் தனிக்கட்சி சர்வாதிகாரத்தை அங்கீகரித்திருந்தது.

எனவே மலேசிய அரசியலில் ஏற்பட்டுவரும் தொங்கு பாராளுமன்றமும் உறுப்பாடற்ற அரசாங்க அமைப்பும் தற்காலிகமாக தடுக்கப்பட்டுள்ளதா அல்லது நிரந்தரமாக தடுக்கப்பட்டுள்ளதா என்பது அன்வரது அரசியல் நகர்வுகளிலேயே தங்கியுள்ளது. அன்வர் நீண்ட அனுபவம் கொண்ட அரசியல்வாதி என்பதை மறுக்க முடியாது. அதனால் மாற்றத்தை இலகுவில் சாத்தியப்படுத்த வாய்ப்புள்ளதாகவே தெரிகிறது. ஆனால் தற்போது எழுந்துள்ள உலகளாவிய பொருளாதார நெருக்கடியும் அரசியல் ஒழுங்கில் காணப்படும் மாற்றங்களும் மலேசியாவின் உறுதியான அரசாங்கத்தை மட்டுமல்ல மலேசியாவின் அரசியலையும் தீர்மானிக்கும் விடயமாகவே அமைய வாய்ப்புள்ளது.



# 15ஆவது எடிசன் திரை விருதுகள் தேர்வுப் பட்டியல்





2022 ஜனவரி மாதம் முதல் வெளியீடு கண்ட தமிழ் திரைப்படங்கள் திரையரங்குகள் மற்றும் ஓடி டி தரங்களில் வெளியீடு கண்ட திரைப்படங்களில் நடித்த நடிகர்களின் தேர்வுப் பட்டியல் வெளியிடப்பட்டுள்ளது.

இவ்வாண்டு கதாநாயகர்கள் அதிகப்படியான தேர்வு பட்டியலில் உள்ளதால் முதல் தர வரிசையில் மாஸ் ஹீரோவாகவும், சிறந்த நடிகராகவும் இரு தரவரிசையாக பிரிக்கப்பட்டு வாக்களிக்க ஏதுவாக செயல்படுத்தப்பட்டுள்ளது.

அதில் மாஸ் ஹீரோ வரிசையில் கமலஹாசன், விஜய், அஜித், சூர்யா, விக்ரம் போன்றவர்களும் சிறந்த நடிகர் வரிசையில் சிம்பு, தனுஷ், விஜய் சேதுபதி, சிவகார்த்திகேயன், உதயநிதி ஸ்டாலின், கார்த்தி, பார்த்திபன் போன்றவர்களும் இடம் பெற்றுள்ளனர்.

தேர்வு பட்டியலில் தங்களுக்கு பிடித்தமான நடிகர்களுக்கு தேர்ந்தெடுக்க வசதியாக edisonawards.in என்ற இணையதளத்திலும் Edison Awards செயலி மூலமாகவும் வாக்களிக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது என எடிசன் விருதுக் குழு தலைவர் செல்வகுமார் மற்றும் மலேசிய தீனா ஆகியோர் தெரிவித்தனர்.

மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு வழங்கப் படவுள்ள எடிசன் திரை விருதுகள் ஜனவரி மாதம் ஏழாம் திகதி மாலை சென்னை வர்த்தக மையத்தில் உலகத் தமிழர்கள் முன்னிலையில் நடைபெற உள்ளது. இந் நிகழ்வில் அயல்நாட்டு தமிழ் கலைஞர்களும், இந்தியாவில் உள்ள திரைக்கலைஞர்களும் இணைந்து கலை நிகழ்வு நடத்த உள்ளனர்.

இந்நிகழ்வில் அயல் நாடுகளில் உள்ள தமிழ் கலைஞர்களும் கௌரவிக்கப்படவுள்ளனர் என விருதுக் குழுத் தலைவர் தெரிவித்தார்.

# இடையறாத பயணத்தில் 'கலைமுகம்'

இலங்கைப் பொருளாதாரம் நம் தலையைப் பிய்த்து விளையாடும் இந்தச் சூழ்நிலையிலும் 'கலைமுகம்' இதழ் 74 (ஒக்டோபர் - டிசெம்பர் 2022) வெளிவந்திருப்பது பாராட்டப்படவேண்டிய ஒன்று என்பதையும் தாண்டி, கலை இலக்கியம் எப்போதும் எந்த நிலையிலும் சாகாது என்பதை நாம் நம்பியே ஆகவேண்டும் என்பதையும் காட்டுகிறது.

அண்மையில் காலம்சென்ற இரு இலக்கிய ஆளுமைகளான கே.எஸ். சிவகுமாரன் மற்றும் தெளிவத்தை ஜோசப் ஆகிய இருவருக்கும் 'கலைமுகம்' தனது முதல் பக்கத்தில் அஞ்சலி செலுத்தியிருப்பது முக்கியத்துவம் மிக்கது. இவர்கள் இருவரும் கலைமுகம் இதழோடு நெருக்கமான தொடர்புகளைப் பேணியவர்கள்.இந்த மூத்த ஆளுமைகளை மறக்காது நினைவு கூர்ந்துள்ளமை பாராட்டுக்குரியது. இம்முறை அட்டைப்பட ஓவியம் ஓவியர் முருகேஷ் தியாகராஜன் (இந்தியா) வரைந்திருக்கிறார். இதழ் வடிவமைப்பை பொறுப்பாசிரியர் கி.செல்மர் எமில் சிறப்பாக செய்திருக்கிறார். இம்முறை பக்கங்கள் எண்ணிக்கையில் சற்று குறைவாக இருந்தாலும் அதன் கனதியான இலக்கியப் படைப்புகள் அந்தக் குறையை நிவர்த்தி செய்திருக்கின்றன.

"எமது சமூகத்தை, எமது மண்ணை, கலாசார பேரழிவிலிருந்து பாதுகாக்க நாம்தான் செயற்படவேண்டும். வேறு எவருமே வரமாட்டார்கள் என்பதை உணர்ந்து செயற்படுவோம்" என்று ஆசிரியர் தலையங்கம் வலியுறுத்துகின்றது. இது இன்று வடக்கில் தலைவிரித்தாடும் போதைப் பொருள் பாவனையை தடுப்பதற்கு அனைவரும் ஒன்றுபட்டு செயற்பட வேண்டும் என்பதை எடுத்துரைக்கின்றது.

முதல் கட்டுரையாக ' வி.எஸ். நைபால் வீடற்றவர்களின் தீர்க்கதரிசனம்' அமைகின்றது. இதை எழுதியுள்ளார் நா. நவராஜ். பொதுவாக நைபாலின் நாவல்கள் கொலனித்துவ பின் கொலனித்துவ சமூகங்களில் காணப்படும் பன்முகப்பட்ட கலாசார அந்நியப்படுத்தல்களைப் பேசுபொருளாகக் கொண்டமைந்தவை என்று நா. நவராஜ் கட்டுரையின் ஓர் இடத்தில் குறிப்பிட்டுள்ளார். மேலும் தி. செல்வமனோகரனின் கட்டுரை சாந்தனின் 'சித்தன் சரிதம்' நாவல் பற்றி வந்துள்ளது. ஞா கோபியின் கட்டுரையாக பீட்டர் ப்ரூக் 'மனித மனங்களை அரங்கம் புதுமைப்படுத்தும் என்பதை நிரூபித்தவர்' . இளவாலை விஜயேந்திரன் எழுதிய' புக்கர் பரிசை வென்ற இலங்கை எழுத்தாளர் ஷெஹான் கருணாதிலக 'இதற்கு முன்னரும் விருதுகளால் அலங்கரிக்கப்பட்டவர். அவரது முதல் நாவலான 'சைனாமான்'ஆங்கிலத்தில் எழுதும் இலங்கையர்களுக்கான உயர் விருதான கிரேஷியன் பரிசை வென்றது என்று கட்டுரையாளர் குறிப்பிட்டுள்ளார். அதுபோல் அ. அஜந்தன் எழுதிய "புகழ் பெற்ற ஓவியர்களின் உளவியல் பின்னணி" பாப்லோ பிக்காசோ, வின்சென்ட் வான் கோ,எட்வேர்ட மன்ச் போன்ற ஓவியர்களின் உளவியல் பின்னணி குறித்து வந்துள்ளது. 'வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த காவிய நாயகன் திருப்பாடுகளின் நாடகம்' என கட்டுரைகளால் அலங்கரிக்கும் கலைமுகம் இதழ் 74இல் கனக. ரமேஷ், வசிகரன், சித்தி றபீக்கா பாயிஸ், தாட்சாயணி, டானியல் சௌந்திரன், கை.சரவணன் ஆகியோரின் கவிதைகளும் சிறப்பாக வந்துள்ளன. மொழிபெயர்ப்புக் கவிதைகளாக பெண் கவி சில்வியா பிளாத்தின் 'நிலைக்கண்ணடி' தமிழில்: ந. சத்தியபாலன். சிங்கள மொழி கவிதை தமிழில்:எம். ரிஷான் ஷெரீப். இம்முறை சிறுகதைகளை சா. சிவயோ



கன், அஸ்மா பேகம், அரங்கா விஜயராஜ் ஆகியோர் எழுதியுள்ளார்கள். மேலும் சிறப்பானதொரு மொழிபெயர்ப்பு நேர்காணல்: நோம் சொம்ஸ்கி உடனான "உலகமயமாக்கலும் மாற்றுக் கல்வியும்" தமிழில் ஜிஃப்ரி ஹாசன் அமைகின்றது. அதுமட்டுமல்லாம் எஸ்.கே. விக்னேஸ்வரன் எழுதும் பத்தி "கனவு நனவாம் கதையும்" வழமை போல் இம்முறையும் இடம்பெற்றுள்ளது.

மேலும் பல புதிய நூல்களின் வரவு பற்றிய குறிப்புக்களும் இந்த இதழை சிறப்பித்துள்ளது எனலாம்.

இலங்கை இலக்கியச் சூழலில் தொடர்ந்தும்'கலைமுகம்' வருவதையிட்டும் வாசகர்களின் தொடர் ஆதரவையும் கருத்தில் எடுத்து இந்த விலையேற்றச் சிக்கலுக்குள் பிரதி ஒன்றின் விலை 350/=வாக அதிகரித்திருந்தாலும் கலைமுகத்தின் வாசகர்கள் பொறுத்துக்கொள்வார்கள் என்ற திடமான நம்பிக்கையுடன் இதழ் தொடர்ந்தும் வெளிவர விடா முயற்சியில் ஈடுபட்டிருக்கும் இதழ் ஆசிரியருக்கும் பாராட்டுக்கள்.

**அகமது ஃபைசல்**
பொத்துவில்

## பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி கொழும்புக்கிளை

# பழைய மாணவர் சங்க வருடாந்த பொதுக் கூட்டம்

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி கொழும்புக்கிளை பழைய மாணவர் சங்க வருடாந்த பொதுக் கூட்டம் எதிர்வரும் டிசம்பர் மாதம் 3ஆம் திகதி சனிக்கிழைமையன்று காலை 9.30 மணிக்கு பம்பலப்பிட்டி தொடர்மாடி சனசமூக நிலையத்தில் (Community Centre) அதன் தலைவர் ஏ. பரணிரூபசிங்கம் தலைமையில் நடைபெறுமென கொழும்புக்கிளை நிர்வாகக் குழு துணைத் தலைவர்களின் ஒருவரான செ. துரைராசா தெரிவித்தார்.

மேலும் அவர் தெரிவிக்கையில், வருடாந்த பொதுக் கூட்ட அறிவித்தல், கணக்கு அறிக்கை என்பவற்றை நிர்வாகக் குழுச் செயலாளர் என்.ஜெயபாஸ்கர் சகல சங்க அங்கத்தவர்களுக்கும் மின்னஞ்சல் வழியாக அனுப்பியுள்ளதாகவும் குறிப்பிட்டார்.

# அபிநயக்ஷேத்ரா ஸ்கூல் ஆஃப் டான்ஸ் "நட்டுவாங்கம் டிப்ளோமோ"











அபிநயக்ஷேத்ரா ஸ்கூல் ஆஃப் டான்ஸ் "நட்டுவாங்கம் டிப்ளோமோ படிப்புக்கான" பட்டமளிப்பு விழா கடந்த 13 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை கொழும்பு 7 கட்புல, அரங்கேற்ற கலைகள் பல்கலைக்கழக கேட்போர் கூடத்தில் பேராசிரியர் கலாநிதி. சி. மௌனகுரு தலைமையில் நடைபெற்றது. இலங்கையில் முதன்முறையாக ஆர்வமுள்ள மாணவர்களுக்கு பயனளிக்கும் வகையில் இந்த பாடநெறி ஆன்லைனில் நடத்தப்பட்டது. இந்த நிகழ்வில் இரு மூத்த கலைஞர்களான ஸ்ரீ மாயவரம் டி. விஸ்வநாதன் (சென்னை) மற்றும் "கலாகீர்த்தி" கலாநிதி. ரவிபந்து வித்யாபதி ஆகியோருடன் டென்மார்க் நடன ஆசிரியர் சசிதேவி ரிஷி ஆகியோர் கலந்து சிறப்பித்தனர். நிகழ்வில் அதிதிகள் கௌரவிக்கப்படுவதையும் மாணவர்களுக்கான சான்றிதழ் வழங்கப்படுவதையும் படங்களில் காணலாம்.

# கதையாடு களத்தில் கவிமணி நஜ்முல் ஹுசைன்

## உங்கள் வியூகம் தொலைக்காட்சியில்



இணையத்தினூடாக கடந்த 22.11.2022 செவ்வாய் பி.ப.2.30. அளவில் ஒளிபரப்பான வியூகம் தொலைக்காட்சியின், "கதையாடு களம்" நிகழ்ச்சியில், கவிஞரும், சிறுகதையாசிரியரும் பாடலாசிரியரும் வகவத் தலைவருமான கவிமணி நஜ்முல் ஹுசைன் கத்தார் நாட்டிலிருந்து சிறப்பதிதியாக கலந்து கொண்டார்.

வியூகம் முகநூல் தொலைக்காட்சி பணிப்பாளர் ஜனூஸ் சம்சுதீன் மிகச்சிறப்பாக செவ்வி கண்டு, அன்றைய "கதையாடு களத்தினை" களை கட்டவைத்தார். நண்பர் கவிமணி நஜ்முல் ஹுசைன் தன் ஆளுமையை, மிக அற்புதமாக வெளிப்படுத்தி நிகழ்ச்சியினை மெருகூட்டினார்.

தனது துணைவியார் நூருல் ஐன் சகிதம் அவர் கட்டாருக்கு சுற்றுலா சென்றிருந்தார்.

இவர்கள் சிறிதும் எதிர்ப்பார்த்திராத நிலையில், இவர்களின் எழுத்து, தமிழ் புலமை, ஊடகத் துறையின் அனுபவம் போன்றவை, கத்தாரில் வாழும் இலக்கியம் சார்ந்தோரின் கவனத்தினை ஈர்த்தன.

கவியரங்கு, நூல் அறிமுகம், இலக்கியச் சந்திப்பு, ஊடகப் பேட்டி எனப் பலவற்றை ஏற்பாடு செய்து இவர்களை திக்குமுக்காட வைத்திருக்கிறார்கள்.

இவற்றினை இங்கு முகநூல் நண்பர்கள், நம் நாட்டின் தேசிய பத்திரிகைகள் என அனைத்தும் முக்கியத்துவப்படுத்திய நிலையில், மிகப் பிரபலமாக விளங்கும் வியூகம் தொலைகாட்சியும் கவிமணி நஜ்முல் ஹுசைனைப் பேட்டி கண்டு ஒளிபரப்பியது. அந்த இலக்கிய தம்பதியினருக்கு வழங்கிய பெரும் கௌரவம் எனலாம்.

கத்தார் மண்ணில் சுற்றுலாவில் தான் கண்ட அனுபவங்களை நஜ்முல் ஹுசைன் "கதையாடு களம்" நிகழ்ச்சியில் சுவையாக பகிர்ந்து கொண்டார்.

கத்தார் மண்ணில் தமிழ் மொழி ஆர்வத்தினை மிகச்சிறப்பாக, கவிமணி நஜ்முல் ஹுசைன் வெளிக்கொண்டுவர, ஜனூஸின் கேள்விகள் பெரும் துணையாகின. நேரலையாக ஒளிபரப்பாகிய இந்த நேர்காணல் வியூகம் தொலைக் காட்சியின் யூடியூப்பில் இப்போதும் பார்க்கக்கூடியதாக இருப்பது மகிழ்ச்சிக்குரியதே. காலப் பொருத்தம் கருதி இதனை ஏற்பாடு செய்த வியூகம் பணிப்பாளர் எஸ். ஜனூஸ் பாராட்டுக்குரியவர்.

**எம். எஸ். எம். ஜின்னா**




## உனது வாசலிலும் ஒரு வானவில்....!

ஷெல்லிதாசன்
திருகோணமலை

வசந்தமடா இளமை அதை
வரமாக நீ கருது
சிறந்த வாழ்வுக்காய் அதை
சிறப்புடனே பயன்படுத்து

வானவில்லாய் அது
வாழ்க்கையிலே தோன்றுமடா
விழிப்புடனே நீ இருந்து
மறையுமுன்னே இரசித்துவிடு

நல்லதுக்காய் அவ்வசந்தம்
நாளெல்லாம் வீசவேண்டும்
பொல்லாக் காரியத்தை அது
புறந்தள்ளி ஒதுக்க வேண்டும்

இளமைத் துடிப்பினிலே
ஏதேதோ செய்ய வரும்
ஏற்ற அறிவுடையோர்
பேச்சை யெல்லாம் பந்தாடும்

நான்தான் என்ற மமதை
நமக்குள்ளே வோ்பதிக்கும்
மானத்தையும் கூட
மதிக்காது பயணப்படும்

வெள்ளை ஆடையாய்
விளங்கும் இள மனசில்
ஆசையென்ற தூசிதுகள்
வலிந்து வீழ்ந்து அழுக்காக்கும்

அவதானம் வளர்க்கின்ற
அறிவுலகை தோ்ந்து எடு
அல்லல் தரும் காரியத்தின்
ஆணிவேரை அறுத்து எறி

வல்லமையை நீ வளர்த்து
வாழ்வியலில் பெயரெடுக்க
வந்த பெருங் கொடையாய்
இளமையதை வசப்படுத்து....!

## சமத்துவ ஒளி பரப்பிடுவோம்

வரக்காமுறையூர் ராசிக்

மூவினம் மேவிடும்
முத்தான இத் தீவினிலே
மேவிய இருள் விலக்கி
மேன்மையுற உழைத்திடுவோம்

ஒழுக்கம் ஒற்றுமை உயர்வில்
ஒன்றியே உழைத்து நிதம்
வழுக்கி திசைகள் மாறிடாது
வளமா யிங்கு வாழ்ந்திடுவோம்

பண்பு பரிவு பாசமதை
பகிர்ந் தெடுத்து பலரும்
இன்பங்கள் பல கண்டிங்கு
இன்புறு வழி சென்றிடுவோம்

அன்பு அறிவு அடக்கமுடன்
அனு தினமும் ஒன்றாகி
உண்மைக்காய் உழைத் திங்கு
உன்னத உலகை ஆக்கிடுவோம்

கருணை கடமை கண்ணியத்தில்
கலந்து நிதம் எல்லோரும்
சீர் வழியே சென்றிங்கு
சிறப்பை யள்ளி சேர்த்திடுவோம்

சதியும் விதியும் இன்னும்
சாபமும் சரித்து நிதம்
சாதிகள் இணைந் திங்கு
சமத்துவ ஒளி பரப்பிடுவோம்



## அகதியின் புலம்பல்!

கிருசன் புளியங்குளம்

அழுகையோடும்
ஆதங்கத்துடனும்
ஆழப்புதைந்த கனவுகளை
சுமந்து கொண்டு
அநாதையாக்கப்பட்ட இந்த
அகதிகளின் அவலம்
அத்தனை இலகுவானதல்ல

அவியாத அரிசியோடும்
அரைவாசி வயிற்றோடும்
கூன் விழுந்த
கூடாரங்களுக்குள்
குற்றுயிர்போல
குறுகிப்போன வாழ்க்கையிது

நான்
என் மகனிற்கு
கிடைக்கக்கூடாதென
எண்ணியிருந்த பட்டம்
இன்று கிடைத்துள்ளது
அகதியென்று

யுத்த ஓசைக்கும்
பீரங்கி இசைக்கும்
மத்தியில் நான்
இல்லாமல்
தனித்து விடப்பட்ட
எனது ஊரில்

முதுமையடைந்த
முற்றத்து மரம்
முறிந்திருக்கக்கூடும்
குந்தியிருந்த
குடிசை வீடும்
குடை சாய்ந்து
போயிருக்கலாம்

எந்தன் ஊரை
எதிரிகள் தாக்குகையில்
பருதி தொட்ட என் வீட்டு
பனையிலும்
குருதி சிந்தியிருக்கலாம்

இன்னமும்
எங்கள் வரவைப்பார்த்து
ஊர் சுற்றும்
ஊமைக்கிளி
சோககீதத்தையோ அல்லது
சுதந்திர கீதத்தையோ
இசைத்துக்கொண்டிருக்கலாம்

மூச்சறுந்த
வீணையொன்றின்
நரம்புத் தந்திபோல
முளை விடும் கனவுகளை
முளையிலே கத்தரித்து
முட்கம்பி வேலிக்குள் இன்று
முடங்கிக் கிடக்கின்றோம்

சொந்த மண்ணை
பந்த பாசங்களை
உற்ற உறவுகளை
பெற்றெடுத்த நிலத்தைப் பிரிந்து
கூடிழந்த பறவையும்
வீடிழந்த நானும்
நாடிழந்த நீயும் இனிமேல்
என்னசெய்யப்போகின்றோம்

## கவி மகாபேரரசு வைரமுத்து


மூதூர் றிஸ்வின்

கடல்கள்
கவி மகாபேரரசு வைரமுத்தின்
வரிகளுக்குள் சுழியோடி மகிழ்ந்தன

கவிஞன்
புலவன்
பாவலர்
பேரரசு... எனும் சொற்கள்
பழைய ஆடைகளானது

எத்தனை மகாயுத்தம் வந்தாலும்
தோற்காத அரசு
கவி மகாபேரரசு வைரமுத்து

வற்றாத ஊற்று
வரட்சியற்ற நாற்று
வளையாத பஞ்சு
சிறகடிக்கும் ஆழி
சிந்திக்கவைக்கும் தேன்
விஞ்ஞானத்துக்கும்
விந்தை காட்டும்
சந்தை



## கனவு மெய்ப்பட வேண்டும்

குப்பிளான் குமரன்

வாழ்வின் எழுச்சிக்காய்
கனவு காணுவோம்
எம் கனவு மெய்ப்பட
நாம் செய்ய வேண்டும்
பல பணிகளை இன்றே
வாழ்வில் உயர்வு பெற
நாம் உருவாக்குவோம்
குறிக்கோள் ஒன்றை
குறிப்பிட்ட குறிக்கோளை
நாம் அடைந்து விட்டதாக
ஒவ்வொரு நாளும் நாம்
கனவு காணுவோம்
நம்பிக்கையுடன் நாம்
காணும் கனவு எமக்கு

குறித்த காலத்தில் நாம்
குறிக்கோளை அடைவதற்கு
செய்யவேண்டிய செயல்களை
எம்மைச் செய்ய வைக்கும்
கனவு மெய்ப்பட நாம்
முழுமையான நம்பிக்கை வைத்து
செயற்பட்டு வெற்றி பெறுவோம்



## காதல்

கந்தப்பளை
ஞா. பிரகாஷ்

எதற்காகப் பிறந்தேன்
என்று தெரியவில்லை
அன்பு செலுத்த மறக்கும்
உனக்கு அன்பு செலுத்தவா?

நம்பிக்கையில்லாத உன் வாழ்வில்
நம்பிக்கை தான் வாழ்க்கை என்று
வாழ்ந்து காட்டவா?

யாருக்காகவும் இதுவரை
கண்ணீர் வடித்ததில்லை
கல்மனம் கொண்ட உனக்காக
கண்ணீர் வடிக்கவா?

என் எதிர்காலத்திற்காக
கடவுளை வணங்கியதில்லை
உன் எதிர்காலம் நன்றாக
அமைய கடவுளை வணங்கவா?

இது என் காதலின் ஆரம்பமா?
இல்லை என் அன்பின் இறுதியா?

## பிரியாத பயணம்

ஏ. எம். கஸ்புள்ளா



பறந்த உலகை மறந்து
போகிறேன்
சில மனிதங்களின்
முன்னால் மறைந்து போகிறேன்

காற்றின் எதிர் திசை
கலைத்து விடாத
கொஞ்ச கனவுகளை
நெஞ்சில் சுமந்து போகிறேன்

விழிப்பார்வையில்
படாமல்
மழைச்சாரலில்
நடந்து போகிறேன்

கொஞ்ச தூரம்
நெஞ்சின் ஓரம்
தூங்கி எழும்

உன் சமாதியின் வழியில்
கண்ணீரினை துளிர்த்துச்
செல்கிறேன்

எதுவரையில்,
இதுவரையில் தெரியாமல்
மறுபடியும் மறுபடியும்
இந்தப் பாதையில் மட்டுமே
பயணிக்கிறேன்!



## தவிக்கும் மனம்

உடப்பூர் வீரசொக்கன்

ஓடோடி உழைக்கிறான்
ஒன்று பட்டு வாழ்கின்றான்
நாடோடி வாழ்வின் பயணத்தினால்
நட்டாற்றில் வீதியில் திரிகின்றான்

தேரோடி காண வீதியினிலே
தெய்வ அருள் பெறுகிறான்
குழிரோடி மீனை பிடிக்காததினால்
குறைவோடு வாழ்வில் மிதக்கின்றான்

மலரோடு மனம் பதிவினில்
மகிழ்ச்சியில் மாய்கிறான்
நலமோடு நற்பணி ஆற்றுவதினால்
நல்லருள் பெறுகின்றான்

பலரோடு பாய்ந்து நிற்பதினால்
பலசாலியாகி விட்டான்
மன்னவனின் மதிப்புரைக் கண்டு
மட்டிலா மகிழ்ச்சியில் மாய்கின்றான்

தென்னவனின் தெய்வீக அருள் கிட்டவே
தேனிசை மழை பொழிகின்றான்
பின்னணியில் பிணைப்பில் பிணைந்திட்டு
பித்தனாகி அலைகிறான்

என்னவனின் ஏக்க பெருமீச்சிட்டு
ஏதிலியாய் போய்விட்டான்
கண்ணனின் கடாட்சரம் கண்டிட்டு
கவலைகளை கலைந்து நிற்கின்றான்

அன்னையின் ஆசை முத்தத்தினோடு
அருள் தினமும் ஆசையுறுகின்றான்
உன்னால் வந்த ஊழ்வினையாலடி
உணர் விழந்து மாய்கிறேனடி

கண்ணால் கண்ட காட்சியடி
கழிவிரக்கம் காண்பேனடி
தன்னால் வந்த தயவினாலடி
தனிமலரமாகி விட்டேனடி

## மறுமுகங்கள்....!

சி.எம்.சங்கர் பண்டாரவளை

நிலவுக்கு மறுமுகம்
அமாவாசையை போல்
நீங்கள் காணும் மனிதருக்கும்
மறுமுகம் இருக்கிறது – இருந்தும்
அதை தேடாதீர்கள்
ஆனால் இன்னோர்முகம்
எவருக்கும் இருக்கும் என்பதை
இதயத்தில் வையுங்கள்!

அளவு கடந்த மழை
அனர்த்தங்களாவது போல்
அளவை கடக்கும் உறவும்
ஆகலாம் என்பதை
அறிந்து கொள்ளுங்கள்...

ஒருமுகமாகவே ஒருவருடன்
உறவாட முடியாது

முரண்பாடுகளுக்கு
முகம் கொடுக்க நேரிடும்
தருணத்தை தவிர்க்க
எவருக்கும் இன்னோர்முகம்
இருக்கும் என்பதை மனதில்
இருத்திக்கொண்டு
மற்றவரை நேசியுங்கள்!

பெற்றபிள்ளை
பிரிந்து போவதும்...
பலர் வாழ்த்தி பண்ணிய
கல்யாணம் களைந்து போவதும்...
நெருங்கிய நட்புகள்
நம்மை நகர்ந்து செல்வதும்
மறுமுகங்களின் செயற்பாடுகள்
செயற்பட தொடங்குகையில்தான்...!

## விடியலும் விலைவாசியும்

அனுகவி றிப்கான்
அட்டாளைச்சேனைண



விடிஞ்சாத்தான் தெரியும்
முதலாளியின் முகம்
முக்கால் கறித்துண்டும்
முகம் சுளிக்கும் கறிச்சட்டியும்...

கத்தரிக்கா விலையோ
கழுத்த நெரிக்க பார்க்குது
வெண்டிக்கா விலையோ
அரை பவுன் தங்கம் வாங்கலாம்

பெற்றோல் விலையோ
பெரும்மூச்சு வாங்குது
நெடுந்தூரத்தை நினைச்சாலே
நெஞ்செல்லாம் படபடக்குது

ஏலம் நாற்சந்தியில்
ஏக்கமோ மனச்சந்தியில்
வீடுவரை யோசித்தாலும்
விலைவாசிக்கு விடியல் உண்டோ

வயிற்றுக்கு பசி போக்க
கைப்பிடியாவது வேலை வேணும்
கைக்குழந்தைக்கு தெரியுமா
நாட்டு நடப்பு நம்ம பிழைப்பு....

என்ன சொல்லி என்ன மாறும்
பெட்டைக்கோழி கூவி
பொழுதுதான் விடியுமா
என் புலம்பலால் மட்டும்
விலைவாசி குறையுமா.......

## நாளைய தலைவர்களுக்காக...!

இரா.ஜெயக்குமார்



சூறைக் காற்றினிலே
சூடம் எரிப்பதுபோல்
நச்சுச் சூழலிடை
நம் பிஞ்சுகள் வளருகிறார்கள்!
குருத்துகளை கருக்கவென
விரித்த வலைகள் பல...!
குறிப்பால் உணர்ந்தாலே
குறிக்கோளை அடைந்திடலாம்!
விலை வாசி ஏற்றம் வந்து
விலங்கிடலாம் கல்விக்கு!
போதைப் பொருள் பழக்கம்
பொசுக்கிடலாம் பிஞ்சுகளை!
தடைகள் பல தாண்டி
தடம் பதிக்க வேண்டாமோ?
நாளைய தலைவர்களை
நாம் செதுக்க வேண்டாமோ?

# IT / BPM துறையின் வளர்ச்சியை நிலைநிறுத்த எதிர்கால தேசிய திறமைகளுக்கான முயற்சிகள்



IT / BPM அறிவு சார்ந்த தொழில்கள் பகுப்பாய்வு மற்றும் விமர்சன சிந்தனைத் திறன்கொண்ட பணியாளர்களுக்கு அதிகளவில் வேலைவாய்ப்புகளை வழங்குகின்றன.

சமீபத்திய IMF அறிக்கையின்படி, உலகளாவிய ரீதியில் தொழில்நுட்ப பணியாளர்களுக்கான பற்றாக்குறை 85 மில்லியனுக்கும் அதிகமாக இருக்கும் என்று கணிக்கப்பட்டுள்ளது, இதனால் 2030ஆம் ஆண்டளவில் $8.5 டிரில்லியன் டொலர் வருடாந்த வருவாய் இழக்கப்படும். இலங்கை தற்போது 1.7 பில்லியன் அமெரிக்க டொலர் வருவாய் ஈட்டும் அவ்வாறான 600+ நிறுவனங்களைக் கொண்டுள்ளது. இத்துறை 2025க்குள் மேலும் வளர்ச்சியை எதிர்பார்க்கின்றது. அத்துடன் 1,000 புதிய நிறுவனங்களை நிறுவவும், 200,000 வேலைகளை உருவாக்கவும் மற்றும் இத்துறையின் வருவாயை 5 பில்லியன் அமெரிக்க டாலர்களாக உயர்த்தவும் இலக்கு வைத்துள்ளது.

National Future Careers முன்முயற்சி என்பது IT / BPM துறையின் அனைத்து பங்குதாரர்களின் ஒருங்கிணைந்த முயற்சியாகும், இது SLASSCOM ( IT / BPM துறைக்கான தேசிய சபை) மூலம் அதிகளவானோர் இணைவதை ஊக்குவிக்கவும் ஆர்வமுள்ளவர்களை உற்சாகப்படுத்தவும் என இந்த லாபகரமான துறையில் நுழையும் திறமைகளின் நிலைபேண்தன்மையை ஊர்ஜிதப்படுத்துகின்றது.

இந்த முன்முயற்சியானது, கல்வியமைச்சு, ICTA, FITIS, CSSL, BCS Sri Lanka, அரச மற்றும் அரசு சாரா பல்கலைக்கழகங்கள் தொழில்வாண்மை நிறுவனங்கள் ஏனைய மூன்றாம்நிலை மற்றும் தொழிற்கல்வி பயிற்சி நிறுவனங்கள் மற்றும் பங்குதாரர்களின் கூட்டுமுயற்சியினால் உருவானதாகும்.

NFTI திட்டம் நாட்டின் மிகவும் திறமையான இளைஞர்களை சென்றடைவதையும், எதிர்கால IT / BPM தொழில் வாய்ப்பைப் புரிந்துகொள்ள அவர்களுக்கு உதவுவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.NFTI ஆனது, தனிப்பட்ட காரணங்களுக்காக IT / BPM துறையை விட்டு வெளியேறியவர்கள் மற்றும் வெளிநாட்டில் உள்ளவர்கள் IT / BPM பணிக்கு திரும்புவதற்கு அனுகூலமாக இருக்கின்றது.

National Future Talent Initiative (NFTI) என்பது இத்துறையில் உள்ள அனைத்து திறமைகளும் இணைந்து வேலை செய்யும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. அத்துடன் இளைஞர்களுக்கு அவர்களின் ஆர்வத்திற்கு ஏற்றவாறு IT / BPM இல் துறையைத்தொடர வழிகாட்டவும் செய்கின்றது.

# வடபகுதி பெண்களை வலுவூட்டும் டேவிட் பீரிஸ் குழுமம்



திறமை மிக்க பெண் தொழிலாளர்களை உருவாக்குவது மற்றும் நாட்டின் பொருளாதாரத்தில் பெண்களின் சுறுசுறுப்பான பங்கேற்பை ஊக்குவிக்கும் நோக்கில் டேவிட் பீரிஸ் குழுமமானது மற்றுமொரு இயந்திரவியல் பயிற்சித் திட்டமொன்றை அண்மையில் யாழ்ப்பாணத்தில் பூர்த்திசெய்தது.

'தொழில்நுட்பப் பயிற்சியின் ஊடாகப் பெண்களைப் பலப்படுத்தல்' என்ற தலைப்பிலான இந்தத் திட்டத்தைப் பூர்த்திசெய்த பெண்கள், 2022 நவம்பர் 09ஆம் திகதி யாழ்ப்பாணம் நோர்த் கேட் ஹோட்டலில் நடைபெற்ற நிகழ்வில் NVQ (தேசிய தொழிற்பயிற்சி தகுதி) தரம் 01 சான்றிதழைப் பெற்றுக்கொண்டதுடன், அவர்களுக்கு விரிவான கருவிகளைக் கொண்ட தொகுதியொன்றும் வழங்கப்பட்டது. வடமாகாணத்தின் யாழ்ப்பாணம், மன்னார், கிளிநொச்சி, முல்லைத்தீவு மற்றும் வவுனியா உள்ளிட்ட பகுதிகளிலிருந்து 20 பெண்கள் இதில் கலந்துகொண்டனர்.

2017ஆம் ஆண்டு பெண்கள், சிறுவர் விவகாரம் மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சின் கீழ் இலங்கையின் பெண்களுக்கான பணியகத்துடன் இணைந்து டேவிட் பீரிஸ் குழுமம் இந்த முயற்சியை ஆரம்பித்திருந்ததுடன், இதுவே தனித்துவமாகப் பெண்களை இலக்காகக் கொண்டு நடத்தப்படும் இயந்திரவியல் அடிப்படையிலான முதலாவதும், ஒரேயொரு தொழில்நுட்பப் பயிற்சித் திட்டமுமாகும்.

DPMC இன் முகவர் வலையமைப்பின் கூட்டுழைப்புடன் இந்தத் திட்டத்துக்கான விண்ணப்பதாரிகள் தெரிவுசெய்யப்பட்டனர். தொழில்நுட்பப் பயிற்சியின் கோட்பாட்டு ரீதியான பகுதியைப் பூர்த்தி செய்ததும் சிறந்த பயிற்சி அனுபவத்தைப் பெறும் நோக்கில் பங்குபற்றுனர்களுக்கு அந்தந்தப் பகுதியில் உள்ள DPMC சேவை முகவர்களிடமிருந்து பயிற்சி பெறுவதற்கான வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டது. இந்தப் பயிற்சித் திட்டத்தின் இறுதியில் மதிப்பாய்வு நடத்தப்பட்டு மெக்கானிக் ஆவதற்கான சான்றிதழ் வழங்கப்பட்டது.

# மொபைல் வங்கிச் சேவை App ஊடாக இணைய வசதியை அதிகரித்துள்ள செலான்



அன்புடன் அரவணைக்கும் வங்கியான செலான் வங்கி, தனது மொபைல் வங்கிச் சேவை app ஐ மெருகேற்றம் செய்துள்ளது. அதனூடாக சிறந்த பாதுகாப்பு மற்றும் சௌகரியம் போன்றவற்றை வாடிக்கையாளர்களுக்கு வழங்குவதை மேலும் உறுதி செய்துள்ளது. தற்போதைய சூழலில் மக்களின் நடமாட்டம் பெருமளவில் குறைவடைந்துள்ள நிலையில், இந்த மெருகேற்றம் செய்யப்பட்ட app என்பது, எந்தப் பகுதியிலிருந்தும் வழமையான வங்கிக் கொடுக்கல் வாங்கல்களை முன்னெடுப்பதற்கு சிறந்த தீர்வாக அமைந்திருக்கும்.

மேம்படுத்திய பாவனையாளர் அனுபவத்தை வழங்கும் வகையில் சௌகரியமான பாவனையாளர் உட்கட்டமைப்பை கொண்டதாக இந்த app இன் பிந்திய வெளியீடு அமைந்துள்ளது. விரல் ரேகை மற்றும் முக அடையாளம் போன்றவற்றை உறுதி செய்து login செய்யும் வசதியைக் கொண்டுள்ளதுடன், கணக்கு விவரங்களை பார்வையிடுவதற்கு மிகவும் பாதுகாப்பான அனுமதியை வழங்குகின்றது. App இனுள் பாதுகாப்பான முறையில் கடவுச் சொல்லை மாற்றிக் கொள்ளும் வசதியும் பாவனையாளருக்கு வழங்கப்படுகின்றது. கணக்குகளை ஆரம்பிப்பதற்கு கிளைகளுக்கு விஜயம் செய்ய வேண்டிய தேவையை இல்லாமல் செய்துள்ளதுடன், இந்த பிந்திய வெளியீட்டினூடாக, பாவனையாளர்களுக்கு நடைமுறை மற்றும் சேமிப்புக் கணக்குகள் மற்றும் நிலையான வைப்புகளை ஒன்லைனில் ஆரம்பிக்கும் வசதி வழங்கப்பட்டுள்ளது. மேலும், அருகாமையிலுள்ள செலான் வங்கிக் கிளைகள், ATMகள், CDM மற்றும் CDK பகுதிகளை இனங்காணக்கூடிய வகையில் உள்வைக்கப்பட்டுள்ள தேசப்பட வசதியும் காணப்படுகின்றது.

மொபைல் app இல் தமது முன்னைய கொடுக்கல் வாங்கல்களை பார்வையிடுவது, தொலைந்த அல்லது களவாடப்பட்ட அட்டைகள் பற்றி அறிவிப்பது, எதிர்காலத்தில் கொடுப்பனவுகளை மேற்கொள்வதற்காக கணக்குகளையும், கட்டணப் பட்டியல்களையும் பதிந்து வைத்திருத்தல், கணக்குகளுக்கு புனைப்பெயர்களைப் பதிதல் மற்றும் பல அம்சங்கள் அடங்கலாக பல இதர சேவைகளையும் செலான் வாடிக்கையாளர்களுக்கு வழங்கப்படுகின்றது.

# மஹிந்ரா ஐடியல் ஃபினான்ஸின் புதிய கிளை பண்டாரகமவில்




இலங்கையின் முன்னணி உரிமம் பெற்ற நிதி நிறுவனமான மஹிந்ரா ஐடியல் ஃபினான்ஸ் லிமிட்டெட், களுத்துறை மாவட்டத்தின் முக்கிய வர்த்தக மற்றும் வணிக மையமான பண்டாரகமவில் தனது புதிய கிளையை அண்மையில் திறந்து வைத்துள்ளது. 26, களுத்துறை வீதி, பண்டாரகம என்ற முகவரியில் அமைந்துள்ள புதிய கிளையானது, மஹிந்ரா ஐடியல் ஃபினான்ஸ் வழங்கும் முழு அளவிலான தயாரிப்புகள் மற்றும் சேவைகளை வாடிக்கையாளர்களுக்கு வசதியான, நன்கு வடிவமைக்கப்பட்ட மற்றும் நவீன இடத்தில் வழங்குகிறது.

பண்டாரகம என்பது கம்பனியின் வளர்ந்து வரும் கிளை வலையமைப்பில் 23 ஆவது சேர்க்கையாகும். இது மஹிந்ரா ஐடியல் ஃபினான்ஸின் விரைவான வலையமைப்பு விரிவாக்க மூலோபாயத்தின் ஒரு பகுதியாகும். இதன்மூலம் நாடு முழுவதும் வாடிக்கையாளர்களுக்கு தங்கக் கடன்கள், நிலையான வைப்புக்கள், குத்தகை மற்றும் பலவற்றை வழங்குவதற்காக, தனது பிரசன்னத்தை இன்னும் கூடுதலாக அதிகரிக்கவும், விரிவுபடுத்தவும் முயல்கிறது.

மஹிந்ரா ஐடியல் ஃபினான்ஸின் புதிய பண்டாரகம கிளையின் திறப்பு விழாவைக் குறிக்கும் வகையில், இந்நிகழ்வில் நிறுவனத்தின் வர்த்தக மற்றும் பிராந்திய முகாமைத்துவ அணிகளின் உறுப்பினர்கள், பெறுமதிமிக்க வாடிக்கையாளர்கள், ஊழியர்கள் மற்றும் விருந்தினர்கள் கலந்து சிறப்பித்துள்ளனர்.

# Advanced Diploma in Fashion, Apparel & Textiles கற்கை Brandix Corporate Campus இனால் அறிமுகம்



Brandix Lanka Limited இன் துணை நிறுவனமான Brandix Corporate Campus (BCC), Advanced Diploma in Fashion, Apparel & Textiles கற்கையை அறிமுகம் செய்துள்ளது. இந்த கல்வியகத்தினால் வழங்கப்படும் முன்னணி ஆடைத் தொழில்நுட்பம் தொடர்பான கற்கைகள் அதிகரித்துச் செல்லும் நிலையில், ஆடைத் தொழிற்துறையில் நிபுணர்களாகத் திகழ்வதற்கு எதிர்பார்ப்போர் தொடரக்கூடிய வகையில் அமைந்துள்ளது. இந்தப் புதிய உயர் டிப்ளோமாக் கற்கையினூடாக, இலங்கையிலும், உலகளாவிய ரீதியிலும் வளர்ச்சியடைந்து செல்லும் ஆடைத் தொழிற்துறையில் தொழில் வாய்ப்பை கட்டியெழுப்பிக் கொள்வதற்கு உதவியாக அமைந்திருக்கும். புத்தாக்கமான மற்றும் சர்வதேச செயற்பாடுகளுக்கு சிறந்த வெளிப்பாட்டைக் கொண்டுள்ள, தொழிற்துறையைச் சேர்ந்த புகழ்பெற்ற முன்னோடிகளால் இந்தக் கற்கை வடிவமைக்கப்பட்டுள்ளது. இந்த நிபுணர்கள் குழுவினால், தமது நிபுணத்துவத்தைப் பயன்படுத்தி, புதிய தொழிற்துறை முன்னேற்றங்களுக்கேற்ப இந்த கற்கை அமைந்திருப்பது உறுதி செய்யப்படும்.

இந்தக் கற்கையை தொடர்வதற்கு ஆர்வமுள்ள அனைவரையும் இணைந்து கொள்ளுமாறு BCC அழைப்பு விடுத்துள்ளதுடன், சகல வயதினருக்கும் இணைய முடியும் என்பதுடன், க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் எந்தப் பிரிவிலேனும் இரண்டு சித்திகளைக் கொண்டிருக்க வேண்டும். இரண்டாண்டு கால கற்கையாக அமைந்திருப்பதுடன், முதல் ஆண்டில் முழுநேரக் கற்கையாக அமைந்திருப்பதுடன், 2ஆம் ஆண்டில் பகுதிநேரக் கற்கையாக அமைந்துள்ளது. உயர் டிப்ளோமா 22 தலைப்புகளைக் கொண்டிருக்கும் என்பதுடன், மாணவர்களுக்கு ஆடைத் தொழிற்துறை பற்றிய முழுமையான புரிந்துணர்வை வழங்கும்.

# 1500 IVF பிரசவங்கள் எனும் மைல்கல்லை எட்டியுள்ள லங்கா ஹொஸ்பிட்டல்ஸ்



லங்கா ஹொஸ்பிட்டல்ஸ் கருக்கட்டல் நிலையத்தினால் 1500 ஆவது பிரசவம் எனும் மைல்கல்லை பூர்த்தி செய்துள்ளதாக அறிவித்துள்ளதாக லங்கா ஹொஸ்பிட்டல்ஸ் குழுமத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி தீப்தி லொகுஆரச்சி தெரிவித்துள்ளார்.

லங்கா ஹொஸ்பிட்டல்ஸ் கேட்போர் கூடத்தில் அண்மையில் நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பின்போதே இத்தகவலை அவர் வெளியிட்டார். அவர் மேலும் தெரிவிக்கையில்,"கடந்த இருபது வருடகாலமாக, இலங்கையில் கருக்கட்டல் சிகிச்சைகளை வழங்குவதில் லங்கா ஹொஸ்பிட்டல்ஸ் முன்னணியில் திகழ்கின்றது. அத்துடன் தம்பதியினருக்கும், குடும்பங்களுக்கும் ஆரோக்கியமான குழந்தையைப் பிரசவிப்பது எனும் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றுவதாக அமைந்துள்ளது.

எமது கருக்கட்டல் நிலையத்தின் அர்ப்பணிப்பான மற்றும் அனுபவம் வாய்ந்த நிபுணர்களின் பங்களிப்பு இல்லாமல் இதனை எய்த முடியாது. கருக்கட்டல் சிகிச்சைகளுக்கு நவீனவசதிகள் படைத்த ஆய்வுகூடமாக அமைந்துள்ளது.

# Ransomwareக்கு அதிக பணம் செலுத்தும் உற்பத்தித் துறை

இணைய பாதுகாப்பு சேவைகளின் கண்டுபிடிப்பு மற்றும் விநியோகத்தில் உலகளாவிய முன்னணி நிறுவனமான Sophos, "The State of Ransomware in Manufacturing and Production" என்ற தலைப்பில் புதிய ஆய்வு அறிக்கையில் இன்று வெளியிடப்பட்டது, இது Ransomware க்காக அனைத்துத் துறைகளும் செலுத்திய 812,360 அமெரிக்க டொலர்களைக் கருத்தில் கொண்டால், உற்பத்தித் துறை மட்டுமே அதிகபட்சமாக 2,036,189 அமெரிக்க டொலர்களை செலுத்துகிறது.

கூடுதலாக, 66% உற்பத்தி நிறுவனங்கள், அதிநவீன சைபர் தாக்குதல்களில் அதிகரிப்பு குறித்து ஆய்வு செய்தன. கடந்த ஆண்டை விட சைபர் தாக்குதல்கள் 61% அதிகரித்துள்ளதாகவும் அந்த அறிக்கை தெரிவிக்கிறது.

இந்த இணையத் தாக்குதல்களின் சிக்கலான தன்மை மற்றும் அளவு முறையே Crosssector ஐ விட 7% மற்றும் 4% அதிகமாக இருப்பதை இது மேலும் காட்டுகிறது.

இது குறித்து கருத்து தெரிவித்த Sophos நிறுவனத்தின் சிரேஷ்ட பாதுகாப்பு ஆலோசகர் ஜோன் ஷயர், "சப்ளை சங்கிலியில் அதன் நிலை மற்றும் அங்கீகாரம் காரணமாக, உற்பத்தித் துறையானது சைபர் குற்றவாளிகளுக்கு கவனம் செலுத்தும் ஒரு சிறந்த பகுதியாகும்.

காலாவதியான உள்கட்டமைப்பு மற்றும் OT சூழலுக்கு முன்னுரிமை இல்லாததால், மீறப்பட்ட நெட்வொர்க்கிற்குள் சைபர் தாக்குதல்களை மேற்கொள்பவர்கள் எளிதாக நுழைந்து தாக்குதல்களை நடத்துவதற்கான தளத்தை வழங்குகிறது. IT மற்றும் OT இன் சந்திப்பு Attack Surface அதிகரிக்கிறது (எந்தவொரு அமைப்பிலும் ஹேக் செய்ய கிடைக்கக்கூடிய நுழைவு புள்ளிகளின் எண்ணிக்கை) மற்றும் ஏற்கனவே சிக்கலான சூழலின் பாதிப்பை அதிகரிக்கிறது." எனத் தெரிவித்தார்.


# பெண் தொழில்முனைவோருக்கு மானிய உதவி வழங்கும் NDB




நெஷனல் டெவலப்மென்ட் வங்கி PLC (NDB), 08 பெண் தொழில்முனைவோருக்கு அவர்களின் வணிக முயற்சிகளை விரிவுபடுத்தவும் மேம்படுத்துவதற்கும் மொத்தம் ரூ 2.6 மில்லியன் உதவியை வழங்கியது. இந்த திட்டத்தின் ஒரு பகுதியாக நாடளாவிய ரீதியில் 30க்கும் மேற்பட்ட பெண் தொழில்முனைவோர் தேர்வு செய்யப்பட்டு நேர்காணலுக்கு உட்படுத்தப்பட்டனர். மானியம் பெறுபவர்கள் அவர்களின் திறன் மற்றும் பொருளாதாரம், சுற்றுச்சூழல் மற்றும் சமூகத்திற்கான மதிப்பு அதிகரித்தல் ஆகியவற்றின் அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்பட்டனர். அவர்களின் வணிக நடவடிக்கைகளின் முக்கிய அம்சங்கள், அவர்களின் அன்றாட நடவடிக்கைகளில் நிலையான அம்சங்களை ஒருங்கிணைத்தல் மற்றும் பெண்களுக்கு குறிப்பாக ஒற்றைத் தாய்மார்கள், விதவைகள், ஒதுக்கப்பட்ட மற்றும் மாற்றுத் திறனாளிகளுக்கு வேலைவாய்ப்பை உருவாக்குதல் என்பன முக்கிய அம்சங்களாக இருக்கின்றன.

மானியம் பெறுபவர்கள் கிரித்தலை, மட்டக்களப்பு, எஹலியகொட, ஜாஎல, கட்டுகஸ்தோட்டை, கட்டுபெத்த, ராஜாங்கனை மற்றும் குருநாகல் ஆகிய இடங்களைச் சேர்ந்தவர்கள். தாவரங்களை மூலப்பொருளாகப் பயன்படுத்தும் கைவினைப் பொருட்கள், மூலிகை காபி மற்றும் அழகுசாதனப் பொருட்கள், அலங்கார மெழுகுவர்த்திகள், நகைகள், இயற்கை உரங்கள் மற்றும் வாழை, புல், நெல் வைக்கோல் போன்ற இயற்கை நார்களைப் பயன்படுத்தி வியாபாரங்களை நடத்துகின்றார்கள்.

NDB தலைமை அலுவலகத்தில் நடைபெற்ற நிகழ்வில், பணிப்பாளர்/பிரதம நிறைவேற்று அதிகாரி திரு திமந்த செனவிரத்ன, தலைமைக் குழு உறுப்பினர்கள், திருமதி மெலடி விக்கிரமநாயக்க உப தலைவர் சட்டம் மற்றும் CS குழுவின் தலைவர், CS குழு உறுப்பினர்கள் மற்றும் பிராந்திய & கிளை ஊழியர்கள் கலந்து கொண்டனர்.




## மேஷம்

உங்கள் ராசிக்கு 3, 6 ஆகிய இடங்களுக்கு அதிபதியான புதன், கார்த்திகை 12ம் திகதி (28/11/2022) தனுசு ராசியில் சஞ்சரிக்கிறார். சகோதர சகாய ஸ்தானம் மற்றும் எதிர்ப்பு, வியாதி, கடன் ஆகியவற்றை குறிக்கும் இடங்களுக்கு அதிபதியான புதன் பாக்கியஸ்தானத்திற்கு வருவதால் உடன்பிறப்புகளின் பகை மாறும். உற்சாகத்தோடு இணைந்து பணி புரிவீர்கள். கடன் சுமை தீரவும் கவலைகள் அகலவும் உடன் பிறந்தவர்கள் வழிகாட்டுவர். உத்தியோகத்தில் பணி நீக்கம் செய்யப்பட்டவர்கள் மீண்டும் சேரும் வாய்ப்பு உண்டு. மாமன், மைத்துனர் வழியில் ஏற்பட்ட மனக்கசப்பு மாறும். தொழில் துறையில் இருப்பவர்கள் பூர்வீக சொத்துக்களை விற்று அதில் வரும் இலாபத்தை மூலதனமாக்கி தொழில் வளர்ச்சிக்கு வழி காண்பர்.

## ரிஷபம்

உங்கள் ராசிக்கு 2,5 ஆகிய இடங்களுக்கு அதிபதியான புதன் கார்த்திகை மாதம் 12ஆம் திகதி (28/11/2022) தனுசு ராசியில் சஞ்சரிக்கிறார். தனஸ்தானாதிபதி 8ம் இடத்தில் சஞ்சரிக்கும் பொழுது மறைந்த புதனால் நிறைந்த தன லாபம் கிடைக்கும். மக்கள் செல்வங்களில் வாழ்க்கையில் மகிழ்ச்சி ஏற்பட வழி வகுத்துக் கொள்வீர்கள். பூர்வீக சொத்துக்களை விற்கும் சூழ்நிலை உருவாகலாம். அதன் மூலம் வந்த தொகையைக் கொண்டு கடன் சுமையின் ஒரு பகுதியை குறைப்பீர்கள். உறவினர்களின் ஒத்துழைப்போடு ஒரு சில நல்ல காரியங்கள் இல்லத்தில் நடைபெறலாம். பணிபுரியும் இடத்தில் உங்களுக்கு மேலதிகாரிகள் கூடுதல் பொறுப்புகளை கொடுப்பர்.

## மிதுனம்

கார்த்திகை 12ம் திகதி (28/11/2022) தனுசு ராசியில் புதன் சஞ்சரிக்கிறார். உங்கள் ராசிக்கு 4ம் இடத்திற்கு அதிபதியான புதன் சப்தமஸ்தானத்திற்கு வரும் பொழுது மகிழ்ச்சி அதிகரிக்கும். ஆரோக்கியம் சீராகி ஆனந்தப்படுத்த உற்சாகத்தோடு பணி புரிவீர்கள். உள்ளத்தில் நினைத்ததை உடனடியாக செய்து முடிப்பீர்கள். தெள்ளத் தெளிவாக சிந்தித்து முடிவெடுத்து திட்டமிட்ட காரியங்களில் வெற்றி காண்பீர்கள். வீடு கட்டுவது அல்லது கட்டிய வீட்டை பழுது பார்ப்பது போன்றவற்றில் கவனம் செலுத்தும் நேரம் இது. தாயின் உடல்நலம் சீராகும். பெற்றோரின் ஒத்துழைப்போடு சில பிரச்சினைகளிலிருந்து விடுபடுவீர்கள். கல்வி சம்பந்தமாக எடுத்த முயற்சி கைகூடும். பணிபுரியும் இடத்தில் ஆதரவு உண்டு.

## கடகம்

கார்த்திகை 12ம் திகதி (28/11/2022) தனுசு ராசியில் புதன் சஞ்சரிக்கிறார். உங்கள் ராசிக்கு 3, 12 ஆகிய இடங்களுக்கு அதிபதியான புதன் 6ம் இடத்தில் சஞ்சரிக்கும் பொழுது மிகப்பெரிய மாற்றங்கள் வந்து சேரும். வெளிநாட்டில் இருந்து அழைப்புகள் வந்து சேரலாம். உத்தியோகம் சம்பந்தமாக அல்லது தொழில் ரீதியாக எடுத்த முயற்சியில் வெற்றி கிடைக்கும். எதிரிகளின் பலம் குறையும் இந்த நேரத்தில் பஞ்சாயத்துக்கள் சாதகமாக முடியும். நண்பர்கள் உங்கள் சிக்கல்கள் தீர வழிவகுத்து கொடுப்பர். பணி புரியும் இடத்தில் உங்கள் திறமைகளை கண்டு மேலதிகாரிகள் வியப்பர். இனிய சம்பவங்கள் ஏராளமாக நடைபெறும். விலகிச் சென்ற சொந்தங்கள் விரும்பி வந்திணைவர். அரசியல் மற்றும் பொதுநலத்தில் இருப்பவர்களுக்கு நல்ல பொறுப்புகளும் பதவிகளும் கிடைக்கும்.

## சிம்மம்

கார்த்திகை 12ம் திகதி (28/11/2022) தனுசு ராசியில் புதன் சஞ்சரிக்கிறார். உங்கள் ராசிக்கு தன லாபாதிபதியான புதன் பூர்வ புண்ணிய ஸ்தானத்திற்கு செல்வது ஒரு யோகமான நேரமாகும். தொட்டது துலங்கும். தொல்லைகள் அகலும். வெற்றிப் படிக்கட்டின் விளிம்பில் ஏற வாய்ப்புகள் வாசல் தேடி வரும். பிள்ளைகளின் எதிர்கால நலன் கருதி எடுத்த முயற்சி பலன் தரும். வெளிநாட்டில் உள்ள நண்பர்களின் மூலம் ஆதாய வரவு உண்டு இழந்ததை மீட்கும் பணியில் ஈடுபடுவீர்கள். உத்தியோகத்தில் மேலதிகாரிகளின் ஆதரவு கூடுதலாக கிடைக்கும்.

## கன்னி

கார்த்திகை 12ம் திகதி (28/11/2022)தனுசு ராசியில் புதன் சஞ்சரிக்கிறார். உங்கள் ராசிக்கு அதிபதியாகவும் தொழில் ஸ்தானாதிபதியாகவும் விளங்கும் புதன் 4ம் இடத்திற்கு வரும் பொழுது நல்ல வாய்ப்புகள் இல்லம் தேடிவரும். நாட்டுப்பற்று மிக்கவர்களின் ஒத்துழைப்போடு கூட்டு முயற்சியில் வெற்றி கிடைக்கும். தொழில் வளம் சிறப்பாக இருக்கும். தொல்லை தந்த எதிரிகளின் பலம் குறையும். ஆரோக்கியம் சீராக ஆகாரத்தில் கட்டுப்பாடு செலுத்துவது நல்லது. புதிய முயற்சிகளில் வெற்றி கிடைக்க மாற்று இனத்தவர்கள் ஆதரவு தருவார். உத்தியோகத்தில் சக பணியாளர்களின் மூலமாக சில தொல்லைகளை சந்திப்பீர்கள். மேலதிகாரிகள் உங்களுக்கு கூடுதல் பொறுப்பை கொடுத்து வேலைப்பளுவை அதிகரிக்க செய்வார்.

## துலாம்

கார்த்திகை 12ம் திகதி (28/11/2022) தனுசு ராசியில் புதன் சஞ்சரிக்கிறார். உங்கள் ராசிக்கு 9,12 ஆகிய இடங்களுக்கு அதிபதியான புதன் சகோதர சகாயஸ்தானத்திற்கு செல்லும் பொழுது உடன் பிறப்புகள் வழியில் விரயம் ஏற்படலாம். அவர்களுடைய திருமணம் போன்ற சுப காரியங்களை முன்னிட்டு பண உதவி செய்யும் சூழல் உருவாகும். சகோதரர்கள் கடல் தாண்டி சென்று வேலை செய்யவோ பட்டப்படிப்பு மேற்கொள்ளவோ உதவி செய்யலாம். உத்தியோகத்தில் பணி இட மாற்றம் உருவாகும். உயர் பதவியை முன்னிட்டு குடும்பத்தை விட்டு பிரிந்து சென்று தொலைதூரங்களில் பணிபுரிய நேரிடலாம்.

## விருச்சிகம்

கார்த்திகை 12ம் திகதி (28/11/2022) தனுசு ராசியில் புதன் சஞ்சரிக்கிறார். உங்கள் ராசிக்கு அட்டம ஸ்தானாதிபதியானவர் புதன். எனவே லாபாதிபதி புதன் தனஸ்தானத்துக்கு வரும் இந்த நேரம் தொழில் வளர்ச்சி மேலும் லாபம் எதிர்பார்த்ததை காட்டிலும் கூடுதலாக கிடைக்கும். புதிய ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டு மகிழ்வீர்கள். சொத்துக்கள் வாங்கும் வாய்ப்பு உண்டு. பணியில் இருப்பவர்களுக்கு நல்ல முன்னேற்றங்கள் வந்து சேரும். வெளிநாட்டு நிறுவனங்களில் இருந்து அழைப்புகள் வரலாம். நண்பர்கள் நல்ல தகவல்களை தருவர். மாமன், மைத்துனர் வழியில் ஒத்துழைப்பு கிடைக்கும். கரைந்த சேமிப்புகளை ஈடுகாட்டுவீர்கள்.

## தனுசு

கார்த்திகை 12ம் திகதி (28/11/2022) தனுசு ராசியில் புதன் சஞ்சரிக்கிறார். உங்கள் ராசிக்கு 7,10 ஆகிய இடங்களுக்கு அதிபதியான புதன் உங்கள் ராசிக்கே வருவது யோகம் தான். வாழ்க்கைத் துணை அமையாதவர்களுக்கு அதற்கான யோகம் அமையும். வாழ்க்கை துணைக்கு வேலை கிடைக்கவில்லை என்று கவலைப்பட்டவர்களுக்கு நல்ல வேலை கிடைத்து அதன் மூலம் உதிரி வருமானம் வந்து சேரும். தொழில் மாற்றங்களை செய்ய முன்வருவீர்கள். புதிய நிறுவனங்களில் பணிபுரிய அழைப்புகள் வரலாம். சுய ஜாதகம் பலம் பெற்றிருப்பவர்கள் அதை ஏற்றுக் கொள்ளலாம். பணிபுரியும் இடத்தில் மேலதிகாரிகள் உங்களுக்கு முக்கியத்துவம் கொடுப்பர். பொதுவாக இக்காலத்தில் தொட்ட காரியங்கள் யாவும் வெற்றி பெறும்.

## மகரம்

கார்த்திகை 12ம் திகதி தனுசு ராசியில் புதன் சஞ்சரிக்கிறார். உங்கள் ராசிக்கு 6,9 அதிபதியான புதன் 12ல் சஞ்சரிக்கும் இந்த நேரத்தில் விபரீத ராஜயோக அடிப்படையில் நல்ல மாற்றங்களும் வரலாம். குறிப்பாக உத்தியோகத்தில் மேலதிகாரிகளின் ஆதரவு கிடைக்கும். சலுகைகள் கிடைத்து சந்தோஷம் அடைவீர்கள். அரசியல் மற்றும் பொதுநலத்தில் இருப்பவர்களுக்கு பொறுப்புக்கள் மாற்றப்பட்டாலும் மனதிற்கு பிடித்த நல்ல பொறுப்புகள் கிடைக்கும். தந்தை வழி உறவிலிருந்து விரிசல் மறையும். மாமன், மைத்துனர் வழியில் ஏற்படும் மங்கல நிகழ்ச்சிகளை முன்னின்று நடத்துவீர்கள்.

## கும்பம்

கார்த்திகை 12ம் திகதி (28/11/2022) தனுசு ராசியில் புதன் சஞ்சரிக்கிறார். உங்கள் ராசிக்கு 5, 8 ஆகிய இடங்களுக்கு அதிபதியாக புதன் லாபஸ்தானத்தில் சஞ்சரிக்கும் இந்த நேரம் எதிர்பார்த்த காரியங்கள் எளிதில் நடைபெறும். மாமன், மைத்துனர் வழியில் ஏற்பட்ட மனக்கசப்புகள் மாறும். சேமிப்பு உயரும். செயற்பாடுகளில் வெற்றி கிடைக்கும். நம்பிக்கைகுரிய நண்பர்கள் மூலம் சில பிரச்சினைகளை தீர்த்துக் கொள்வீர்கள். அரசியல் மற்றும் பொதுநலத்தில் இருப்பவர்களுக்கு பொறுப்புக்கள் மாற்றப்படலாம். பூர்வீக சொத்துக்கள் சம்பந்தமாக நடைபெற்ற பஞ்சாயத்துக்கள் இப்பொழுது நல்ல முடிவுக்கு வரும். அண்ணன் தம்பிகள் ஆதரவோடு பிரச்சினைகளை தீர்த்துக் கொள்வீர்கள். புதிய சொத்துக்கள் வாங்கும் யோகம் உண்டு. பழைய வாகனங்கள் பழுதாகி பழுதாகி செலவு வைக்கிறது என்று கருதி புதிய வாகனங்கள் வாங்கும் முயற்சியில் ஆர்வம் கூடும்.

## மீனம்

கார்த்திகை 12ம் திகதி (28/11/2022) தனுசு ராசியில் புதன் சஞ்சரிக்கிறார். உங்கள் ராசிக்கு 4, 7 ஆகிய இடங்களுக்கு அதிபதியாக புதன் 10ம் இடத்தில் சஞ்சரிக்கும் பொழுது தொழிலை விரிவு செய்யும் முயற்சியில் ஆர்வம் காட்டுவீர்கள். கேட்ட இடத்தில் உதவிகள் கிடைக்கும். வங்கிகளின் ஒத்துழைப்பு அல்லது வள்ளல்களின் ஒத்துழைப்போடு தொழில் வளர்ச்சி காண்பீர்கள். வாடகை கட்டடத்தில் நடந்த தொழில் இனி சொந்த கட்டிடத்துக்கு மாறும். வாழ்க்கை துணைக்கு வேலை கிடைத்து மகிழ்ச்சி காண்பீர்கள். இடம் வாங்கி மனை கட்ட வேண்டும் என்ற எண்ணம் கைகூடும். விலகிச் சென்று நண்பர்கள் விரும்பி வந்து இணைவர். புதிய ஒப்பந்தங்கள் வந்து சேரும்.

# சிறுவர்களைக் குலுக்குவதும் துஷ்பிரயோகமே

(கடந்த வாரத் தொடர்)



அது மட்டுமல்லாமல் சிறுவன் மீண்டும் உயிர் பெற வேண்டும் என்று பெற்றோர்கள் வழிபாட்டில் ஈடுபட்டுள்ளனர்.

சிறுவர்களை சுற்றியுள்ளவர்கள் சிந்திக்க தவறும் பட்சத்தில் கூட இந்த உடலியல் துஷ்பிரயோகம் நடைபெறுகின்றது. இது அவர்களின் அறியாமையினால் இடம்பெறுகின்றது. நாளாந்த வாழ்க்கையில், பெற்றோர்கள் தன் பிள்ளைகளுக்கு தம் விருப்பப்படி மேற்கொள்ளும் சில செயற்பாடுகள், பிற்காலத்தில் அவர்களுக்கு எதிர்பாராத எதிர்மறை தாக்கத்தை தோற்றுவிக்கும். வளர்ந்த பிள்ளைகளுக்கு ஏற்படும் பிரச்சினைகளைப் பற்றி அனைவரும் அறிந்திருக்கலாம். அனால் மழலைகளுக்கு ஏற்படும் பிரச்சினைகளைப் பற்றி நாம் அறிந்திருக்க தவறி இருப்போம். இதில் ஒன்று தான் குழந்தைகளை குலுக்குவதன் மூலமாக ஏற்படும் நோய்க்குறி ஆகும். இது பிள்ளையின் மூளையை பாதிக்கும் ஒரு செயலாகும்.

பிள்ளைகள் வளர்ந்தவர்களில் இருந்து வேறுபட்டவர்கள். அவர்களின் உடலியல் தகுதி மற்றும் உளவியல் தகுதி என்பன முற்றான வளர்ச்சிக்கு உட்பட்டவையல்ல. அவர்களின் உடல் மென்மையானது. அது போல உடலின் உட்பாகங்களான மூளை, தசைப்பகுதி, நரம்புகள், என்புகள், மூட்டுக்கள் என்பன பலவீனமானவை. இவ்வாறிருக்க, அவர்களை வேகமாக அசைப்பதன் மூலம் அல்லது, வேகமாக குலுக்குவதன் மூலம் மேற்குறிப்பிட்ட நோய்க்குறி ஏற்படுகின்றது. இச்செயற்பாட்டின் போது பிள்ளையின் உடல் எதிர்பாராமல் தீவிர அசைவிற்கு உள்ளாகின்றது. இது பிள்ளையின் தன்னிச்சை செயற்பாடில்லாமல், மூன்றாம் நபர் செயற்பாடால் நடைபெறுகின்றது. இதன்போது பிள்ளையின் மண்டையோட்டுக்குள் உள்ள மூளையானது, பிள்ளையோடு சேர்ந்து அசைவிற்கு உள்ளாகின்றது. இவ்வேளையில், அம்மென்மையான மூளை மண்டையோட்டில் மோதி இரத்தக்கசிவு ஏற்படுகின்றது. இது பிள்ளையின் மூளை சிதைவிற்கு காரணமாக அமைகின்றது. இச்செயற்பாடு சில வளர்ந்த நாடுகளில் தண்டனைக்குரிய குற்றமாகும். எடுத்துக்காட்டாக, 2010 ஆம் ஆண்டு ஜனவரி மாதம், அமெரிக்க நீதிமன்றம், பிள்ளையை குலுக்கி அதன் மூளைக்கு பாதிப்பு ஏற்படும் வண்ணம் செயற்பட்ட பராமரிப்பாளர் ஒருவருக்கு பத்து வருடங்களும் ஆறு மாதங்களும் கடுங்காவல் தண்டனை விதித்துள்ளது. இதை தொடர்ந்து நீதிமன்றத்தில் குறித்த பிள்ளையின் தந்தை “இது எனது மகனுக்கும், என் மனைவிக்கும், எனக்கும், எங்கள் குடும்பத்திற்கும் கிடைத்த ஆயுள் தண்டனையாகும்" என்று கூறியிருந்தார்.

சில நேரங்களில் பிள்ளைகள் அழுவதற்கான காரணங்களை கண்டறிய முடியாது. அவ் வேளைகளில் “குழந்தைகள் இதற்காகத்தான் அழுகின்றார்களோ!" என்று பெரியவர்களே ஒரு முடிவிற்கு வருவார்கள். இப்படியான சந்தர்ப்பங்களில், அவ் அழுகையை நிறுத்துவதற்கு பிள்ளையை சிரிக்க வைக்க முயலுவர். இதன் போது அவர்களை தூக்கி குலுக்குதல், அசைத்தல், எறிந்து பிடித்தல் போன்ற செயற்பாடுகளில் ஈடுபடுவார்கள். இவ்வாறான நேரங்களில், இந்த நோய்க்குறி நிகழ்வதற்கான வாய்ப்புக்கள் அதிகமாக காணப்படுகின்றது. அது மட்டுமல்லாமல், சில நேரங்களில் அவர்களின் அழுகை பிறருக்கு கோபத்தை விளைவிக்கும். அப்பொழுது அக் கோபத்தை தணிக்க பிள்ளையை இறுக்கப் பற்றுதல், தலையில் அடிபட வைத்தல், மற்றும் வேகமாக நகர்த்துதல் போன்ற தீங்கு விளைவிக்கும் செயற்பாடுகளில் அறியாமல் ஈடுபடுவர். இந்த செயல், பிள்ளையின் மூளையில் இரத்தப்போக்கு, சிராய்ப்பு, வீக்கம் என்பவற்றை தோற்றுவிக்கும். இதன் உடனடி வெளிப்பாடாக, சில சமயங்களில் காது, வாய், மூக்கு வழியாக இரத்தம் வெளியேறும். இந்த நேரத்தில் மருத்துவரின் அவசர உதவி இன்றியமையாததாகும். அனால் அநேகமான நேரங்களில் இதன் வெளிப்பாடானது காலம் கடந்த பின்பே காண்பிக்கப்படும். அதாவது, மனவளர்ச்சிக் குறைபாடு, குன்றிய உடல் உறுப்புக்கள், மூளையில் ஏற்படும் இரசாயன மாற்றம், ஹோர்மோன் சார் பிரச்சினைகள் போன்றவை பிள்ளையை ஆட்கொள்ளும்.

இந்த நோய்க்குறி, ஒருவரில் இருந்து மற்றவருக்கு வேறுபட்டது. இதை அறிந்து கொள்ள சில அறிகுறிகள் காணப்படுகின்றன. அவையாவன, திடீர் காச்சல், பிள்ளையின் தோல் வெளிறுதல் அல்லது நீல நிறமாதல், உணர்விழந்த முழு மயக்க நிலை (கோமா), முடக்குவாதம், சுவாசிப்பதில் சிரமம், அதிகப்படியான எரிச்சல், விழித்திருப்பதில் சிரமம், உணவு உண்பதில் சிரமம் மற்றும் சில பிள்ளைகளுக்கு உடல்நல பிரச்சினைகள் என்பன ஏற்படும். குறிப்பாக ஊட்டச்சத்து குறைபாடுகள் அதிகரிக்கும். இவ்வாறான அறிகுறிகள் உங்கள் பிள்ளைகளுக்கு தென்பட்டாலோ அல்லது பிள்ளையின் முதுகெலும்பில் ஏதேனும் பிரச்சினைகள் ஏற்பட்டது போல உணர்ந்தாலோ, பிள்ளையின் கழுத்து மற்றும் தலையின் நிலை மாறாமல் பிள்ளை வசதியாக அசைகின்றதா என்பதை உறுதிசெய்து கொள்ளுங்கள். இந்நிலை, மாற்றம் பெற்றால் உடனடியாக மருத்துவரின் உதவியை நாடுங்கள்.

அமெரிக்காவில் ஒவ்வொரு வருடமும் 1200 தொடக்கம் 1400 வரையான பிள்ளைகள் உடல் ரீதியான துஷ்பிரயோகம் காரணமாக தலையில் காயம் அடைகின்றனர். அதில் பெரும்பாலானோர் ஒரு வயதிற்கு உட்பட்டவர்கள். இவர்களுள், 200க்கும் அதிகமான பிள்ளைகளுக்கு இந் நோய்க்குறி காணப்படலாம் என்று, அந்த நாட்டு சட்ட அமுலாக்க குழுக்கள் எதிர்வுகூறியுள்ளன. பிள்ளை வளர்ப்பு என்பது ஒரு கலை. இதை செவ்வனே புரிய, பெற்றோரின் ஆரோக்கியமான மனநலம் மற்றும் பிள்ளைகள் மீதான கவனிப்பு என்பன இன்றியமையாததாகும். சில சமயங்களில், பெற்றோரின் மனதில் எழும் கோபம், வெறுப்பு, அலட்சியம் போன்ற எதிர்மறை உணர்வுகள், உறையும் இடங்களாக சிறுவர்கள் காணப்படுகின்றார்கள். அது அவர்களின் வளர்ச்சி பாதையில் எதிர்மறையாக தாக்கம் செலுத்துவதோடு, அவர்களின் எதிர்காலத்தையும் சீர்குலைத்து விடுகின்றது. சிறுவர்களை அன்போடும், பணிவோடும், அவர்களது சுய மரியாதைக்கு களங்கம் விளைவிக்கா வண்ணமும் நடத்துவதன் மூலம், அவர்களின் ஒளிமயமான எதிர்காலத்திற்கு நாம் உறுதுணையாக விளங்குவோம் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை. ஆகவே, அறிந்தவற்றை அலட்சியப்படுத்தாமல் சிந்தித்து செயலாற்றுவது எம் அனைவரது முக்கிய கடமையாகும்.



**விவேதா குணரெட்ணம்,**
திட்ட அலுவலர்,
எங்குமுள்ள சிறுவர்களையும் சூழலையும் பாதுகாக்கும் அமைப்பு

# இடர்ப்பாடுகள் மிகுந்த சூழலிலும் ஆசிரிய பணியாற்றிய வையந்திமாலா

அது ஒரு பின்தங்கிய விவசாயக் கிராமம். பெண்கள் வெளியில் சுதந்திரமாக நடமாட முடியாத ஒரு சூழல். பல்வேறு சமூகக் கட்டுப்பாடுகள் நடைமுறையில் இருந்த சமூகச் செயற்பாட்டு நிலை. அந்தச் சூழலில் கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்த வையந்திமாலா யாழ் தொழில்நுட்பக் கல்லூரியிலும், திருநெல்வேலி விவசாயக் கல்லூரியிலும் இணைந்து டிப்ளோமா சான்றிதழ்களைப் பெற்றார்.



கட்டுப்பாடுகளுக்கு மத்தியில் வையந்திமாலா தனது கல்வியைத் தொடர்வதற்கு இலவசக் கல்வி முறை பேருதவி புரிந்தது. அத்துடன் அவரது தந்தையாரின் இடதுசாரிக் கொள்கை வழிச் செயற்பாடுகளும் துணையாக அமைந்திருந்தன. சிறு வயதிலேயே பிறருக்குச் சேவையாற்ற வேண்டும் என்பது வையந்திமாலாவின் உள்ளக்கிடக்கை. கல்வி கற்று அரச பணியில் இணைய வேண்டும். அதன் ஊடாக மக்களுக்கு சேவையாற்ற வேண்டும் என்பதை அவர் தனது இலட்சியமாகக் கொண்டிருந்தார். அவரது கடின உழைப்பின் மூலம் சாத்தியமானது. ஆசிரிய பணியில் 37 வருடங்களைப் பூர்த்தி செய்து இப்போது அவர் பணி ஓய்வ பெறுகின்றார். யாழ் மாவட்டத்தில் மட்டுமல்லாமல் நாடளாவிய ரீதியில் இடதுசாரிகள் மத்தியில் சூடாமணி என்று நன்கு அறியப்பட்டிருந்த கணபதிப்பிள்ளை – தங்கம் ஆகியோரின் மூத்த புதல்வியாக 1962 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 28 ஆம் திகதி பிறந்த வையந்திமாலா மலையகத்திலும் வடமாகாணத்திலும் தனது ஆசிரிய சேவையை ஆற்றியுள்ளார். அவருக்கு நான்கு சகோதரர்கள். குடும்பத்தில் ஒரேயொரு மகளாகத் திகழ்ந்த வையந்திமாலாவின் கல்வி மற்றும் ஆசிரிய பணிக்கு அவரது பெற்றோரும் சகோதரர்களும் உறுதுணையாக இருந்து ஊக்கமளித்தனர்.

பொதுச்சேவையாற்ற வேண்டும் என்ற வையந்திமாலாவின் விருப்பத்திற்கமைய 1985ஆம் ஆண்டு நுவரெலியா மாவட்டத்தில் இராகலை கனிஸ்ட தமிழ் வித்தியாலயத்தில் ஆசிரிய நியமனம் கிடைத்தது. நாட்டில் அரசியல் ரீதியான பதற்றமான சூழல் நிலவிய அந்தத் தருணத்தில் வடக்கில் இருந்து தென்னிலங்கைக்குச் சென்று பணியாற்றுவதற்குப் பலரும் அச்சமடைந்திருந்தனர். அப்போது துணிவுடன் அவர் தனது முதல் ஆசிரிய நியமனத்தை ஏற்று இராகலைக்குச் சென்று பணியாற்றினார்.

அங்கு பணியாற்றிய ஏழு வருடங்களில் நாட்டு நிலைமைகள் மேலும் மேலும் மோசமடைந்த போதிலும் சொந்த மாவட்டமாகிய யாழ்ப்பாணத்திற்கு இடமாற்றம் கேட்டு அவர் விண்ணப்பிக்கவே இல்லை. கோப்பாய் ஆசிரிய பயற்சிக் கலாசாலையில் ஆசிரிய பயிற்சி பெற்ற பின்னரும், பின்தங்கிய மலையகப் பிரதேசத்தில் சேவை புரிய வேண்டும் என்ற உத்வேகத்துடன் அவர் இராகலை வித்தியாலயத்திலேயே பணியாற்றினார். போக்குவரத்து கஷ்டங்கள் மிகுந்த சூழலில் அவரது பணி அங்கு தடையின்றி தொடர்ந்தது. அவரிடம் அங்கு கல்வி கற்ற பலரும் பின்னாளில் வாழ்க்கையில் முன்னேறி தமது சமூகத்திற்குச் சிறந்த குடிமக்களாகத் திகழ்கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

கொட்டடி நமசிவாயம் வித்தியாலயத்திற்கு 1993 ஆம் ஆண்டு இடமாற்றம் பெற்று வந்தபோதிலும் அவரால் நிம்மதியாக அங்கு பணியாற்ற முடியாமல் போனது. தீவிரமடைந்திருந்த ஆயுத மோதல்களின்போது இடம்பெற்ற விமானக் குண்டுத் தாக்குதல் ஒன்றில் அவருடைய வீடு நிர்மூலமாகியது. அவரது தாயார் ஒரு காலை இழந்தார். வையந்திமாலாவும் படுகாயமடைந்தார். உயிர்ப்பாதுகாப்புக்காக ஊரே இடம்பெயர்ந்தது. பல இடங்களிலும் இடம்பெயர்ந்து தாயாரின் சிகிச்சைக்காக அவரது குடும்பம் வவுனியாவில் தஞ்சம் புகுந்தது. வவுனியா சைவப்பிரகாச மகளிர் கல்லூரியில் 1996ஆம் ஆண்டு இணைந்து பணியாற்றுவதற்கான நியமனம் கிடைத்தபோது, அங்கு தேவைக்கு ஏற்ப ஆசிரியர்கள் இருந்ததனால் அந்த வாய்ப்பும் கைவிட்டுச் சென்றுவிடுமோ என்று அஞ்ச வேண்டிய நிலைமை ஏற்பட்டிருந்தது.

ஆயினும் வையந்திமாலாவின் கற்பித்தல் திறனையும், கற்பிப்பதில் அவர் கொண்டிருந்த அர்ப்பணிப்பையும் அவதானித்த அக் கல்லூரியின் அப்போதைய அதிபர் திருமதி நா.மாணிக்கவாசகம் சிங்களம், செய்முறை தொழில்நுட்பம் ஆகிய பாடங்களை மாணவர்களுக்குப் போதிப்பதற்கு அவரைப் பயன்படுத்திக் கொண்டார். வையந்திமாலா மனைப்பொருளியல் பாடத்துடன் இணைப்பாட விதானச் செயற்பாடுகளில் அதிக ஈடுபாடு கொண்டு மாணவர்களின் திறன்களைப் பிரகாசிக்கச் செய்தார். அவரது பணி 2004ஆம் ஆண்டு வரையில் அங்கு நீடித்திருந்தது.

அதன் பின்னர் வவுனியா கூமாங்குளம் சித்திவிநாயகர் வித்தியாலயத்திற்கு இடமாற்றம் பெற்ற அவர் அங்கு 17 வருடங்கள் பணியாற்றி இப்போது ஆசிரியத் தொழிலில் இருந்து பணி ஓய்வு பெறுகின்றார். அங்கு ஆசிரியையாக மட்டுமல்லாமல் பிரதி அதிபர், முகாமைத்துவக் குழுச் செயலாளர் ஆகிய பொறுப்புக்களுடன் பாடசாலையை சமூகத்துடன் இணைத்து சமூக சேவைகளிலும் ஈடுபாடு காட்டியிருந்தார்.

இவரது தலைமையில் இடம்பெற்ற பாடசாலையின் பண்புசார் விருத்திச் செயற்பாட்டிற்காக 2017ஆம் ஆண்டு வடமாகாண அமைச்சு விருது வழங்கியது. அத்துடன் அதே ஆண்டில் கல்வி அமைச்சு சிறந்த ஆசிரியருக்கான குருபிரதீபா பிரபா விருது வழங்கி அவரைக் கௌரவித்தது.

நுவரெலியா மாவட்டம் தலவாக்கொல்லையைச் சேர்ந்த ஆசிரியர் சுந்தரராஜை மணம் புரிந்து இல்லற வாழ்வில் சோபித்த வையந்திமாலா ஓர் ஆணும் ஒரு பெண்ணுமாக இரண்டு குழந்தைகளின் அன்னையாகவும் குடும்ப வாழ்வில் பிரகாசிக்கின்றார். அவரது பிள்ளைகள் இருவரும் பல்கலைக்கழகங்களில் கல்வி பயல்கின்றனர். பணி ஓய்வு காலத்திலும் அவர் குடும்பத்துக்கான கடமைகளுடன் ஆசிரியம் சார்ந்த சமூகப்பணிகளிலும் ஈடுபட வேண்டும். அதன் ஊடாகவும் அவரது சமூகத்துக்கான சேவை தொடர வேண்டும். இடர்ப்பாடுகள் மிகுந்த சூழலிலும் ஆசிரிய பணியாற்றியவர் வையந்திமாலா.

பி.மாணிக்கவாசகம் ...




காலையில் எழுந்ததும் வாசல் கேட்டைத் திறந்தான்.

அவனது வாசல் கேட் பிரமாண்டமான கேரஜ் கதவு. ஒரு பெரிய வாகனம் உள்ளே நுழையும் வகையில் இருந்தது.

அவனது வீடு ஒரு ஒழுங்கையில் அமைந்திருந்தது. அந்த ஒழுங்கை குறுகிய பாதை கொண்டது. அடிக்கடி வாகனங்கள் இடதும் வலதுமாக வேகமாகப் போய்க் கொண்டிருந்தன.

அந்தப் பிரமாண்ட வாசலில் அமர்ந்து இவனுக்குச் சமீபத்தில் இணைய வழியாக வந்திருந்த PDF சஞ்சிகைகளை படிக்க ஆரம்பித்தான்.

அப்பொழுதுதான் அந்தப் பிரமாண்ட வாசல் வழியாக வெள்ளைப் பூனைக் குட்டி ஒன்று இவன் வீட்டுக்குள் நுழைய முயற்சித்தது.

இவன் வீட்டு ஆட்களுக்கு செல்லப் பிராணிகளைப் பிடிக்காது, இவனுக்கும் சரி, இவனது வீட்டு ஆட்களுக்கும் சரி, அவற்றின் அசுத்தம் பிடிப்பதில்லை. அவற்றை வீட்டுக்குள் எடுத்தால் வீடு அசுத்தமாகி விடும் என்ற ஒரு எண்ணம்.

மைனா, கிளி போன்ற பறவைகளைக் கூண்டில் அடைத்து வைத்து வளர்ப்பது பாவமான செயல் என இவனது பாட்டி சொல்வாள்.

அது மட்டுமல்லாமல் இவனுக்குப் பத்து வயதாக இருந்தபொழுது கூட்டில் அடைத்து வைத்து அதன் சிறகுகள் வெட்டிய நிலையில், ஒரு கிளியை வளர்த்து வந்தார்கள், இவனது வீட்டார் வீட்டை நன்றாக முடி, வெளியே போகும் பொழுதெலாம், அதன் கூண்டை திறந்து விடுவார்கள். அது வீடு முழுதும் உலாவும். இப்படித்தான் ஒரு நாள் கிளியை வீட்டில் உலாவ விட்டு கதவுகளையும் ஜன்னல்களையும் இறுகச் சாத்திவிட்டு அவர்கள் வெளியே போய் வீடு திரும்பி வந்த பார்த்தபொழுது கிளியைக் காணவில்லை. இவர்களுக்குப் பெரும் ஆச்சரியமாக இருந்தது.

இவர்களின் வீட்டில் பூனை இருக்கவில்லை, கிளி வளர்ப்போர் பூனை விஷயத்தில் கவனமாக இருப்பார்கள். பாம்புக்கும் கீரிக்கும் ஒத்துவராதது போல், கிளிக்கும் பூனைக்கும் ஒத்துவராது என்று சொல்வார்கள். பூனைகள் கிளிகளைக் கவ்விக்கொண்டு சென்று விடும் என்றும் சொல்வார்கள், அவர்கள் வீட்டுச் சூழலில் பூனை இல்லாமல் இருந்தற்கு காரணம் உம்மாதான்.

முன்பு இருந்த வீட்டில் வசித்தபொழுது இவனது இரண்டாவது தம்பி ஒரு பூனை வளர்த்து வந்தான். ஒருநாள் அந்தப் பூனை இவனது கடைசி தம்பியைப் பிறாண்டி விட்டது. அப்பொழுது அவனுக்கு ரொம்வும் சின்ன வயது. அவன் மிகவும் பயந்து விட்டான், காய்ச்சல் வேறு வந்து விட்டது. இரண்டாவது தம்பிக்கு உம்மா கடுமையாகச் சொல்லி விட்டார். அந்தப் பூனையை எங்காவது கொண்டு விடச் சொன்னதோடு இனி யாரும் வீட்டில் பூனை வளர்க்கக் கூடாது என்று கடுமையாகச் சொல்லி விட்டார்.

அதனால் கிளி காணாமல் போன வீட்டில் பூனை ஒன்று வரும் சாத்தியம் இல்லாமல் போனது. ஆனால் கிளி காணாமல் போன வீட்டின் பின்புறத்தில் ஒரு மதில் சுவர் இருந்தது, அந்த மதில் சுவரில் பூனை ஒன்று போவதை இவன் அடிக்கடி கண்டிருக்கிறான்

முன், பின் பக்க கதவுகள், ஜன்னல்கள் இறுகி மூடி இருந்த நிலையில், அந்தப் பூனையும் வீட்டுக்குள் வந்திருக்க முடியாது.

பின் கிளி எங்கே போனது? எப்படி போனது என்ற கேள்விகள் வீட்டார் மனதைக் குடைத்தன. இன்று வரை அந்தக் கேள்விகளுக்கு யாருக்கும் பதில் கிடைக்கவில்லை.

இன்று அந்தப் பூனைக் குட்டியைப் பார்த்தபொழுது, இவனுக்கு இரண்டாவது பேத்திதான் நினைவுக்கு வந்தாள். அவள் வாசலில் பூனைகளைக் கண்டால் பூஸ், பூஸ் எனக் கைகளை ஆட்டி ஆட்டித் துள்ளுவாள். இவன் அவளைப் பூஸ் குட்டி என்றுதான் செல்லமாகக் கொஞ்சுவான்.

அதனால் பூனைக் குட்டிகளை கண்டால் இவனுக்குத் தனியான வாஞ்சனை.

இப்பொழுது வீட்டுக்குள் வர முயற்சித்த அந்தப் பூனைக் குட்டியையும் கனிவுடன் பார்த்தான். அதை வீட்டுக்குள் கொண்டுவர முடியாமல் போனாலும், பாதையில் போகும் வாகனங்களால் அதற்கு ஏதாவது ஆபத்து வந்து விடக் கூடாது என்ற கவலை இவனுக்குள் தொற்றிக் கொண்டது. அதனால், அதனை நடுரோட்டில் விடக் கூடாது என்பதில் கவனமாக இருந்தான். ஆனால் இவனுக்கு ஒரு பிரச்சினை இருந்தது. வீட்டுப் பிராணிகளைத் தூக்குவது இவனுக்கு அலர்ஜி. அவற்றின் தோலின் மிருதுத் தன்மைதான் அதற்குக் காரணமாக இருந்தது. அப்படிதான் ஒரு முறை ஒரு பூனையைத் தூக்கிய பொழுது இவனது உடம்பில் ஒரு வகையான சிலிர்ப்பு ஏற்பட்டது. அதற்குப் பிறகு அவன் பிராணிகளைத் தொடுவதே இல்லை, இப்பொழுது அந்தப் பூனைக் குட்டி வீட்டுக்குள் வர முயற்சித்தும், அதனை வெளியே விரட்டவும் மனம் இல்லாமல் இருந்தான், அதற்கு வீதியால் போகும் வாகனங்களால் ஏதாவது ஆபத்து வந்து விடுமோ? என்ற கவலை இவனுக்கு, அதை வீட்டுக்குள் எடுக்கா விட்டாலும், அதற்கு ஏதாவது நடந்து விடக் கூடாது என்ற அக்கறையில் வீட்டுக்குப் பக்கத்தில் அமைந்திருந்த மணல் மேட்டில் வைக்க நினைத்தான். ஆனால் அவனுக்கு அதைத் தூக்குவதில் உள்ள ஒவ்வாமையின் காரணமாக அதை ஏதோ ஒன்றினால் தள்ளி, அதை அந்த மேட்டில் இருந்து ஒதுக்கிவிட நினைத்தான். அப்பொழுது இவனுக்கு ஒரு தும்புத்தடி கிடைத்தது. அதனைக் கொண்டு மெதுவாகப் பூனைக்குட்டியை அந்த மணல் மேட்டை நோக்கி நகர்த்த முனைந்தான்.

தும்புத்தடியில் இணைந்திருந்த தும்பின் மிருதுவில் கவரப்பட்டு அதில் ஏறி விளையாடத் தொடங்கியது பூனைக் குட்டி. அப்படியே மணல் மேட்டில் அதை விட்டதும் அந்த மேட்டில், அங்கும் இங்கும் அது ஓடி விளையாடியது.

இவன் ஆறுதல் அடைந்தவனாகக் கேட்டினுள் அமர்ந்து படிக்க வேண்டிய பிடிஎப் வடிவ புத்தகங்களை டெப்பில் தொடர்ந்து வாசிக்கத் தொடங்கினான்,

சிறிது நேரத்தில் அந்த வழியாக அந்தச் சின்னப் பூனையின் ஒத்த நிறத்தில் ஒரு பெரிய பூனை போனது. ஒரு வேளை குட்டிப் பூனையின் தாய்ப் பூனையோ, தந்தைப் பூனையோ என்று தெரியவில்லை. அதைக் கண்டதும் மணல் மேட்டில் விளையாடிக் கொண்டிருந்த குட்டிப்பூனை துள்ளிக் குதித்துக் கொண்டு அந்தப் பூனையுடன் இணைந்து கொண்டது. இவனுக்குச் சிறிது ஆறுதல். அது தன் குடும்பத்துடன் அல்லது தன் இனத்துடன் இணைத்துக் கொண்டது என்று.

இப்பொழுது பூனைக்குட்டி பற்றிய கவலை இல்லாமல் தொடர்ந்து வாசிக்க ஆரம்பித்தான்.

வாசித்துக் கொண்டிருந்தபொழுது சிறிது நேரத்தில் அந்தப் பூனைக்குட்டி அவனது வீட்டு கேட்டுக்கு அருகே வந்து நின்றது. இவனுக்கு ஏமாற்றமாக இருந்தது. அந்தப் பெரிய பூனை இதன் உறவாக இருக்காதோ? அல்லது அதன் உறவுப் பூனையாக இருந்தும் 'உன் பாதுகாப்பை இனி நீயே பார்த்துக்கொள்' என்று பெரிய பூனை அதை விரட்டி விட்டதோ? என்ற மாதிரியான கற்பனை எல்லாம் இவனுக்குள் எழுந்தது.

இனி இதனை வீட்டுக்கு முன்னால் அமைந்திருந்த மணல் மேட்டில் விடுவதும் பாதுகாப்பானது அல்ல எனத் தோன்றியது. அதன் பாதுகாப்புக்கு இனி என்ன செய்வது? என யோசித்தான்.

அப்பொழுது அத்தெரு வழியாக நடுத்தர வயதான குப்பை அகற்றும் ஒரு தொழிலாளி மெதுவாக வந்துகொண்டிருந்தார்.

இவனுக்கு ஒரு யோசனை தோன்றியது. அவரைக் கூப்பிட்டு அவருக்கு எவ்வளவாவது பணம் கொடுத்து, இந்தப் பூனைக்குட்டியை எங்கேயாவது பாதுகாப்பான இடத்தில் விடச் சொல்லிக்கேட்டுப் பார்ப்பது என்று எண்ணி, அவரைக் கூப்பிட்டு சொன்னான். மெதுவாக வந்த அவர் தனக்கு அவசரமான வேலை இருக்கிறது என்று வெற்றிலை குதப்பியவாறே சொல்லிப் போய் விட்டார்.

அவருடன் பேசிக் கொண்டிருந்த பொழுது இவன் எதிர்ப்பாராத வகையில் பூனைக்குட்டி துள்ளிக் குதித்து எதிர் வீட்டுக்குள் போய்விட்டது.

அப்பொழுது எதிர்வீட்டுச் சின்னவன் வேலைக்குப் போவதற்காகக் கேட்டின் உள்ளே நிறுத்தி வைத்திருந்த மேட்டார் சைக்கிளை ஸ்டார்ட் செய்தவாறே "கேட்டுக்குள் பூனைக்குட்டி ஒன்று வந்திருப்பதாக" குரல் கொடுத்து விட்டு வேகமாகப் போய்விட்டான்.

அவனது குரல் கேட்டு, அந்த வீட்டிலிருந்து ஒருவர் வெளியே வந்தார். அவர் வெற்று உடம்புடன் வந்தது அவர் பரபரப்புடன் இருப்பதை எடுத்துக் காட்டியது, அப்படியே வெளியே வந்தவர் என்ன நினைத்தாரோ தெரியவில்லை, பக்கத்து வீட்டில் மேல் மாடியில் வசித்தவரின் அழைப்பு மணியை அழுத்தினார். பூனைக்குட்டி அவரது கால்களைச் சுற்றி விளையாடிக் கொண்டிருந்தது. அழைப்புமணி கேட்டு அவரது பக்கத்து வீட்டின் மேல் மாடியிலிருந்து ஒரு பெண்மணி எட்டிப் பார்த்தார். அவரிடம் பூனையைக் காட்டி இது உங்கள் பூனையா? எனக் கேட்டார். அதற்கு அவர் இல்லை என்று ஒரு வார்த்தையில் சொல்லி உள்ளே போய் விட்டார்,

அவருக்கு இந்தப் பூனைக்குட்டியை என்ன செய்வது? என்று தெரியவில்லை, தூக்க கலக்கம் வேறு அவரது முகத்தில் தெரிந்தது. மெதுவாக வீட்டு கேட்டை நோக்கிப் போனார். அவரைத் தொடர்ந்து பூனைக்குட்டியும் கேட்டுக்குள் போக எத்தனித்தது, மெதுவாகக் காலால் அதைக் கேட்டுக்கு வெளியே தள்ளி, கேட் கதவை மூடி வீட்டுக்குள் போய் விட்டார்,

இவனுக்கு இந்தக் பூனைக்குட்டியைப் பற்றிய கவலை தொடர்ந்தது.

அப்பொழுது அந்தத் தெரு வழியாக ஓர் இளைஞன் வந்தான். அவன் இவனிடம் யாசகம் கேட்டான். அந்த இளைஞன் இவன் அருகே வந்த பொழுதுதான், இவன் அவன் முகத்தைச் சரியாகப் பார்த்தான். அந்த இளைஞன் போதை வஸ்து பாவிப்பவன் போல் தோன்றியது. ஆனால் அதைப் பற்றிக் கேட்டால் உண்மையைச் சொல்வானா? என்ற ஐயமும் ஏற்பட்டது.

பொதுவாக இவனிடம் ஒரு பழக்கம் இருந்தது. போதை வஸ்து பாவனையாளர் என்று தெரிந்தால் அவர்களுக்குக் காசு கொடுக்கமாட்டான். சாப்பிடக் கேட்டால் வீட்டில் ஏதாவது சாப்பாடு இருந்தால் கொடுத்து அனுப்புவான். ஆனால், இன்று இங்கு வந்து நின்ற இளைஞன் போதைவஸ்து பாவிப்பவன் போல் தெரிந்தாலும், அவனைப் பார்த்து, "கொஞ்சம் நில்" என்று சொல்லி வீட்டுக்குள் சென்று ஒரு நூறு ரூபா நோட்டை எடுத்துக் கொடுத்தான். பூனைக்குட்டியைக் காட்டி இதைப் பாதுகாப்பான இடத்தில் விட்டு விடு என்று சொல்லி அவன் கையில் அந்த நூரு ரூபாய் நோட்டைத் திணித்தான்.

அவனும் "சரிங்க" என்றான். அவன் முகத்தில் சந்தோஷம் தெரிந்தது. நூறு ரூபாய் கிடைத்த சந்தோஷம். நூறு ரூபாவை எடுத்துக் கொண்டவன் இவன் காட்டிய முன் வீட்டு கேட் அருகே இருந்த பூனைக் குட்டியை தூக்கி தெருவின் மேட்டுப் பகுதியை நோக்கி நகர்ந்தான்.

இவன் மனம் அமைதி அடைந்தது.

தொடர்ந்து வாசிப்பில் ஈடுபட்டான்.

ஆனால் மனதுக்குள் ஒரு குற்ற உணர்ச்சி. அந்தப் பூனைக்குட்டியை, அது வாழ்ந்த சூழலை விட்டு வலிந்து காணாமல் போகச் செய்து விட்டோமோ? என்ற உணர்வும் சஞ்சலமும் எழுந்தது. அத்தோடு, ஒரு சந்தேகமும் எழுந்தது.

இவன் கேட்டை மூடி உள்ளே போனதும், மீண்டும் தன்னிடம் 100 ரூபாய் கறக்க, இவன் வாசலில் இல்லாதபொழுது, அந்தப் பூனைக்குட்டியை அந்த இளைஞன் போட்டுவிட்டுப் போய் விடுவானோ? என்ற சந்தேகம் எழுந்ததோடு, இருந்த சூழலைத் தேடி மீண்டும் அந்தப் பூனைக்குட்டி வந்து விடுமோ என்ற சந்தேகமும் எழுந்தது.


வாசிப்பை நிறுத்தி விட்டு உள்ளே போனான்.

பகற் பொழுது. கடுமையான வெயில்.

இவன் கடைக்குப் போவதற்காகக் கேட்டைத் திறந்து வெளியே வந்தபொழுது மூலையில் அமைதியாக உறங்கிக் கொண்டிருந்தது அதே வெள்ளை நிற குட்டிப் பூனை.

மாலையில் கடையிலிந்து திரும்பிய பொழுது, கேட் அருகே இருந்த அந்தப் பூனைக்குட்டியைக் காணவில்லை,

## மஞ்சரி குறுக்கெழுத்து போட்டி
### இல: 46




திரு/திருமதி.செல்வி ..........................................
(ஆங்கிலத்தில் எழுதுவது விரும்பத்தக்கது)
முகவரி ..........................................
..........................................
..........................................

.................... ....................
திகதி கையொப்பம்

மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி
போட்டி இல. 45
த.பெ.இல.834. கொழும்பு

## மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி இல : 46

**இடமிருந்து வலம்**

01. வியப்பு தரும் வகையிலான சிறப்பு
05. பெரும் கீர்த்தி
07. இதுவும் ஒரு தானியம் ( குழம்பியுள்ளது)
08. பயம்
09. உணவருந்தப் பயன்படும் கை இந்தப் பக்கத்தில்தான் உள்ளது. (குழம்பியுள்ளது)
11. வயோதிபம்
13. ஒரு முழுமையான அமைப்பின் பகுதி (திரும்பியுள்ளது)
16. பெண்களின் கைவிரல்களுக்கு உவமையாக சொல்லப்படும் பூ (குழம்பியுள்ளது)
17. தலைமுடியின் நிறமாற்றம்
19. அன்னை திரும்பிவிட்டாள்
20. வேகத்தையும் குறிக்கும் ( திரும்பியுள்ளது)
21. திருமண சடங்கின்போது தேவையானது
23. சுயஉணர்வை இழந்துவிடும் வகையிலான நிலை
25. நிலைமையை தெளிவாக அறிந்துசெயற்படும் அறிவையுடையவர்.
26. காய்ச்சல் (குழம்பியுள்ளது)

**மேலிருந்து கீழ்**

01. உருவமற்றது.
02. கறிவகைப் பயிர்
03. சிரசு
04. வதனம் (தலைகீழ்)
05. சக்திவாய்ந்த தன்மை
06. வெற்றிடம்
10. ஒரு பொருளின் மிகச் சிறிய பகுதி
12. முன்னைய காலக் கிணற்றிலிருந்து நீர் எடுக்கப் பயன்பட்டது.
14. ஒரு பாட்டின் இறுதிச் சொல் அடுத்த பாட்டின் ஆரம்பமாக அமைந்திருப்பது.
15. ஒருவகை பாம்பினம்
17. ஒரு நாட்டின் மக்கள் நிறைந்து வசதியாக வாழும் இடம்
18. நிறைந்த அறிவாற்றல் கொண்டவர்.
20. மூலப் பதிவிலிருந்த எடுக்கப்பட்ட நகல் (குழம்பியுள்ளது)
22. வீடு அல்லது காணிகளின் பாதுகாப்புக்காக அமைக்கப்படுவது (தலைகீழ்)
24. பாரம் கவிழ்ந்து விட்டது.

## மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி இல : 45

### விடைகள்

**இடமிருந்து வலம்**

01. சௌபாக்கியம் 07. கடை 8. மரவள்ளி
10. வாரி 11. மன்னன் 12. கவி
14. நாகம் 18. வதை 19 . வலதுசாரி
20. கன்னி 21. சாது 23. இம்மை
24. காலை

**மேலிருந்து கீழ்**

01. சௌகரியம் 02. பாவாடை 03. கிரமம்
04. யமன் 05. வனம் 06. தூளி
9. கள்வன் 13. விதை 15. கலகம்
16. நாவன்மை 17. சம்சாரி 20. இனி
21. சாலை 22. காது

### பரிசு பெறுவோர் விபரம்

முதல்பரிசு (ரூ 500/)
**கஸ்தூரி கலியப்பெருமாள்**
2/27A வெலிகந்தை,
கண்டி

இரண்டாம்பரிசு (ரூ 350/)
**எம்.வி.எப். பசீனா**
71, மரீக்கார் வீதி,
களுத்துறை தெற்கு, களுத்துறை

மூன்றாம் பரிசு (ரூ 150/)
**ஜீ. துவாரகன்**
33 A, சர்வோதய வீதி
பெரியநீலாவணை 01

## மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி இல : 45

### பாராட்டு பெறுவோர்

**1. ரி.எஸ்.எம். ஹிபத்துல் கரீம்**
வெலிகம

**2. எஸ். கனகரட்ணம்**
திருகோணமலை

**3. எம். ஜனிஸ்காந்த்**
கல்முனை

**4. வேல்நாயகன் ராஜேந்திரன்**
காரைதீவு

**5. எம்.டபிள்யூ.எம். நவாஸ்**
துல்ஹிரிய

**6. இல்யாஸ் தாஸிம்**
பாணந்துறை

**7. சாஹிரா பானு**
புத்தளம்

**8. எம்.சி.எப். சிம்லா**
உக்குவளை

**9. கே.புண்ணியநேசன்**
காரைதீவு

**10. மல்லிகாதேவி பத்மநாதன்**
பசறை

★★★

SMIB

அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கி

## 2023ஆம் ஆண்டிற்கான வழங்குநர்களைப் பதிவு செய்தல்

2023 ஆண்டிற்கான வழங்குநர்களைப் பதிவு செய்வதற்கான மூடப்படும் திகதி 2022 டிசம்பர் 09ம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது. விண்ணப்பங்கள் மற்றும் விபரங்களை SMIB இணையதளம் www.smib.lk அல்லது ஏதாவது SMIB கிளையில் பெற்றுக்கொள்ள முடியும்.

**மேலதிக விபரங்களுக்கு தொடர்புகொள்க -**
**011-7722879/ 011-7722784/ 011-7722876**

**பிரதம முகாமையாளர் - HR&L**
**அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கி**

Repeat Your Ad For Better Offers

## இலங்கை திறந்த பல்கலைக்கழகம்
## பொதுப் பட்டமளிப்பு 2022 (I)

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் பொது பட்டமளிப்பு 2022 (I) 5, ஜனவரி, 2023 அன்று கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் (BMICH) நடைபெறும். பட்டதாரி விண்ணப்ப படிவம் பட்டம்பெற இருப்போருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. பட்டதாரி விண்ணப்ப படிவங்களை ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதி 01 டிசம்பர், 2022 ஆகும்.

மேலதிக தகவல்களை www.ou.ac.lk/2022convo1 எனும் இணையத்தளத்திற்கு சென்று பார்வையிடவும்.

விசாரணைகளுக்கு - 0112881040/461/350

பதிவாளர்

27 நவம்பர் 2022

## இலங்கை கடற்படை

### இலங்கை கடற்படையினால் உபயோகிக்கப்பட்ட படகுகள் மூன்று விலைமனு மூலம் விற்பனை செய்தல்

1. இலங்கை கடற்படைக்குச் சொந்தமான உபயோகிக்கப்பட்ட 03 படகுகளை விற்பனை செய்வதற்காக விலைமனு சபையின் **தலைவரினால் 2022, டிசம்பர் மாதம் 19 ஆம் திகதி 1400 மணி வரை கொழும்பு 01, இலங்கை கடற்படை தலைமையகத்தில்** த.பெ.இலக்கம் 593 எனும் முகவரியில் முத்திரை இடப்பட்ட விலைமனுக்கள் ஏற்றுக் கொள்ளப்படும்.
2. விலைமனு பத்திரங்களை இ.க.ப.க. கெமுனு, ராகம, வெலிசர, சிரேஷ்ட பணியாளர் (பண்டகசாலை பொறுப்பு) அதிகாரியிடம் இலவசமாக பார்வையிடலாம்.
3. மீளச் செலுத்தப்படாத (5,000.00 ரூபா) வைப்பீட்டை **இலங்கை கடற்படை தலைமையக நிதி பணிப்பாளருக்கு** செலுத்தி பெற்றுக் கொள்ளப்பட்ட பற்றுச்சீட்டுடன், முன்னரே பெற்றுக் கொள்ளப்பட்ட அடுத்த வார வேலை நாளொன்றில் **0930 மணி முதல் 1630 மணிவரை** திருகோணமலை, **இலங்கை கடற்படை இறங்குதுறையில் இந்த படகுகளை பார்வையிட முடியும்.** அதற்காக வரும் நபர்கள் தேசிய அடையாள அட்டை / கடவுச் சீட்டை சமர்ப்பிக்க வேண்டும்.
4. மீளச் செலுத்தப்படாத (1,000.00 ரூபா) வைப்பீட்டை **கொழும்பு 01, இலங்கை கடற்படை தலைமையக நிதி பணிப்பாளருக்கு** செலுத்தி பெற்றுக் கொள்ளப்பட்ட பற்றுச்சீட்டை வேலை நாளொன்றில் **2022, டிசம்பர் மாதம் 18 ஆம் திகதி 1500 மணி வரை இ.க.ப.க. கெமுனு, ராகம, வெலிசர, சிரேஷ்ட பணியாளர் (பண்டகசாலை பொறுப்பு) அதிகாரியிடம்** சமர்ப்பித்து விலைமனு விண்ணப்பப் பத்திரத்தைப் பெற்றுக் கொள்ளலாம்.
5. **2022, டிசம்பர் மாதம் 19 ஆம் திகதி 1400 மணி வரை** விலைமனு ஏற்றுக் கொள்ளப்படுவதுடன், **த.பெ.இலக்கம் 593, கொழும்பு 01, இலங்கை கடற்படை தலைமையகத்தில்** சமர்ப்பிக்கப்பட்ட விலை மனுக்கள் குறித்த நேரம் கழிந்தவுடன் திறக்கப்படுவதுடன், விலைமனு சமர்ப்பித்தவர் அல்லது அவரது பிரதிநிதி விலை மனுக்கள் திறக்கப்படும் நேரத்தில் அங்கு சமுகமளிக்க சந்தர்ப்பம் வழங்கப்படும்.
6. இது பற்றிய மேலும் விபரங்களை தொ.பே. இலக்கம் **011 – 7193375** இன் மூலம் அல்லது இலங்கை கடற்படை வலையத்தளம் **http:tender.navy.lk** ⟶ Tenders ⟶ Local Tender இலிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**இலங்கை கடற்படை தலைமையகம்,**
**தபால் பெட்டி 593, கொழும்பு 01.**

## LRDC சேவைகள் நிறுவனம்
### 2023 வருடத்திற்கான விநியோகஸ்தர்களை பதிவு செய்தல்

2023 வருடத்திற்கான கீழ்வரும் பண்டம் மற்றும் சேவைகளுக்கான விநியோகஸ்தர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. ஒவ்வொரு பண்டம் மற்றும் சேவைகளுக்கு வெவ்வேறாக ரூ.3000/- பணம் எமது நிறுவனத்தின் காசாளரிடம் செலுத்தி விண்ணப்பத்தை பெற்று 2023.01.31 ஆம் திகதி பி.ப.2.00 முன்பு இல.28/10 கிரிமண்டல மாவத்தை, நாவல, ராஜகிரிய எனும் விலாசத்திற்கு தபால் மூலம் அல்லது நேரில் ஒப்படைக்க வேண்டும். விண்ணப்ப இறுதி திகதியின் பின் பதிவு செய்யப்படும் விநியோகஸ்தர்களிடம் இருந்து ரூ.7500/- அறவிடப்படும்.

| | |
|---|---|
| 01 | பண்டம் வழங்குதல் |
| 01.1 | [illegible] |
| 01.2 | [illegible] |
| 01.3 | [illegible] |
| 01.4 | [illegible] |
| 01.5 | [illegible] |
| 01.6 | [illegible] |
| 01.7 | [illegible] |
| 01.8 | [illegible] |
| 01.9 | CCTV [illegible] |
| 01.10 | [illegible] |
| 01.11 | [illegible] |
| 01.12 | [illegible] |
| 01.13 | [illegible] |
| 02 | சேவை வழங்குதல் |
| 02.1 | [illegible] |
| 02.2 | [illegible] |
| 02.3 | [illegible] |
| 02.4 | [illegible] |
| 02.5 | [illegible] |
| 02.6 | [illegible] |
| 02.7 | [illegible] |
| 02.8 | [illegible] |
| 02.9 | [illegible] |
| 02.10 | [illegible] |
| 02.11 | [illegible] |
| 02.12 | [illegible] |
| 02.13 | [illegible] |
| 02.14 | [illegible] |
| 02.15 | [illegible] |
| 02.16 | [illegible] |
| 02.17 | [illegible] |
| 02.18 | [illegible] |
| 02.19 | [illegible] |

முக்கியம் – 02.6 மற்றும் 02.7 [illegible]

மேலதிக விபரங்களுக்கு – 0112861948 / 0114935045

# அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கி

## அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கியில் தொழில் வாய்ப்புகள்

SMIB, தேசத்தின் முதன்மையான வீடமைப்பு வங்கியாக, வங்கியின் செயற்பாட்டை மறுசீரமைக்கும் பணியில் ஈடுபட்டுள்ளது. இது வாடிக்கையாளர்களுக்கு மிகவும் திருப்திகரமான மற்றும் பல்வேறு சேவைகளை வழங்கும் நிறுவனமாகும். அதுபோல, பின்வரும் தலைமைத்துவப் பதவிகளுக்கான பொருத்தமான தகுதிகள் மற்றும் அனுபவத்துடன் வணிக இலக்குகளை அடைவதற்கு ஆற்றல் மிக்க தலைமைப் பாத்திரங்களை வெளிப்படுத்தி முழு அர்ப்பணிப்புடன் செயற்படும் அபேட்சகர்களிடமிருந்து விண்ணப்பங்களை நாங்கள் அழைக்கிறோம்.

## உதவி முகாமையாளர் - கடன் (CREDIT)

வங்கியின் கடன் கொள்கைக்குள், கிரெடிட் பகுப்பாய்வின் மூலம் கடனுக்குத் தகுதியான வாடிக்கையாளரின் சுயவிவரத்தை கண்டறிந்து, ஆதாரங்களை வழங்குவதன் மூலம் தரமான கடன் போர்ட்/ போலியோவை உருவாக்குதல். கிளை முகாமையாளரின் அறிவுறுத்தல் மற்றும் வழிகாட்டுதலின் கீழ் ஒழுங்குமுறை தேவைகள் மற்றும் உள்ளகக் கட்டுப்பாடுகளை கடைப்பிடிப்பதன் மூலம் ஒப்புக் கொள்ளப்பட்ட இலக்குகளை நோக்கி கடன் வழங்கல் மற்றும் குறைந்தபட்ச NPL ஐ உறுதி செய்தல்.

**தகைமைகள்**

அ) வங்கியியல், வியாபார முகாமைத்துவம், வர்த்தகம் அல்லது பொருளியல், கணக்கியலில் ஒரு வகுப்புப் பட்டம் அல்லது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட இதற்குச் சமமான தகைமை.

**அல்லது**

ஆ) வங்கியியல், வியாபார முகாமைத்துவம், வர்த்தகம் அல்லது பொருளியல், கணக்கியலில் ஒரு வகுப்புப் பட்டம் அல்லது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட இதற்குச் சமமான தகைமையுடன் இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்தின் (ICASL) இடைநிலை அல்லது உரிமம் பரீட்சை (licentiate examination) அல்லது ஐக்கிய இராச்சியத்தின் முகாமைத்துவ கணக்காளர்கள் பட்டய நிறுவனத்தின் (CIMA UK) 1ஆம் மற்றும் 11ஆம் நிலை பரீட்சைகள் அல்லது DABF of IBSL அல்லது IBSLஇன் இணை அங்கத்துவம்

**அனுபவம்:**

வங்கி அல்லது அங்கீகரிக்கப்பட்ட நிதி நிறுவனத்தில் கடன் மதிப்பீடு, கடன் வழங்கல், இடர் செயற்பாடுகள் மற்றும் கடன் மீட்பு செயற்பாடுகளில் 03 வருட நிர்வாக அனுபவம். அபேட்சகர் நல்ல தொடர்பாடல் மற்றும் தனிப்பட்ட திறன்களைக் கொண்டிருக்க வேண்டும். கணனி அறிவு இருக்க வேண்டும்.

**சம்பளம்:**

சம்பள அளவு: ரூபா 79,740 - 1,500x20 - 109,740/- ஒரு மாதத்திற்கு வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட கொடுப்பனவுகள் சகிதம். இதன் பிரகாரம் மாதாந்த மொத்தச் சம்பளம் அண்ணளவாக 173,870.00 ரூபாவாக இருக்கும்.

**வயது:** 40 வயதிற்கு மேற்படாமல் இருத்தல் வேண்டும். (ஏற்கனவே ஒரு அரசு துறை நிறுவனத்தில் வேலை செய்பவர்களுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதல்ல.)

**விண்ணப்பங்களைச் சமர்ப்பிப்பதற்கான இறுதி நாள் -** 12/12/2022

**பொது நிபந்தனைகள்**

**தேர்வு முறை -** வங்கியின் ஆட்சேர்ப்பு கொள்கை மற்றும் நடைமுறைக்கு ஏற்ப விண்ணப்பங்கள் அழைக்கப்படும்.
நேர்முகப் பரீட்சையின் மூலம் தெரிவு செய்யப்படுவர்.

**விண்ணப்பிக்கும் முறை**

மேலதிக தகவல்களுக்கு தயவுசெய்து வங்கியின் www.smib.lk எனும் இணையதளத்திற்குப் பிரவேசிக்கவும்.

## இலங்கை துறைமுக அதிகாரசபை

### பதவி வெற்றிடம்

இலங்கை துறைமுக அதிகாரசபையின் கிழக்கு கொள்கலன் முனையத்தின் (ECT) 11 ஆம் கட்ட செயற்றிட்ட முகாமைத்துவ அலகில் கீழே குறிப்பிடப்படும் பதவிக்கு தகைமைகளையுடைய நபர்களிடமிருந்து ஒப்பந்த அடிப்படையின் மீது ஆட்சேர்த்துக் கொள்வதற்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**1. பதவி : அளவையியலாளர் (POST OF SURVEYOR )**

**(அ) சம்பளம்**
பேசித் தீர்மானித்துக் கொள்ளலாம்.

**(ஆ) தகுதித்திறன்**

**(1) கல்வி மற்றும் தொழில்சார் தகைமைகள்**

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட அளவை விஞ்ஞானம் தொடர்பான பட்டமொன்று.

**அல்லது**

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட அளவை விஞ்ஞானம் பட்டத்திற்கு சமனான தகைமைகள்.

**அல்லது**

அங்கீகரிக்கப்பட்ட தொழில்சார் நிறுவனமொன்றிலிருந்து பெற்றுக் கொண்ட பதிவு தொடர்பான அனுமதிப்பத்திரம் வைத்திருக்கும் அளவையியலாளரொருவராக இருத்தல் வேண்டும்.

**அத்துடன்**

**அனுபவம்**

தகைமைகளைப் பெற்றுக் கொண்டதன் பின்னர் நீரியல் அளவை ஆய்வு நடவடிக்கைகள் தொடர்பில் ஆகக் குறைந்தது ஒரு (01) வருட முனைப்பான அனுபவம் உட்பட உரிய துறையில் ஆகக் குறைந்தது எட்டு(08) வருட அனுபவம் இருத்தல் வேண்டும்.

**கவனிக்க**

மேலே பதவி தொடர்பில் விண்ணப்பிக்கும் சகல விண்ணப்பதாரிகளும் 45 வயதைவிட குறைந்தவராக இருத்தல் வேண்டும். (இவ்வயதெல்லை அரச துறை அல்லது அரச கூட்டுத்தாபனங்களிலுள்ள விண்ணப்பதாரிகளுக்கு ஏற்புடையதல்ல.)

விண்ணப்பங்கள் வயது, கல்வி, தொழில் தகைமைகள், அனுபவம் தொடர்பான சான்றிதழ்களின் பிரதிகளுடன் "பிரதான மனிதவள முகாமையாளர், இலங்கை துறைமுக அதிகாரசபை, கொச்சிக்கடை, கொழும்பு -13" என்ற முகவரிக்கு கிடைக்கக் கூடியதாக 2022-12-09 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் பதிவுத் தபாலில் அல்லது மின்னஞ்சலில் (slpahrex@slpa.lk) அனுப்பப்படுதல் வேண்டும். விண்ணப்பங்கள் அனுப்பப்படும் உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கப்படும் பதவி குறிப்பிடப்படுதல் வேண்டும்.

**சம்பந்தப்பட்ட சான்றிதழ்களின் பிரதிகள் இணைக்கப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.**

இந்த அறிவித்தல் www.slpa.lk என்ற இணையத்தளத்திலும் பிரசுரிக்கப்படும்.

அரச அல்லது அரச கூட்டுத்தாபனங்களில் சேவையிலுள்ள ஊழியர்கள் தமது விண்ணப்பங்களை திணைக்களம் / கூட்டுத்தாபன தலைவர்கள் ஊடாக சமர்ப்பித்தல் வேண்டும். மேலே பதவிக்கு விண்ணப்பதாரி தெரிவு செய்யப்படின் உரிய திணைக்களம் / கூட்டுத்தாபனத்தின் சேவையிலிருந்து விடுவிக்க இணங்கும் குறிப்பொன்றும் இடப்பட்டிருத்தல் வேண்டும்.

**தலைவர்**

வாழ்க்கைத்தொழில்சார் தொழில்நுட்பவியல் பல்கலைக்கழகம்

## வேலைவாய்ப்பு

**அனுராதபுரம், பட்டன்கல, யாழ்ப்பாணம், குளியாபிட்டிய, மாத்தறை மற்றும் இரத்மலானை பல்கலைக்கழக பீடங்களில்**

மேற்குறிப்பிடப்பட்ட தற்காலிக கல்விசார் பதவிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளதுடன் அது தொடர்பான பத்திரிகை விளம்பரமானது **2022 நவம்பர் மாதம் 27 ஆம் திகதி** (Sunday observer) சண்டே ஒப்சேர்வர் பத்திரிகையில் பிரசுரமாகவுள்ளது.

மேலதிக விபரங்களை பல்கலைக்கழக வலைதளத்தினூடாக பெற்றுக்கொள்ளலாம்.

அனுராதபுரம் பல்கலைக்கழக கல்லூரி
0252 222 010
web : www.uca.ac.lk

பட்டன்கல பல்கலைக்கழக கல்லூரி
0362 235 570
web : www.ucbatangala.lk

யாழ்ப்பாண பல்கலைக்கழக கல்லூரி
0212 217 791
web : www.ucj.ac.lk

குளியாபிட்டிய பல்கலைக்கழக கல்லூரி
0372 059 576
web : www.uck.ac.lk

மாத்தறை பல்கலைக்கழக கல்லூரி
0412 222 962/0412 222 967
web : www.ucm.ac.lk

இரத்மலானை பல்கலைக்கழக கல்லூரி
0112 626 297
web : www.ucr.ac.lk

2022 நவம்பர் 27

Best way to fulfil your Future Dreams
Marriage Proposals
in the
Sunday Observer

OBSERVER JOBS
BREAKING BOUNDARIES
THE COUNTRY'S LARGEST RECRUITMENT DATABASE
FOR JOBSEEKERS
www.observerjobs.lk

* Trusted Marketplace of Classified Advertisers...
SUNDAY OBSERVER adz it's what you want Classified
Green Light for Online Transfer
For 15 Words Rs. 500/-
(Additional each word Rs. 20/-)
Call :- Ramani - 077 7 278 948/ 011 2 429 347 | Piyumi - 011 2 429 383 | Gayani - 011 2 429 342/ 343
077 7 270 067 E-mail - classified@lakehouse.lk
BOC Lake House Branch Acc. No. 000000377

# சுகாதார சுத்திகரிப்பு சேவை - 2023

## மீயுயர் நீதிமன்ற தொகுதி முகாமைத்துவ சபை

2023 ஆம் வருடத்திற்காக ''வழங்குநர்களை பதிவு செய்தலுக்காக'' விண்ணப்பங்கள் அழைக்கப்படுகின்றன. மேலதிக தகவலுக்காக கீழேயுள்ள தொடர்பை தயவு செய்து பார்வையிடவும்.

**மூடும் திகதியானது 2022.12.14 ஆகும்.**

**https://www.moj.gov.lk/images/pdf/reg-suppliers-2023.pdf**

**மார்ஷல்,**
**மீயுயர் நீதிமன்ற தொகுதி முகாமைத்துவ சபை**
**த.பெட்டி 223, ஹல்ஸ்டோவ் வீதி,**
**கொழும்பு-12.**
**தொலைபேசி இல.: 011-2437501**

# வழங்குநர்களை பதிவு செய்தல் - 2023

## மீயுயர் நீதிமன்ற தொகுதி முகாமைத்துவ சபை

2023 ஆம் வருடத்திற்காக ''வழங்குநர்களை பதிவு செய்தலுக்காக'' விண்ணப்பங்கள் அழைக்கப்படுகின்றன. மேலதிக தகவலுக்காக கீழேயுள்ள தொடர்பை தயவு செய்து பார்வையிடவும்.

**மூடும் திகதியானது 2022.12.14 ஆகும்.**

**https://www.moj.gov.lk/images/pdf/reg-suppliers-2023.pdf**

**மார்ஷல்,**
**மீயுயர் நீதிமன்ற தொகுதி முகாமைத்துவ சபை**
**த.பெட்டி 223, ஹல்ஸ்டோவ் வீதி,**
**கொழும்பு-12.**
**தொலைபேசி இல.: 011-2437501**

# மேற்கோள்களுக்கான அழைப்பிதழ்

விவசாய அமைச்சின் மேற்பார்வையின் கீழ் சிறிய அளவிலான விவசாய வணிக பங்கேற்பு திட்டத்தின் (SAPP) கீழ், ரிச் லை.ஃப் டெய்ரீஸ் நிறுவனத்தால் செயல்படுத்தப்படும் திட்டத்திற்கு பின்வரும் பொருட்களை வழங்குவதற்கு தகுதியான உற்பத்தியாளர்கள் மற்றும் சப்ளையர்களைத் தேர்ந்தெடுக்க விலைகள் அழைக்கப்படுகின்றன.

| வரிசை எண் | பொருள் விபரங்கள் | தேவையான அளவு | ஏல பாதுகாப்பு ரூ. |
|---|---|---|---|
| 01 | Milking Machine | 55 | 118,250.00 |
| 02 | Milking Can (20L) S.S. | 85 | 12,325.00 |

28/11/2022 முதல் 16/12/2022 வரையிலான அலுவலக நேரத்தில் இதற்கு ஆர்வமுள்ள தகுதியுள்ள ஏலதாரர்கள் திருப்பிச் செலுத்தப்படாத ரூ. 1000.00 ஏலக் கட்டணத்தைச் செலுத்தினால் விபரக்குறிப்புகள் மற்றும் தொடர்புடைய ஆவணங்கள் கிடைக்கும்.

மேற்கோள்கள் 2022/12/19 ஆம் திகதி காலை 10.00 மணி வரை மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும். ஏலங்கள் சீல் வைக்கப்பட்டு நிறுவன வளாகத்தில் வைக்கப்பட்டுள்ள டெண்டர் பெட்டியில் வைக்கப்பட வேண்டும். பெறப்பட்ட ஏலங்கள் 2022/12/19 ஆம் திகதி காலை 10.00 மணிக்கு திறக்கப்படும். மாதிரிகளுடன் திறக்கும் நேரத்தில் ஏலதாரர்கள் இருக்க வேண்டும். தாமதமாக பெறப்பட்ட ஏலங்கள் நிராகரிக்கப்படும் என்பதை நினைவில் கொள்ளவும். தாமதமாக பெறப்பட்ட ஏலங்கள் நிராகரிக்கப்படும் என்பதை நினைவில் கொள்க.

**மேலும் விபரங்களுக்கு தொலைபேசி எண் - 070 3778009 இல் பெறலாம்.**

**மேலாளர் - பால் கொள்முதல், ரிச்லை.ஃப் டெய்ரீஸ் லிமிடெட்**
**எண் 193, டேனிஸ்டர் டி சில்வா மாவத்தை, கொழும்பு 08.**
**011-2675477**

Rich Life

# றுஹுணு பல்கலைக்கழகம்

## 2023ஆம் வருடத்திற்கான வழங்குநர்கள்/ ஒப்பந்ததாரர்களைப் பதிவு செய்தல்

2023ஆம் வருடத்தில் பின்வரும் பொருட்கள்/ சேவைகளை வழங்குவதற்காக றுஹுணு பல்கலைக்கழகத்துடன் பதிவு செய்வதற்காக தகைமையுள்ள வழங்குநர்கள்/ ஒப்பந்தக்காரர்களிடமிருந்து விண்ணப்பங்களை றுஹுண பல்கலைக்கழக திணைக்கள பெறுகைக் குழுத்தலைவர் கோருகின்றார்.

2022 டிசம்பர் 22ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் http://www.ruh.ac.lk என்ற இணையதளத்தினூடாக நிகழ்நிலையில் (Online) விண்ணப்பங்கள் பூர்த்தி செய்யப்பட்டு சமர்ப்பிக்கப்படலாம். நிகழ்நிலை மூலமாக மட்டுமே விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்கலாம்.

எந்தவொரு பண்டங்கள்/ சேவைகளின் வகுதியை பதிவு செய்ய விரும்பும் வழங்குநர்கள் வியாபார பதிவின் ஸ்கேன் செய்யப்பட்ட பிரதியொன்றை (PDF version) உரிய முறையில் நிகழ்நிலையில் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பமொன்றையும் இணைத்தல் வேண்டும். மேலதிகமாக, நிர்மாண ஒப்பந்தங்களை பதிவு செய்ய விரும்பும் ஒப்பந்தக்காரர் ஸ்கேன் செய்யப்பட்ட ICTAD பதிவின் பிரதியொன்றையும் (PDF version) இணைத்தல் வேண்டும்.

சகல வழங்கல்கள் / வேலைகள் / சேவைகளின் பொருட்டும் ஒரு மாத காலத்துக்கான கடன் வசதி வழங்கப்படல் வேண்டும்.

விண்ணப்பத்தைப் பூர்த்தி செய்த பிறகு கணக்குக் குறிப்பு எண்ணுடன் ஒவ்வொரு விண்ணப்பப் படிவத்துடனும் ஒவ்வொரு வகுதிக்கும் மீளளிக்கப்படாத கட்டணமான 2000.00 ரூபாவுக்கான மேற்படி இணையதளத்திலிருந்து பதிவிறக்கம் செய்யப்பட்ட செலுத்தல் படிவத்தின் மூலம் மக்கள் வங்கியின் எந்தவொரு கிளையிலும் செலுத்தி பெற்றுக் கொண்ட பணப்பற்றுச்சீட்டும் இணைக்கப்படல் வேண்டும். 2019 நவம்பர் 29ஆம் திகதிக்கு முன்னர் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். தாமதக் கொடுப்பனவுகளுடனான விண்ணப்பங்கள் மற்றும் முழுமையற்ற விண்ணப்பங்கள் எவ்வித முன்னறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும்.

விண்ணப்பத்தின் வன்பிரதி மற்றும் உரித்தான சான்றிதழ்கள் மற்றும் உத்தியோகபூர்வ பணக்கொடுப்பனவிற்கான மூலமுதலாவதான பற்றுச்சீட்டு ஆகியன விண்ணப்பத்துடன் இணைக்கப்பட்டு பல்கலைக்கழகத்திற்கு தேவை ஏற்படும் போது சமர்ப்பிப்பதற்காக வைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

ஆர்வமுள்ள வழங்குநர்கள் / ஒப்பந்ததாரர்கள் / சேவை வழங்குநர்கள் ஏதேனும் மேலதிகத் தகவல்களை மாத்தறை, வெல்லம்மடம, றுஹுணு பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட உதவிப் பதிவாளர் (வழங்கல்கள்) அவர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். தொலைபேசி: 041-2227027 (நீடிப்பு 12066) மின்னஞ்சல்: sabsupp2@ruh.ac.lk.

| பிரதான பொருள் வகுதிகள் (C) | தொடர்ச்சியாக பாவிக்கப்படும் உருப்படிகளின் வகுதிகள் (R) | சேவைகளின் வகுதிகள் (S) |
|---|---|---|
| **C 1. கணனி வன்பொருள் மற்றும் மென்பொருள்** கணனிகள், அச்சுப்பொறிகள், ஸ்கேனர்கள், யுபிஎஸ், வலையமைப்பு ஆளிகள் மற்றும் வலையமைப்பு துணையுறுப்புக்கள், சேர்வர்கள் மற்றும் ஏனைய துணையுறுப்புக்கள், இன்னும் பலவும். | **R 1. காகிதாதி மற்றும் அலுவலக பாவனைப் பொருட்கள்** கணக்கிடல் இயந்திரங்கள், ஸ்டேப்பிளர்ஸ், பஞ்சர்கள், பென் ட்ரைவ்கள், சி.ஆர். புத்தகங்கள், நிழற்பட பிரதியாக்கல் இயந்திரங்கள், ரவ் தாள்கள் (rough sheets), ஹாப்சீட்ஸ், தபாலுறைகள், பென்சில்கள், அழி இறப்பர்கள், போல்பொயிண்ட் பேனாக்கள், கிளிப்கள், குண்டூசிகள், வெற்று இறுவட்டுக்கள் மற்றும் டிவிடிக்கள், இன்னும் பலவும். அடங்கலான அனைத்து வகையான காகிதாதிகள். | **S 1. புத்தகங்கள்/ பதிவுப் புத்தகங்களின் அச்சிடல் மற்றும் கட்டுதல்** |
| **C 2. அலுவலக உபகரணங்கள்** நிழற்பட பிரதியாக்கல் இயந்திரங்கள், நகல் பிரதி இயந்திரங்கள், கொலேட்டர், தொலைபேசிகள் மற்றும் தொலைநகல் இயந்திரங்கள், துணையுறுப்புக்கள், இன்னும் பலவும். | **R 2. டோனர் காட்ரிஜ்கள் மற்றும் மாஸ்டர் ரோல்** அனைத்து வகையான டோனர் காட்ரிஜ்கள், மை, மாஸ்டர் ரோல், இன்னும் பலவும் | **S 2. அடையாள அட்டைகளை அச்சிடல் மற்றும் வழங்குதல்** |
| **C 3. தளபாடம் - உருக்கு** மேசைகள், கட்டில்கள், அடுக்கு கட்டில்கள், சுவர் கப்போட்டுக்கள், கதிரைகள், அலுமாரிகள், ஸ்டூல்கள், புத்தக தட்டுக்கள், கோவைகளுக்கான கபினெட்டுக்கள், கப்போட்டுக்கள் மற்றும் ஏனைய உருக்கு தளபாடம். | **R 3. ஆய்வுகூட இரசாயனங்கள்** விஞ்ஞானம், மருத்துவ, கடற்றொழில், பொறியியல் மற்றும் கமத்தொழில் ஆய்வுகூடங்கள் ஆகியவற்றிற்கான அனைத்து வகையான இரசாயனங்கள் | **S 3. அலுவலக உபகரணங்களின் திருத்தவேலைகள்** நிழற்பட பிரதியாக்கும் இயந்திரங்கள், அச்சுப்பொறிகள், ஸ்கேனர்கள், மல்டிமீடியா புரஜெக்டர்கள், டுப்ளோ இயந்திரங்கள், ஃ.ாி.இ தொலைநகல் இயந்திரம், தொலைபேசிகள் மற்றும் தட்டெழுத்து இயந்திரங்கள |
| **C 4. தளபாடம் - மரம்** கட்டில்கள், மேசைகள், கதிரைகள், அலுமாரிகள், ஸ்டூல்கள், சுவர் கப்போட்டுக்கள், ஷோபா, செட்டி மற்றும் ஏனைய மரத்தாலான தளபாடங்கள் | **R 4. Cell Culture Materials** | **S 4. ஆய்வுகூட இயந்திரங்களின் திருத்தவேலைகள்** |
| **C 5. நாரிழை கண்ணாடி மற்றும் பிளாஸ்டிக் உற்பத்திகள்** மேசைகள், கதிரைகள், பெயர் பலகைகள், நீர் தாங்கிகள் மற்றும் ஏனைய நாரிழை/ பிளாஸ்டிக் பண்டங்கள். | **R 5. பொதுவான ஆய்வுகூட இரசாயனங்கள்** | **S 5. மோட்டார் வாகனங்களின் சேவை மற்றும் உராய்வு நீக்கம் செய்தல்** |
| **C 6. ஆய்வுகூட உபகரணங்கள்** அனைத்து வகையான விஞ்ஞானம், கடற்றொழில், பொறியியல் மற்றும் கமத்தொழில் ரீதியிலான ஆய்வுகூடங்கள். | **R 6. ஆய்வுகூட கண்ணாடிப் பொருட்கள்** விஞ்ஞானம், மருத்துவ, கடற்றொழில், பொறியியல் மற்றும் கமத்தொழில் ஆய்வுகூடங்கள் ஆகியவற்றிற்கான அனைத்து வகையான கண்ணாடிப் பொருட்கள். | **S 6. மோட்டார் வாகனங்களின் சக்கர சமச்சீராக்கம் செய்தல்** |
| **C 7. மருத்துவ உபகரணங்கள்** அனைத்து வகையான மருத்துவ உபகரணங்கள் | **R 7. சுத்திகரிப்பு உருப்படிகள்** கிருமிநாசினிகள், சலவைப் பொருட்கள், சவர்க்காரம்/ கழிவறைத் தாள்கள் | **S 7. மோட்டார் சைக்கிள்களின் சேவை மற்றும் உராய்வு நீக்கம் செய்தல்** |
| **C 8. கற்பித்தல் மற்றும் செயலமர்வு உபகரணங்கள்** கற்பித்தல் மற்றும் பொது செயலமர்வு ஆகியவற்றில் பாவிக்கப்படும் அனைத்து வகையான உபகரணங்கள் மற்றும் கருவிகள். | **R 8. மோட்டார் வாகன உதிரிப்பாகங்கள்** மோட்டார் வாகனங்கள் மற்றும் மோட்டார் சைக்கிள்களுக்கான அனைத்து வகையான உதிரிப்பாகங்கள். | **S 8. முச்சக்கர வண்டிகளின் சேவை மற்றும் உராய்வு நீக்கம் செய்தல்** |
| **C 9. வளிச்சீராக்கிகள் மற்றும் துணையுறுப்புக்கள்** அனைத்து வகையான வளிச்சீராக்கிகள் மற்றும் துணையுறுப்புக்கள் | **R 9. டயர்கள் மற்றும் டியூப்புக்கள்** மோட்டார் வாகனங்கள், மோட்டார் சைக்கிள்கள் மற்றும் முச்சக்கர வண்டிகளுக்கான டயர்கள் மற்றும் டியூப்புகள். | **S 9. மோட்டார் வாகனங்களின் திருத்தவேலைகள்** |
| **C 10. மின்னியல் மற்றும் இலத்திரனியல் சாதனங்கள்** உறைநிலை குளிரூட்டிகள், குளிரூட்டிகள், விசிறிகள், தொலைக்காட்சிகள், நீர் கொதிகலன்கள், ரைஸ் குக்கர்கள், சுவர் மணிக்கூடுகள் மற்றும் மேசை கடிகாரங்கள் இன்னும் பலவும் அயன்கள், கேத்தல்கள், வடிகட்டிகள், கொதிகலன்கள் மற்றும் உதிரிப்பாகங்கள், இன்னும் பலவும். | **R 10. புத்தகங்களை கட்டுவதற்கான பொருட்கள்** | **S 10. மோட்டார் சைக்கிள்களின் திருத்தவேலைகள்** |
| **C 11. புகைப்படக்கருவிகள்** புகைப்படக்கருவிகள், காணொளி கருவிகள் மற்றும் துணையுறுப்புகள் | **R 11. உரம் மற்றும் விவசாய இரசாயனங்கள்** | **S 11. டிராக்டர்களின் திருத்தவேலைகள்** |
| C 12. **பாதுகாப்பு முறைமைகள்** CCTV புகைப்படக்கருவி மற்றும் துணைப்பாகங்கள். | **R 12. விலங்குணவு மற்றும் கால்நடைகளுக்கான மருந்துகள்** | **S 12. முச்சக்கர வண்டிகளின் திருத்தவேலைகள்** |
| **C 13. புத்தகங்கள், பருவவெளியீடுகள் மற்றும் ஏனைய பிரசுரங்கள்** | **R 13. சீருடை துணிகள் மற்றும் சீருடை உருப்படிகள்** மழை அங்கிகள் பூட்ஸ்கள், சப்பாத்துக்கள் மற்றும் அது சார்ந்த உற்பத்திகள் | **S 13. கணனிகள் மற்றும் வலையமைப்பு துணையுறுப்புக்களின் திருத்தவேலைகள் மற்றும் பராமரிப்பு** |
| **C 14. விளையாட்டுத்துறை பொருட்கள் மற்றும் உருப்படிகள்** | **R 14. திரைச்சீலை பொருட்கள் மற்றும் உருப்படிகள்** | **S 14. மின்னியல் மற்றும் இலத்திரனியல் சாதனங்களின் திருத்தவேலைகள்** |
| **C 15. சமையலறை, பாத்திரங்கள் மற்றும் வெட்டுக்கருவிகள்** மட்பாண்டம்/ கண்ணாடி/ பிளாஸ்டிக்/ துருப்பிடிக்காத உருக்கு/ அலுமினியம்/ சமையலறை பாத்திரங்கள் மற்றும் வெட்டுக்கருவிகள். | **R 15. மருத்துவ மற்றும் பற்சிகிச்சை உருப்படிகள்** மருத்துவ ஔடதங்கள் மற்றும் சத்திரசிகிச்சை உருப்படிகள் | **S 15. வளிச்சீராக்கிகள்/ குளிரூட்டிகள்/ உறைநிலை குளிரூட்டிகளின் திருத்தவேலைகள் மற்றும் பராமரிப்பு** |
| **C 16. பல்கலைக்கழக விழாக்களுக்கான உருப்படிகள்** மேலாடைகள், மாலைகள் இன்னும் பலவும். | **R 16. மின்னியல் கம்பி இணைப்பு மற்றும் பொருத்தல்கள்** ஆளிகள், ஹோல்டர்கள், விளக்குகள் மற்றும் இணைப்புக்கள், circuit breakers, surge arrestors, விநியோகப் பலகைகள், கம்பிகள் மற்றும் வடங்கள், இன்னும் பலவும். | **S 16. போக்குவரத்து சேவைகள்** கெப் சேவைகள், அனைத்து வகையான பஸ்கள், பயணிகள் வான்கள் மற்றும் லொறிகள் இன்னும் பலவும். |
| **C 17. பாதுகாப்பு உபகரணம்** தலைக்கவசம், காப்பு மூக்குக் கண்ணாடி, பாதுகாப்பு சப்பாத்துக்கள் மற்றும் ஆடைகள், புத்தகங்கள், கையுறைகள், உயிர்காக்கும் ஜக்கெட்டுக்கள், இன்னும் பலவும். | **R 17. கட்டிடப் பொருட்கள்** செங்கற்கள், கல், ஆற்று மணல், செம்மண், கிறவல், ஓடுகள், அரியப்பட்ட பலகை, பித்தளை இணைப்புக்கள், பிணைச்சல்கள், கதவு பூட்டுக்கள், casement stays, fasteners, tower bolts, Sheets (asbestos, plastic, Formica, zn-aluminium sheets இன்னும் பலவும். வயர் மெஷ், வயர் நெட்டிங்ஸ், கண்ணாடி (Plain, tinted and pin head) கழுவும் பேசன்கள், குளியலறை இணைப்புக்கள், சீமெந்து இன்னும் பலவும். | **S 17. வாயு வழங்கல் முறைமையின் திருத்தவேலைகள் மற்றும் பராமரிப்பு** |
| | **R 18. அரிந்த மரங்கள் (உள்ளூர் மற்றும் இறக்குமதி செய்யப்பட்டது)** | **S 18. நிழற்படமெடுத்தல் சேவை** பல்கலைக்கழக பட்டமளிப்பு விழாவில் Still நிழற்படமெடுத்தல், வீடியோ, நடமாடும் ஸ்டுடியோ சேவை ஆகியன. |
| | **R 19. சீமெந்து உற்பத்திகள்** சீமெந்து புளொக்குகள், வேலித் தூண்கள், கொம்போஸ்ட் தொட்டிகள், பூச்சாடிகள், இன்னும் பலவும். | **S 19. மண் அகற்றும் உபகரணங்கள்** வழங்குதல் JCB, forklift என்பவற்றை வாடகைக்கமர்த்துதல் |
| | **R 20. பொதுவான ஹாட்வெயார் உருப்படிகள்** Bolts and Nuts, வொஷர்கள், கம்பி ஆணிகள், இரும்பு திருகாணிகள், பூட்டுகள், வாளிகள், இறப்பர் குழாய்கள் இன்னும் பலவும், துவிச்சக்கர வண்டிகள் மற்றும் உதிரிப்பாகங்கள், தூரிகைகள், கருவிகள் (கமத்தொழில் மற்றும் ஏனையவை), சகல விதமான நிறப்பூச்சுகள், PVC குழாய்கள் மற்றும் இணைப்புகள், GI குழாய்கள் இன்னும் பலவும். | **ஒப்பந்த/ வேலை வகுதிகள் (W)** |
| | **R 21. வாகன பட்டறிகள்** மோட்டார் வாகனங்கள், மோட்டார் சைக்கிள்கள் மற்றும் முச்சக்கர வண்டிகளுக்கான அனைத்து வகையான பட்டறிகள். | **W 1. கட்டிடங்கள், கட்டமைப்புக்கள் மற்றும் வீதிகளின் புனரமைத்தல் மற்றும் பராமரிப்பு** கட்டிடங்கள், வீதிகள், ஆய்வுகூடங்கள், விடுதிகள், வீடுகள், உணவுக்கூடங்கள் இன்னும் பலவும். |
| | **R 22. புளொக்குகள், இறப்பர் சீல்கள் மற்றும் திகதி முத்திரைகள்** | **W 2. C1 முதல் C9 வரையான** ICTAD **பதிவுபெற்ற ஒப்பந்தக்காரர்கள்** |
| | **R 23. தீயணைப்பு கருவிகள்** தீயணைப்புக் கருவிகள், fire hoses etc., | **W 3. EM1 முதல் EM3 வரையான வகுதி பதிவுபெற்ற வகுதிகள்** |

''தயவு செய்து இயைபுடைய வகுதிக்காக மட்டும் பதிவு செய்யவும்.''

எந்தவொரு விண்ணப்பத்தையும் ஏற்றுக்கொள்ளும் அல்லது நிராகரிக்கும் உரிமையை பல்கலைக்கழகம் தன்னகத்தே கொண்டுள்ளது. பொதுவாக பதிவு செய்யப்பட்ட வழங்குநர்களிடமிருந்தே விலைகள் கோரப்படும். என்றாலும் போட்டி ரீதியிலான விலைகளைப் பெற்றுக்கொள்வதற்கு ஏனைய வளங்களிலிருந்தும் விலைகளைக் கோரும் உரிமையை பல்கலைக்கழகம் தன்னகத்தே கொண்டுள்ளது.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**றுஹுண பல்கலைக்கழகம்,**
**வெல்லமடம, மாத்தறை.**
**2022 நவம்பர் 27ஆம் திகதி.**

Repeat Your ad For Better Offers

CSIAP THE WORLD BANK

# விலைமனுக்களுக்கான அழைப்பு

## இலங்கை சனநாயக சோஷலிச குடியரசு

## கமத்தொழில் அமைச்சு

## தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல்

## காலநிலைக்கு சீரமைவான நீர்ப்பாசன விவசாயத் திட்டம் (CSIAP)

**Project No.: P163742**

1. கமத்தொழில் அமைச்சின் காலநிலைக்கு சீரமைவான நீர்ப்பாசன விவசாயத் திட்ட ஆகுசெலவிற்காக சர்வதேச அபிவிருத்தி சங்கத்திடமிருந்து(IDA) –உலகவங்கி–கடனொன்றை இலங்கை சனநாயக சோஷலிச குடியரசானது பெற்றுள்ளதுடன் இக்கடன் பெறுகைகளின் பகுதி யொன்றை கீழேயுள்ள அட்டவணையில் வழங்கப்பட்டுள்ள ஒப்பந்தங்களுக்கான தகுதியுள்ள பணக்கொடுப்பனவுகளுக்காக செலவழிக்க உத்தேசித்துள்ளது.
2. கீழேயுள்ள அட்டவணையில் விபரிக்கப்பட்டவாறான நிர்மாண வேலைகளுக்காக தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து காலநிலைக்கு சீரமைவான நீர்ப்பாசன விவசாயத் திட்டத்தின் சார்பாக கீழ்மட்ட செயற்றிட்ட பெறுகைக் குழுத் (வடமத்திய மாகாணம்) தலைவர் முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை அழைக்கின்றார்.

| இல. | ஒப்பந்த இல. | வேலையின் விளக்கம் | மதிப்பீடு செய்யப்பட்டுள்ள சிவல் ஆகுசெலவு (மில்) | CIDA பதிவு | மீளளிக்கப்படாத கட்டணம் (இ.ரூ.) | இ. ரூபாவில் விலை மனுப்பிணை பெறுமதி மற்றும் செல்லுபடியாகும் காலம். திகதி |
|---|---|---|---|---|---|---|
| 01. | LK-MOA-249223-CW-RFB/22/23 | அநுராதபுர மாவட்டத்தில் டெகெதிபொத்தானவில் மீஹொண்டவெவவின் புணர்நிர்மாணம் | 105.65 | சி-4 அல்லது மேற்பட்டது | 35,000.00 | 1,060,000.00 – 2023 ஏப்ரல் 18 ஆம் திகதி வரையும். |
| 02.. | LK-MOA-249207-CW-RFQ/22/21 | அநுராதபுர மாவட்டத்தில் புளியங்கடவளவில் புளியங்கடவளவெவவின் புணர்நிர்மாணம் | 62.84 | சி-4 அல்லது மேற்பட்டது | 20,000.00 | 630,000.00 2023 ஏப்ரல் 18 ஆம் திகதியன்று வரையும் |
| 03. | LK-MOA-249191-CW-RFQ/22/19 | அநுராதபுர மாவட்டத்தில் புளியங்கடவளவில் பண்டாரவெவவின் புணர்நிர்மாணம் | 20.35 | சி-6 அல்லது மேற்பட்டது | 12,500.00 | 205,000.00 – 2023 மார்ச் 7 ஆம் திகதி வரையும் |
| 04. | LK-MOA-249195-CW-RFQ/22/24 | அநுராதபுர மாவட்டத்தில் டெகெதிபொத்தானவில் கிம்புல்பெட்டியாவவெவவின் புணர்நிர்மாணம் | 71.31 | சி-4 அல்லது மேற்பட்டது | 20,000.00 | 714,000.00 – 2023 ஏப்ரல் 18 ஆம் திகதி வரையும் |
| 05. | LK-MOA-249197-CW-RFQ/22/22 | அநுராபுர மாவட்டத்தில் புளியங்கடவளவில் பஹலவெகுளத்தின் புணர்நிர்மாணம் | 24.99 | சி-6 அல்லது மேற்பட்டது | 12,500.00 | 250,000.00 – 2023 மார்ச் 7 ஆம் திகதி வரையும் |
| 06. | LK-MOA-249202-CW-RFQ/22/20 | அநுராதபுர மாவட்டத்தில் தெமெட்டவெவவிலுள்ள வஸ்ஸல்லகமகுளத்தின் புணர்நிர்மாணம் | 18.99 | சி-6 அல்லது மேற்பட்டது | 12,500.00 | 190,000.00 – 2023 மார்ச் 7 ஆம் திகதி வரையும் |

3. விலைமனுக் கோரலானது தேசிய போட்டி ரீதியிலான விலைமனுக்கோரல் மூலம் நடாத்தப்படும்.
4. ஆர்வமுள்ள விலைமனுதாரர் மேலதிக தகவலை அநுராதபுரம், பண்டாரநாயக்க மாவத்தை, இல. 596/15, செயற்றிட்ட பிரதி பணிப்பாளரின் அலுவலகம் (வட மத்திய மாகாணம்), காலநிலைக்கு சீரமைவான நீர்ப்பாசன விவசாய திட்ட, செயற்றிட்ட பிரதி பணிப்பாளரிடமிருந்து பெற்று (தொலைபேசி இல.: 025-2054424) அதே இடத்தில் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் விலைமனுக்கோரல் ஆவணங்களை இலவசமாக பரீட்சிக்கலாம்.
5. ஒப்பந்தத்தை பெறுவதற்கான தகுதிக்காக, சித்திகரமான விலைமனுதாரர் அபகீர்த்தியானோர் பட்டியலில் சேர்க்கப்படாதவராகவும் விலைமனுக்கோரல் ஆவணத்தில் வழங்கப்பட்டுள்ள தேவைப்படுத்தல்களை பூர்த்தி செய்பவராகவுமிருத்தல் வேண்டும். மேலும், சித்திகரமான விலைமனுதாரர் மேலேயுள்ள அட்டவணையில் குறிப்பிட்டுள்ளவாறு நீர்ப்பாசனம் மற்றும் வடிகாலமைப்பு கால்வாய்களின் கீழ் நிர்மாணம் கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையுடன் செல்லுபடியாகும் தன்மையிலுள்ள பதிவுத் தரத்தைக் கொண்டிருத்தல் வேண்டும். விலைமனுதாரர்கள் ஒரு ஒப்பந்தத்திற்கு மேற்பட்ட எண்ணிக்கையில் விலைமனுக்களை சமர்ப்பிக்க இயலுமென்றாலும் ஒப்பந்தக்காரர்களின் நிதியிடல் மற்றும் ஏனைய கொள்ளளவு வரையறைகளுக்கமைவாகவே தெரிவுகள் மேற்கொள்ளப்படும்.
6. 2022 நவம்பர் 28 ஆம் திகதியிலிருந்து 2022 டிசம்பர் 20 ஆம் திகதியன்று வரையும் வேலை நாட்களில் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 2 மணி வரையும் மீளளிக்கப்படாத கட்டணத்தை ரொக்கப் பணத்தில் மாத்திரம் செலுத்திய பின்னர் (தொகைக்காக மேலேயுள்ள அட்டவணையை தயவு செய்து பார்வையிடவும்) மேலேயுள்ள 4 ஆம் பந்தியிலுள்ள முகவரிக்கு செயற்றிட்ட பிரதிப் பணிப்பாளருக்கு தலைப்புக் கடிதத்தில் (மூலப்பிரதி) எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம் ஆங்கில மொழியிலுள்ள விலைமனு ஆவணத்தை தகுதியுள்ள விலைமனுதாரர்களினால் கொள்வனவு செய்யப்படலாம்.
7. மேலேயுள்ள 4 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள இடத்தில் 2022 டிசம்பர் 13 ஆம் திகதியன்று மு.ப. 9.30 மணிக்கு விலைமனு முன்னோடிக் கூட்டமும் அதனைத் தொடர்ந்து தளவிஜயமும் ஒழுங்கு படுத்தப்படும். வளமுள்ள விலைமனுதாரர்கள் அவர்களின் சொந்த ஆகுசெலவில் உரித்தான அலுவலர்களின் உதவியுடன் தளங்களை பரீட்சிக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.
8. மேலேயுள்ள அட்டவணையில் குறிப்பிட்டுள்ளவாறான பெறுமதி மற்றும் திகதிக்கும் விலைமனுக்கோரல் ஆவணத்தில் விதித்துரைக்கப்பட்டுள்ள நிபந்தனையற்ற விலைமனு உத்தரவாதத்துடன் விலைமனுக்கள் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். குறித்துரைக்கப்பட்டவாறான செல்லுபடியாகும் தன்மையிலுள்ள விலைமனு உத்தரவாதத்துடன் இல்லாத எந்தவொரு விலைமனுவும் பதிலிறுக்கப்படவில்லையென கருதப்பட்டு எந்தவொரு ஐயவினாவுமின்றி நிராகரிக்கப்படும்.
9. விலைமனுக்கோரல் ஆவணங்களின் அனைத்து பக்கங்களும் விலைமனுதாரரினால் கையொப்பமிட்டு அவரது முத்திரை பதிக்கப்படல் வேண்டும்.
10. விலைமனுக்கள் மூலப்பிரதி மற்றும் நகல்பிரதியென சமர்ப்பிக்கப்படல் வேண்டும். மூலப்பிரதி மற்றும் நகல்பிரதியானது தனித்தனியான உறைகளில் சேர்க்கப்பட்டு முத்திரை பொறிக்கப்பட்டு முறையே ''மூலப்பிரதி'' மற்றும் ''நகல்பிரதியென'' குறிப்பிடப்படல் வேண்டும். அதன் பின்னர் அவ்விரண்டு தபாலுறைகளும் தனியொரு தபாலுறையில் சேர்க்கப்பட்டு, முத்திரை பொறிக்கப்பட்டு தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் வேலையின் விபரம் மற்றும் ஒப்பந்த இலக்கம் ஆகியன குறிப்பிடப்படல் வேண்டும்.
11. 2022 டிசம்பர் 20 ஆம் திகதியன்று பி.ப. 2 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் பதிவுத் தபாலில் தலைவர், சிறிய செயற்றிட்ட பெறுகைக் குழு (வட மத்திய மாகாணம்), காலநிலைக்கு சீரமைவான நீர்ப்பாசன விவசாயத் திட்டம், செயற்றிட்ட பிரதிப் பணிப்பாளரின் அலுவலகம் (வட மத்திய மாகாணம்), இல. 596/15, பண்டாரநாயக்க மாவத்தை, அநுராதபுரம் என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும் அல்லது அதே முகவரியில் இந்த நோக்கத்திற்காக வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும்.
12. விலைமனுக்களை பெற்றுக் கொள்ளல் 2022 டிசம்பர் 20 ஆம் திகதியன்று பி.ப. 2 மணிக்கு மூடப்படும். தாமதமான விலைமனுக்கள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது. விலைமனுக்கள் அவைகளை மூடிய பின்னர் உடனடியாகவே சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் திறக்கப்படும்.

**தலைவர்,**
**சிறிய செயற்றிட்ட பெறுகைக் குழு (வட மத்திய மாகாணம்),**
**காலநிலைக்கு சீரமைவான நீர்ப்பாசன விவசாய திட்டம்,**
**செயற்றிட்ட பிரதி பணிப்பாளரின் அலுவலகம் (வட மத்திய மாகாணம்),**
**இல. 596/15, பண்டாரநாயக்க மாவத்தை,**
**அநுராதபுரம்.**
**திகதி: 2022.11.27.**

For classified advertisements and for replies
received in response to advertisements published under Lake House box numbers
Manager front office
+94 112429341
Hotline 1949

Marriage Proposals
in the
Sunday Observer
Is the best way to fulfil your Future Dreams

## இலங்கை சுற்றுலாத்துறை மற்றும் ஹோட்டல் முகாமைத்துவத்திற்கான நிறுவனம் (SLITHM)

# 2023 ஆம் ஆண்டிற்காக வழங்குநர்களை பதிவு செய்தல்

2023 ஆண்டிற்காக பண்டங்கள் மற்றும் சேவைகளை வழங்குவதற்காக சுற்றுலாத்துறை மற்றும் ஹோட்டல் முகாமைத்துவத்திற்கான இலங்கை நிறுவனத்துடன் தம்மை பதிவு செய்துகொள்ள விரும்பும் அரசாங்க திணைக்களங்கள், அரசாங்கத்திற்கு உரிமையுள்ள வர்த்தக நிறுவனங்கள், பொது கூட்டுத்தாபனங்கள், புகழ்வாய்ந்த வழங்குநர்கள், உள்ளூர் முகவர்கள், உற்பத்தியாளர்கள், விநியோகஸ்தர்கள், வியாபார அமைப்புக்கள் மற்றும் ஒப்பந்தக்காரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் அழைக்கப்படுகின்றன.

ஒவ்வொரு வகுதிக்கும் தனித்தனியான விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டுமென்பதுடன் ஒரு வகுதிக்கு மேற்பட்ட வகுதிக்கு பதிவு செய்தல் தேவைப்படின், ஒரு உறையின் கீழ் தனித்தனியான விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். ஒவ்வொரு வகுதிக்கும் பதிவு செய்தலுக்காக மீளளிக்கப்படாத வைப்புத் தொகையாக 1,000 ரூபா செலுத்தப்படல் வேண்டும். சுற்றுலாத்துறை மற்றும் ஹோட்டல் முகாமைத்துவத்திற்கான இலங்கை நிறுவனத்தின் பெயரில் இலங்கை வங்கி கூட்டுரு கிளையிலுள்ள 7120156 என்ற கணக்கிலக்கத்திற்கு பணக்கொடுப்பனவு செலுத்தப்பட்ட பணவரவுத்துண்டின் பிரதியொன்று விண்ணப்பங்களுடன் இணைக்கப்படல் வேண்டும். காசோலைகள் மற்றும் காசுக் கட்டளைகள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

ஏதிர்மாறான விண்ணப்பங்கள் பரிசீலனை செய்யப்பட மாட்டாது. விண்ணப்பதாரிகள் அவர்களின் வியாபார பதிவு சான்றிதழில் தோன்றும் வியாபாரத்திற்கு மாத்திரமே பதிவில் குறிப்பிடப்படல் வேண்டும். பதிவு செய்தலுக்கான விண்ணப்பங்கள் எமது **https://slithm.edu.lk** என்ற இணையதளத்தினூடாக பதிவிறக்கம் செய்யப்படலாம்.

எந்தவொரு விண்ணப்பத்தையும் ஏற்றுக் கொள்வதற்கும் அல்லது நிராகரிப்பதற்கான உரிமையை SLITHM கொண்டுள்ளது. ஒவ்வொரு வகுதிக்குமான விலைமனுக்கோரல்கள் சாதாரணமாக பதிவு பெற்ற வழங்குநர்களிடமிருந்தே கோரப்படும். ஆனாலும் தேவைப்படுமிடத்து போட்டிரீதியிலான முன்வைப்புக்களை பெறுவதற்காக ஏனையவர்களிடமிருந்தும் விலைமனுக்கோரல்களை கோருவதற்கான உரிமையை SLITHM கொண்டுள்ளது.

2023 ஆண்டிற்காக பதிவு பெற்ற வழங்குநர்கள் ஆகக் குறைந்தது 30 நாட்கள் காலப்பகுதிக்கு கடன் வசதிகளை வழங்குவதற்கு உடன்படல் வேண்டும். இந்த நிபந்தனையானது மீறப்படின் அல்லது பதிவு செய்தலின் பின்னர் எந்தவொரு வழங்குநரும் இரண்டு தொடர்ச்சியான தடவைகளுக்கு அதிகமாக SLITHM இற்கு பதிலளிக்காவிடின், அவ்வாறான வழங்குநர்கள் பதிவு செய்தலிலிருந்து நீக்கப்படுவார்கள்.

2022 டிசம்பர் 26 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் அனைத்து விண்ணப்பங்களும் தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் **"Application for the Registration of Suppliers 2023"** என குறிப்பிடப்பட்டு உதவிப் பணிப்பாளர் (பெறுகை), இலங்கை சுற்றுலாத்துறை மற்றும் ஹோட்டல் முகாமைத்துவ நிறுவனம், இல. 78, காலி வீதி, கொழும்பு-03 என முகவரியிடப்பட்டு பதிவுத் தபாலில் அனுப்பப்படல் வேண்டும் அல்லது நேரடியாகவே ஒப்படைக்கப்படல் வேண்டும்.

விண்ணப்பதாரிகள் வியாபார பதிவுசெய்தல் சான்றிதழின் பிரதியொன்றையும் அனுப்புதல் வேண்டும். வழங்குநர் பெசேவ இற்கு உட்பட்டவரெனின், சான்றழிக்கப்பட்ட பெசேவ இன் சான்றிதழானது விண்ணப்பத்துடன் இணைக்கப்படல் வேண்டும். மேலே திட்டவட்டமாக குறிப்பிட்டுள்ள சான்றிதழை சமர்ப்பிக்காதவர்களின் விண்ணப்பங்கள் மற்றும் பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

இணக்கம் காணப்படாத/ தெளிவுறுத்தலுக்குரிய விடயங்கள் காணப்படின், பெறுகைக் குழுவின் தலைவரின் தீர்மானமே இறுதியும் முடிவுள்ளதாகவுமிருக்கும்.

மேலதிக விபரங்களுக்கு, தயவு செய்து 011 2208300 நீடிப்பு 254 என்ற தொலைபேசி இலக்கத்தினூடாக தயவு செய்து பெறுகைக்கான உதவி பணிப்பாளருடன் தொடர்பு கொள்ளவும்.

**பணிப்பாளர் நாயகம்,**
**இலங்கை சுற்றுலாத்துறை மற்றும் ஹோட்டல் முகாமைத்துவ நிறுவனம்,**
**இல.: 78, காலி வீதி,**
**கொழும்பு-03.**

# களனி பல்கலைக்கழகம்

## மருத்துவ பீடம் - விலைமனுக்களுக்கான அழைப்பு

1. கீழே விபரிக்கப்பட்டவாறு தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து களனி பல்கலைக்கழக மருத்துவ பீடத்தின் சார்பாக, திணைக்கள பெறுகைக் குழுத் தலைவர் முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை அழைக்கின்றார்.

| ஒப்பந்த இலக்கம் | ஒப்பந்தப் பெயர் | மதிப்பீடு செய்யப்பட்டுள்ள ஆகுசெலவு | விலைமனுப் பிணை | மீளளிக்கப்படாத கட்டணம் |
|---|---|---|---|---|
| UOK/FM/DO/02/ CONS/21/2/02 | Supplying & Installing Lightning Surge Protecting System for Electrical Main Panels of existing building at Medical Faculty, University of Kelaniya | 3.0 மில்லியன் | 30,000 ரூபா | 2,000 ரூபா |

2. விலைமனுக்கோரலானது தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறை மூலம் நடாத்தப்படும்.
3. ஒப்பந்தத்தை வழங்குவதற்கான தகுதிக்காக, சித்திகரமான விலைமனுதாரர் அபகீர்த்தியானோர் பட்டியலில் சேர்க்கப்படாதவராகவும் பின்வரும் தேவைப்பாடுகளை பூர்த்தி செய்பவராகவுமிருத்தல் வேண்டும்.
   **ICTAD** பதிவு: **(EM) ICTAD** தரம் ஈஎம் 5 அல்லது மேற்பட்டது
4. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவலை களனி பல்கலைக்கழக வேலைகள் திணைக்கள வேலைகள் பொறியியலாளரின் அலுவலகத்திலிருந்து (தொலைபேசி: 011-2903164) பெற்று, 2022 நவம்பர் 28 ஆம் திகதியிலிருந்து 2022 டிசம்பர் 19 ஆம் திகதி வரையும் மு.ப. 9 மணியிலிருந்து மதியம் 12 மணி வரையும் பி.ப. 1.30 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் இறாகம-11010, தலகொல்ல பாதை, களனி பல்கலைக்கழக, மருத்துவ பீட சிரேஷ்ட உதவிப் பதிவாளரிடமிருந்து விலைமனுக்கோரல் ஆவணங்களை பரீட்சிக்கலாம்.
5. 2022 நவம்பர் 28 ஆம் திகதியிலிருந்து 2022 டிசம்பர் 19 ஆம் திகதி வரையும் மு.ப. 9 மணியிலிருந்து மதியம் 12 மணி வரையும் பி.ப. 1.30 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் மேலேயுள்ள அட்டவணையில் குறித்துரைக்கப்பட்டுள்ள மீளளிக்கப்படாத கட்டணத்தை ரொக்கப் பணத்தில் மருத்துவ பீட சிறாப்பரிடம் செலுத்திய பின்னர், இறாகம-11010, தலகொல்ல பாதை, களனி பல்கலைக்கழக, மருத்துவ பீட சிரேஷ்ட உதவிப் பதிவாளருக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம், ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களை ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் கொள்வனவு செய்யப்படலாம்.
6. 2022 டிசம்பர் 20 ஆம் திகதியன்று பி.ப. 2 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் இறாகம-11010, தலகொல்ல பாதை, களனி பல்கலைக்கழக, மருத்துவ பீட சிரேஷ்ட உதவிப் பதிவாளரின் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் விலைமனுக்கள் சேர்க்கப்படல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது. விலைமனுக்கள் அவைகளை மூடும் நேரத்தின் பின்னர் சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் விரைவாகவே திறக்கப்படும்.
7. அனைத்து விலைமனுக்களும் விலைமனுப்பிணையொன்றுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

**தலைவர்,**
**பெறுகைக் குழு,**
**களனி பல்கலைக்கழகம்,**
**களனி.**
27.11.2022.

* Trusted Marketplace of Classified Advertisers...
SUNDAY OBSERVER adz Classified
Call :- Ramani - 077 7 278 948/ 011 2 429 347 | Piyumi - 011 2 429 383 | Gayani - 011 2 429 342/ 343
077 7 270 067 E-mail - classified@lakehouse.lk
Green Light for Online Transfer
For 15 Words Rs. 500/-
(Additional each word Rs. 20/-)
Lake House Branch Acc. No. 000000377

# கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகார சபை

## (நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு)

## 2013இன் 01ஆம் இலக்கம் கடல்சார் சூழல் பாதுகாப்பு (கடலுக்குள் கொட்டுவதற்கான அனுமதிப்பத்திரம் வழங்குதல்) கட்டளையை அமுல்படுத்துதல்

2008ஆம் ஆண்டின் 35ஆம் இலக்க கடல் மாசடைவதைத் தடுக்கும் சட்டத்தின் கீழ் அமைக்கப்பட்டுள்ள கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகார சபை, சட்டத்தின் பிரமாணங்களுக்கமைய கடலுக்குள் கழிவுப் பொருட்களை கொட்டுதல் / வெளியேற்றுதலைக் கட்டுப்படுத்துவதற்காக 2013-06-12ஆம் திகதி முதல் அமுலாகும் வகையில் 2013இன் 01ஆம் இலக்க கடல்சர் சூழல் பாதுகாப்பு (கடலுக்குள் கொட்டுவதற்கான அனுமதிப்பத்திரம் வழங்குதல்) கட்டளை பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. (இந்தக் கட்டளை 2014-07-09ஆம் திகதிய இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் அனுமதிக்கப்பட்டுள்ளது)

இந்தக் கட்டளையின் பிரகாரம் இலங்கையின் உள்நாட்டு நீர் நிலைக்கு அல்லது வேறு ஏதாவது கடல்சார் வலயத்திற்கு அல்லது இலங்கையின் இதற்கு முன் கடற்கரை வலயம் மற்றும் கடற்கரை (மத்திய உயர்வற்றுப் பெருக்கு எல்லையிலிருந்து 300 மீற்றர் தரையை நோக்கி, மத்திய அலை அடங்கும் எல்லையிலிருந்து 02 கிலோ மீற்றர் கடலை நோக்கியும் மற்றும் ஆறுகள், வாய்க்கால்கள், களப்புகள் கடலுடன் கலக்கும் இடத்திலிருந்து தரையை நோக்கிய 02 கிலோ மீற்றர் வரையான பிரதேசத்திற்குள் குறித்த ஆறு, வாய்க்கால் அல்லது களப்பு) வலயத்திற்குள்

1. ஹோட்டல், உணவகம் மற்றும் ஏனைய கைத்தொழில்களின் கழிவுகளை அப்புறப்படுத்தல், கழிவு நீர், குளிரூட்டப்பட்ட நீரை அப்புறப்படுத்தும் போது
2. அகழப்பட்ட பொருட்கள், கழிவுநீர் சேறுகள், மீன் கழிவுகள் அல்லது மீன்களை பதப்படுத்தும் செயற்பாடுகளின் போதும் எஞ்சும் பொருட்களை அப்புறப்படுத்தும் போது
3. இயற்கைத் தாக்கத்தின் செயலிழப்புகள், அசேதன, புவிச்சரிதவியல் பொருட்கள், உருக்கு, கொங்கிறீட் அல்லது அதற்குச் சமமான பாதிப்பை ஏற்படுத்தாத ஆரம்ப உள்ளடக்கப் பொருட்களை அப்புறப்படுத்தும் போது
4. படகுகள் அல்லது விமானங்கள் அல்லது மனிதனால் தயாரிக்கப்பட்ட ஏனைய உலோகக் கட்டமைப்புகளை அப்புறப்படுத்தும் போது அனுமதிப்பத்திரத்தைப் பெற்றுக்கொள்ளல் கட்டாயமாகும். இதன் பிரகாரம் கட்டளைக்கு ஏற்புடையதாகும் சகல நிறுவனங்கள் / ஹோட்டல் / உணவகங்கள் / வீட்டுக் கட்டிடத் தொகுதிகளுக்கு 2023ஆம் வருடத்திற்கான அனுமதிப்பத்திரத்தைப் பெற்றுக்கொள்ளல் / நாளதுதரவேற்றம் செய்தலை 2023-01-31ஆம் திகதிக்கு முன் செய்துகொள்ளல் வேண்டும்.

**அனுமதிப்பத்திரத்தைப் பெற்றுக்கொள்ளல்**

1. www.mepa.gov.lk எனும் இணையதளத்தில் நிகழ்நிலை ஊடாக கடலுக்குள் கழிவுப்பொருட்களைக் கொட்டுதலுக்கு இயைபான அறிவுறுத்தல் கோவையை (user manual) தரவிறக்கம் செய்யவும்.
2. https://sdpms.mepa.lk எனும் இணையதள முகவரியின் ஊடாக அறிவுறுத்தலில் காட்டப்பட்டுள்ள வகையில் உங்கள் நிறுவனத்தைப் பதிவு செய்துகொள்ளும் விண்ணப்பப் படிவத்தைப் பூர்த்தி செய்து அனுப்புதல் வேண்டும்.
3. கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகார சபையின் பின்வரும் மாவட்ட அலுவலகங்களிலிருந்து விண்ணப்பப் படிவங்களைப் பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன் www.mepa.gov.lk எனும் இணைய தளத்திலிருந்தும் தரவிறக்கம் செய்து கொள்ளலாம்.

**விண்ணப்பப் படிவத்தைப் பெற்றுக்கொள்ளக்கூடிய மாவட்ட அலுவலகங்கள்**

**கொழும்பு மாவட்ட அலுவலகம்,**
கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகார சபை,
இல. 177, நாவல வீதி, கொழும்பு-05.
தொலைபேசி: 011-2554006

**கம்பஹா மாவட்ட அலுவலகம்,**
கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகார சபை,
இல. 72/3, கொழும்பு வீதி,குரண, கட்டுநாயக்க.
தொலைபேசி: 031-2228606

**களுத்துறை மாவட்ட அலுவலகம்,**
கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகார சபை,
இல. 28, கங்கபட வீதி, களுத்துறை தெற்கு.
தொலைபேசி: 037-2221790

**புத்தளம் மாவட்ட அலுவலகம்,**
கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகார சபை,
நுக செவன பீ பிரிவு,
வடமேல் மாகாண வள அபிவிருத்தி அதிகார சபை கட்டிடம்,
சம்பல, காக்காப்பள்ளி.
தொலைபேசி: 032-2222865

**காலி மாவட்ட அலுவலகம்,**
கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகார சபை,
இல. 426/B, கொழும்பு வீதி, தடல்ல, காலி
தொலைபேசி: 091-2233547

**மாத்தறை மாவட்ட அலுவலகம்,**
கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகார சபை,
இல. 18, வில்மட் பாலசூரிய மாவத்தை,
நூபே, மாத்தறை.
தொலைபேசி: 041-2234250

**ஹம்பாந்தோட்டை மாவட்ட அலுவலகம்,**
கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகார சபை,
இல. 46, இரண்டாம் மாடி,
ருஹுண மாகம்புர நிர்வாகக் கட்டிடத் தொகுதி,
சிரிபோபுர, ஹம்பாந்தோட்டை.

**திருகோணமலை மாவட்ட அலுவலகம்,**
கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகார சபை,
மாவட்டச் செயலகம்,
4ம் மைல் கல், சீன துறைமுகம், திருகோணமலை.
தொலைபேசி: 026-2050805

**அம்பாறை மாவட்ட அலுவலகம்,**
கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகார சபை,
பிரதேச சபைக் கட்டிடம், கிராம சபை, வீதி,
தம்பிலுவில் - 2.
தொலைபேசி: 067-2265416

**மட்டக்களப்பு மாவட்ட அலுவலகம்,**
கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகார சபை,
இல. 03, பிள்ளையார் கோயில் வீதி,
1ஆம் குறுக்குத் தெரு, மட்டக்களப்பு.
தொலைபேசி: 065-2224979

**யாழ்ப்பாண பிராந்திய அலுவலகம்,**
கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகார சபை,
மாவட்ட செயலகம்,
யாழ்ப்பாணம்,
தொலைபேசி: 021-2212663

**மன்னார் மாவட்ட அலுவலகம்,**
கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகார சபை,
மாவட்ட செயலகம்,
மன்னார்.
தொலைபேசி: 023-2251758

**கிளிநொச்சி பிராந்திய அலுவலகம்,**
கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகார சபை,
இல. 05, புகையிரதநிலைய வீதி,
கிளிநொச்சி.
தொலைபேசி: 021-2282101

மேற்குறிப்பிடப்பட்ட ஒழுங்குவிதிகளை மீறும் நிறுவனங்கள் / நபர்களுக்கு எதிராக 2008இன் 35ஆம் இலக்க கடல் மாசடைவதைத் தடுக்கும் சட்டத்தின் பிரகாரம் சட்ட ரீதியான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். அனுமதிப்பத்திரம் இல்லாமல் கடல் சுற்றாடலுக்குள் கழிவுப் பொருட்களை விடுதல் 4 முதல் 15 மில்லியன் ரூபா வரையில் அபராதம் விதிக்கக்கூடிய குற்றமாகும்.

**தலைவர்,**
**கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகாரசபை,**
**தலைமை அலுவலகம், 177, நாவல வீதி, நாராஹென்பிட்டி,**
**கொழும்பு 05.**

# மஹாநாம கல்லூரி

## கொழும்பு-03

# கேள்வி அறிவித்தல்

### கொழும்பு – 03, மஹாநாம கல்லூரியின் 2022/2023ஆம் ஆண்டிற்கான கல்லூரி பாதுகாப்புச் சேவைக்கான கேள்விகள் அழைக்கப்படுகின்றன.

ரூபா 5000/= ஓர் மீளளிக்கப்படாத கட்டணத்தை செலுத்திய பின்னர் வார நாட்களில் நவம்பர் 28 முதல் டிசம்பர் 12 வரை மு.ப. 8.30 முதல் பி.ப. 1.30 இடையில் கல்லூரி அலுவலகத்திலிருந்து விண்ணப்பங்களைப் பெற்றுக்கொள்ள முடியும்.

கேள்விகள் ஓர் பொறியிடப்பட்ட கடித உறையில் **"தனிப்பட்டது - கல்லூரி பாதுகாப்புக் கேள்வி"** என்று குறிப்பிடப்பட்டு மு.ப. 8.30 முதல் பி.ப. 1.30 வரை வார நாட்களில் அதிபரின் அலுவலகத்திற்கு கேள்விகளை சமர்ப்பித்தல் வேண்டும்.

கேள்விகள் டிசம்பர் 12ஆம் திகதி ந.ப. 12.00 இற்கு மூடப்பட்டு, கல்லூரி அலுவலகத்தில் பி.ப. 12.30 இற்கு திறக்கப்படும்.

**கௌரவ தலைவர்/அதிபர்,**
**பாடசாலை அபிவிருத்தி குழு,**
**மஹாநாம கல்லூரி, கொழும்பு-03.**

## துறைமுகங்கள், கப்பற்றுறை மற்றும் விமான சேவைகள் அமைச்சு

# விமான விபத்து புலனாய்வாளர்கள்

துறைமுகங்கள், கப்பற்றுறை மற்றும் விமான சேவைகள் அமைச்சு, 2 ஆண்டுகளுக்கு நீடிக்கக்கூடிய இடைக்கால பொறிமுறையாக விமான விபத்து புலனாய்வாளர்களின் குழாம் ஒன்றை அமைப்பதற்கு பொது விமானப் போக்குவரத்தில் விமான விபத்து விசாரணைத் துறையில் சிறந்த தகுதிகள் மற்றும் விரிவான அனுபவமுள்ள, ஆற்றல் மிக்க, ஆர்வமுள்ள மற்றும் சுய-உந்துதல் கொண்ட பணியாளர்களைத் தேடுகிறது.

**ஒவ்வொரு விண்ணப்பதாரரும்:**

- இலங்கைப் பிரஜையாக இருக்க வேண்டும்.
- 45 வயதிற்கு குறையாமலும் 70 வயதுக்கு மேற்படாமலும் இருக்க வேண்டும்.
- கடமைகளை மேற்கொள்வதற்கு உடல் மற்றும் உள ரீதியான தகுதியைப் பெற்றிருக்க வேண்டும்.
- இலங்கை சிவில் விமான போக்குவரத்து அதிகாரசபையின் தற்போதைய பணியாளராக இருக்கக்கூடாது.

**பிற காரணிகள்:**

- பணி ஒப்படைப்பு அடிப்படை மற்றும் தற்காலிகமான பதவியாக இருக்கும்.
- விமான விபத்து புலனாய்வு அனுபவம் அல்லது அதை ஒத்த தொழில் அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும் (விமான இயக்கம்/ விமான போக்குவரத்து கட்டுப்பாடு/ வானிலை ஆய்வு/ பவர் பிளாண்ட்/ விமான முறைமை/ விமான கட்டமைப்பு/ கெபின் செயல்பாடுகள் போன்றவை)

ஆர்வமுள்ள தொழில்சார் வல்லுநர்கள் மேலதிக விவரங்கள் மற்றும் மாதிரி விண்ணப்பப் படிவங்களுக்கு பின்வரும் இணைய தளங்களைப் பார்வையிட அழைக்கப்படுகின்றனர்.

**www.portmin.gov.lk**
**www.caa.lk**
**www.airport.lk**

**செயலாளர்,**
**துறைமுகம், கப்பற்றுறை மற்றும் விமான சேவைகள் அமைச்சு,**
**இல. 19, சைத்திய வீதி, கொழும்பு 01.**

தினகரன் வாரமஞ்சரி
# சிறு விளம்பரங்கள்
சிறு விளம்பரதாரர்களின் நம்பிக்கையான சந்தை
Hotline - 011 2 429 342 / 011 2 429 343
Fax - 011 2 429 375 / 011 2 429 380 | E-mail - classified@lakehouse.lk

## வேலைவாய்ப்பு

### 308 வெற்றிடங்கள் சந்தைப்படுத்தல்

18 40 வயதிற்கிடைப்பட்ட சுப்பர் மார்க்கெட் அறிவுடைய விற்பனை உதவியாளர் ஆண்/ பெண் மற்றும் சுப்பவைசர்கள் தேவை. கவர்ச்சிகரமான சம்பளம். நிவ் வீரசிரி சுப்பர், இதிகொல்ல, கம்பஹா. 077354440 3.
069378

### 311 வெற்றிடங்கள் தகவல் தொழில்நுட்பம்

கம்பஹா இதிகொல்ல சுப்பர் மார்க்கெட் இற்கு 18 30 வயதிற்கிடைப்பட்ட சா/ தர தோற்றியுள்ள கண னி தரவு செயற்பாட்டாளர்கள் தேவை. (சேவைக்கு தேவையான பயிற்சி வழங்கப்படும்) நிவ் வீரசிரி சுப்பர், இதிகொல்ல, க ம்பஹா. 0773544 403.
069360

### 318 வெற்றிடங்கள் டிரைவர்கள்

அனுபவமுள்ள கனரக வாகன சாரதிகள் தேவை. 35 55 வயதிற்கு இடைப்பட்ட தூரப் பிரதேசங்கள் விரும்பத்தக்கது. உணவு, தங்குமிடம் உ ண்டு. நிவ் வீரசிரி சுப்பர், இதிகொல்ல, கம்பஹா . 0773544 403.
069363

### 319 வெற்றிடங்கள் வீட்டு வேலையாளர்கள்

கலவான சிங்கள மருத்துவ தம்பதியினரின் வீட்டில் தங்கி 9 மாத குழந்தையை கவனித்துக் கொள்ள மற்றும் வீட்டு வேலைகளுக்கு உதவுவதற்கு 40 60 வயதிற்கிடைப்பட்ட ஆரோக்கியமான, கருணையுள்ள பெண்ணை தேடுகின்றனர். சம்பளம் பேசித் தீர்க்கலாம். 0770180416, 0767133109.
071269

பணிப்பெண்கள், வீட்டுப் பணிப்பெண்கள் மற்றும் சுத்திகரிப்பாளர்கள் தேவை. 35 வயதிற்கு குறைவானவர்கள். சிறந்த சம்பளம். வேலை நிபந்தனைகள். தொடர்பு 75/ 1, W.A. சில்வா மாவத்த, கொழும்பு06. அழையுங்கள் 25 91169, 0777542 447, 0755091 379.
067425

கொழும்பு பெண் வைத்தியர் ஒருவரின் இல்லத்தில் தங்கிப் பணியாற்றுவதற்கு நடுத்தர வயது பெண்ணொருவர் தேவை. 0716669333.
071900

### 323 வெற்றிடங்கள் தொழிலாளர்கள்

கொழும்பு, பொரளையில் அமைந்துள்ள டைல்ஸ் க ளஞ்சியத்திற்கு 20 35 வயதிற்கு இடைப்பட்ட ஆண் தொழிலாளர்கள் கொழும்புக்கு அருகில் தேவை. சாரதி அ னுமதிப் பத்திரம் உள்ளவர்களுக்கு முன்னுரிமையளிக்கப்படும். அழையுங்கள் 0716390068/ 0777744360/ 0115863076
071762

### 325 தொழில்துறை பொது

கம்பஹா இதிகொல்ல சுப்பர் மார்க்கெட் ஒன்றிற்கு 18 30 வயதிற்கிடைப்பட்ட அடிப்படை கணனி அறிவுடைய ஆண்/ பெண் காசாளர்கள் தேவை. கம்பஹாவுக்கு அருகில் விரும்பத்தக்கது. நிவ் வீரசிரி சுப்பர், இதிகொல்ல, கம்பஹா. 077354440 3.
069358



## பொது

### 427 டியூஷன்

A/ L CHEMISTRY CEN TRAL PROV- INCE ENGLISH OR TAM IL MEDIUM THE ORY/ REVI- SION/ PAPER அலகு 1 தொடக்கம் 15 வரை விரிவான விளக்கத்துடன் 25 வருடத்திற்கு மேலாக உயர்தர வினாத்தாள் மதிப்பீடு அனுபவமுள்ள ஆசிரியரால் வீடு வந்து கற்பிக்கப்படும். தொடர்புகளுக்கு 0770247190/ 0769162374.
072785

## சொந்த விடயம்

### 503 ஹோட்டல்கள், விடுதிகள்

கண்டி விடுமுறை இல்லம் 5 படுக்கையறைகள், இணைந்த குளியலறைகள், BBQ பிரதேசம். ம ற்றும் SUMMER HUT வார நாட்களில் அல்லது வார இறுதி நாட்களில் வாடகைக்கு. சமையலாளருடன் கிடைக்கும். அழையுங்கள் 0773904255.
072428

## காணி/தோட்டம்

### 628 வீடு சொத்து கேகாலை மாவட்டம் விற்பனைக்கு

பின்னவல சுற்றுலா வலயத்தில் கேகாலை ரம்புக்கனை பாதைக்கு முகப்பாக 83 பேர்ச் காணி விற்பனைக்கு. ஒரு பேர்ச் ரூபா 550, 000/ = லட்சம். 07729 35424 , 07199 19004 .
072159

### 641 வீடு சொத்து கொழும்பு மாவட்டம் வாடகைக்கு குத்தகைக்கு


கல்கிசை வீடு வாடகைக்கு இப்போது உண்டு. கல்கிசை வட்டரப்பொல வீதியில் 3 படுக்கையறை, 3 இணைந்த குளியலறைகள், சாப்பாட்டு பிரதேசம் சமையலறை, வரவே ற்பறை (மண்டபம்), வேலையாள் கழிவ றை வசதிகளுடன். 0778791104.
071557

நுகேகொட, ரேமண்ட் வீதி, லைசியம் சர்வதேச பாடசாலைக்கு நடை தூரத்தி ல் தளபாடங்களுடன் சகல வசதிகளுடனான வீடு வாடகைக்கு. 0332278750, 0777475243.
072500

தினகரன் வாரமஞ்சரி
திருமண சேவைகள்
உங்கள் விளம்பரங்களை பின்வரும் மின்னஞ்சலுக்கு அனுப்பவும
classified@lakehouse.lk
விசாரணைகளுக்கு பின்வருபவர்களுடன் தொடர்பு கொள்ளவும்
அனுஷா - 077 7 278 948 ரமணி - 011 2 129 347
பியுமி - 011 2 429 383 கயனி - 011 2 429 342/343

தினகரன் வாரமஞ்சரி
திருமண சேவைகள்
உங்கள் எதிர்கால கனவுகளை பூர்த்தி செய்வதற்கான சிறந்த வழி.
உங்கள் பணக்கொடுப்பனவை செலுத்துவதற்கான இலகுவான வழி.
முதல் 15 சொற்களுக்கு 300/- ரூபா
இலங்கை வங்கி கணக்கிலக்கம் (லேக்ஹவுஸ் கிளை) - 000000377
*ஒவ்வொரு மேலதிக சொல்லுக்கும் 25 ரூபா
*ஆகக்கூடிய சொற்களின் எண்ணிக்கை 65
ஒன்லைன் மூலமாகவும் செலுத்தலாம்.

தினகரன் வாரமஞ்சரி
# BUDGET adz
It suits your budget
Hot Line - 011 2 429 369 | 011 2 429 368
Fax - 011 2 429 330 / E-mail - adzsuo@gmail.com
Chamara -077 727 0067 / Umanga - 077 727 0845

LAND FOR SALE
IN BATTARAMULLA
22p Residential land,
20ft Access Road,
500m to Pelawatte
junction, Peaceful
Location, Clear Title

0777 258 280,0718 966 383




தானியங்களை அறுவடை செய்யும் இயந்திரம்

நெல் சோளம் அடங்கலான தானியம். காய வைத்து பாவிக்கலாம்.
சுயமாக இயங்கக்கூடியது.
தானியங்களின் தர பாதுகாப்பு.
அனைத்து மாவட்டங்களிலும் நடைமுறைப்படுத்தப்படும்.
விஜேசூரிய மார்க்கட்டிங் சேர்விசஸ் (பிறைவட்) லிமிட்டட்
41/B, ஹொரண பாதை கட்டுவாவல பொரலஸ்கமுவ.
உடன் தொடர்பு: 0714 174 817. தொலைபேசி: 0112 732 962
மின்னஞ்சல்: wijesuriya.p@gmail.com

24 பேர்ச் காணி 2 இணைந்த வீடுகளுடன் ஜா-எல நகரில் விற்பனைக்கு
- கொழும்பு-கட்டுநாயக்க அதிவேக நெடுஞ்சாலைக்கு 500 மீற்றருக்கு குறைவான தூரம்
- கட்டுநாயக்க விமானநிலையத்திற்கு 10 நிமிட பயணம்
- கொழும்பு-நீர்கொழும்பு பிரதான வீதிக்கு 150 மீற்றர் தூரம்
- புகையிரத நிலையத்திற்கு 100 மீற்றர் தூரம்
- வங்கிகள், பாடசாலைகள், புட் சிட்டிகளுக்கு நடை தூரம்
- கே வலயத்திற்கு 10 நிமிட வாகன பயணம்
ஒரு பேர்ச் 2.2 மில்லியன் - விலை பேசித்தீர்க்கலாம்
070 524 70 45
















Land for sale
# Kalutara - Gamagoda, Serupita
40 Perches flat Land at Kalutara for sale.


Please Contact - 076 8 267 482 (9.30am - 4.30pm)

டெயிலர் வெற்றிடங்கள்
ஆண்/பெண்
ஆடைகள்
தைக்கக்கூடிய
(ஆண்) திறமையான
டெயிலர்கள்
தேவை. தங்குமிடம்
வழங்கப்படும். சம்பளம்
பேசித் தீர்க்கலாம்.
டீன்ஸ் டெயிலரிங்
அண்ட் டெக்ஸ்டைல்
இல. 133/30, நாவல
வீதி, நாராஹேன்பிட்டி,
கொழும்பு-05.

தொடர்பு:
077 54 36 300 / 076 70 71 990 / 077 77 95 356



# படித்ததும் பகர்வதும் 120

சிரேஷ்ட சட்டத்தரணி, கலாபூஷணம் ரஷீத் எம் இம்தியாஸ்



## நல்லதை சொல்கிறோம்

### மீண்டும் எச்சரிக்கும் டெங்கு!

இலங்கையில் மீண்டும் டெங்கு நோயின் பரவல் தீவிரமடைந்து வருகிறது. ஜனவரி முதல் கடந்த வாரம் வரை பாதிக்கப்பட்ட டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை 84,083 ஆக அதிகரித்துள்ளதாக சுகாதார அமைச்சின் தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவு தெரிவித்திருக்கிறது. மேலும் நாட்டின் 25 சுகாதார வைத்திய அதிகாரி பிரதேசங்கள் டெங்கு ஆபத்து அதிகமான பிரதேசங்களாக இனங்காணப்பட்டிருக்கிறன.

கொழும்பு மாவட்டத்தில் இத்தொகை 11,364 ஆகவும், கம்பஹா மாவட்டத்தில் 7,803 ஆகவும், கண்டி மாவட்டத்தில் 4,897 ஆகவும் காணப்பட்டுள்ளது. இவற்றோடு களுத்துறை, காலி, கேகாலை, இரத்னபுரி, குருநாகல் மாவட்டங்களிலும் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை அதிகமாக பதிவாகியுள்ளது.

டெங்கு நோய், நுளம்புகளினாலேயே பரவுகிறது. டெங்கு




அதிக வருத்தத்தை தருவதோடு உயிராபத்தையும் விளைவிக்கக் கூடியது. இந் நோயினால் அனைவருக்குமே துன்பம் ஏற்படுகிறது.

இதனால் இவ் இக்கட்டான சூழ்நிலையை ஒவ்வொருவரும் நன்கு புரிந்து கொண்டு, டெங்கு நோய் பரவும் ஆபத்தினை அறிந்து இந்நோயிலிருந்து பாதுகாப்பு பெறுவதற்கான முயற்சிகளை முறையாக மேற்கொள்வது அவசியம். டெங்கு நோய்க்கான அறிகுறிகள் அவதானிக்கப்படும் போதும், நீடித்த காய்ச்சலின் போதும், காலம் தாழ்த்தாது உடனடியாக வைத்தியரை நாடி உரிய சிகிச்சைகளையும் ஆலோசனைகளையும் பெற்றுக்கொள்வது அவசியம். இதன்மூலம் நோயின் பாதிப்புக்குள்ளானவர்கள் பாதுகாக்கப்படுவதோடு இந்நோய் ஏனையோருக்கு பரவுவதை தடுத்துக் கொள்ளவும் வாய்ப்பு ஏற்படும்.

டெங்கு நோயின் பாதிப்பையும் அது பரவுகின்ற தீவிரத்தையும், நன்கு புரிந்து, முன்னெச்சரிக்கையோடு நடந்து, டெங்கின் தாக்கத்திலிருந்து பாதுகாப்புப் பெற ஒவ்வொருவரும் முயற்சிப்பது தனிமனித கடமை மட்டுமல்லாது நம் சூழ உள்ளோருக்கும், நாட்டுக்கும் செய்ய வேண்டிய நற்பணியுமாகும்.

கொரோனாவிலிருந்து தம்மை பாதுகாத்துக்கொள்ள தீவிர பாதுகாப்பு நடவடிக்கைகளை எடுத்தது போன்று டெங்கிலிருந்து எம்மையும், எம் சூழலில் இருப்பவர்களையும் மட்டுமன்றி அனைவரையும் பாதுகாப்பதற்கான முயற்சிகளை மேற்கொள்வது அவசியம்.

## நெஞ்சுக்கு நீதி

தொற்று நோய்கள் பரவுவதில் பங்குண்டு எமக்கு
தொல்லைதான் எல்லோர்க்கும் புரியுதா உனக்கு
சுற்றுச்சூழலில் சுத்தமதை பேணினால் யார்க்கும்
சுகநலம் கிடைத்திடுமே நன்மைதானே நாட்டுக்கு

## வீரம் தரும் விளையாட்டு

### கட்டார் உலகக் கோப்பை!

உலக கால்பந்தாட்ட இரசிகர்களின் பார்வை முழுவதும் கட்டார் நாட்டை நோக்கியே திரும்பியுள்ளது. 2022 உலகக்கோப்பை கால்பந்து (2022 FIFA World Cup) அங்கு நடைபெறுவதால் கட்டார் தனித்துவ நாடாக இன்று தலை நிமிர்ந்து நிற்கிறது.

22வது உலகக் கோப்பை காற்பந்தாட்டப் போட்டிகள் 2022 நவம்பர் 20 முதல் டிசம்பர் 18 வரை நடைபெறுகிறது. இது பல்வேறு விடயங்களில் சிறப்பிடம் பெற்றுள்ளது. மத்திய கிழக்கு வலயத்தின் நாடொன்றில், குறிப்பாக அரபு நாடொன்றில் உலகக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டி நடைபெறுவது இதுவே முதன்முறையாகும். மேலும் 2002ஆம் ஆண்டு தென் கொரியா, ஜப்பான் நாடுகளில் நடந்த போட்டிக்குப் பிறகு முற்றிலும் ஆசியாவில் நடைபெறும் இரண்டாவது உலகக் கோப்பை காற்பந்தாட்டம் இது.




உலகக் கோப்பை காற்பந்தாட்டப் போட்டிகளை நடத்துவதற்காக கட்டார் அரசாங்கம், அதிக செலவில், நவீன வசதிகளுடன் எட்டு மைதானங்களை நிர்மாணித்துள்ளது. இவை 40,000 முதல் 80,000 வரையான இரசிகர்களைக் கொள்ளக்கூடியவை. (1) லுசைல் ஸ்டேடியம் (கொள்ளளவு 80,000), (2) அல் பேத் ஸ்டேடியம் (கொள்ளளவு 60,000), (3) ஸ்டேடியம் 974 (கொள்ளளவு 40,000), (4) கலீஃபா சர்வதேச அரங்கம் (கொள்ளளவு 45,416), (5) எஜுகேஷன் சிட்டி ஸ்டேடியம் (கொள்ளளவு 40,000), (6) அல் துமாமா ஸ்டேடியம் (கொள்ளளவு 40,000), (7) அல் ஜனுப் ஸ்டேடியம் (கொள்ளளவு 40,000), (8) அகமது பின் அலி ஸ்டேடியம் (கொள்ளளவு 40,000). 32 அணிகளுடன் இடம்பெறும் கடைசிப் போட்டியாகவும் இது உள்ளது. ஐக்கிய அமெரிக்கா, மெக்சிகோ, கனடா நாடுகளில் 2026ல் நடைபெறவிருக்கும் போட்டிகளில் பங்குபற்றும் அணிகளின் எண்ணிக்கையை 48 ஆக அதிகரிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

பொதுவாக மே, ஜுன் அல்லது ஜுலை மாதங்களில் நடைபெறும் உலகக் கோப்பை காற்பந்தாட்டப் போட்டிகள், கத்தாரின் கடுமையான கோடை வெப்பம் காரணமாக, நவம்பர் பிற்பகுதியில் ஆரம்பித்து டிசம்பர் நடுப்பகுதி வரை நடைபெறுகிறது, எனவே நடைபெறும் மாதங்கள் மாறி இலையுதிர்காலத்தில் நடைபெறும் போட்டியாகவும் இது இருக்கிறது.

கட்டாரில் நடைபெறும் கால்பந்து உலகக் கிண்ணத்தின் 64 போட்டிகள் நடைபெறும் எட்டு மைதானங்களிலும் பீர் விற்கப்படாது என கால்பந்து உலக நிர்வாகக் குழு அறிவித்துள்ளது. எனினும், ஃபிஃபா ரசிகர் திருவிழா, பிற ரசிகர் இடங்கள், உரிமம் பெற்ற இடங்கள் ஆகியவற்றில் பீர் விற்பனைக்கு அனுமதியுள்ளது.

நடப்பு சாம்பியனாக பிரான்சிய அணி பங்குபற்றும் இப்போட்டிகளின் இறுதிப் போட்டி, கத்தாரின் தேசிய தினமான டிசம்பர் 18ம் திகதியன்று நடைபெற உள்ளது, அதில் சாம்பியனாகும் அணி எது என்பதே எல்லோரினதும் இன்றைய எதிர்பார்ப்பாக இருக்கிறது.

## தகவல் களஞ்சியம்

### கட்டார் தேசிய நூலகம்

உலகக் கோப்பை காற்பந்தாட்ட போட்டிகள் காரணமாக உலகை தன்பால் ஈர்த்துள்ள கத்தாரின் மற்றுமொரு முக்கிய அங்கமான 'கட்டார் தேசிய நூலகம்' பற்றி தற்போது கட்டார் சென்றுள்ள, வகவத் தலைவர் கவிமணி என். நஜ்முல் ஹுசைன் பதிவிட்டுள்ள ஒரு 'நேரடி ரிப்போர்ட்' இங்கே உங்களுக்காக...

அண்மையில் நாம் கட்டார் தேசிய நூலகத்திற்கு சென்றோம். எனது மைத்துனரின் காரை மெட்ரோ சுரங்க ரயில் பாதை அருகே நிறுத்திவிட்டு மெட்ரோ ரயில் வழியாக QNL (QATAR NATIONAL LIBRARY) என்றழைக்கப்படும் தேசிய நூலகத்திற்கு சென்றோம். அங்கே நாங்கள்



சென்றது நூல்களை வாசிக்க அல்ல. அந்த நூலகத்தை சுற்றிப் பார்க்க. ஆம் அந்த நூலகம் நூல்களை வாசிப்பதற்காக மட்டும் உள்ள நூலகம் அல்ல. கட்டாயம் ஒருமுறை சுற்றிப் பார்க்க வேண்டிய நூலகமும் ஆகும். மிகவும் பிரமாண்டமான முறையிலே கட்டப்பட்டிருந்தது. அங்கே ஒரு நூலக நூதனசாலையும் இருந்தது. பழைய குர்ஆன் பிரதிகள், கையினால் எழுதப்பட்ட குர்ஆன் பிரதிகள், இஸ்லாமிய வரலாறுகளைப் பேசும் ஆவணங்கள், மருத்துவக் குறிப்புகள், கடற் பயணங்கள் என பல்வேறு விதமான பொருட்கள் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தன. ஒவ்வொன்றுமே பிரமிப்பை ஏற்படுத்துவதாகவே இருந்தது.

மிகவும் திட்டமிட்டு நவீன முறையில் அமைக்கப்பட்டிருந்த நூலகம். அந்த நூலகத்தைப் பார்த்த போது மிகவும் மகிழ்ச்சியாக இருந்தது. எங்கள் நாட்டில் உள்ள பல நூலகங்களைப் போன்று வெறிச்சோடி இல்லாமல் நூலகம் நிரம்பி வழிந்தது. எத்தனையோ விதமானவர்கள், பல்வேறு வயதினர் அங்கே நூல்களை வாசிப்பதும், கணனியிலே தங்களது வேலைகளை செய்வதுமாக இருந்தனர்.

நூலகத்தில் நூல்களை பெற்றுக் கொள்வதற்காக நூலகத்திற்குரிய அடையாள அட்டையை பெற்றுக் கொள்ள வேண்டும். அது அங்கே கட்டார் அடையாள அட்டை உள்ளவர்களுக்கு மட்டுமே கிடைக்கும் என்று தெரிகிறது. நூல்களை பெற்றுக் கொண்டவர்கள் அதனைக் கொண்டு வந்து எந்த ஒரு அலுவலரிடமும் காட்டத் தேவையில்லை.

அங்கே அதற்கெனவே ஸ்கேன் செய்யும் ஒரு இயந்திரம் உள்ளது. அதற்கு மேல் நூல்களை வைத்தால் அது தானாகவே அவர்கள் என்னென்ன நூல்களை அங்கிருந்து எடுத்துக் கொண்டு செல்கிறார்கள் என்பதை ஸ்கேன் செய்துவிடும். அது அந்த நூலக அங்கத்தவரின் இலக்கத்தை மட்டும் கேட்கும். அதனை அவர் அங்கே பதிவு செய்துவிட்டால் அவர் அந்த நூல்களை எடுத்துச் செல்லலாம்.

அதுபோன்று அவற்றை திருப்பிக் கொடுக்கும் போதும் யாரிடமும் கொடுக்க தேவையில்லை. அதற்கென்று அங்கே ஓர் இயந்திரம் இருக்கின்றது. அதற்குள்ளே நூல்களை போட்டுவிட்டாலே போதும். அவை தானாகவே அவர்கள் நூல்களை திருப்பிக் கொடுத்து விட்டார்கள் என்பதைப் பதிவு செய்துவிடும்.

இவ்வாறான நவீன வசதிகளோடு அந்த நூலகம் காணப்பட்டது. மாணவர்கள் தனியாக படிக்கும் அறைகள், கூட்டாக படிக்கும் அறைகள், உசாத்துணைகளை தேடும் வழிமுறைகள் என்பன, அவை மட்டுமல்ல வீடியோ கேம் விளையாடக் கூடிய வசதிகளும் கூட அங்கே இருக்கின்றன. சிறுவர்கள் வரைந்து விளையாட, வெவ்வேறு விளையாட்டுக்களில் ஈடுபட கைபேசி வடிவத்தில் பெரிய திரைகள் இருக்கின்றன.

இன்னும் ஒன்றையும் அங்கே கண்டேன். ஆங்காங்கே சோபாக்கள் போடப்பட்டிருந்தன. அதுபோன்றே கண்ணாடி வடிவத்தில் ஊஞ்சல்களும் இருந்தன. அதற்கு அப்பால் களைப்பு வந்தால் கொஞ்சம் சாய்ந்து கொள்ளவும் ஏன் தூங்கிக் கொள்ளவும் கூட சிறிய மெத்தைகள் போடப்பட்டிருந்தன. சிறுவர்களுக்கான தனியான நூலகம் ஒன்றும் உள்ளே இருந்தது.

எங்களுக்கு தேவையான புத்தகம் என்ன என்று தேர்ந்தெடுப்பதற்கும் ஒரு சிறிய கம்ப்யூட்டர் அங்கே இருந்தது. அந்த புத்தகத்தின் பெயரை பதிவு செய்தால் அதனை எவ்வாறு பெற்றுக் கொள்ளலாம் அல்லது அதன் பதிவு இலக்கம் என்ன என்பது கிடைத்துவிடும். அதன் மூலம் இலகுவாக அந்த புத்தகத்தைப் பெற்றுக் கொள்ளலாம். ஆம் நான் குறிப்பிட்டது போன்று ஒருமுறை இந்த நூலகத்தை கண்ணாரப் பார்த்து விட வேண்டும். அதற்குப் பிறகுதான் நூல்களை இங்கே இருந்து எடுத்து வாசிக்க வேண்டும்.

## நலமே வாழ்வோம்

### டெங்கிலிருந்து பாதுகாப்புப் பெற...

டெங்கு நோயிலிருந்து பாதுகாப்பு பெற அது பற்றி அறிந்திருப்பது அவசியமாகும். டெங்கு தொற்று ஏற்பட்டதற்கான வெளிப்பாடுகளாக, 1. டெங்கு காய்ச்சல், 2. டெங்கு குருதி கசிவு காய்ச்சல், 3. டெங்கு தீவிர தாக்கு நிலை என்பன கொள்ளப்படுகின்றன.

இலேசான அல்லது கடுமையான காய்ச்சல், கண்களுக்கு பின்னால் கடுமையான வலி, கடுமையான தலைவலி, தசைவலி, மூட்டுவலி, தோல் சிவத்து தடித்தல், வாந்தி என்பன டெங்கு காய்ச்சலுக்கும், கடுமையான காய்ச்சல், வலிப்பு, தோலில் சிவப்பு அல்லது ஊதா நிற புள்ளிகள் அல்லது அடையாளங்கள் தோன்றுதல், வாய், மூக்கு, முரசு என்பவற்றில் இரத்த கசிவு ஏற்படுதல், இரத்த வாந்தி அல்லது, கோப்பி மண்டிநிற வாந்தி, கறுப்பு நிற மலம் என்பன டெங்கு குருதி கசிவு காய்ச்சலுக்கும் அடையாளங்களாகவும், அறிகுறிகளாகவும் உள்ளன.




டெங்கு தீவிர தாக்குநிலை ஏற்பட்டு நோய் உக்கிரமடைந்தால் குருதிச் சுற்றோட்டம் செயலிழந்து தீவிர நிலைக்குச் செல்லும். இந்நிலை ஏற்பட்டால் 12 முதல் 24 மணித்தியாலங்களில் நோயாளி இறந்து விடும் நிலை உருவாகும். எனவே தீவிர காய்ச்சல் ஏற்பட்டால் அருகிலுள்ள வைத்தியரிடம் உடனடியாக சென்று ஆலோசனை பெறவேண்டும்.

டெங்கு நோய் பரவுவதை கட்டுப்படுத்த வீட்டையும் சூழலையும் சுத்தமாக வைத்தல், குப்பைகளை எரித்தல், அல்லது புதைத்தல், சூழலுக்கு பாதுகாப்பான வேறு முறையில் அவற்றை அகற்றுதல், நுளம்பு உற்பத்தியாகும் இடங்களை சுத்தம் செய்து உற்பத்தியைத் தடுத்தல், கூரைப் பீலிகளை தேய்த்து சுத்தம் செய்தல், கொங்ரீட் தட்டில் நீர் தேங்காதவாறு பார்த்துக் கொள்ளல், நீர்த் தாங்கிகளை நுளம்பு உட்புக முடியாதவாறு மூடி வைத்தல், நீர்த் தேக்கங்களில் நுளம்பின் குடம்பிகளை உண்ணும் மீன்களை வளர்த்தல் போன்ற நடவடிக்கைகளை செயற்படுத்தல் அவசியம்.

சுகதேகிகள் மற்றும் டெங்கு நோயாளிகள், நுளம்புக் கடிக்குள்ளாவதை தடுக்க வேண்டும். ஏனெனில் தொற்றுதலுக்குள்ளான ஒருவரை கடித்து அவரிடமிருந்தே டெங்கு வைரஸை நுளம்பு பெற்று சுகதேகிகளுக்கு தொற்றச் செய்கிறது. எனவே நுளம்பிலிருந்து பாதுகாப்புப் பெற நுளம்பு வலைகள், நுளம்புச் சுருள்கள், நுளம்புகளை வெளியேற்றும் மின்குமிழ்கள் போன்றவற்றை பயன்படுத்தல், வீட்டு ஜன்னல்கள் மற்றும் ஜன்னல்களுக்கு மேலுள்ள திறந்த அமைப்புகளுக்கும் நுளம்பை உட்புகவிடாத வலைகளை பொருத்தல், சிறுபிள்ளைகளுக்கு உடலின் பெரும்பகுதியை மூடும் வகையிலான தடித்த ஆடைகளை அணிவித்தல் போன்ற ஆக்கபூர்வமான செயன் முறைகளைப் பின்பற்ற வேண்டும்.

இவற்றை கருத்தில் கொண்டு, செயல்படுத்தி எம்மையும், எமது சமுகத்தையும், நம் நாட்டையும் டெங்கின் அபாயத்திலிருந்து பாதுகாப்போம்.

இப்பத்தியில் இடம்பெறும் அம்சங்களின் நோக்கை, போக்கை, அமைப்பை, அளவை, அழகை பின்பற்றி எழுத விரும்புவோர், "படித்ததும் பகர்வதும்" பகுதியுடன் தொடர்பு கொள்ள, மின்னஞ்சல் (email): pptknvm@gmail.com, வாட்ஸ்அப் (WhatsApp): 0777314207



# ஈழத்து நவீன இலக்கிய முன்னோடிகள் 28

மூத்த எழுத்தாளர் சாகித்ய ரத்னா தி. ஞானசேகரன்

# மலையக சிறுகதை முன்னோடி தேசபக்தன் கோ. நடேசையர்

"ஈழத்திற்கும் இலக்கிய உலகிற்கும் பெருமை சேர்த்தவர் கோ. நடேசையர். 1947இல் ஆரம்பிக்கப்பட்ட சுதந்திரன் பத்திரிகையின் முதல் ஆசிரியர் கோ. நடேசையராவார். சாதாரண மக்களிடம் அரசியல் ஞானத்தை பரப்ப வேண்டியது முதற் கடமையாகும் என சுதந்திரன் முதல் இதழில் குறிப்பிட்டுள்ளார். அவர் எழுதிய ஒரே ஒரு சிறுகதை திரு. ராமசாமி சேர்வையின் சரிதம், அதன் மூலம் ஈழத்துச் சிறுகதை முன்னோடிகளில் ஒருவராகக் கருதப்படவேண்டியவராகிறார்" எனக் குறிப்பிட்டுள்ளார் கலாநிதி. க. குணராசா செங்கை ஆழியான். (ஈழத்துச் சிறுகதை வரலாறு பக்:52)

திரு. ராமசாமி சேர்வையின் சரிதம் என்ற கதை 1931இல் கோ நடேசையரால் எழுதப்பட்டது. அக்கதை பின்வருமாறு அமைந்துள்ளது: பஞ்சத்தின் காரணமாக ராமசாமி இலங்கைக்கு தாய்க்குத் தெரியாமல் வேலைதேடி வருகிறான். கண்டிப் பிரதேசத்தில் தேனும் பாலும் வடிவதான கற்பனையோடு வருகிறான். தோட்டத்துக்கு ஆள் சேர்க்கும் கங்காணி ஒருவரின் பசப்பு வார்த்தைக்கு மயங்கி கப்பல் ஏறுகிறான். கற்பனை சிதறுகிறது. இந்தக் கருவை கோ. நடேசையர் மிக எளிமையாக தனது சிறுகதையில் விபரித்துள்ளார். தமிழகத்திலிருந்து இலங்கைக்கு எவ்வாறு தொழிலாளர்களைக் கொண்டுவந்தார்கள் என்பதை அறிய உதவும் ஆவணமாக இச்சிறுகதை விளங்குகிறது. அப்படி வந்தவர்கள் பட்ட அவலங்களை உணரவும் உதவுகிறது. கோ. நடேசையரின் கதை சொல்லும் பாங்கு அக்காலகட்டத்து கதைமரபினை ஒட்டியதாக அமைந்துள்ளது. கதையின் தொடக்கமே கதைக்கருவை நெகிழ்த்தும் பாங்கில் ஒருவன் தன் உழைப்பால் எவ்விதம் உயர் நிலையை அடையலாம் என்பதைப்பற்றி விளக்க ஒரு நண்பரின் சரித்திரத்தைச் சொல்ல விரும்புகிறேன் என ஆரம்பமாகிறது. மேலும் இக்கதை ராமசாமி சேர்வை பிறப்பிலிருந்து பெரிய கங்காணியாக உயர்ந்ததுவரை விபரிக்கின்றது.

கோ.நடேசையர் தஞ்சாவூரில் 1887ஆம் ஆண்டு ஜனவரி 14ஆம் திகதி கோதண்டராம ஐயருக்கும் பகீரதம்மாளுக்கும் மகனாகப் பிறந்தார். தஞ்சை மண்ணிலேயே வளர்ந்த நடேசையர், தமிழ், ஆங்கிலம் ஆகிய இரண்டு மொழிகளிலும் ஆற்றல்மிக்க புலமையுடையவர். திரு. வி.க. கல்லூரியில் கல்வி பயின்றவர். 1910ஆம் ஆண்டிலேயே வங்கி நிர்வாகம், எண்ணெய் பொறிமுறை, காப்புறுதி ஆகிய துறைகளில் தமிழ் நூல்களை எழுதி வெளியிட்டவர். ஆங்கிலேயர்களுக்கு எதிராக வர்த்தகத்தில் தமிழர்களும் தடம்பதிக்க வேண்டுமென்ற நோக்கத்தில், 1914இல் வணிகர்களுக்காக வர்த்தக மித்திரன் என்ற பத்திரிகையை நடத்தினார். ஒற்றன் என்ற புதினத்தையும் எழுதினார்.

இவர், இந்திய வியாபாரிகள் சங்கத்தினை உருவாக்கி வெற்றிகரமாக இயக்கி வந்தவர். அதன் கிளையொன்றினை பின்னாளில் கொழும்பில் அமைத்து தனது நண்பர் ஒருவரின் உதவியுடன் வெற்றிகரமாக இயக்கி வந்தார். கொழும்புக் கிளையின் ஆண்டு விழாவொன்றில் பங்கேற்கும் நோக்கிலேயே இவரது முதலாவது இலங்கை விஜயம் அமைந்திருந்தது.

அத்தோடு, தான் நடத்திவந்த வர்த்தகமித்திரன் பத்திரிகைக்கு இலங்கையில் சந்தாதாரர்களை சேர்த்துக்கொள்வது அவரது வருகையின் மற்றொரு நோக்கமாக இருந்தது. இலங்கைக்குச் செல்லும் நடேசையரை, தஞ்சை மாவட்ட காங்கிரஸ் கமிட்டியினர் அணுகி மலையக இந்தியத் தொழிலாளரின் பொருளாதார நிலைமைகளைப் பார்வையிட்டு வரும்படியும் அவரைப் பணித்திருந்தனர்.

அவர் தமது முதல் இலங்கை விஜயத்தின் போது, மலையகத் தோட்டங்கள் யாவும் துரைமாரின் பலத்த அதிகாரக் கட்டுப்பாட்டுக்குள் இருந்த விடயத்தையும், தோட்டத்துக்குள்ளிருப்பவர் தோட்ட எல்லையைத் தாண்டி வெளியே போவதும் வெளியார் தோட்டங்களுக்குள் வருவதும் சேவை ஒப்பந்தக் கட்டளைச்சட்டம், அத்துமீறல் தடைச் சட்டம் ஆகியவற்றின் பிரகாரம் தண்டனைக்குரிய குற்றமாக இருந்தமையையும் அதிர்ச்சியுடன் அறிந்து கொண்டார். மலையக மக்கள் வாழும் திறந்த வெளிச் சிறைவாழ்க்கை பற்றிய மனப்பாரத்துடனேயே அவர் ஆண்டுவிழாவை முடித்துக் கொண்டு தாயகம் திரும்பினார்.

1920ஆம் ஆண்டில் மீண்டும் நடேசையர் இலங்கைக்கு வந்தார். அவர் தனக்குக் கைவந்த கலையான பத்திரிகைத் தொழிலில் இலங்கையில் இருந்த இந்தியர்களுடன் இணைந்து ஈடுபடலானார். அந்நாட்களில் மலையகத் தமிழர்களின் பிரச்சினைகளை வெளிப்படுத்தும் வகையில் 1918இல் லாரி முத்துக்கிருஷ்ணா என்பவரால் வெளியிடப்பட்ட ஜனமித்திரன் என்ற பத்திரிகை மாத்திரம் கொழும்பிலிருந்து வெளிவந்து கொண்டிருந்தது. கொழும்பில் 1922இல் தேசநேசன் என்ற தினசரியும், பின்னர் 1924இல் தேசபக்தன் என்ற தினசரியும் நடேசையரால் தொடங்கப்பட்டன. பின்னாளில் சுதந்திரப் போர் (ஹட்டன், 1940), வீரன் (ஹட்டன் 1942) ஆகிய சஞ்சிகைகளும் இவரால் நடத்தப்பட்டன. தனி ஆங்கிலப் பத்திரிகைகளான Indian Opinion, Indian Estate Labourer citizen, Forward ஆகிய மூன்று பத்திரிகைகளையும் நடத்தியுள்ளார்.


1947 ஜுன் 1ஆம் திகதி சுதந்திரன் பத்திரிகை அரசியல் தினசரியாக வெளிவந்தபோது அதன் ஆசிரியராக கோ.நடேசையர் பணியாற்றினார். அதே காலப்பகுதியில் கிருஷ்ணமூர்த்தி ஐயருடன் இணைந்து தோட்டத்தொழிலாளி என்ற மற்றொரு சஞ்சிகையினையும் கொழும்பிலிருந்து வெளியிட்டார்.

பிரபலமான சிங்களத் தொழிற்சங்கவாதியான ஏ.ஈ.குணசிங்கவின் தொடர்பு இவருக்கு பத்திரிகையாளர் என்ற வகையில் கிடைத்திருந்தது. காலப்போக்கில் ஏ.ஈ.குணசிங்கவின் இந்திய விரோதப் பேச்சுக்களால் அவருடன் கருத்து முரண்பாடு கொண்டு அவரிடமிருந்து விலகலானார். பின்னாளில் 1931இல் நடேசையரால் அகில இலங்கை தோட்டத் தொழிலாளர் சம்மேளனம் ஹட்டனில் ஸ்தாபிக்கப்பட்டதற்கு குணசிங்காவின் தொடர்பும் அதனால் ஏற்பட்ட பாதிப்பும் காரணமாக இருந்துள்ளது.

பத்திரிகைகள், சஞ்சிகைகளுடன் மட்டும் நின்றுவிடாது நடேசையர், ஹட்டனில் தனது துணைவியார் மீனாட்சியம்மையாரின் பொறுப்பில் இயங்கிய சகோதரி பிரஸ், கணேஷ் பிரஸ் என்ற இரு அச்சகங்களின் வாயிலாக தோட்ட மக்களுக்கு உணர்வூட்டும் பல புரட்சிகரத் துண்டுப் பிரசுரங்களையும் சிறு நூல்களையும் வெளியிட்டு வந்தார்.

கோ. நடேசையர், ஒன்பது தமிழ் நூல்களையும் இரு ஆங்கில நூல்களையும் வெளியிட்டுள்ளார். தோட்ட முதலாளிகள் இராச்சியம் என்ற இவரது ஆங்கில நூல் பிரபலமானது.

இவரது நூல்களில் அழகிய இலங்கை என்ற நூல் தமிழகத்தில் அச்சிடப்பட்டது. 1933இல் வெளியான நரேந்திரபதியின் நரகவாழ்க்கை என்ற நூல் 226 பக்கங்கள் கொண்டது. இவரது தொழிலாளர் கடமைகளும் உரிமைகளும் என்ற பிரபலமான சிறுநூல் 50000 பிரதிகள் அச்சிடப்பட்டதாக அறியமுடிகின்றது. அக்காலகட்டத்தில் இத்துணை பிரதிகள் அச்சிட்டு



விநியோகிப்பதென்பது இலேசான காரியமாக இருந்திருக்காது.

தொழிலாளர் சட்ட புஸ்தகம் (Rights and responsibilities of Indian Labourers) என்ற நூல் இலங்கைவாழ் இந்தியத் தொழிலாளர்களுக்கென உருவாக்கப்பட்ட சட்டதிட்டங்களை, உரிமைகளை விளக்கும் கைநூலாகும்.

இலங்கைக்குத் தொழில் நிமித்தம் வந்த இந்தியத் தொழிலாளர்கள் இருவகைப்பட்டனர். தாமாகத் தம் சொந்தச் செலவில் வந்தவர்கள் ஒருவகை.

பெரும்பாலும் இவர்கள் நகரப்பகுதிகளில் வேலை தேடிக்கொண்டவர்கள். முதலாளிகளின் ஏஜெண்டுகளால் தூண்டப்பட்டு அவர்களது பொருளுதவியுடன் வந்தவர்கள் மற்றொரு வகை. இவர்கள் தேயிலை, றப்பர், கொக்கோ, தென்னந் தோட்டங்களுக்கு அழைத்துவரப்பட்டனர்.

பின்சொல்லப்பட்டவர்களுக்காக இலங்கையிலும், இந்தியாவிலும் வழங்கப்பட்டுவரும் சட்டங்களை எளிய முறையில் கூறும் நூலே தொழிலாளர் சட்ட புஸ்தகம் என்பதாகும். தமக்கு எவ்விதமான சுதந்திரம் உள்ளது, அவை எவ்வாறு சட்டமூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என்பதை அறிந்து தாம் அடிமைகளாவதைத் தவிர்த்து அறிவு புகட்டும் வகையில் வெளியிடப்பட்ட இந்நூல் பாமர மக்களின் கையில் சேர முடியாதபடி அக்காலப் பகுதியில் மறைமுகமாகத் தடுக்கப்பட்டும் வந்துள்ளது.



உறங்கிக் கிடக்கும் ஒரு மக்கள் கூட்டத்தை தட்டியெழுப்பும் போக்கிலேயே இவரது பிரசுர முயற்சிகள் பெரும்பாலும் அமைந்திருந்ததை யாரும் மறுப்பதற்கில்லை. அந்த வகையில் நீ மயங்குவதேன் என்றதொரு கட்டுரை நூலை 1931இல் எழுதி அவரது சகோதரி பிரஸ் வாயிலாக அச்சிட்டு வெளியிட்டார்.

இதிலுள்ள 11 கட்டுரைகளும், மக்களைக் கிளர்ந்தெழவைக்கும் சாகசம் மிக்கதாக இருந்தன. இதில் இறுதிக் கட்டுரை ராமசாமி சேர்வையின் சரிதம் என்பதாகும்.

இது கட்டுரையாகவல்லாது மலையகத்தின் சிறுகதை வரலாற்றில் முதன் முதலில் வெளிவந்த சிறுகதையாகக் கருதப்படுவதே பொருத்தமாகும் என்று இலக்கிய விமர்சகர்கள் வாதிடுகின்றார்கள்.

நீ மயங்குவதேன் என்ற நூலையடுத்து அதன் இரண்டாம் பாகமெனக் கருதப்படக் கூடிய மற்றொரு நூலாக மார்ச் 1947இல் வெற்றியுனதே என்ற நூலை வெளியிட்டார். (உசாத்துணை: மலையக இலக்கிய கர்த்தாக்கள் தொகுதி 01 என். செல்வராஜா)

கோ. நடேசையர் 06.11.1947அன்று கொழும்பில் அமரரானார்.

## குறுக்கெழுத்துப் போட்டி இல. 39

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 01 | 02 | 03 | 04 | | 05 |
| | 06 | | 07 | 08 | 09 |
| | 10 | 11 | 12 | | |
| 13 | | 14 | | 15 | 16 |
| 17 | 18 | 19 | 20 | | 21 |
| | 22 | 23 | | 24 | 25 |

பெயர் ..............................................
வகுப்பு ..............................................
தொலைபேசி இல ..............................................
பாடசாலை பெயர் ..............................................
வதிவிட முகவரி ..............................................
..............................................
.............................. ..............................................
மாணவரின் பெயர் வகுப்பாசிரியர் பெற்றோர் கையொப்பம்

### இடமிருந்து வலம்

(1) இலங்கையின் மிக நீளமான நதி.
(7) கோழிகளில் ஆண் இனத்தைக் குறிக்கின்ற மரபுச் சொல். (தலைகீழான சொல்)
(10) முன்னைய காலத்தில் எதிரிகளுடன் யுத்தம் புரியவும், மிருகங்களை வேட்டையாடவும் பயன்படுத்தப்பட்ட ஆயுதம் இது. வில் இருந்தால்தான் இதனைப் பயன்படுத்த முடியும். (தலைகீழான சொல்)
(15) பெயராகவும், வினையாகவும் வருகின்ற சொல் இது. பெயராக வருகையில் பன்னிரண்டு அங்குலம் கொண்ட நீட்டலளவை அலகு, வினையாக வருகையில் மற்றவரைத் தாக்குதல் என்ற பொருள் தரும். (தலைகீழான சொல்)
(17) தூரிகை கொண்டு பற்களைத் துலக்குவதற்குத் தேவையானது. (தலைகீழான சொல்)
(22) குழந்தையொன்று பிரசவமானதும், சில மாதங்கள் வரை அச்சிறு குழந்தையின் பருவத்துக்குரிய சொல் இது. (தலைகீழான சொல்)
(24) எமது நாட்டிலும் காணக்கூடிய பறவை. கிளியின் குரல் தொனிக்கும், இப்பறவையின் தொனிக்கும் ஒற்றுமை உள்ளது. இப்பறவையின் சரியான தமிழ்ப்பெயர் நாகணவாய். (தலைகீழான சொல்)

### மேலிருந்து கீழ்

(2) பெண்கள் தங்களது கைகளில் அணிகின்ற ஆபரணம்.
(4) பூவின் இதழை இவ்வாறும் குறிப்பிடலாம். நன்னீர் நிலைகளில் வளர்கின்ற, அழகிய பூப்பூக்கும் தாவரமொன்றின் பெயரும் இதுவாகும். (தலைகீழான சொல்)
(5) நீர்த்தன்மையான சகதியைக் குறிக்கும் சொல். மழை பெய்தால் சில வீதிகளும் இவ்வாறுதான் காட்சியளிக்கும். (தலைகீழான சொல்)
(11) சிற்பிகள் வடிக்கின்ற கலைப்படைப்பு இது. (தலைகீழான சொல்)
(13) உழுந்து சேர்த்துத் தயாரிக்கப்படுகின்ற உணவுப்பண்டம்.
(16) சுதந்திரம் இல்லாமல் அடக்குமுறைக்கு உட்பட்டுள்ள ஒருவரை இவ்வாறு கூறலாம். இது பொதுப்பாற் சொல்.
(18) உலகில் மானிடர் அனைவருக்கும் நிறையுணவான திரவ ஆகாரம் தருகின்ற நன்றிக்குரிய மிருகம். எனவேதான் இம்மிருகம் இலக்கியங்களில் உன்னதமாகப் போற்றப்படுகின்றது.

## குறுக்கெழுத்துப் போட்டி இல. 38

### விடைகள்

**இடமிருந்து வலம்**

01. மாரி 03. அம்மா 06. ஏழை
10. தாவரம் 14. குடை 16. அலை
18. வளி 21. காளை 23. கோதுமை

**மேலிருந்து கீழ்**

02. ஏரி 04. அரவம் 07. தாழை 09. கோடை
11. வலை 15. குவளை 20. மைனா

## குறுக்கெழுத்துப் போட்டி இல. 37

### பாராட்டு பெறுவோர்

**1. அஹமட் ராஷிட் ஏ வாஹிட்**
தரம் 13, ப/அல் - அதான் தேசிய பாடசாலை,
இல. 26/2, பெரியபள்ளிவாசல் வீதி, பதுளை.

**2. எம்.எம்.எம். அப்ராஸ்**
தரம் 04, மா/ சாஹிரா தேசிய கல்லூரி, மாத்தளை.
இல. 35, கண்டி வீதி, வறக்காமுறை, உக்குவளை.

**3. உதயகுமார் கஜானி**
தரம் 02, மட். கமு/ கணேசா வித்தியாலயம்,
பிள்ளையார் கோயில் வீதி, மாவடிவேம்பு - 1.

**4. எம்.எம். சஹ்றீஸ்**
தரம் 04, அல் - மதீனா வித்தியாலயம்,
மருதமுனை - 04.

**5. எம்.ஏ. அஜ்மல்**
தரம் 03B, பள்ளிப்போருவ மு.வித்தியாலயம்,
இல. D 123/4, கினிஹப்பிடிய, ஹெம்மாதகம.

**6. எம்.எப். ஹாமித் ரபி**
தரம் 04, கமு/சது/ றோயல் க.வித்தியாலயம்,
இல. 42 A.D. வீதி, இறக்காமம் - 04

**7. தி. சயந்தவி**
தரம் 05, மட்/ வின்சன்ட் ம.உ. பாடசாலை,
இல. 7, பாடசாலை வீதி, ஜெயந்திபுரம், மட்டக்களப்பு.

குறுக்கெழுத்துப் போட்டி இல. 39
**சிறுவர் உலகம்**
தினகரன் வாரமஞ்சரி
த.பெ.இல : 834 கொழும்பு.

தொடர்புகளுக்கு : 0112429294
மின்னஞ்சல் : editor.vm@lakehouse.lk

## விமானங்களின் ஜன்னல்களில்

# நான்கு மூலைகளும் ஏன் வட்ட வடிவமாக அமைக்கப்படுகிறது?



சதுர வடிவ ஜன்னல்களின் நான்கு முனைகளும் கூர்மையாக அமைந்து விடுகிறது. ஆனால், முனைகள் கூர்மையாக இல்லாமல் வட்டமாக அமைக்கும்போது அதைத் துடைப்பது மிக எளிதாக இருக்கும்.

இதுதான் முதன்மையான காரணம். மேலும், பொதுவாக கூர்மையான முனைகள் அதிகப்படியான அழுத்தத்துக்கு உள்ளாகும். அதனால் அவை நாளடைவில் வலுவிழந்து விடக்கூடும்.

விமானம் பறந்து கொண்டிருக்கும்போதே ஜன்னல்கள் உடையக் கூடிய அல்லது அவற்றில் விரிசல் விழக் கூடிய வாய்ப்புகள் அதிகம். ஏனெனில் விமானத்தைச் சுற்றி வெளிக்காற்றின் அழுத்தம் மிகமிக அதிகமாக இருக்கும்.

இதுபோன்ற வளைந்த அல்லது வட்ட வடிவ ஜன்னல்களில் காற்று மோதும்போது அது ஓரிடத்தில் குவிக்கப்படாமல் பல்வேறு இடங்களுக்கு அது கடத்தப்படும். அதனால்தான் விமானத்தின் ஜன்னல்கள் வட்டவடிவில் அமைக்கப்படுகின்றன.

## இவ்வார மழலை





மனோஜ் / மனோரி,
கொழும்பு.






**எம். நிவேதன்**
தரம் 13, கொழும்பு இந்துக் கல்லூரி





**எம். காந்தர்வியா**
தரம் 06, சைவ மங்கையர் கழகம்



**எம்.என்.எப். ஸபா**
தரம் 02, துந்துவ அஹதிய்யாப் பாடசாலை

# இளைஞரின் வைராக்கியம்



அமெரிக்காவில் ஒரு சாலை ஓரமாக சிலர் மின் கம்பம் நடும் வேலைகளில் ஈடுபட்டுக் கொண்டிருந்தனர். பல நாட்களாக வேலை செய்து வந்த அவர்கள், ஒரு நாள் காலை வேளையில் வெகு நேரமாகியும் வேலையை ஆரம்பிக்காது, யாரையோ எதிர்பார்த்துக் கொண்டிருந்தனர். அப்போது,

அவ்வழியாக உயரமான, மெலிந்த உடலையுடைய ஓர் இளைஞன் அதனை அவதானித்துக் கொண்டே பக்கத்திலுள்ள நகரத்துக்கு சென்றுக் கொண்டிருந்தான். பல மணித்தியாலங்களுக்குப் பிறகு மீண்டும் அவ்வழியே வந்த இளைஞன் தொழிலாளர்கள் வேலையில் ஈடுபடாததைக் கண்டு, அங்குள்ள மேற்பார்வையாளரிடம், "நீங்கள் யாரை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறீர்கள்? மின் கம்பங்களை இன்னுமா நடவில்லை?" எனக் கேட்டான். அதற்கு மேற்பார்வையாளர், "இந்த மின் கம்பங்களை தூக்குவதற்கு வரவேண்டிய தொழிலாளர்களில் ஒருவர் இன்னும் வரவில்லை. அவரை எதிர்பார்த்துக் கொண்டுதான் இருக்கிறோம்" என்றார்.

அதைக் கேட்ட இளைஞன், "நான் அவருக்கு பதிலாக உதவுகிறேன், வாருங்கள்" என்றதும் எல்லோரும் சேர்ந்து மின் கம்பங்களை தூக்கி சிறிது நேரத்தில் நாட்டி முடித்தார்கள். பிறகு மேற்பார்வையாளர் இளைஞனைப் பார்த்து, "நன்றி, உங்கள் பெயர் என்ன?" என கேட்டார். அதற்கு இளைஞன் "என் பெயர் லிங்கன்" என பதில் அளித்ததோடு, "இந்த சிறிய வேலையை நீங்களே செய்திருக்கலாமே! இதனால் எவ்வளவு வேலை நேரங்கள் வீண் விரயமாகின என்பது உங்களுக்கு தெரியுமா?" என்றதும் மேற்பார்வையாளரின் தலை தாழ்ந்து போனது. ஆனால், ஆபிரகாம் லிங்கனோ ஏதோ வைராக்கிய எண்ணத்துடன் அவ்விடத்தை விட்டு சென்றுக் கொண்டிருந்தான்.

**என். மொஹமட் லாபீர்,**
பதுளை

# கைபேசி

கிளிக்கி பிடிக்கும் விரலிலே
ஒட்டி நிற்கும் கைபேசி
விளையாட்டுப் பொருளாக
கொஞ்சி பேசி மகிழுமாம்

பிரிந்து வாழும் மனிதருக்கு
உறவுப் பாலம் போடலாம்.
வீட்டில் இருந்த வண்ணமும்
பாடம் படிக்க உதவுதே!

சின்னஞ் சிறிய பிள்ளையும்
கதைத்துப் பேச உதவுதே!
இன்பம் இன்பம் என்று நாம்
கையில் ஏந்தி திரிகிறோம்.
வயதில் முதிந்த முதியோரிடம்
விலையுயர்ந்த கைபேசி
அடடா. அந்த கைபேசி
உலகை ஆட்டிப் படைக்குதே



தொழில் நுட்ப வளர்ச்சியிலே
புதுமைப் புரட்சி செய்யுதே!
ஊர் உலகம் காண்பதற்கு
விரலின் நுனியில் இயங்குதே!

ஆபத்தான வேளையிலும்
அன்புத் தோழனாய்; நிற்குதே!
பொழுதெல்லாம் வீணாகும்
கவனமாய் நீ நடந்து கொள்.

**இக்பால் அலி**

## வரிக்குதிரை எப்படி தன் குட்டியை அடையாளம் கண்டு கொள்ளும்?

வரிக்குதிரைகள் தங்கள் குட்டிகளை 12 லிருந்து 14 மாதங்கள் வரை கருவில் சுமக்கின்றன. 12ஆவது அல்லது 14ஆவது மாதம்தான் அதன் குட்டி பிறக்கும். குதிரை ஒரு முறை ஒரு குட்டிதான் போடும். மிகவும் அபூர்வமாக இரட்டைக் குட்டிகள் பிறப்பதுண்டு.

ஆனால், பிறக்கும் இரட்டைகளில் ஒன்று பிறந்து சில மணி நேரங்களிலேயே இறந்துவிடும். வரிக்குதிரைகள் எப்போதும் குடும்பம் குடும்பமாகத்தான் வசிக்கும். எங்கே போனாலும் தங்களது குட்டிகளையும் பாதுகாப்பாக கூடவே (குறிப்பிட்ட காலம் வரை) வைத்துக் கொள்ளும்.

வரிக்குதிரைகள் தங்கள் தங்கள் குட்டிகளை அடையாளம் கண்டுகொள்ள ஒவ்வொரு குடும்பத்துக்கும் ஒரு வகை அமைப்பு (வரிகளின் அமைப்பு) உண்டு. அதை வைத்துத்தான் தாய்க் குதிரை தன் குட்டியை எளிதாக இனம் கண்டு கொள்ளும்.




# வாரம் ஒரு பெரியார்

# அறிஞர் அண்ணா

தமிழ், தமிழர், தமிழகம் மேம்பட வேண்டும் என்பதற்காகவே பாடுபட்ட அண்ணா ஒரு சிறந்த தலைவர் மட்டுமல்ல, சிறந்த மனிதரும் கூட.

'அறிஞர்' அண்ணாதுரை காஞ்சி மாநகரில் 199 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 15 ஆம் திகதி பிறந்தார். அவரின் பெயர் சி.என். அண்ணாதுரை. அவருடைய தந்தையின் பெயர் நடராசன். தாய் பங்காரு அம்மாள் ஆவார். இளைஞர்கள் அவரை அன்புடன் 'அண்ணா' என்று அழைத்தனர். அவருடைய அறிவுத் திறனைக் கண்டு வியந்த நாடு அவரை 'அறிஞர்' என்று ஏற்றது. இளமையிலேயே அன்பும் அமைதியும் நிரம்பப் பெற்றவர். காஞ்சிபுரத்தில் உயர்நிலைக் கல்வி கற்று முடித்தவர் மேற்படிப்பை சென்னை பச்சையப்பன் கல்லூரியில் தொடங்கினார். அண்ணா மற்ற மாணவர்களைப் போல் பாடங்களை வீட்டில் படிப்பதில்லை. வகுப்பறையில் ஆசிரியர் பாடம் நடத்தும் போது கவனிப்பதோடு சரி. நல்ல நினைவாற்றல் உடையவர் அவர்.



தேர்வுகளில் விடைகளைத் தமது சொந்த நடையிலேயே எழுதுவார். நல்ல மதிப்பெண்களைப் பெறுவார். அவருக்கு ஆடம்பரம் பிடிக்காது. எளிய உடைகளையே அணிவார். நிறைய நூல்களைப் படிப்பார், படிப்பவற்றைச் சிந்திப்பார். தமிழைப் போலவே ஆங்கிலத்திலும் ஆற்றலுடன் எழுதவும், பேசவும் செய்வார்.

கல்லூரியில் படிக்கும் காலத்திலேயே வீட்டில் அவருக்குத் திருமணம் செய்து வைத்துவிட்டார்கள். பெற்றோர்களின் வார்த்தையை மறுக்கக் கூடாது என்பதற்காக அவர் மறுபேச்சின்றி அத்திருமணத்துக்கு ஒப்புக் கொண்டார். திருமணத்தின்போது அண்ணாவுக்கு வயது இருபத்தொன்று.

அந்நாளில் காங்கிரஸ் கட்சி, சுதந்திரத்துக்குப் போராடிக் கொண்டிருந்தது. ஆனால், அக்கட்சியின் சில பிற்போக்கான நடவடிக்கைகளைப் பிடிக்காத ஈ.வே.ரா பெரியார், சர்.பி.டி. தியாகராயர், பனகல் அரசர் போன்றவர்கள் 'நீதிக்கட்சி'யைத் தோற்றுவித்தனர்.

காங்கிரஸை எதிர்த்ததோடு, சமூக சீர்திருத்தங்களில் அவர்கள் கவனம் செலுத்தினர். சிறிது காலத்திலேயே நீதிக் கட்சியினருடன் கருத்து வேறுபாடு கொண்ட பெரியார் அக்கட்சியிலிருந்து விலகினார்.

1926ஆம் ஆண்டில் சுயமரியாதை இயக்கம் கண்டார். அண்ணா அப்போது கல்லூரி மாணவர். சுயமரியாதை இயக்கத்துக்கு துணை அமைப்பாய் சுயமரியாதை இளைஞர் மன்றம் இருந்தது. அண்ணா அந்த மன்றத்தில் ஈடுபாடு கொண்டிருந்தார். மன்றக் கூட்டங்களில் கலந்து கொண்டு பேசவும் செல்வார்.

திருப்பூரில் வாலிபர் மாநாட்டில் பெரியார் பேசிய பேச்சு அண்ணாவின் வாழ்க்கையையே மாற்றி அமைத்தது. அவருக்கு அரசியலில் நாட்டம் பிறந்தது. தாம் பொது வாழ்வில் ஈடுபட விரும்புவதை பெரியாரிடமே தெரிவித்தார். பெரியாரும் அவருக்கு ஊக்கமளித்தார். 1936ஆம் ஆண்டு காங்கிரஸ் வெற்றி பெற்று தமிழகத்தில் ஆட்சி அமைத்தது. இராஜாஜி முதலமைச்சர் ஆனார்.

ஆனாலும் தமிழின் மேம்பாட்டுக்காகவோ தமிழரின் பண்பாட்டைக் காக்கவோ அந்த ஆட்சி முயலவில்லை என்பது பெரியாரின் கருத்து.

அண்ணா இந்தி எதிர்ப்பு போராட்டம் நடத்தி சிறை சென்றார். 'தமிழ்நாடு தமிழருக்கே' என்றொரு கொள்கையை அண்ணா உருவாக்கினார். அக்கொள்கை மக்கள் மத்தியில் விளக்கப்பட்டது. 1939 டிசம்பர் மாதம் 10ஆம் திகதி அண்ணா ஆற்றிய சொற்பொழிவு மக்களுக்கு எழுச்சியூட்டுவதாயிருந்தது. அவர் பின்னால் இளைஞர்கள் அணி திரண்டனர். அண்ணாவின் பேச்சில் தீ பரவும், தென்றல் தவழும். அவர் அலங்காரமாய் அடுக்கு மொழியில் பேசினாலும் அதில் அர்த்தம் இருக்கும், யாரையும் அசைத்துப் பார்க்கிற அழுத்தம் இருக்கும்.

பெரியாருடன் கருத்து வேறுபாடு கொண்ட அண்ணா கழகத்தை விட்டு விலகினார். அந்த ஆண்டிலேயே திராவிட முன்னேற்றக் கழகத்தைத் தொடங்கினார். மக்களைச் சிந்திக்க வைக்கும் விதமாய் திரைப்படங்களுக்குக் கதை வசனம் எழுதினார். அவருடைய இரங்கூன் ராதா, பார்வதி, குமாஸ்தாவின் பெண் போன்ற நூல்கள் குறிப்பிடத்தக்கவை.

அண்ணாவின் வேலைக்காரி, ஓர் இரவு நாடகங்கள் (பிற்பாடு திரைப்படமாயின) சமூகத்தில் விழிப்புணர்ச்சியைக் கொண்டு வந்தது எனலாம்.

1967 மார்ச் மாதம் அண்ணா தமிழக முதலமைச்சராய் பதவியேற்றார். 1968 இல் அண்ணாவின் உடல் நலம் பாதிக்கப்பட்டது. அமெரிக்காவில் சிகிச்சை பெறச் சென்றார். ஆனாலும் சிகிச்சை பலனின்றி தாயகம் திரும்பினார். 1969ஆம் ஆண்டு பெப்ரவரி 02 ஆம் திகதி அண்ணா காலமானார்.

கடற்கரையில் இலட்சக்கணக்கானவர்கள் இறுதி அஞ்சலி செலுத்த அண்ணாவின் உடல் அடக்கம் செய்யப்பட்டது.

தமிழ் உள்ளவரை கடைசித் தமிழன் உள்ளவரை அப் பெருமகனாரின் புகழ் இம்மண்ணில் நிலைத்திருக்கும்.

# விளையாட்டு




# சாமிக்க கவனம்!

சாமிக்க கருணாரத்ன இனி கவனமாக இருக்க வேண்டும். அடுத்த ஒரு வருடத்துக்குள் ஏதாவது தப்புச் செய்தால் ஒரு வருடத்திற்கு கிரிக்கெட் பக்கம் தலைகாட்ட முடியாது என்று இலங்கை கிரிக்கெட் சபை கண்டிப்பாக சொல்லிவிட்டது.

அவுஸ்திரேலியாவில் அண்மையில் நடந்து முடிந்த டி20 உலகக் கிண்ணத்தின்போது கிரிக்கெட் சபையுடனான வீரர்கள் ஒப்பந்தத்தை மீறியதற்காக கருணாரத்ன மீது நடத்தப்பட்ட விசாரணையிலேயே அவர் குற்றவாளியாக நிரூபிக்கப்பட்டிருக்கிறார். உண்மையில் அவர் குற்றத்தை ஒப்புக்கொண்டார் என்று சொல்லப்படுகிறது.

ஓய்வுபெற்ற உயர் நீதிமன்ற நீதிபதி சிசிர ரத்னாயக்க தலைமையில் மூன்று பேர் கொண்ட குழுவால் நடத்தப்பட்ட விசாரணைக்கே சாமிக்க முகம்கொடுத்தார். விசாரணையின்படி சாமிக்க செய்திருப்பது மிக மோசமான ஒழுக்க மீறல், என்றாலும் அவரது கிரிக்கெட் வாழ்வு பாதிக்காத வகையில் தண்டிக்கும்படி அந்தக் குழு இலங்கைக் கிரிக்கெட்டை கேட்டுக்கொண்டது.

அதன்படி சாமிக்கவுக்கு அனைத்து வகை கிரிக்கெட்டிலும் ஓர் ஆண்டு ஒத்திவைக்கப்பட்ட தடையை இலங்கைக் கிரிக்கெட் நிறைவேற்றுக்குழு விதித்திருக்கிறது. அது போக அவருக்கு 5,000 அமெரிக்க டொலர் அபராதமும் விதிக்கப்பட்டிருக்கிறது. அதனை இலங்கை நாணயத்தில் மாற்றிப் பார்த்தால் கிட்டத்தட்ட 18 இலட்சம் ரூபாவுக்கு மேல்.

இந்தத் தடையின்படி சாமிக்க அடுத்த ஓர் ஆண்டு காலத்தில் எந்தத் தவறு அல்லது ஒப்பந்த மீறலையும் செய்யக் கூடாது. அவ்வாறு செய்தால் ஒத்திவைக்கப்பட்ட தடை அமுலுக்கு வந்துவிடும்.

இத்தனை பாரதூரமான தண்டனைக்கு முகம்கொடுக்கும் அளவுக்கு சாமிக்க செய்த தவறுதான் என்ன? அது பற்றி இலங்கை கிரிக்கெட் சபை மூச்சுவிடவில்லை. தப்பைச் சொல்லாமலேயே தண்டனையைச் சொன்னாலும் தண்டனையின் அளவை பார்த்தால் தப்பின் வீரியத்தை அனுமானிக்க முடியும்.

அரசல் புரசலாக கிடைத்த செய்திகளின்படி சாமிக்க இரவு விடுதி ஒன்றில் சண்டை பிடித்திருக்கிறாராம். சிட்னியில் இருக்கும் இரவு விடுதி ஒன்றிலேயே அவர் கைகலப்பில் ஈடுபட்டதாக குற்றம்சாட்டப்படுகிறது.

சமூக ஊடகத்தில்தான் இது பற்றி பெரிதாகப் பேசப்படுகிறது. கருணாரத்ன கைகலப்பில் ஈடுபட அங்கிருந்த அணித் தலைவர் தசுன் ஷானக்க மற்றும் பானுக்க ராஜபக்ஷ இருவருமே மோதலை விலக்கி வைத்திருக்கிறார்கள். சமூக ஊடகத்தில் வந்ததற்காக இதனை முழுமையாக பொய் என்று சொல்லிவிட முடியாது. அதில் உண்மை கலந்திருப்பதை நம்பகமான வாட்டாரங்களும் உறுதி செய்கிறது.

சாமிக்க கருணாரத்னவின் ஒப்பந்த மீறல் இல்லையென்றால் ஒழுக் மீறல் இலங்கை கிரிக்கெட்டில் கடந்த காலங்களில் காண முடியாத ஒன்று என்றபோதும் அதனை விடவும் மோசமான தவறைச் செய்ததாக குற்றம் சாட்டப்பட்டிருக்கும் தனுஷ்க குணதிலக்கவினால் சாமிக்கவின் தவறு சிறிதாகத் தெரிகிறது.

ஒட்டு மொத்தத்தில் உலகக் கிண்ணத்திற்காக அவுஸ்திரேலியா சென்ற இலங்கைக் குழாம் மைதானத்திற்கு வெளியில் தாம் நாட்டை பிரதிநிதித்துவப்படுத்துகிறோம் என்பதையும் மறந்து தன்னிஷ்டத்திற்கு செயற்பட்டிருப்பது தெரிகிறது.

> இத்தனை பாரதூரமான தண்டனைக்கு முகம்கொடுக்கும் அளவுக்கு சாமிக்க செய்த தவறு தான் என்ன? அது பற்றி இலங்கை கிரிக்கெட் சபை மூச்சுவிடவில்லை. தப்பைச் சொல்லாமலேயே தண்டனையைச் சொன்னாலும் தண்டனையின் அளவை பார்த்தால் தப்பின் வீரியத்தை அனுமானிக்க முடியும்.

இது இலங்கை கிரிக்கெட்டுக்கு நல்லதல்ல. வீரர்களின் திறமையை வளர்ப்பதற்கு முன் அணியில் ஒழுக்கத்தை வளர்ப்பதுதான் முக்கியம். அதுதான் மைதானத்திலும் நல்ல முடிவைத் தரும்.

இந்த சர்ச்சைக்கு மத்தியிலேயே சாமிக்க கருணாரத்ன ஆப்கானுக்கு எதிரான ஒருநாள் தொடருக்கான இலங்கைக் குழாத்திலும் இடம்பெறவில்லை. அவரது ஒழுக்க விவகாரமாகவே அவர் அணியில் சேர்க்கப்படவில்லை என்று பேச்சுகள் அடிபட்டாலும், அவர் போட்டிகளில் திறமையை வெளிப்படுத்தாததாலேயே இணைக்கப்படவில்லை என்கிறது தேர்வுக் குழு.

அண்மையில் இலங்கை அணி ஆசிய கிண்ணம், உலகக் கிண்ணம் என்று டி20 போட்டிகளிலேயே அதிகம் ஆடியது. சாமிக்க கடைசியாக ஆடிய 21 டி20 இன்னிங்ஸ்களில் 169 ஓட்டங்களையே பெற்றிருப்பதோடு 22 இன்னிங்ஸ்களில் 14 விக்கெட்டுகளையே பெற்றிருக்கிறார். இந்தக் கோணத்தில் பார்த்தால் சாமிக்கவுக்கு இடைவெளி கொடுப்பது நல்லது என்று தேர்வுக் குழு நினைத்திருக்கக் கூடும்.

என்றாலும் விளையாட்டுத்துறை அமைச்சர், சாமிக்கவின் நீக்கம் பற்றி விளக்கம் கேட்டதோடு தேர்வு செய்யப்பட்ட இலங்கைக் குழாத்துக்கு கடைசி வரை ஒப்புதல் அளிக்கவில்லை. இதனால் அமைச்சரின் ஒப்புதல் இன்றியே அணி விபரத்தை வெளியிட வேண்டிய நிலை இலங்கை கிரிக்கெட் சபைக்கு ஏற்பட்டது.

சாமிக்க டி20இல் ஆடாத போதும் ஒருநாள் போட்டிகளில் சிறப்பாக செயற்படுகிறார். இந்த ஆண்டு ஆரம்பத்தில் நடந்த அவுஸ்திரேலியாவுக்கு எதிரான ஒருநாள் தொடரில் இரு ஆட்ட நாயகன் விருதுகளையும் வென்றிருக்கிறார்.

சாமிக்கவின் ஒழுக்கப் பிரச்சினைக்கு அணியில் தேர்வு செய்யாமல் இருக்கும் உரிமை தேர்வுக் குழுவுக்கு இல்லை என்பது ஒரு தரப்பின் வாதம்.

என்றாலும் இலங்கை அணியில் அண்மைக் காலத்தில் நிரந்தர வேகப்பந்து சகலதுறை வீரராக நிலைபெற்றிருக்கும் ஒரே வீரர் சாமிக்கதான். அவர் சோபிக்காதபோது அணிக்கு எந்த அளவுக்கு பதிப்பை செலுத்தும் என்பது அண்மையில் முடிந்த டி20 உலகக் கிண்ணப் போட்டி நல்ல உதாரணம்.

இலங்கை வேகப்பந்து வீச்சாளர்கள் வரிசையாக காயமடைந்து வெளியேறியபோது சாமிக்க சோபிக்காதபோது மைதானத்தில் அவரை பந்துவீச்சாளராக பயன்படுத்துவதில் அணித் தலைவர் பெரும் சிரமத்துக்கு முகம்கொடுத்தார். துடுப்பாட்டத்திலும் அதே நிலைதான். ஏனென்றால் அவரை ஒரு துடுப்பாட்ட வீரராகவும் கருதியே அணியில் சேர்த்திருக்கிறார்கள்.

எனவே, மாற்று வேகப்பந்து சகலதுறை வீரர் ஒருவரை பற்றி அவதானம் செலுத்த வேண்டிய நேரமாகவும் இது இருக்கிறது. குறிப்பாக நடத்தை பிரச்சினையை சரிசெய்வதற்கு அணித் தேர்வில் அது பற்றி கவனம் செலுத்துவது முழுமையாக தப்பு என்றும் குறிப்பிட முடியாது.

தனுஷ்க குணதிலக்க தவறுக்கு மேல் தவறு செய்தபோதும் அணியில் தொடர்ந்து தேர்வு செய்யப்பட்ட நிலையிலேயே மிகப்பெரிய தவறை செய்து அவுஸ்திரேலிய நீதிமன்றத்தில் பிணையில் விடுதலை பெற்றிருக்கிறார்.

சாமிக்கவின் திறமை மற்றும் நடத்தையை சரி செய்வது என்பது அவருடைய பொறுப்பு மாத்திரமல்ல சூற்றி இருப்பவர்களும் பொறுப்புக் கூற வேண்டும்.

**எஸ்.பிர்தௌஸ்...**







# கட்டாரின் 'சர்ச்சை' கதை

மனித உரிமை, ஜனநாயகம் என்ற கதை விளையாட்டு அரங்கிலும் ஒலிப்பது தொன்று தொற்று இடம்பெறும் நிகழ்வு. ரஷ்யாவில் உலகக் கிண்ண கால்பந்து போட்டி நடந்தபோதும் இப்படித்தான், சீனாவில் ஒலிம்பிக் போட்டி நடந்த போதும் இதே கதைதான். இப்போது கட்டாரில் உலகக் கிண்ண கால்பந்து போட்டியிலும் இந்தக் கதை தொடர்கிறது.

மேற்கத்திய உலகம் தனக்கு அப்பால் நிகழும் அனைத்து உலக நிகழ்வுகளையும் பொதுப்படையாக இப்படித்தான் பார்க்கிறது. 'கட்டார் உலகக் கிண்ணத்தில் சர்ச்சைகள்' என்ற தலைப்புகள் இந்தப் பின்னணியில்தான் வருகின்றன.

ஐரோப்பிய அணிகள் குறிப்பாக ஏழு அணித் தலைவர்கள் 'வன்லவ்' என்ற கைப்பட்டியை உலகக் கிண்ணப் போட்டிகளில் அணிய திட்டமிட்டார்கள். ஆண், பெண் ஒருபாலினச் சேர்க்கையாளர்கள், இருபாலின ஈர்ப்பாளர்கள் மற்றும் திருநங்கைகளை குறிக்கும் எல்.ஜி.பி.டீ மற்றும் மனித உரிமை விவகாரங்கள் குறித்து சொல்வதற்கே இந்த 'வன்லவ்' அடையாளம்.

உலகக் கிண்ண கால்பந்து போட்டி ஒன்று மத்திய கிழக்கில், முஸ்லிம் நாடு ஒன்றில் நடப்பது இது முதல் முறை. எனவே அங்கே சமயம், கலாசாரம், சமூக அமைப்பு என்பது மாறுபட்டிருக்கும். ஐரோப்பாவுக்கும் மேற்குலகுக்கும் அசௌகரியமான ஒன்று இங்கு சாதாரணமாக இருக்கக் கூடும்.

உலகக் கிண்ண போட்டியில் பரபரப்புக்கு இடையே இந்த பதற்றம் தொடர்ந்து இருந்து வருவது தெரிகிறது. கடந்த புதன்கிழமை (23) தனது முதல் போட்டியில் களமிறங்கிய ஜெர்மனி அணி தனது வாயை கையால் மூடியபடி புகைப்படத்தில் தோன்றியது சர்வதேச கால்பந்து சம்மேளனத்தை அதாவது பிஃபாவை எதிர்க்கும் வகையிலாகும். அணிகளை மௌனிக்க வைக்க முயற்சிக்கும் பிஃபாவுக்கு வழங்கிய செய்தி இது என்று ஜெர்மனி அணியின் முகாமையாளர் ஹான்சி பிளிக் கூறுகிறார்.

என்றாலும் ஜெர்மனியின் இந்த செயலுக்கு அரபு உலகில் இருந்து எதிர்ப்புகளே எழுந்தன. ஜெர்மனி வாயை மூடி புகைப்படத்துக்கு தோற்றம் தந்த அன்றைய நாள் போட்டியில் ஜப்பானிடம் 1–2 என்ற கோல் கணக்கில் தோல்வி அடைந்தது.

இதனை அடுத்து அந்தத் தோல்வி அரபு உலகில் 'ட்ரெண்டிங்' ஆக மாறியது. எல்.ஜி.பி.டீ உரிமையை ஆதரிப்பதற்கு வாயை மூடி நின்ற அந்த நிகழ்வு, அவமதிப்பதாகவும், ஆத்திரமூட்டுவதாகவும் உள்ளது என்று பலரும் பதிவிட்டார்கள். பிஃபா, வீரர்களுக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும் என்றும் வலியுறுத்தினார்கள்.

"நீங்கள் எங்களிடம் வந்திருக்கிறீர்கள் எங்களது மதம், கலாசாரம், எமது இயல்பு மற்றும் எமது சட்டங்களை மதிக்க வேண்டும், இல்லாவிட்டால் நீங்கள் விரும்பும் இடத்தில் உங்கள் கைகளை வைத்துக்கொள்ளுங்கள்" என்று ஒருவர் ட்விட்டரில் குறிப்பிட்டுள்ளார்.

மற்றொருவர், "பசி, வறுமை, நீர் பற்றாக்குறை மற்றும் பல உலகளாவிய பிரச்சினைகள் இருக்கும்போது இதனை மட்டும் தானா காரணமாக குறிப்பிடுகிறீர்கள்" என்கிறார்.

கட்டார் உலகக் கிண்ணத்தில் அரபு மற்றும் முஸ்லிம் ரசிகர்களை விழிக்கும் மற்றொரு பேஸ்புக் பதிவில், "அவர்கள் (ஜெர்மனி அணி) இதற்காக நின்றால், நீங்களும் உங்களின் மதத்தை பெருமைப்படுத்தி நில்லுங்கள்" என்று அழைப்பு விடுக்கப்பட்டிருக்கிறது.

ஐரோப்பிய அணித் தலைவர்கள் இந்த 'வன்லவ்' கைப்பட்டியை அணிவதற்கு பீஃபா மஞ்சள் அட்டை காட்டியதே இப்போது பிரச்சினை முற்றியதற்குக் காரணம். பிஃபாவின் இந்த நடவடிக்கை 'மிரட்டல் செயல்' என்று ஜெர்மனி கால்பந்து சம்மேளனத்தின் ஊடகப் பணிப்பாளர் ஸ்டெபன் சிமன் கடுமையாக சாடினார்.

வாயை மூடி புகைப்படத்தில் தோன்றி ஜெர்மனிய அணிக்கு எதிராக அந்நாட்டு கால்பந்து சம்மேளனம் எந்த நடவடிக்கையும் எடுக்காது. "அது அரசியல் பற்றிய செய்தி அல்ல. மனித உரிமைகள் என்பதில் சமரசத்திற்கு இடமில்லை. நாம் கைப்பட்டி அணிவதை மறுப்பது எமது குரலை மறுப்பதற்கு சமம். நாம் எமது நிலைப்பாட்டில் இருக்கிறோம்" என்றும் சிமன் கூறினார்.

மறுபக்கம் இந்த விவகாரத்தில் பிஃபா தலைவர் கியானி இன்பன்டினோ மேற்குலகை கடுமையாக சாடுகிறார். மேற்குலகம் கபடத்தனமாக செயற்படுகிற, கட்டாரின் மனித உரிமை செயற்பாடுகள், ஒருபாலுறவுக்கு எதிரான குற்றவியல் சட்டங்கள் பற்றி மேற்குலகம் தன் பக்க ஒழுக்கத்தை கற்பிக்கப்பார்க்கிறது என்றார்.

"நாம் ஒழுக்கம் பற்றி பாடம் கற்பிப்பதற்கு முன் கடந்த 3000 ஆண்டுகளாக ஐரோப்பியராகிய நாம் செய்ததற்கு, அடுத்த 3000 ஆண்டுகளுக்கு மன்னிப்புக் கேட்க வேண்டும்" என்கிறார் இன்பன்டினோ.

மத்திய கிழக்கு என்பது போர்களும், அரசியல் பதற்றங்களும் எப்போதும் இருக்கும் பிராந்தியம். அங்கு உலகக் கிண்ண கால்பந்து போட்டியை நடத்த கட்டாருக்கு வாய்ப்புக் கிட்டியது பெரும் வெற்றியாக இருந்தது.

ஆனால் 2010 ஆம் ஆண்டு கட்டார் உலகக் கிண்ணத்தை நடத்த பொறுப்பேற்றது தொடக்கம் குற்றச்சாட்டுகளும் சர்ச்சைகளும் ஆரம்பித்தன. போட்டியை நடத்துவதற்கான வாக்கெடுப்பிலும் ஊழல் நிகழ்ந்ததாக குற்றம் சாட்டப்பட்டது. பின்னர் கட்டாரின் காலநிலை பற்றி பிரச்சினை எழுப்பப்பட்டது. இதனால் வழக்கமாக ஜூன், ஜூலையில் நடத்தப்படும் உலகக் கிண்ணம் நவம்பர், டிசம்பருக்கு மாற்றப்பட்டது.

கட்டார் உலகக் கிண்ணத்திற்கு பிரமாண்டமான மைதானங்களை கட்டும்போது, அதில் வேலைபார்க்கும் ஊழியர்களின் உரிமை மீறப்படுவதாக குற்றம் சாட்டப்பட்டது. கடைசியில் எல்.ஜி.பி.டீ சமூகத்தை மோசமாக நடத்துகிறது என்ற குற்றச்சாட்டு பெரிதாக வெடித்தது.

என்றாலும் இந்த குற்றச்சாட்டுகளுக்கு அப்பால் இம்முறை உலகக் கிண்ணத்தை இதுவரை இல்லாத பிரமாண்டத்துடனும், பாதுகாப்புடனும் நடத்தும் கட்டாரை பாராட்ட மேற்குலம் பக்கம் நாதி இல்லை.



இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2022 நவம்பர் மாதம் 27ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.

Senthooram
செந்தூரம்
2022 நவம்பர் 27 ஞாயிற்றுக்கிழமை



கலைப்புரவலர்
ஸைட் சிவாஜி மௌலானா

பூகோள சஞ்சாரம்
பிர்தௌஸ்

# தேசிய கொடிகளும் ஊதா நிறமும்





நிகரகுவா நாட்டு தேசிய கொடியின் நடுவிலே சின்னதாக ஒரு வானவில் இருக்கிறது. அதில் ஊதா நிறம் பூசப்பட்டிருக்கிறது. அடுத்து டொமினிக்கா நாட்டு கொடியின் நடுவில் சிசிரோ கிளியின் படம் உள்ளது. அதற்கும் ஊதா நிறம் பூசப்பட்டிருக்கிறது. இந்த இரண்டு தேசியக் கொடிகளினதும் முக்கியத்துவமே ஊதா நிறம்தான். ஏனென்றால் உலகிலேயே ஊதா நிறம் பயன்படுத்தப்பட்ட தேசியக் கொடிகள் இவை இரண்டு மாத்திரமே.

## 1000 ஆண்டு எலும்புக்கூடு



அயர்லாந்தின் கொலுளனி என்ற ஊரிலே கடும் புயல் காரணமாக 215 ஆண்டு இராட்சத மரம் ஒன்று சாய்க்கப்பட்டது. என்ன ஆச்சரியம்! மரத்திற்குக் கீழே எலும்புக் கூடு ஒன்று காண்டுபிடிக்கப் பட்டது.

அந்த எலும்புகளில் கூறிய ஆயுதங்களால் தாக்கப்பட்ட தடயங்கள் இருந்தன.


அந்த மனிதன் கிட்டத்தட்ட 1000 ஆண்டுகளுக்கு முன்னர் புதைக்கப்பட்டிருக்கிறான்.

அவனது உடல் மரத்தின் வேரோடு சிக்கிய நிலையில் பாதுகாக்கப்பட்டிருக்கிறது.



## சிரியாவின் தலையில் மிளகாய் அரைத்தவர்

மத்திய கிழக்கின் அண்மைய வரலாற்றில் 1967 இல் நடந்த ஆறு நாள் யுத்தம் பிரபலமானது. முழு மத்திய கிழக்கையும் துவம்சம் செய்வதற்கு இஸ்ரேலுக்கு ஆறு நாள் போதுமானது என்பதுதான் யுத்தத்தின் சுருக்கம். இன்று வரை மத்திய கிழக்கின் தலை எழுத்தை எழுதி



வரும் யுத்தத்தில் எளி கொஹேன் என்பவர் ஒட்டு மொத்த சிரியாவின் தலையில் மிளகாய் அரைத்த கதையை கேட்டால் அழுவதா சரிப்பதா என்றே தெரியவில்லை.

சிரிய அரசாங்கம் முழு வீச்சில் இஸ்ரேலோடு சண்டைக்குப் போனாலும் இஸ்ரேல் அனாயாசமாக சிரியாவின் கோலன் குன்றைக் கைப்பற்றி தலைநகர் டமஸ்கஸை தொடும் தூரத்தை நெருங்கியது.

தனது யுத்த தந்திரத்தில் ஏதோ ஒரு ஓட்டை இருப்பது சிரியாவுக்கு எல்லாவற்றையும் பறிகொடுத்த பின்னர்தான் தெரிந்தது. அதுதான் எளி கொஹேன் என்பவர்.

சிரிய அரசாங்கத்திற்குள் எப்படியோ ஊடுருவி, அந்நாட்டு பாதுகாப்பு அமைச்சின் ஆலோசகராக இருத்தவர்தான் இந்த கொஹேன். இத்தனைக்கும் அவர் இஸ்ரேல் உளவுப் பிரிவான மொசாட்டின் இனி இல்லை என்ற விசுவாசம் கொண்ட உளவாளி.

சிரிய இராணுவம் பற்றிய அனைத்து தகவல்களையும் இஸ்ரேலுக்கு கொடுத்தார். ஆனால் கோலன் குன்றுக்குச் சென்று செய்த வேலைதான் பிரபலம். அங்கே அவர் சிரிய இராணுவத்தின் தற்காப்பு முறைகள் பற்றிய அனைத்து தகவல்களையும் சேகரித்து இஸ்ரேலிடம் கொடுத்துவிட்டார்.

பின்னர், அங்கிருக்கும் படையினருக்கு அனுதாபம் காட்டி நிழல் தருவதற்காக மரம் நடச் சொல்லி ஒரு வரைபடத்தை கொடுத்தார். ஏனென்று கேட்காது சிரிய பாதுகாப்பு தரப்பினரும் சொன்ன இடமெல்லாம் மரத்தை நட்டார்கள்.

உண்மையில் ஆறு நாள் யுத்தத்தில் அந்த மரங்கள்தான் யுத்த வரைபடமாக இருந்தது. அந்த இலக்குகளை நோக்கியே இஸ்ரேலிய துருப்புகள் வேகமாக முன்னேற முடிந்தது. அதாவது கொஹேனுக்கு நன்றி சொல்ல இரண்டே இரண்டு நாட்களில் இஸ்ரேல் ஒட்டுமொத்த கோலன் குன்றையும் கைப்பற்றியது.

எல்லாம் நடந்து முடிந்த பின்னரே கொஹேனின் வண்டவாளம் வெளியே தெரிந்தது. இராணுவ சட்டத்தின் கீழ் மரண தண்டனை விதிக்கப்பட்ட கொஹேன் 1965 மே 15 ஆம் திகதி பொது இடத்தில் தூக்கிலிடப்பட்டார்.



## பொலிஸில் இருந்த பலே திருடன்

அன்ட்ரே ஸ்டான்டர் போல பலே திருடனை பார்த்திருக்க மாட்டீர்கள். 1970 மற்றும் 80களில் பெரிய வங்கிக் கொள்ளைக்காரனாக இருந்தார். ஆனால் அவர் ஒரு பொலிஸ் காரரும் கூட. அதாவது பகல் உணவு நேரத்தில் பொலில் ஆடையை கழற்றி விட்டு மாறு வேடத்தில் வங்கிக்குப் போய் திருடுவார். பகல் உணவுக்குப் பின் அந்த திருட்டு பற்றி விசாரணை செய்ய அதே வங்கிக்கு பொலிஸாக போவார்.



இவரின் திருடன் பொலிஸ் விளையாட்டு கிட்டத்தட்ட மூன்று ஆண்டுகள் நீடித்திருக்கிறது. அப்போதெல்லாம் தென்னாபிரிக்காவில் வெள்ளை மேலாதிக்கம் பெரிதாக இருந்ததால் ஸ்டான்டர்டின் திருட்டு வேலைகள் பெரிதாக அவதானிக்கப்படாமல் இருந்தது.

கடைசியில் 1980, ஜனவரி மாதத்தில் டர்பனில் இருக்கும் வங்கி ஒன்றில் கொள்ளையிடச் சென்றபோதே ஸ்டான்டர் உண்மையான பொலிஸாரிடம் மாட்டிக் கொண்டார்.

நீதிமன்றத்தால் 75 ஆண்டு சிறைத் தண்டனை விதிக்கப்பட்டபோதும் அங்கே மற்றொரு வங்கிக் கொள்ளைக்காரருடன் நட்புக் கொண்டு சிறையில் இருந்து தப்பி பெரும் கொள்ளைக்காரராக மாறிய ஸ்டான்டர் 1984ஆம் ஆண்டு அமெரிக்க பொலிஸாரிடம் சிக்கியபோது தப்ப முயன்று சுட்டுக் கொல்லப்பட்டார். இவரின் மான்மியங்கள் பேசும் ஹொலிவுட் திரைப்படம் ஒன்றும் வந்திருக்கிறது.

# உயிர்களை ஆட்டி படைக்கும் பேய்கள்!

(கடந்த வாரத் தொடர்)

இந்த விஞ்ஞானி நீண்ட காலமாக ஆப்டிகல் மாயைகள் மற்றும் மாயைகளைப் படித்து வருகிறார், பெரும்பாலான விசித்திரமான தரிசனங்களை இயற்பியலின் எளிய விதிகளால் விளக்க முடியும் என்று அவர் நம்புகிறார். இந்த விஷயத்தில், அனைத்தும் ஒளியின் பண்புகளில் இருப்பதாக அவர் நம்புகிறார். அவரது தனிப்பட்ட கருத்துப்படி, மனிதக் கண் பொருள்களை அல்ல, ஆனால் அவற்றிலிருந்து பிரதிபலிக்கும் ஒளியை மட்டுமே உணர்கிறது. அதன் பிறகு, கண் விழித்திரையின் உதவியுடன், ஒளி மற்றும் அதே நேரத்தில் ஹால்ஃப்டோன்கள் உள்ள இருண்ட புள்ளிகள் டிஜிட்டல் குறியீடாக மொழிபெயர்க்கப்படுகின்றன, அதை எளிமையாகச் சொல்வதானால், மின் தூண்டுதலாக, பின்னர் மனித மூளைக்குள் நுழைகிறது. அதன் பிறகு, மூளை அவற்றை டிகோட் செய்து, பெறப்பட்ட தரவுகளின் முடிவுகளின் அடிப்படையில், மனித மனதில் உள்ள பொருட்களின் படத்தை உருவாக்குகிறது. இது நிஜ உலகின் ஒரு சித்திரமாக மக்கள் கருதுவதை உருவாக்குவதற்கான ஒரு நிலையான, வழக்கமான திட்டமாகும். இருப்பினும், இது மீறப்படலாம் என்பதைக் கவனத்தில் கொள்ள வேண்டும், இது பின்வரும் வழியில் செய்யப்படுகிறது: மனித கண் மற்றும் மூளை பழக்கமான கொள்கைகளின்படி ஒளி பிரதிபலிக்கப்படக்கூடாது. இதன் விளைவாக, இந்த கொள்கையின்படி, பல தந்திரங்கள் கட்டமைக்கப்படுகின்றன, அவை சர்க்கஸில் மாயைக்காரர்களால் காட்டப்படுகின்றன. இதைச் செய்வதற்கான எளிதான வழி ஒரு கண்ணாடி அமைப்பாகும், இது உண்மையான விஷயத்திலிருந்து பிரதிபலிக்கும் ஒளியை வேறு சில புள்ளிகளுக்குத் திருப்பிவிடும், அங்கு அது உற்பத்தி செய்யப்பட்டு பார்வையாளரின் முன் தோன்றும்.



இதே போன்ற தந்திரங்களை உருவாக்க மற்றும் தாய் இயற்கை முடியும். ஒரு மாயை என்றால் என்ன என்பதை நாம் அனைவரும் அறிவோம் எனவே அவை இந்த வகையிலிருந்து மிகவும் பிரபலமான நிகழ்வு.



பெரும்பாலும், பயணிகள் பாலைவனத்தின் நடுவில் ஒரு ஏரியைக் காணலாம், அல்லது ஒரு முழு நகரத்தையும் கூட, அவர்கள் அதை நோக்கி செல்கிறார்கள், ஆனால் இதன் விளைவாக இது ஒரு ஆப்டிகல் மாயை என்று மாறிவிடும். இயற்பியலாளர்களின் விளக்கங்களின்படி, உண்மையில் ஏரி அல்லது நகரம் உள்ளது, ஆனால் அவை எங்கோ அடிவானத்திற்கு அப்பால், ஒருவேளை ஆயிரம் மைல்கள் தொலைவில் உள்ளன. நிச்சயமாக, இவ்வளவு தூரத்திலிருந்து நகரத்தைப் பார்ப்பது நம்பத்தகாதது.இருப்பினும், வெவ்வேறு உயரங்களில் உள்ள காற்று வெவ்வேறு அடர்த்திகளைக் கொண்டுள்ளது, இது நேரடியாக ஈரப்பதம் மற்றும் வெப்பநிலையின் விநியோகத்தைப் பொறுத்தது.

கண்ணாடி மேற்பரப்பில் இருந்து ஒளியானது அடர்த்தியான அடுக்கிலிருந்து பிரதிபலிக்கும் என்று விஞ்ஞானிகள் கண்டறிந்துள்ளனர். ஒரு குறிப்பிட்ட தருணத்தில் இந்த வகை கண்ணாடிகள் நிறைய இருக்கலாம், எனவே அவை ஏரியின் படங்களை அதன் உண்மையான இடத்திலிருந்து வெகு தொலைவில் எடுத்து, பின்னர் அதை வேறு இடத்தில் சரிசெய்யவும்.

**ஒருபுறம், பேய்கள் தோன்றுவதற்கான துப்பு கண்டுபிடிக்கப்பட்டதாகத் தோன்றினாலும், மறுபுறம், பதிலளிக்கப்படாத கணிசமான எண்ணிக்கையிலான கேள்விகள் உள்ளன.**

இருப்பினும், இயற்பியல் பண்புகளின் உதவியுடன் மட்டுமே, ஐயோ, எல்லாம் சாத்தியமில்லை. மாஸ்கோ மெடிக்கல் அகாடமியில் பேராசிரியராக இருக்கும் யூரி சிவோலப், சில சமயங்களில் மனித மனதில் மாயைகள் எழலாம் என்றார். ஆனால் அதே நேரத்தில், ஒரு மனநலக் கண்ணோட்டத்தில், 2 கூறுகள் காரணமாக ஒரு இயற்கைக்கு அப்பாற்பட்ட நிகழ்வு ஏற்படலாம்: தகவல் இல்லாமை, அத்துடன் ஒரு நபரின் கற்பனையின் விளையாட்டு. இவை அனைத்தையும் கொண்டு, பொருட்களை உணர மக்கள் தயாராக இருப்பதன் மூலம் மிக முக்கியமான பாத்திரத்தை வகிக்க முடியும். மக்கள் ஒரு அதிசயத்தை எதிர்பார்க்கிறார்கள், காத்திருப்பவர்கள் எப்போதும் தங்களுக்கு என்ன வேண்டும் என்று பார்ப்பார்கள், யூரி சிவோலாப் உறுதியாக இருக்கிறார். இத்தகைய நிகழ்வுகள் பெரும்பாலும் படைப்பாற்றல் மனப்பான்மை கொண்டவர்களிடமோ அல்லது அமானுஷ்யத்தைப் படிப்பதில் அதிக ஆர்வம் கொண்டவர்களிடமோ ஏற்படும்.

மக்கள் எதையாவது பார்க்க விரும்பாததும், பயத்தினால் தான் நடக்கிறது. இந்த நிலையில், அவர்கள், எடுத்துக்காட்டாக, இரவில் கல்லறை வழியாகச் செல்வார்கள், திடீரென்று, சிலுவைக்கு பதிலாக, அவர்கள் சில மாய உருவங்களைக் காணலாம், இது எல்லாவற்றையும் தவிர, அவர்களை அணுகத் தொடங்கும். ஆனால், நடிகர்களின் விவரங்களை சாதாரண மக்கள் பார்க்க முடியாது.

பேராசிரியரின் கூற்றுப்படி, இதற்கு அதிக சுயஹிப்னாஸிஸ் அல்லது நோய் தேவைப்படுகிறது. மற்றவற்றுடன், ஒரு மாயைக்கும் மாயைக்கும் உள்ள முக்கிய வேறுபாடு என்னவென்றால், ஒரு மாயை ஒன்றுமில்லாதவற்றிலிருந்து எழ முடியாது, இது மற்ற பொருட்களின் சிதைந்த பார்வையின் விளைவாக தோன்றுகிறது. ஆனால் ஒரு மாயத்தோற்றம் என்பது ஒரு நோயுற்ற நனவின் பலனாகும்.

இருப்பினும், உண்மையில் இல்லாத ஒன்றைக் காண, ஒரு நபர் சிறப்பு உணர்திறன் மூலம் மட்டுமல்ல. யூரி சிவோலாப்பின் கூற்றுப்படி, கனவுகள், நேரடி அர்த்தத்தில், அவரது விழித்திருக்கும் நனவில் ஊடுருவும் போது மக்கள் அத்தகைய நிலைகளை அனுபவித்திருக்கிறார்கள். உதாரணமாக, நீண்ட தூர பயணங்களின் போது, சோர்வுற்ற மனித மூளையானது கனவுக்கும் நிஜத்திற்கும் இடையே உள்ள ஒரு நிலைக்குச் செல்லலாம். இந்த முறையின் மூலம், மக்கள் தங்கள் கண்களைத் திறக்கும்போது சில பொருட்களைப் பார்க்க முடியும், அதன் பிறகு தரவு மூளைக்கு அனுப்பப்படுகிறது, அங்கு தூக்க வழிமுறை இணையாகத் தொடங்குகிறது, மேலும் அங்கிருந்து வரும் படத்தை யதார்த்தத்தில் மிகைப்படுத்தலாம்.ஒருபுறம், பேய்கள் தோன்றுவதற்கான துப்பு கண்டுபிடிக்கப்பட்டதாகத் தோன்றினாலும், மறுபுறம், பதிலளிக்கப்படாத கணிசமான எண்ணிக்கையிலான கேள்விகள் உள்ளன. சரி, பேய்களைப் பொறுத்தவரை, அவை இன்னும் மூடுபனி ஆல்பியனின் கரையில் மட்டும் தொடர்ந்து சந்திக்கின்றன. இது ஒரு ஒளியியல் மாயை அல்லது உண்மையில் வேறொரு உலகத்திலிருந்து வந்த விருந்தினர்கள் என்று திட்டவட்டமாக உறுதிப்படுத்துவது மிகவும் கடினம். பேய்கள் இருப்பதை நம்புவது அல்லது அவற்றின் இருப்பை மறுப்பது என்பது ஒவ்வொருவரின் தனிப்பட்ட விஷயம்.




வாய்ப்பை வழங்கினார் என்பது இன்னும் நினைவில் உள்ளது. 1975 களிலிருந்து தமிழக சினிமா பிரபல முன்னணி நட்சத்திரங்க

கும் மிகவும் நெருங்கிப் பழகிய இலங்கையர் என்று இவரைச் சொல்லலாம். ஏகப்பட்ட இந்திய கலைஞர்களின் நண்பராகிய போதிலும்

எழுத்தாளர் ஏ.எம்.எம். நலாஸ் (திரை நிலவன்) கலைப்புரவலர் என்று பட்டமளித்து கௌரவித்தார். ஆத்ம

# "தமிழக மண்ணில் நமது கலைஞர்கள் திறமையை வெளிப்படுத்த முன்நிற்பேன்"



## ஸைட் சிவாஜி மௌலானா








பிரசித்தி பெற்ற வர்த்தக குடும்பத்தில் பிறந்த "செல்ல மௌலானா" கலைகளால் ஈர்க்கப்பட்டு இளம் வயதிலேயே கலைத் துறையில் ஈடுபட்டு "ஸைட் சிவாஜி மௌலானா" எனப் பிரபலம் பெற்று விளங்குகிறார்.

மௌலானா வீட்டு குடும்ப














திருமண நிகழ்வில் நடந்த இசை நிகழ்ச்சியில் வந்த உறவினர்கள் வியந்து மகிழ்ந்து பாராட்டிய இவர் பாடிய கன்னிப்

பாடல் உச்சிகுளிரவைத்து உற்சாகப்படுத்தியிருக்கிறது.

எனது தந்தை மூசிக்நூரி கலைஞர் மஹ்தூம் ஏ. காதர் இந்த

ளின் இனிய நண்பனாகி பல ஒளிப்பதிவுகளில் வலம்வந்த ஸைட் மௌலானாவுக்கு நடிகர் திலகம் சிவாஜி கணேசனின் நட்பு கிடைத்துள்ளது.

அன்றுமுதல் குடும்ப நண்பராகி நடிகர் திலகத்தின் மறைவு வரைக்

நமது இலங்கைக் கலைஞர்களின் நிகழ்வுகளில் கலந்து சிறப்பித்து ஊக்கப்படுத்தி உள்ளம் மகிழ்கிறார்.

இவ்வாறு இவர் கலையுலகில் தனி மரியாதையையும் இடத்தையும் தக்க வைத்துக் கொண்டிருக்கிறார். கலைஞர்களுக்கு உதவிக்கரம் நீட்டும் இவரது உயர் பண்பைப் பாராட்டி மறைந்த

திருப்திக்காக எனது கீத்ராத் நிகழ்ச்சிகளில் ஓரிரு பாடல்களைப் பாடி, சிரிக்கவும் சிந்திக்கவும் பேசி சபையோரை சந்தோஷப்படுத்துவார். வாழும்போதே கலைப்புரவலர், தேசமான்ய ஸைட் சிவாஜி மௌலானாவை அனைத்து கலைஞர்கள் ரகிசர்கள் சாபர்பாக வாழ்த்தி மகிழ்வோம்.

கலாபூஷணம்

**கலைஞர் கலைக்கமல்...**

# சிரீ...சிரீ...தரும் மகிழ்ச்சி





என் காதலி மனைவியான பின் என் கிட்ட பேச மாட்டேங்கிறா?


ஏன்..?

அவவ அவன் புருஷன் திட்டுவானாம்




சுதா உன்னை வர்ணிக்க வார்த்தைகளே இல்லை.

சுரேஷிடம் ஐடியா கேளுங்க...
அவன் தான் என்னை நல்லா வர்ணிப்பான்.



இங்க பாருங்க என்னை கொடுமைப்படுத்தினா ரயில் தண்டவாளத்தில கழுத்து வைச்சு உயிரை விடுவேன்.....

ஐய்யயோ அப்படி செஞ்சுடாதடி அப்புறம் ரயில் கவிழ்ந்தா நான் தான் குண்டு வைச்சேன் என்று என்னை பிடிச்சிடுவாங்க...!



பொண்ணு வீட்டுக்காரங்க போன் பண்ணினாங்க

என்னவாம்?

நாம பொண்ண பிடிக்கல்லன்னு சொல்லிட்டோமா... நாம எல்லோரும் பலகாரம் எல்லாம் சாப்பிட்டதற்கு 2000 ரூபா அனுப்ப சொல்லிருக்காங்க



என் கணவர் சினிமாவில நடிக்கக்கூடாதுன்னு சொல்லிட்டாரு.....அதனால என் எண்ணத்தை மாத்திட்டேன்...

சினிமாவில நடிக்கிற எண்ணத்தையா? இல்லை...... கணவரை....



எங்கம்மா எது வாங்கினாலும் வாயில போட்டு பார்த்துத் தான் வாங்குவாங்க....!

அப்போ கொஞ்சம் எலி மருந்து வாங்கி வரச் சொல்லுங்க...



உன் கழுத்து எலும்பு முறியற அளவுக்கு என்னாச்சு?

சாப்பிடும் போது புரையேறிச்சு... என் மருமகள்கிட்ட தலையில தட்டச் சொன்னேன்.....



சார் என்ட சம்பளத்த உயர்த்தணும்

சொரி.....அதெண்டால் முடியாது...வேற என்ன வேணுமானாலும் கேளு...!

ஓ.கே மாசத்தில இரண்டு தடவை சம்பளத்த குடுத்திடுங்க...!



ஒங்க அம்மா ஊருல இருந்து வந்திருக்காங்களா.....?

ஆமா .....எப்படி கண்டு பிடிச்ச....?

ஒங்க மனைவியும் வேலைக்காரியும் அன்பா பேசிக்கிறாங்களே...!



இந்த பேய் மழையில வெளிய கிளம்பிட்ட....

பூசாரியைத் தேடித்தான்...



என் மனைவி மின்சாரம் மாதிரி!

எப்படிச் சொல்லுறீங்க

அவ இல்லான்னா வீடே இருளடைஞ்ச மாதிரி இருக்குமே...!

# பத்து ரூபா சம்பளத்தில் பத்துப்பாத்திரம் தேய்த்து முதலாளியான ராமன்

தலைநகர் கொழும்பில் கடந்த ஏழு தசாப்தங்களாக, நாவுக்கு ருசியாக அறுசுவை உணவு படைத்து தமிழ், சிங்கள வாடிக்கையாளர்களை தன் வசம் ஈர்த்து வைத்திருக்கும் கோல்டன் கபே உணவகம், நவம்பர் 23ஆம் திகதி தமது 70ஆவது ஆண்டு நிறைவில் காலடி எடுத்து வைத்தது.

1953ஆம் ஆண்டு நவம்பர் 23ஆம் திகதி கொழும்பு, பேங்ஷால் வீதியில் தொடங்கப்பட்ட இந்த உணவகத்தை நடத்தி வருபவர்தான் சங்கர நாராயண ராமன்.




ஒரு ஹோட்டலில், பத்து ரூபா சம்பளத்தில் பத்துப்பாத்திரம் தேய்த்து, மேசை துடைத்து தமது பணியை தொடங்கிய ராமன் இன்று கோல்டன் கபே, ஸ்ரீயாணி, கொள்ளுப்பிட்டி சரஸ்வதி ஆகிய உணவகங்களின் அதிபராக அசுர வளர்ச்சி கண்டது எப்படி என்பதை அவரிடமே கேட்டுத் தெரிந்துகொள்வோம்.

நம்ம ஹோட்டலுக்கு வருபவர்களுக்கு முதலில் நல்ல மரியாதையும் நாவுக்கு ருசியான உணவும் வழங்கப்படுகிறது. பணம் அதற்குப் பிறகுதான். எனது வெற்றிக்கு காரணம் பணிவும், பண்பும் தான்' என்று சொல்லி விட்டு தாம் கடந்து வந்த பாதையின் சில சம்பவங்களை எம்மிடம் சுவாரஸ்யமாக விபரிக்க தொடங்கினார்.

'திருநெல்வேலி மூலைக்காரைப்பட்டியில் சங்கர நாராயண ரெட்டியார் ஆளம்மாள் தம்பதியரின் மூத்த மகனாகப் பிறந்தேன். எனக்கு மூன்று தங்கைகள். அப்பா சமையல் காரராக கொழும்பில் தொழில் பார்த்தார்.

மிகவும் வறுமையான குடும்பத்தில் அவர் பிறந்ததினால் எனது பள்ளிப் படிப்பை நாலாவதோடு முடிந்து விட்டேன். வறுமையைப் போக்க மாட்டுச்சாணத்தை அள்ளி வந்து 'வரட்டி' தட்டிச் சுவரில் அடித்துக் காய வைத்து விற்பது தான் நான் செய்த முதல் தொழில். அப்பா மாதிரி நானும் கொழும்புக்குப் போய் உழைக்க வேண்டும் என்ற ஆசையில் 48ஆம் ஆண்டு கொழும்புக்கு வந்தேன்.

கட்டின துணியோடு வந்தார்கள் என்று சொல்வார்களே, அது மாதிரித் தான் நானும் ஒரு துண்டு வேட்டியும் முண்டா பெனியனுமாக என் உறவினர் ஒருவருடன் வந்தேன். கொழும்புக்கு வந்து அப்பாவைப் பார்த்தேன். தான் வேலை பார்த்த கொம்பனி வீதி, 'லட்சுமி விலாஸ்' ஹோட்டலில் எனக்கு ஒரு வேலை வாங்கித் தந்தார் அப்பா.

ஹோட்டலில் மேசை துடைக்கும் வேலை. லட்சுமி விலாஸ் ஹோட்டல் கொம்பனித்தெரு ஜாவாலேனில் இலக்கம் 23இல் இயங்கி வந்தது. அந்தக் ஹோட்டலில் மேசை துடைப்பது, பாத்திரம் கழுவுவது, சர்வர் வேலை என்று அனைத்து வேலைகளையும் செய்தேன். மாதம் எனக்கு பத்து ரூபா சம்பளம் தந்தார்கள்.


திருமதி ராமனுடன்....

போதுமான சம்பளம் அந்த நேரத்தில். சில காலத்தின் பின் அப்பா திருநெல்வேலிக்கு சென்று அங்கேயே தங்கி விட்டார். நான் இங்கேயே ஹோட்டல் சிப்பந்தியாக வேலை பார்த்து வந்தேன்.

நம்ம படிப்பு நாலாவது மட்டும் தான் என்பதால் கொம்பனி வீதி கிறிஸ்தவ ஆலயத்தில் நடந்து வந்த இரவு நேர ஆங்கில வகுப்பில் சேர்ந்து கொஞ்சக் காலம் படித்தேன்.

அங்கேதான் கொஞ்சம் ஆங்கிலம் கற்றேன். மற்றதெல்லாம் பகுத்தறிவு தான்' என்றுசொல்லும் ராமன், பத்து ரூபா சம்பளத்தில் பத்துப்பாத்திரம் தேய்த்து, மேசை துடைத்து எப்படிக் கல்லாவில் உட்கார்ந்து காசு எண்ணினார் என்பதையும் எம்மிடம் சுவாரஸ்யமாக சொல்லத் தொடங்கினார்.

கொம்பனி வீதி ஜாவாலேனில் அமைந்திருந்த லட்சுமி விலாஸ் ஹோட்டலுக்கு அருகில் ஒரு பெரிய வீடு இருந்து அந்த வீட்டுக்கு தினசரி காலை உணவை நான் தான் எடுத்துச் செல்வேன். அந்த வீட்டில் இருந்த துரைக்கு குழந்தைகள் இல்லாததால் என் மீது அவர்களுக்கு மிகுந்த அன்பு. அந்தத் தம்பதியினருக்கும் எனக்குமான நட்பு நீண்ட காலமாக தொடர்ந்தது.

பின்னர் ஒரு சமயத்தில் லட்சுமி விலாசின் நிர்வாகத்தை அந்த பெரிய வீட்டுத் துரை எடுத்து நடத்தினார். அந்தச் சந்தர்ப்பத்தில் அவருக்கு விசுவாசமாக இருந்த என்னை லட்சுமி விலாஸின் கல்லாவில் அமர்த்தினார்கள். அதன் பிறகு நீண்டகாலமாகக் கடையின் காசாளராக நேர்மை தவறாது பணியாற்றி வந்தேன்.



1953ஆம் ஆண்டு பேங்சால் வீதியில் கோல்டன் கபே கடையை எனது உறவினர் ஒருவர் பொறுப்பேற்றார். அதனால் கோல்டன் கபேயின் காசாளரானேன். அதன் பிறகு அந்தக் கடையின் நிர்வாகத்தை ஆர். கிருஸ்ணமூர்த்தியால் நடத்த முடியாமல் போக, தமக்கு விசுவாசமாகவும், நேர்மையாகவும் இருந்த என்னிடம் ஹோட்டலைக் கையளித்து விட்டு அவர் இந்தியாவுக்கு சென்று விட்டார். ஆர்.கிருஸ்ணமூர்த்தியை என்னால் எப்போதும் மறக்க முடியாது. என்னிடம் ஒரு சதமும் எதிர்பார்க்காமல் இவ்வளவு பெரிய ஹோட்டலை என்னிடம் கொடுத்து விட்டுச் சென்ற கிருஸ்ணமூர்த்திக்கு ரொம்பவும் தாராள மனசுங்க' என்று தமக்கு வாழ்க்கை கொடுத்த வரை ராமன் நெஞ்சார வாழ்த்துகிறார்.



50களில் கொழும்பில் இயங்கிய சைவ உணவங்களைப் பற்றி ராமனிடம் கேட்டோம்.

'சைவ பிள்ளையார் ஹோட்டல், பிராமணர் ஹோட்டல், உடுப்பி லொட்ஜ், கோமதி விளாஸ், மெட்ராஸ் கபே, சரஸ்வதி கபே, ஆரியபவன் உள்ளிட்ட ஹோட்டல்கள் தான் இயங்கி வந்தன. இவைகள் தான் பெயர் சொல்லும்படியான பெரிய கடைகள். அப்போது கொழும்பில் இந்தியத் தமிழர்கள் பெரும்பான்மையாக வாழ்ந்தார்கள்.

அதனால் சைவ உணவகங்களும் அதிகமாக இருந்தன. கொம்பனி வீதியில் மட்டும் ஐந்து சைவக் கடைகள் இருந்தன. அசைவ ஹோட்டல்கள் மிகவும் குறைவு.

ஆனால் இப்போது போல பெரிய கூட்டம் சாப்பிட வராது. அந்தக் காலத்தில் வெளியிலிருந்து பெரிய அளவில் மக்கள் கொழும்புக்கு வருவதில்லை. போக்குவரத்து பிரச்சினை இருந்தது. கொழும்பில் உள்ளவர்கள் மட்டுமே இங்கே சாப்பிட வருவார்கள்.

அப்போது சாப்பாடு பார்சல் ஒன்று 45 பைசா, இடியப்பம் 2 சதம், டீ 3 பைசா, ஆட்டுக்கல் அம்மி உரல் என்று எல்லாமே மனித உழைப்புத்தான். இயந்திரங்கள் எதுவுமே கிடையாது. சமைப்பது புகை மண்டும் விறகு அடுப்பில் தான். அதனால் உணவு வகைகளின் சுவையும் ரொம்ப அதிகமாக இருந்தது. அந்தக் காலத்தில் காய்கறி உற்பத்தி இங்கே பெரிய அளவில் இருந்த மாதிரி தெரியவில்லை. காய்கறிகள் தமிழ் நாட்டிலிருந்து கொண்டு வருவார்கள். தினமும் படகில் புதிதாக காய்கறிகள் வந்து இறங்கும்.

(07ஆம் பக்கம் பார்க்க)

மணி ஸ்ரீகாந்தன்...

(06ஆம் பக்கத் தொடர்)

அந்த நேரத்தில் தமிழகத்திலிருந்து வரும் உளுந்தும் ரொம்ப பெரிதாக இருக்கும்.

அதை அரைத்துச் செய்யும் இட்லியும் ரொம்ப மென்மையாகவும் சுவையாகவும் இருக்கும். ஆனால் இப்போ உளுந்தின் பருமனும் குறைந்து அந்தக் காலச் சுவையையும் போய் விட்டது.



அந்தக் காலத்தில் உணவுகள் மிகவும் சுவையாக இருந்தாலும் சைவ உணவகங்கள் இப்போது மாதிரி பளிச்செனவும் ஒரு ஒழுங்கமைப்பிலும் இருக்கவில்லை. தண்ணீர் பட்டுஅழுக்குப் படிந்து கறுப்பாகிப் போன மரப் பலகையில் செய்யப்பட்ட மேசைகள், அமர்வதற்கு நீண்ட வாங்குகள், தண்ணீர் குடிக்க பித்தளைக் குவளைகள் என்பதாகவே அந்தக் காலச் சைவக் கடைகள் காட்சியளித்தன. சிப்பந்திகளுக்கு சீருடைகள் கிடையாது. வேட்டி சட்டை தான்.

சிலர் பனியன் போட்டுக் கொண்டும் சப்ளை செய்வார்கள்.



ஹோட்டலுக்கு சாப்பிட வருபவர்கள் கூட சாரம், வேட்டிசட்டை ,பனியன் தான். சிலர் மேல் சட்டை அணியாமல் வெற்றுடம்புடன் வேட்டி மட்டும் அணிந்து வருவார்கள். பெரும்பான்மை இனத்தவர்களில் பெரும்பாலான ஆண்கள் மேல் சட்டை இல்லாமல் தான் சாப்பிட வருவார்கள்.

'அப்போது இரண்டு குழம்பு ரசம், கீரை, சம்பல் என்று ஐந்து அயிட்டங்களோடு பகல் உணவு முடிந்து விடும். பாயாசம் எல்லாம் கிடையாது. இப்போ தான் பாயாசம் சுவீட் எல்லாம். அப்போது பொம்பே ஸ்வீட் என்றால் என்னவென்றே தெரியாது.

பூரி, சப்பாத்தி, பரோட்டா என்பன அப்போது கேள்விப்படாத சங்கதிகள். அவை எல்லாம் பிற்காலத்தில் வந்தவை.உணவு சமைக்கும் அண்டா மற்றும் சமையல் பாத்திரங்கள் அனைத்துமே பித்தளையால் ஆனவை. பித்தளைப் பாத்திரத்தில் உணவு சமைத்தால் சாப்பிட முடியாது. அதனால் சமையல் பாத்திரங்களின் உள்ளே அலுமினியத்தைப் பூசுவார்கள். மூன்று மாதத்திற்கு ஒரு முறை பாத்திரங்களின் உள்ளே அலுமியத்தைப் பூசுவார்கள். அதைப் பூசுபவனுக்கு இரண்டு ரூபா கூலியாகக் கொடுப்போம்' என்று கடந்த கால தமது ஹோட்டல் அனுபவங்களை பகிர்ந்து கொண்ட ராமனுக்கு கொழும்பு இலக்கிய வட்டத்தில் ஒரு பெயர் இருக்கிறது. அநேக இலக்கிய அன்பர்களுக்கு இவரைத் தெரிகிறது. இலக்கிய உலகில் இவர் ஒன்றும் பெரிய படைப்புகளைத் தரவில்லை தான்.

ஆனாலும் பேங்ஷால் வீதியில் உள்ள கோல்டன் கபேயில் பெயருக்கு தகுந்தால் போலவே நாவுக்கு ருசியாக உணவையும் அறிவுக்கு தீனியையும் வழங்கி வருகிறார்.

இவர் தொகுத்தெழுதிய சிதறிய முத்துக்கள். பொன் மொழிகளில் பெண்மணிகள் உள்ளிட்ட இரண்டு நூல்களையும் அவரின் உணவகத்தில் விற்பனைக்கு வைத்திருக்கிறார்.

கொழும்பு மாநகர சபையால் வழங்கப்படும் சிறந்த சைவ உணவகத்துக்கான விருதினை கடந்த 2007ஆம் ஆண்டு தொடக்கம் 2011ஆம் ஆண்டு வரை தொடர்ச்சியாக கோல்டன் கபே உணவகமே பெற்றிருக்கிறது.

வாழை இலை, சோறு, சூடு, வாசம் நினைத்தாலே இனிக்கிறதா.... உடனே கோல்டனுக்கு போய் சாப்பிட்டுபாருங்க...

# டிஸ்கோ ராஜாவின் இறுவட்டு வெளியீட்டு விழா












## மௌன மொழி

### இலங்கையில் ஒரு முழு நீள தமிழ் திரைப்படம்...

சனாதனனின் இயக்கத்தில் ரவீந்திரன் தயாரிப்பில் வினோத்ரோன் ஒளிவண்ணத்தில் தீப்திகா, ஜனா ரவி, கவிநாத், கலை ரியா, பிரிய தர்ஷினி, கேதீஸ், பிரகேஷ், இஷாலினி ஆகியோர் நடிப்பில் அடுத்த மாதம் படப்பிடிப்பு ஆரம்பமாக உள்ள மௌன மொழி திரைப்படம் 2023இல் திரைக்கு வர இருக்கிறது. நிச்சயமாக மிகப்பெரிய ஒரு முயற்சி. அதை நிதர்சனமாக்க எங்கள் அணி கடுமையாக உழைக்கும். அதே நேரத்தில் உங்கள் அனைவரின் அன்பும் ஆதரவும் இணைந்தால் மாத்திரமே இதை சாத்தியமாக்கலாம். அந்த நம்பிக்கையில் களம் இறங்குகின்றோம் என்று சனாதனன் சனா தெரிவித்துள்ளார்.

Senthooram செந்தூரம்



# சினி பஜார் கேள்வி பதில்



மொழிவாணன்

**எம்.மாகிரட்.**
**எலபடகம**

கேள்வி: **நடிகை சமந்தாவிற்கு ஏதோ வரக்கூடாத நோய் ஒன்று வந்து அவர் அவஸ்தைப் படுவதாக இணையத்தில் தகவல் ஒன்று வைரலாகி வருகிறதே.. உண்மையா சேர்..?**

பதில்: நடிகை சமந்தா தனக்கு ஏற்பட்ட அரிய நோய் பாதிப்பு குறித்து காணொளி ஒன்றை இணையத்தில் பதிவிட்டிருந்தார்.

இதனைப் பார்வையிட்ட பலரும் அவருக்கு நேர் நிலையான ஆதரவை வழங்கி வருகின்றனர். சிலர்'நோயாளி சமந்தா'என குறிப்பிட்டது போல் "விரைவில் அவர் மரணத்தைத் தழுவுவார்"என்று எதிர் நிலையான விமர்சனத்தை முன்வைத்தனர்.

இதனால் மனமுடைந்து போன சமந்தா"நான் எனக்கு ஏற்பட்டிருந்த பாதிப்பை சக மனிதர்களிடம் பகிர்ந்து கொண்டிருந்தே அத்துடன் இத்தகைய பாதிப்பு ஏற்பட்டவர்களுக்கு



நம்பிக்கை அளிக்கும் வகையில் இதனை எதிர்த்து போராடி வருகிறேன் என்பதையும் சொல்லி இருந்தேன். ஆனால் சிலர் இதற்கு எதிர் நிலையான கருத்தினைப் பகிர்ந்து என்னை பலவீனப்படுத்தினர்.ஆனால் நான் மன உறுதியுடன் இதனை எதிர்த்து போராடி மீள்வேன்"என இணையத்தில் மீண்டும் ஒரு காணொளியை பதிவிட்டிருக்கிறார்.

அத்துடன் 'யசோதா'படத்தின் பயணத்தைப் பற்றியும் படத்தை ரசிகர்களிடம் அறிமுகப் படுத்தும் விழாவில் பங்கு பற்ற இயலாத சூழலை விளக்கியது டன்,இது தொடர்பாக தயாரிப்பு நிறுவனம் வெளியிட்ட காணொளியில் பங்கு பற்றி தன் நிலையை விவரித்திருந்தார்.அவரது இந்த அணுகுமுறை திரை உலகில் பெரும் வரவேற்பைப் பெற்றிருக்கிறது.கணவரைப்பிரிந்தாலும் தன்னுடைய சுய அடையாளத்தை இழக்காமல் ,நோயிடமும் போராடி துணிவுடன் நடித்து வரும் சமந்தாவை,அவரது ரசிகர்கள் மட்டுமல்ல திரையுலகினரும் பாராட்டுகிறார்கள்.

**எம்.எம்.மீரான்.**
**மாவனல்ல..**

கேள்வி:**சினிமாவிற்கு பாடல் எழுதும் கோடம் பாக்கத்து கவிஞர் களில் உங்களுக்கு பிடித்த கவிஞர் யார்?**

பதில்:'தண்ணீரில்'தான் மூழ்கினாலும் தமிழை கரை சேர்த்த அந்த மாபெரும் கவிஞன்தான்.

என்ன புரியவில்லையா.. கவிஞர் கண்ணதாசனைத் தான் சொல்கிறேன். பாமர மக்களுக்கும் புரிய கூடிய விதத்தில் தமிழை எளிமையாக்கி பாட்டெழுதி யவன் கண்ணதாசன்."நதியில் விளையாடி கொடியில் தலைசீவி நடந்த இளந் தென்றலே.." என்று பாடி வைத்தானே... யாருக்கு வரும் இந்த கற்பனை திறன்.அது மட்டுமல்ல,பிள்ளை மனம்... வள்ளல் குணமும் கொண்டவனும் கூட...

இவரை எனக்கு பிடித்ததில் வியப்பில்லை அல்லவா...!

**ஆர்.சுதாகர்.**
**வத்தளை.**

கேள்வி:**பிரமாண்ட இயக்குநர் ஷங்கரும் 'பொன்னியின் செல்வன்' நாவலைப் போல், நாவல் ஒன்றை பிரமாண்டமாக இயக்கப் போவதாக தகவல் வந்திருக்கிறதே... அதைப்பற்றி கொஞ்சம் சொல்லுங்களேன்...?**

பதில்:உண்மைதான்... இயக்குநர் ஷங்கர், பிரபல எழுத்தாளர் சு.வெங்கடேஷன் எழுதிய 'வேள்பாரி'எனும் நாவலை பிரம்மாண்டமான பட்ஜெட்டில் மூன்று பாகங்கள் கொண்ட திரைப்படமாக உருவாக்க திட்டமிட்டுள்ளார். இது தொடர்பான தகவல்கள் வெளியாகியுள்ளன. இந்த திரைப்ப



டத்தில் முதலில் நடிகர் சூர்யாவும்,பிறகு கே.ஜி.எஃப் படப் புகழ் நடிகர் யஷ் நடிப்பதாகவும் தகவல்கள் வெளியானது. ஆனால் தற்போது இயக்குநர் ஷங்கர் இயக்கத்தில் 'அந்நியன்' படத்தின் ஹிந்தி ரீமேக்கில் நடிப்பதாக ஒப்புக்கொண்ட இந்தியின் முன்னணி நட்சத்திர நடிகரான ரன்வீர் சிங் நடிக்கக் கூடும் என்றும் இதற்கான பேச்சு வார்த்தை இறுதிக்கட்டத்தை எட்டி இருப்பதாகவும் தகவல்கள் வெளியாகி இருக்கிறது. '

வேள்பாரி'எனும் தமிழ் மண்ணின் மணம் கமழும் சரித்திர கதைக்கு, ரன்வீர் சிங் என்னும் தமிழ் மண்ணுக்கு முற்றிலும் அந்நியமான முகத்தை கதையின் நாயகனாக்குவது எளிதானதாக?அல்லது சவாலானதா?

என்பது நாட்கள் செல்லச் செல்ல ரசிகர்களுக்கு உறுதிப்பட தெரிய வரும்.இருப்பினும் பிரம்மாண்ட இயக்குநர் ஷங்கரின் கற்பனையில் 'வேள்பாரி'வித்தியாசமான படைப்பாக உருவாகும் என உறுதியாக நம்பலாம்.இதனிடையே இயக்குநர் ஷங்கர் தற்போது உலகநாயகன் கமல்ஹாசனை வைத்து 'இந்தியன்2' படத்தையும், தெலுங்கு முன்னணி நட்சத்திரமான தேஜா நடிக்கும் பெயரிடப் படாத தெலுங்கு படத்தையும் இயக்கி வருகிறார் என்பதும் குறிப்பிடத் தக்கது.

**சினி பஜார் கேள்வி பதில்,**
**தினகரன் வார மஞ்சரி,**
**லேக் ஹவுஸ், கொழும்பு-10.**

# புள்ளினமும் பொறாமை கொள்ளும் மெல்லினமே பார்த்தாலே ஈர்க்கும் பரவச பெண்ணினமே



**தன்** அழகால் அழகை ஆராதிக்கும், பிரபுதேவா உடன் பியூட்டி பொலிஸாக நடிக்கும் உபாசனா மனம் திறக்கிறார்...

**உங்கள் நடிப்பில் கலக்க போகும் படங்கள்? ...**

எஸ்.பி.ராஜ்குமார் இயக்கத்தில் 'லோக்கல் சரக்கு', மணி தாமோதரன் இயக்கும் 'ஷார்ட்கட்', ஷாம் ரோட்ரிக்ஸ் இயக்கத்தில் 'மூசாசி' என வித்தியாசமான படங்களின் நடிக்கிறேன். மூன்று படங்களின் ரிலீஸ்காக ஐயம் வெயிட்டிங்...

**'மூசாசி' என்ன கதைக்களம்?**

ஜப்பானிய போராளி, நடிகராக இருந்தவர் தான் 'மூசாசி'. படத்தில் பிரபுதேவா போலீஸ் துணை கமிஷனராக நடிக்கிறார். அவரது பொலிஸ் குழுவில் நானும் பொலீசாக வருகிறேன். சீரியஸான படம்... பிரபுதேவாவுக்கு டான்ஸ் கூட இல்லை....

**நடிப்பு மட்டும் தானா டான்ஸ் கூட ஆடுவீங்களா?**

ஆமா... பரதநாட்டியம், சால்சா, இந்தியன், வெர்ஸ்டர்ன் என பலடான்ஸ் எனக்கு தெரியும். கல்லூரி நாட்களில் நிறைய மேடைகளில் ஆடியிருக்கேன். நான் நடிக்கும் படங்களில் வாய்ப்பு வந்தால் கண்டிப்பாக டான்ஸ் ஆடி கிளப்பிடுவேன்....

**டிவி ரியாலிட்டி ஷோக்களில் ஆர்வம் இருக்கிறதா?**

நிறைய இருக்கு... டிவியில் கேம் ஷோ, 'வில்லா டூ வில்லேஜ்'ங்குற ரியாலிட்டி ஷோக்கள் பண்ணியிருக்கேன்.

**நடிக்க வந்த பின் மாடலிங், பேஷன் ஷோக்கள்?**

அதெப்படி விட முடியும்... இப்போ கூட சர்வதேச பிராண்ட், வெட்டிங் போட்டோ ஷூட் எல்லாம் பண்ணிட்டு வந்திருக்கேன். 'ஏலைட் மிஸ் இந்தியா ஏசியா 2015'ல் டைட்டில் வின்னர்....

# தமன்னாவுக்கு விரைவில் திருமணம்



**விஜய்**, அஜித், சூர்யா, விஷால், தனுஷ் உள்ளிட்ட முன்னணி கதாநாயகர்களுடன் நடித்துள்ளவர் தமன்னா. தமன்னாவுக்கு விரைவில் திருமணம் நடைபெற இருப்பதாக தகவல் பரவி வருகிறது. தமிழில் விஜய், அஜித், சூர்யா, விஷால், தனுஷ் உள்ளிட்ட முன்னணி கதாநாயகர்களுடன் நடித்துள்ள தமன்னா தெலுங்கு, இந்தியிலும் அதிக படங்களில் நடித்திருக்கிறார்.

இவர் நடிப்பில் வெளியான பாகுபலி திருப்புமுனை படமாக அமைந்தது. இந்த நிலையில் தமன்னாவுக்கு விரைவில் திருமணம் நடக்க உள்ளதாக தகவல் பரவி வருகிறது. ஏற்கனவே இதுபோல் திருமண கிசுகிசு வந்தபோது தமன்னா உடனடியாக மறுத்தார்.

திருமணம் செய்து கொள்ளும் எண்ணம் இப்போதைக்கு இல்லை என்று கூறினார். ஆனால் தற்போது திருமண ஏற்பாடுகள் நடப்பதாக வலைத்தளத்தில் மீண்டும் பரவி வரும் தகவலுக்கு தமன்னா மறுப்பு எதுவும் சொல்லவில்லை.

திருமண முடிவை பெற்றோரிடம் விட்டு விட்டேன். அவர்கள் பார்க்கும் மாப்பிள்ளையை மணப்பேன் என்று முன்பு கூறியிருந்தார். தற்போது பெற்றோர்தான் மாப்பிள்ளையை பார்த்து முடிவு செய்து இருப்பதாகவும், மணமகன் மும்பையை சேர்ந்த பெரிய தொழில் அதிபர் என்றும், அவரை மணக்க தமன்னாவும் சம்மதித்துவிட்டார் என்றும் கூறப்படுகிறது.

# பெடியா



**பிரபல** இந்தி நடிகர் வருண் தவான், கீர்த்தி சனோன் நடித்துள்ள `பெடியா' இந்தி படம் தமிழிலும் திரைக்கு வர உள்ளது. தமிழ், இந்தி, தெலுங்கு உள்ளிட்ட அனைத்து மொழி களிலும் வெளியாகும் பான் இந்தியா படங்கள் அதிகம் தயாராகின்றன.

அந்த வரிசையில் பிரபல இந்தி நடிகர் வருண் தவான், கீர்த்தி சனோன் நடித்துள்ள `பெடியா' இந்தி படம் தமிழிலும் திரைக்கு வர உள்ளது. இதில் தீபக் தோப்ரியால், அபிஷேக் பேனர்ஜி ஆகியோரும் முக்கிய கதாபாத்திரங்களில் நடித்துள்ளனர். படத்தின் டிரெய்லர் வெளியாகி பரபரப்பாக பேசப்பட்ட நிலையில் தற்போது இதில் இடம்பெற்றுள்ள `எனக்காய் பிறந்தவளே நீயா' என்ற தமிழ் காதல் பாடல் வெளியாகி உள்ளது. சச்சின் ஜிகர் இசையமைத்துள்ள இந்தப் பாடலை கார்த்தி பாடி உள்ளார். மேலும் காடுன்னா திரில்லுதானடா என்ற பாடலையும் வெளியிட்டு உள்ளனர். மேடாக்ஸ் தயாரிப்பில் ஜியோ ஸ்டுடியோஸ் மற்றும் தினேஷ் விஜன் வழங்கும் பெடியா படம் 2டி மற்றும் 3டியில் வெளியாக உள்ளது. தமிழ்நாடு முழுவதும் ஸ்டுடியோ கிரீன் இந்தப் படத்தை வெளியிடுகிறது.

# மலைவாழ் மக்கள் பிரச்சினை




**ஸ்ரீஆர்க்** மீடியா சார்பில் சக்ரா, ராஜ் இணைந்து தயாரித்துள்ள படம் 'நாடு'. 'எங்கேயும் எப்போதும்' சரவணன் இயக்கியுள்ளார். தர்ஷன் நாயகனாகவும் மகிமா நம்பியார் நாயகியாகவும் நடித்துள்ளனர். சிங்கம்புலி, அருள்தாஸ், ஆர்.எஸ்.சிவாஜி, இன்பா உள்பட பலர் நடித்துள்ளனர். சத்யா இசை அமைத்துள்ளார். சக்திவேல் ஒளிப்பதிவு செய்துள்ளார்.

படம் பற்றி இயக்குநர் சரவணன் கூறியதாவது: இது, எளிய மனிதர்கள் பற்றிய கதை. மலைவாழ் மக்கள் பிரச்சனையை பேசி உள்ளோம். கொல்லிமலை பகுதியில் இந்தப் படத்தின் படப்பிடிப்பு நடைபெற்றுள்ளது. பல வருடங்களுக்கு முன்பு அங்கு சென்ற போது, நான் கண்ட நிகழ்வு ஒன்று என் மனதைப் பாதித்தது. அதை மையப்படுத்தி இதன் கதையை உருவாக்கினேன்.

இதில் ஹீரோவாக நடித்த தர்ஷனை ஆடிஷன் வருவதற்கு முன்புவரை, நான் பார்த்ததில்லை. நேரில் பார்த்ததும் இந்த கதாபாத்திரத்திற்கு அவர் சரியானவர் என்று தோன்றிவிட்டது. படத்திற்கான ஒர்க் ஷாப்பில் இருந்து இந்தக் கதையுடன் அவர் பயணிக்கத் தொடங்கிவிட்டார். இவ்வாறு அவர் கூறினார்.

# காதலி ஷபா ஆசாத்துடன் ரூ.100 கோடி வீட்டில் குடியேறவுள்ள நடிகர் ஹிருத்திக் ரோஷன்





**தனது** காதலி ஷபா ஆசாத்துடன் நடிகர் ஹிருத்திக் ரோஷன் ரூ.100 கோடி வீட்டில் குடியேற உள்ளார். மும்பை பாலிவுட்டில் முன்னணி நடிகராக இருந்து வருபவர் ஹிருத்திக் ரோஷன், இந்திய அளவில் அழகான நடிகர்களில் ஹிருத்திக் ரோஷனும் ஒருவர். 'கிரிஷ்', 'தூம்', 'ஓம் சாந்தி ஓம்', 'கைட்ஸ்' உள்பட பல படங்களில் நடித்துள்ளார். பாலிவுட் நடிகர் ஹிருத்திக் ரோஷன் தனது மனைவி சுஷானேயை 2014ம் ஆண்டு விவாகரத்து செய்தார். இருவரும் காதலித்து திருமணம் செய்து கொண்டவர்கள்.

ஆனால் அவர்களுக்குள் கருத்து வேறுபாடு ஏற்பட்டதால் இருவரும் முறைப்படி பிரிந்துவிட்டனர். இந்தத் தம்பதியருக்கும் இரண்டு மகன்கள் இருக்கின்றனர். அவர்களை இரண்டு பேரும் சேர்ந்தே கவனித்துக்கொள்கின்றனர். ஹிருத்திக் ரோஷன் சமீப காலமாக ஷபா ஆசாத் என்ற நடிகையைக் காதலித்து வருகிறார். ஷபா ஆசாத் பாடகியாகவும் இருக்கிறார். இருவரும் அடிக்கடி பொது நிகழ்ச்சிகளுக்குச் சேர்ந்து செல்வதை வாடிக்கையாகக் கொண்டிருக்கின்றனர். கோவாவில் ஹிருத்திக் ரோஷனின் முன்னாள் மனைவி சுஷானே புதிய ஹோட்டல் திறந்த போது அதில் கூட ஹிருத்திக் ரோஷன் தனது புதுக்காதலியோடு சேர்ந்தே கலந்து கொண்டார்.

அதோடு ஹிருத்திக் ரோஷன் குடும்ப நிகழ்ச்சிகள், விருந்துகளிலும் ஷபா ஆசாத் கலந்து கொண்டு வருகிறார்.

# லத்தி





**அறிமுக** இயக்குனர் வினோத் குமார் இயக்கத்தில் நடிகர் விஷால் நடித்துள்ள திரைப்படம் 'லத்தி'. இந்த படத்தில் விஷாலுக்கு ஜோடியாக நடிகை சுனைனா நடித்துள்ளார்.

ராணா புரொடக்சன் சார்பில் ரமணா மற்றும் நந்தா தயாரித்துள்ள இந்த படத்திற்கு சாம் சி எஸ் இசையமைத்துள்ளார். எம். பாலசுப்ரமணியம் ஒளிப்பதிவு செய்துள்ளார். 'லத்தி' திரைப்படத்தின் டீசர் அண்மையில் வெளியாகி வைரலானது. சமீபத்தில் இப்படத்தின் இரண்டாவது பாடல் 'ஊஞ்சல் மனம் ஆடுமே' வெளியாகி கவனம் பெற்றது.

முதலில் ஆகஸ்ட் 12ம் தி வெளியிடத் திட்டமிடப்பட்டிருந்த இந்த திரைப்படம் பல்வேறு காரணங்களால் ஒத்திவைக்கப்பட்டது.

இந்த நிலையில், லத்தி படத்தின் ரிலீஸ் தேதியை படக்குழு அறிவித்துள்ளது.

அதன்படி, 'லத்தி' திரைப்படம் வருகிற டிசம்பர் 22ம் தேதி கிறிஸ்துமஸை முன்னிட்டு திரையரங்குகளில் வெளியாகவுள்ளது. இதனை போஸ்டர் ஒன்றை வெளியிட்டு படக்குழு அறிவித்துள்ளது.

# 'அச்சம் என்பது இல்லையே'



**ஏ.எல் விஜய்** இயக்கத்தில் அருண் விஜய் நடிக்கும் படத்தின் பர்ஸ்ட்லுக் போஸ்டர் வெளியாகி உள்ளது. இயக்குனர் ஏ.எல்.விஜய் இயக்கத்தில் அருண் விஜய் நடிக்கும் 'அச்சம் என்பது இல்லையே' படத்தின் பர்ஸ்ட்லுக் போஸ்டரை படக்குழு வெளியிட்டுள்ளது. குழந்தையுடன் அருண் விஜய் இருக்கும் இந்த போஸ்டர் சமூக வலைதளத்தில் வைரலாகி வருகிறது.

இந்த படத்தில் நடிகை எமி ஜாக்சன் கதாநாயகியாக நடிக்கிறார். மேலும் நிமிஷா சஜயன் முக்கிய கதாபாத்திரத்தில் நடிக்கிறார். இந்த படத்துக்கு இசையமைப்பாளர் ஜி.வி பிரகாஷ் இசையமைக்கிறார். சமீபத்தில் தொடங்கிய இந்த படத்தின் படப்பிடிப்பு விறுவிறுப்பாக நடைபெற்று வருகிறது.

திரில்லர் திரைப்படமாக உருவாகவுள்ள இந்த படம் தந்தைமகள் உறவைப் பற்றியது என்று கூறப்படுகிறது.



# குழந்தைகளுக்கான ஆடை அணிகலன்கள்

பெண் குழந்தைகளுக்கு என பிரத்தியேகமாக பல வண்ணங்கள் மற்றும் பல வித மாடல்களில் ஆடைகள் வந்து கொண்டு இருக்கின்றன. ஆனால் குழந்தைகளுக்கு எந்த நேரத்தில் எப்படி நகைகள், உடைகள் போட வேண்டும் என்று நிறைய தாய்மார்களுக்கு தெரிவதில்லை.

## திருமண விழா

திருமண விழாவுக்கு ஏற்ற உடை பட்டுப் பாவாடை தான். அந்த நேரங்களில் அவர்களுக்கு கழுத்தை ஒட்டி நெக் செயினும், ஒரு சிறிய காசு மாலை அல்லது செயின் போடவும். நெற்றிக்கு சின்ன நெத்திச் சுட்டி, கைக்கு வளையல், கைகளுக்கு மெஹந்தி, மோதிரம் செட், இடுப்புக்கு ஒட்டியாணம் போட்டால், ரொம்ப அழகாக இருக்கும். எந்த வகை நகையாக இருந்தாலும், ஒரே மாதிரி போடவும். பிளேன் நகைகள் திருமண விழாவிற்கு அழகாக இருக்கும். முடிந்தவரை குழந்தைகளுக்கு தங்க நகை போடாமல், ஒரு கிராம் கோல்டு நகைகளை போடுவது நல்லது.

## ரிசப்ஷன்

மாலை நேர ரிசப்ஷனுக்கு, குழந்தைகளுக்கு கல் நகைகள் அழகாக இருக்கும். அந்த நேரத்தில் அவர்களுக்கு ஏற்ற



உடைகள் எது என்றால் காக்ராசோளி, அனார்கலி, சகாரா போன்ற நல்ல ஒர்க் செய்த ஆடைகள் மிகவும் அழகாக இருக்கும். இந்த மாதிரி ஆடைகள் போடும் போது, டிரஸ்சுக்கு மேட்சாக நகைகள் போடவும். கைகள் நிறைய வளையல் போடவும்.

## பர்த் டே பார்ட்டி

அடிக்கடி போவது பர்த் டே பார்ட்டிக்குதான். பார்ட்டிக்கு போகும் போது சிம்பிளாக, மார்டனாக டிரஸ் போடவும். அந்த டிரசுக்கு மேட்சாக மெல்லிய செயின், வளையல், கம்மல் போடலாம். கைகளில் டாட்டூஸ் ஒட்டினால், அழகாக இருக்கும்.



# சாதிக்க நினைக்கும் பெண்களுக்கான தலைமைப் பண்புகள்

பிரச்சினையைக் கண்டு விலகி ஓடாமல் அதை நேருக்கு நேர் சந்திப்பது தலைமை பண்புக்கு மகுடமாக அமையும். தனித்தன்மையை விட்டுக் கொடுக்காமல் மற்றவர்களுடன் இணைந்து செயல்படும் திறமையை வளர்த்துக்கொள்ள வேண்டும். உலக மக்கள் தொகையில் சரிபாதி பெண்கள் என்ற நிலையில், அவர்களுக்கு அளிக்கப்படும் அதிகாரம் சமுதாயத்தில் நேர்மறையான தாக்கத்தை ஏற்படுத்தும் என்று சமூக உளவியலாளர்கள் குறிப்பிட்டுள்ளனர். 2020ம் ஆண்டு மனிதவள மேம்பாட்டு புள்ளி விவரங்களின் படி நமது நாட்டில் உள்ள மொத்த பணியிடங்களில் பெண்களின் பங்கு 24 சதவீதம் ஆகும். சீனாவில் இது 60 சதவீதமாக உள்ளது. சுய வளர்ச்சி அடைந்த ஒரு பெண்தான், குடும்பம் மற்றும் சமூக அளவிலான வளர்ச்சியை பற்றி சிந்திக்கிறாள். அதனால், பெண்கள் கல்வியுடன், தலைமைப் பண்புகளையும் வளர்த்துக்கொள்ள வேண்டியது இன்றையச் சூழலில் அவசியமானது. தலைமை பண்பு மற்றவர்களை பற்றியும் சிந்திக்கும் மனநிலை உள்ளவர்களுக்கே பொருந்தும். குறிப்பாக, பிரச்சினையில் சிக்கியவர்களுக்கு, அதன் தன்மையை அறிந்து வழிகாட்டுவது தலைமை பண்புக்கு உதாரணமாகும்.

மற்றவர்களுக்கு கட்டளை இடாமல், அவர்களை இயல்பாகக் கவருவது தலைமை பண்பின் சிறப்புத் தன்மையாகும். அதற்கு தன்னிடம் இருக்கும் திறமைகளை வளர்த்துக் கொள்வது அவசியம். வெற்றியில் மற்றவர்களுக்கு உரிய பங்கை அளிப்பதில் பாரபட்சம் காட்டுவது கூடாது. திறமை எங்கிருந்தாலும் மனதார பாராட்ட வேண்டும். மற்றவர்களது உழைப்பை அங்கீகரிக்கும் குணம் தலைமை பண்புக்கு அவசியமானது. குடும்பம், பணியிடம், சமூகம் ஆகிய எந்த இடமாக இருந்தாலும், பிரச்சினைக்கு நீண்டகால அடிப்படையில் தீர்வு காண வேண்டும். தற்காலிக தீர்வுகள் பொருத்தமாக இருக்காது. அதுமட்டுமல்லாமல், எடுத்த காரியத்தில் தீர்மானமாகவும் கவனமாகவும் செயல்பட்டு இலக்கை அடைய வேண்டும். சொல், செயல் ஆகிய இரண்டும் நேர்கோட்டில் இருக்க வேண்டும். 'இவர் சொன்னதை செய்பவர்' என்ற பெயர் தலைமை பண்புக்கு அத்தியாவசியமானது. அத்துடன், மற்றவர்களின் நம்பிக்கை, எண்ணம் ஆகியவற்றை புரிந்து கொண்டு அதற்கேற்ப செயல்படுவது அவசியம்.

பிரச்சினையைக் கண்டு விலகி ஓடாமல் அதை நேருக்குநேர் சந்திப்பது தலைமை பண்புக்கு மகுடமாக அமையும். தனித்தன்மையை விட்டுக்கொடுக்காமல் மற்றவர்களுடன் இணைந்து செயல்படும் திறமையை வளர்த்துக்கொள்ள வேண்டும். நடைமுறையில் சாத்தியம் உள்ள விஷயங்களை பற்றித்தான் பேச வேண்டும். நேரடியான சிந்தனை, எளிமையான பேச்சு, கடைப்பிடிக்கத் தக்க வழிமுறைகள் என்று எளிய செயல்திட்டங்களால் வெற்றியை அடைய வேண்டும். தலைமை பண்புக்கு நல்ல உதாரணம் நிதானமான செயல்பாடு. எந்த சூழ்நிலையிலும் நிதானம் தவறாத குணம் மற்றவர்களிடம் இருந்து உங்களை தனித்து காட்டும். எடுத்த தீர்மானத்திலிருந்து எந்த நிலையிலும் மாறாமல் நிற்பதும் அவசியம். தலைமைப் பண்பை வளர்த்துக் கொள்பவர்கள் தங்களது தோற்றத்தில் நிச்சயம் கவனம் செலுத்த வேண்டும். அழகு என்பதை விட தோற்றத்தில் நேர்த்தி என்பதே முக்கியம். அதனால் தலைமை பண்புக்கு பேச்சு, செயல், தோற்றம் ஆகிய 3 நிலைகளிலும் நேர்த்தி என்ற இயல்பு அவசியமானது.

# கருவளையம் நீங்க

முகத்தில் உள்ள முடிகளைஅகற்ற, முட்டையின் வெள்ளை கரு, சர்க்கரை, சோளமாவு அனைத்தையும் ஒன்றாகக் கலந்து பசைபோல் ஆனதும் முகத்தில் தடவவும். காய்ந்தவுடன் மெதுவாக பிய்த்து எடுத்தால் முட்டையுடன் முடியும் எளிதில் வரும்.

சருமம் அழகாகவும், பளபளப்பாகவும் மாற கடலை மாவு, மஞ்சள், சந்தனம், அனைத்தையும் கலந்து முகத்தில் தடவி குளித்தால் சருமம் அழகாகவும், பளபளப்பாகவும் மாறும்.

தலை முடி செழித்து வளர வெந்தயத்தை ஊறவைத்து நன்கு அரைத்து தலையில் பேக் போல போட்டு ஊறிய பிறகு தலைக்கு குளிக்க வேண்டும், இவ்வாறு செய்துவந்தால் பலன் தரும்.

சருமம் நிறம் அதிகரிக்க ஆப்பிள் விழுது இரண்டு டீஸ்பூன், பால்பவுடர் அரை டீஸ்பூன், பார்லி பவுடர் அரை டீஸ்பூன் மூன்றையும் கலந்து முகத்தில் போட்டு அரை மணி நேரம் கழித்து கழுவினால் முகம் மின்னல் போல மின்னும்.



கண்கள் பிரகாசமாக இருக்க இளம் சூடான ஒரு லிட்டர் நீரில், இரண்டு ஸ்பூன் உப்பைப் போட்டு, கண்களை கழுவுதல் வேண்டும். கருவளையம் நீங்க ஆரஞ்சு பழத்தின் சக்கையை கண்கள் மீது அரைமணி நேரம் வைத்திருந்து குளிர்ந்த நீரில் முகத்தை கழுவினால் கருவளையம் காணாமல் போய்விடும்.



# களை கட்டிய வசந்த கானங்கள் கலந்த தேனும் பாலும் இசை நிகழ்வு

கடந்த வாரம் குளிரூட்டப்பட்ட கொழும்பு 13 ஸ்ரீ கதிரேசன் மண்டபத்தில் பிரபல சிரேஷ்ட பாடகர்களான பாஸில், கவிக்கமல் இணைந்து வழங்கிய வசந்த கானங்கள் கலந்த தேனும் பாலும் இசைக் கச்சேரியில் பிரதம அதிதியாக கலந்து நிகழ்வினைச் சிறப்பித்த இலங்கை பொன்மனச் செம்மல் M.M.தாஜ்மஹானை விஷேட அதிதியாக வருகை தந்த கொழும்பு மாநகர சபை பிரதி மேயர் M. T. M. இக்பால் மாலை அணிவித்து கௌரவித்தார்.

ஜனாதிபதியின் இணப்பாளர் ஆனந்தக்குமாரும் இதில் கலநது கொண்டார். பிரதி மேயருக்கு பிரதம அதிதி பொன்னாடை அணிவித்து கௌரவித்தார். ஊடக அதிதிகளாக கவிஞர் ராதா மேத்தா, சிரேஷ்ட ஊடகவியலாளர் நசார், பிரபல அறிவிப்பாளர் உவைஸ் சரீப், பிரபல நடிகை ஈஸ்வரி ஆகியோரும் இதில் கலந்து கொண்டனர்.

இதன்போது மாபெரும் சபையில் நீ நடந்தால் உனக்கு மாலைகள் விழ வேண்டும் ஒரு மாற்றுக் குறையாத மன்னவன் இவன் தாஜ்மஹான் என போற்றிப் புகழ வேண்டும், உன்னை அறிந்தால் நீ உன்னை அறிந்தால் எனும் பாடலை பாஸிலும், கவிக்கமலும் பாடி அசத்தினர். கட்டுடா தாலி கொட்டுடா மேளம் எனும் நகைச் சுவை நாடகத்தை,கலைஞர்களான சபையோரின் கரகோஷத்தைப் பெற்றார். மண்டபம் நிறைந்த ரசிகர்கள் மத்தியில் நடைபெற்ற இந்நிகழ்வுக்கு அகில இலங்கை சமாதான நீதவான் அஸீஸ் லக்ஹானா தலைமை வகித்தார்.





நந்தகுமார், M.M.நசார், நடிகை மல்லிகா ஆகியோர் மேடையேற்றினார்கள்.

இவர்கள் தங்களது நடிப்பாற்றலினால் ரசிகர்களை வயிறு குலுங்க சிரிக்க வைத்தனர்.

பிரபல நடிகர் Disco ராஜா my name is பில்லா, யாரை நம்பி நான் பிறந்தேன் எனும் பாடல்களுக்கு தன் நடிப்பாற்றலை அற்புதமாக நடித்து முன்னாள் கொழும்பு மாநகரசபை உறுப்பினர் பஹாவுடீன் கலைஞர்களான ஜோர்ஜ் பெர்ணாண்டோ, சண்மு ஆகியோர் உட்பட கவிஞர்கள், கலைஞர்கள், வர்த்தகப் பிரமுகர்கள், சமூக சேவையாளர்கள், ஊடகவியலாளர்கள் என பலரும் நிகழ்வினை அலங்கரித்தனர். பிரதம அதிதியின் உரையிலே: உங்கள் விமர்சனம் ஒரு நிதர்சனம் ! உங்கள் பாராட்டு ஒரு தாலாட்டு ! உங்கள் கரகோஷம் என் மனதுக்கு சந்தோஷம் ! மழையைத் துளியாகப் பொழிவதில் வானத்துக்கு ஒரு பிரியம் கலையை ரசனையோடு பாடுவதில் உங்களுக்குப் பிரியம்! உனக்கு மட்டும் உனக்கு மட்டும் ரகசியம் சொல்வேன் அந்த ரகசியத்தை எவரிடமும் சொல்லி விடாதீர் பாஸில் ! எப்பேர்ப்பட்ட அற்புதமான இசை நிகழ்வு ! எவ்வளவு அர்த்தமுள்ள பாடல் வரிகள் ! சேற்றோடு செந்தாமரை சேர்ந்து வளர்வது போல் ! மாற்றார் இனத்தோடு மனமொத்து வாழ்ந்திட்டால் கலகம் எங்கே ? கலவரம் எங்கே ? தேனும் பாலும் வசந்த கானங்கள் ஊடாக இன, மத பேதமின்றி ஒன்று சேர்வோம் ! ஒற்றுமையை வளர்ப்போம் கவி கமல் எனக் கூறி வாழ்த்துக் கவி பாடினார் தாஜ்மஹான்...!



Vasikar Das

Yadhusha Ravithiyagarajah

## வகவம் பதிப்பகம் முதல் வெளியீடு



வலம் புரி கவிதா வட்டம் ஸ்தாபக குழு இயக்கம் (வகவம்) புதிதாக ஆரம்பித்திருக்கும் வகவம் பதிப்பகம் மூலம் இப்னு அஸூமத் மொழிபெயர்த்திருக்கும் சிங்களக் கவிதைகளின் தமிழ் மொழிமாற்றக் கவிதைகள் தொகுப்பு வகவம் பதிப்பகம் முதல் வெளியீடாக விரைவில் வெளிவர தயாரகிக் கொண்டிருக்கிறது.


## கொழும்பில் அறநெறி ஆடற்கலை போட்டி

அகில இலங்கை கிராமிய கலைகள் ஒன்றியம் அறநெறி பாடசாலைகளுக்கு இடையில் நடத்தும் ஆடற்கலை போட்டியின் கொழும்பு மற்றும் கம்பஹா மாவட்ட அறநெறி பாடசாலைகளுக்கு இடையிலான போட்டி எதிர் வரும் 2022.12.11ஆம் திகதி காலை 10 மணிக்கு கொழும்பு 13, ஸ்ரீ கதிரேசன் வீதியிலுள்ள கதிரேசன் மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இந்த முதல் சுற்றுப் போட்டியில் வெற்றி பெறும் அணிகள் அரையிறுதிப் போட்டிக்கு தெரிவு செய்யப்படும். **விபரங்களுக்கு தலைவர் விஜே** 0775933919, ஆலோசகர் அசோகன் 0769683459, ஆலோசகர் ஈஸ்வரலிங்கம் 0773124543.


## 10 வித்தியாசங்களை கண்டுபிடியுங்கள்



## வழிகாட்டுங்கள்





## நிறம் தீட்டுங்கள்



## தொடர்புபடுத்துங்கள்



## உருவங்களின் பெயர்களை எழுதுங்கள்



நான் ரொம்ப பிஸி...

# புத்தாக்கங்களை உருவாக்கி சர்வதேச விருது பெற்ற காத்தான்குடி இளைஞர்

Toronto International Society of Innovation & Advanced Skills அமைப்பினால் சர்வதேச ரீதியாக வருடாந்தம் நடாத்தும் "iCAN 2022" போட்டியில் ("Special Edition of 7th International Invention Innovation Competition in Canada") இம்முறை 81 நாடுகளின் 700 போட்டியாளர்கள் பங்குபற்றிய இப்போட்டியில் மட்டக்களப்பு மாவட்டதின் காத்தான்குடி பிரதேசத்தை சேர்ந்த பாறூக் முஹம்மத் முனீர் இலங்கையைப் பிரதிநிதித்துவப்படுத்தி, பங்குபற்றி சர்வதேச ரீதியில் தகவல் தொழில்நுட்பம் மற்றும் தரவு தொழில்நுட்பம் (Information Technology and Data Technology) மற்றும் பயன்பாட்டு அறிவியல் மற்றும் பொறியியல் (Science & Engineering) போன்ற பிரிவுகளில் முறையே தங்கம் மற்றும் வெள்ளி என இரட்டைப் பதக்கங்களுடன், சர்வதேச விசேட விருது, கனடிய சிறப்பு விருது, முதல் 20 சிறந்த கண்டுபிடிப்பு விருது மற்றும் விசேட ஐரோப்பிய டிப்ளமோ போன்ற விருதுகளை ஒரே தடவையில் வெற்றி பெற்று நம் நாட்டுக்கு பெருமைசேர்த்துள்ளார். இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழுவினால் வருடாந்தம் தேசிய ரீதியில் நடாத்தும் ("Sahasak Nimavum" National Invention and Innovation competition is an annual event organized by the Sri Lanka Inventors Commission) "Sahasak Nimavum 2020" போட்டியில் கிழக்கு மாகாணத்தை பிரதிநிதித்துவப்படுத்தி, பங்குபற்றி தேசிய ரீதியில் தங்கம் மற்றும் வெள்ளி என இரட்டைப் பதக்கங்களைப் வெற்றி பெற்றதன் பயனாக இவருக்கு இச்சந்தர்ப்பம் கிட்டியது.

**பாறூக் முஹம்மத்**






காத்தான்குடி மத்திய கல்லூரி, ஹிழுறிய்யா வித்தியாலயம் மற்றும் சாவியா வித்தியாலயத்தின் பழைய மாணவரான இவர் மென்பொருள் திட்டமிடுதலில் கைதேர்ந்தவராகவும் நவீன இலத்திரனியல் துறையில் ஈடுபாடு கொண்டவராகவும் காணப்படுகின்றார். இவர் பல துறைகளுக்கு மென்பொருளினூடாக பெரும்பாலான தீர்வுகளை வழங்கிவருகின்றார்.

அதேநேரம் இவர் புதிய தொழில்நுட்பங்களை ஆய்வு செய்வதிலும் நவீன யுகத்துக்கு பொருத்தமாக கண்டுபிடிப்புகளை பொதுப் பயன்பாட்டுக்காக தயாரிக்கும் பணியிலும் தன்னுடைய நேரத்தை செலவிட்டு வருகின்றார்.

"REMOTELY CONTROLLABLE SMART SWITCHING DEVICE, SYSTEM AND ASSOCIATED METHOD" என்கிற தானியங்கி முறையில் இயங்க கூடிய மற்றும் நீண்ட கால பயன்பாட்டுக்கேற்ற வகையில் நவீன இலத்திரனியல் சாதனமொன்றை சந்தைப்படுத்தக் கூடிய வகையில் தயாரித்து இப்போட்டியில் பங்குபற்றினார். இந்த கண்டுபிடிப்புக்காக கைத்தொழில் அபிவிருத்தி சபையினால் அங்கீகாரம் பெற்ற சான்றிதழ் விருது வழங்கப்பட்டுள்ளது.

இந்த கண்டுபிடிப்பினுடைய பயன்கள் இவ்வாறு அமையப்பெறுகிறது. ஒரு பயணத்திற்காக வீட்டை விட்டு வெளியேறும் போது சில மின்சார சாதனங்களை அணைக்க மறந்துவிடுவது பெரும்பாலும் நிகழ்கிறது, மேலும் இரவில் விளக்குகளை இயக்க வேண்டியிருக்கும். அலுவலகத்தில் யாரும் இல்லாதபோது விளக்குகள் எரிந்து கொண்டே இருக்கின்றது. சில நேரங்களில் எங்கள் தெரு விளக்குகள் பகல் நேரத்தில் கூட இயங்கி கொண்டிருக்கும். நாங்கள் சில சாதனங்களை அணைக்கவில்லை என்பதை நினைவில் வைத்திருந்தாலும், திரும்பி வந்து அவற்றை அணைக்க கடினமாக இருக்கலாம். தற்போதைய சூழலில் இவை பொதுவாக சாத்தியமில்லை, இது எல்லோரும் பிஸியாக இயங்கும் காலம். இது நமது தேசிய மின்சக்தியை வீணடிக்கும் செயற்பாடாகவுள்ளது.

இவரது கண்டுபிடிப்பு SSL குறியாக்கத்துடன்(encryption) அதிக தனியுரிமை மற்றும் பாதுகாப்போடு பிரத்தியேக சேவையகம் மற்றும் பயன்பாட்டை(App) பயன்படுத்துவதன் மூலம் மிகக் குறைந்த தரவு(Data) நுகர்வு மற்றும் அதிக செயல்திறனுடன் மின் விளக்குகள், மின் விசிறிகள், நீர் (Pump)கள் போன்ற பொதுவான மின்னணு சாதனங்களைக் கட்டுப்படுத்த இவரது கண்டுபிடிப்பு ஒரு தீர்வை வழங்குகிறது.

இவரது கண்டுபிடிப்பு ஏன் மிகவும் முக்கியமானது?

இவரது கண்டுபிடிப்பு பொது மக்களுக்கு மின்சக்தியை திறம்பட பயன்படுத்த உதவுகிறது. அத்தோடு இவரது கண்டுபிடிப்பு ஒரு தேசிய வளத்தை வீணாக்காமல் சேமிக்கிறது.

இவை இவரது கண்டுபிடிப்பின் சிறப்பு அம்சங்கள்:

1. இது காலத்திற்கேற்ற கண்டுபிடிப்பு.
2. மாற்றுத்திறனாளிகள் மற்றும் பலவீனமானவர்களுக்கு இவரது கண்டுபிடிப்பு உதவியாக இருக்கும்.
3. இவரது கண்டுபிடிப்பு தொலைவிலிருந்து கண்காணிக்க உதவுகிறது மற்றும் நிகழ்நேரத்தில் பயன்பாடு(App) வழியாக மின் சாதனங்களை இயக்க / அணைக்க உதவுகிறது.
4. இவரது கண்டுபிடிப்பு மின்சார மற்றும் மின்னணு சாதனங்களை மின் ஏற்ற இறக்கங்களிலிருந்து பாதுகாக்கிறது.
5. இவரது கண்டுபிடிப்பு இடைவெளியில்(Intervals) வேலை செய்ய, நேர அட்டவணைகளுக்கு, ஒளி உணர்திறன் கொண்டதாக திட்டமிடலாம்.
6. இவரது கண்டுபிடிப்பை குரல் கட்டளைகளுடன் இயக்க முடியும்.
7. இவரது கண்டுபிடிப்பை ரிமோட் கண்ட்ரோல் வழியாக இணையம் இல்லாத நிலையில் ஆஃப்லைனில் வேலை செய்ய முடியும், இதனை தேவைகளுக்கு ஏற்ப தனிப்பயனாக்கலாம்.

இவரின் அடுத்த கண்டுபிடிப்பு, "MULTIFUNCTIONAL SMART WATER DISPENSING DEVICE, SYSTEM AND ASSOCIATED METHOD" நீரை சிக்கனமாக பயன்படுத்த கூடிய வகையிலும் தொடுகையின்றியும் நீரை பெற கூடிய வகையிலும் நீண்ட கால பயன்பாட்டுக்கேற்ற வகையிலும் சந்தைப்படுத்தக்கூடிய வகையிலும் ஒரு "Smart Water Tap" ஐத் தயாரித்து இப்போட்டியில் பங்குபற்றினார். இது இலகு தன்மை கொண்ட வகையிலும் சிக்கனத்தை பேணும் வகையிலும் சில சிறப்பம்சங்களோடு தயாரிக்கப்பட்டுள்ளது. இதுவும் மக்கள் மத்தியில் சந்தைப்படுத்தக்கூடிய வகையில் தயாரிக்கப்பட்டுள்ளது.

இந்த கண்டுபிடிப்பினுடைய பயன்கள் இவ்வாறு அமையப்பெறுகிறது.

கை, கால், முகம் கழுவுதல் மற்றும் சமையலறை வேலைகள் போன்ற பல்நோக்குகளுக்கு உட்புறத்திலும் வெளிப்புறத்திலும் இதைப் பயன்படுத்தலாம், மேலும் உணவு தயாரிக்கப்படும் வளாகங்களில் அல்லது வழக்கமான கை கழுவுதல் அவசியமான மற்றும் கண்காணிக்கப்பட வேண்டிய பிற வளாகங்களில் பயன்படுத்துவதற்கு இது மிகவும் பொருத்தமானது என்பது குறிப்பிடத் தக்கது.

தொடர்புகளுக்கு :
ரொம்ப பிஸி
எம்.எஸ்.பாஹிம்...
shumsfahim@gmail.com

## ஔவன் கவிதை

### குருத்திலை/ குயில்/ சிறகு



பாடலின் சிறகுகளை
குருத்திலையில் வரைகிறது தென்றல்
மஞ்சல் நிற இலையுதிரும்
மாலைப்பொழுதில்
செம்மண் தெருவெங்கும்
பாடலை இசைத்துப் பறக்கும்
கருங்குயில்
காற்றில் ஆயிரம் சருகிலைகளை
வரைகிறது பாடல்
அதன் இசையில்
தூசடர்ந்த காலடியில் மீண்டும் துளிர்த்தது
ஒரு குருத்திலை
பிறகு
சிறு சிறகு

# நனவிலி




பதினான்காவது க்ளிப் திரையில் விழவும் தன் கண்களை அகல விரித்துக் கொண்டு காதுகளைக் கூர்மையாக்கினான் சூம்பி.விரிவுரை மண்டபத்தில் / பேனின் இரைச்சல் மெதுவாய் சுழன்று கொண்டிருந்தது. திரையின் காட்சி மாறும் கணங்களிடையே சொற்களை நாதஸ்வரக் குரலில் பொழிந்து கொண்டிருந்தாள் மென்ஸி. முப்பதும் எட்டாத வயது. வயது தாண்டிய அனுபவம். காட்சிக்கு காட்சி நிரூபிக்கும் சம்பவங்கள் சந்தித்த கேசஸ்கள்.

மென்ஸியின் உடல்மொழி தான் மண்டபத்தை தன் வசப்படுத்தும் கருவி. சூம்பியின் கண்கள் பதினான்காவது க்ளிப்பில் வார்ப்பு நிலையடைந்தமைக்கு அது அவன் தான் காரணம். அவயவிக்காட்சியது, போலச் செய்தல் போல்.



மென்ஸி அவனை நோக்கி உடல் மொழியைத் திருப்புவாளோ என எதிர்பார்த்தான். அல்லது சந்தேகித்தான். சைக்கோ லொஜிக்கைக் கதையாடுவதில் மென்ஸி வலுகெட்டிக்காரி. அவள் சிக்மன் ஃபிரொயிட்டிசத்தை முன்னிறுத்தினாள். சிக்மன் ஃபுரொயிட் கனவில் வந்த ராத்திரிகளையும், செக்ஸ் பற்றி மொழிந்த கூற்றுக்களையும் சூம்பி தன் கனவிடுக்குகளில் சொருகி வைத்திருந்தான். ஒரு வகை மனப்பாடம் போன்றது அவனுக்கு ஃபிரொயிடிஸம்.

அடி மனசின் கிடப்பு அவனை மேல் நோக்கித் தள்ளிய ஒருவகை சுனாமி.

மனசை மூன்று கூறாக்கி உளப் பகுப்பாய்வுக் கோட்பாட்டை சிலாகிக்கிறாள் மென்ஸி. சூம்பியின் மனதுக்குள் அவள் அளவுகோல்களை இறக்குகிறாள். முதலில் கனவு மனம். சூம்பியின் வாழ் சூழல் பெருங்கதை. இப்போது அவன் தனிக்கட்டை. கட்டையாகிப் போன மனசை மென்ஸி எப்படித் தான் சிக்மனுக்குள்ளால் வெளியே எடுப்பாள். சூம்பியின் சூழல் குறித்து அவளொரு முறை கண்ணீர் விட்டாள். பலநிறச் சூழல் அது. அவனைப் புகைக்கும் ஒருவித வஸ்துவை நினைத்து மனம் புதைந்து போனவள் மென்ஸி.

மண்டபத்தில் எல்லோரது மூச்சுக் காற்றின் மீது அவள் எழுதும் பெருங்கதை இப்போதும் தொடர்கிறது. சூம்பியினது மட்டுமல்ல, எல்லோரும் அல்லது பெரும்பாலானோர் தரும் நனவடி மனசு பற்றி ஃபிரொயிட் பகுந்தாய்ந்த புத்தகத்தைத் தன் உலகப் படிப்போடு மென்ஸி ஒப்பிட்டுக் கொண்டிருந்தாள். சூழலுடனும் புலனுடனும் தொடர்புத்துறை அடி மனதில் கல்லாகவோ கனவாகவோ பனியாகவோ பாறையாகவோ உறைந்து கிடக்கும் மனசு குறித்து சூம்பி துன்பப்பட்ட காலம் பெரிது.

அவனது நனவில் மனம் நிறைவேற்ற முடியா எண்ணங்களின் கூட்டு.

இது ஃபிரொயிட்டிஸத்தின் 'இட்''. சூம்பியினதும் ஆசைகளால் நிரம்பியது. அவனது 'லிபிடோ''எது. அவன் இப்போது மென்ஸியை உற்றுப் பார்க்கிறான். அவளது உடல்மொழி ஆயிரம் அர்த்தங்களை எழுதுகிறது. ஆனால் சூம்பி நனவடியில் துடித்துக் கிடக்கிறான்.

பொன்மீரா

# "கடந்த'' எனும் சொல்லும், கடக்க முடியா மாயமும்

கவிதையின் வரலாறு நெடுகிலும் அதன் உருவமைப்பிலும், பாடு பொருளிலும், சொல் முறையிலும் மாறுதல் அல்லது கடந்து செல்லுதல் நிகழ்ந்திருக்கிறது. இந்த நிகழ்நிலை கவிதையைப் புதுக்கி வந்துள்ளது.



கவிதையின் இவ் உயிர்ப்பு நிலை, மரபு கடந்து நவீனத்தில் நிகழ்ந்து பின் நவீனத்தில் நுழைந்து என ஒரு வளர் நிலையை அல்லது ஒரு விலகல் நிலையைக் கண்டடைந்தது.

இன்று ஈழத்தில் நவீனம் கடந்த கவிதை எனும் உரத்த சொல்லாடல் குறிப்பாகக் கிழக்குப் புறமிருந்து ஓங்கி நிற்கிறது. அதேவேளை இந்த வகை குறித்த எதிர்ப்புக் குரலும் அங்கு வலுத்து நிற்கிறது.

கவிதைக் கோட்பாட்டு அணுகுதல் குறித்த விளக்கங்கள் பல வந்து போயின. எனினும் கவிதையை அளித்தல் அல்லது வகைமைப்படுத்தல் தொடர்பில் வாதப் பிரதிவாதங்கள் உண்டு.

உண்மையில் கவிதை காலத்தின் வடிகாலில் அதன் யதார்த்தத் தன்மையைப் பெற்றுத் தனக்கான நெடும் பயணத்தை அல்லது வளைந்து நெளிந்து சுழிந்த ஓட்டத்தை நிகழ்த்தி வந்திருக்கிறது. அதன் நீண்ட பயணத்தில் அடைந்த பரிமாணம் இயல்பானது, யதார்த்தமானது.

கவிதையின் இந்த மாற்ற நிலைமையைப் பலரும் தமக்கேற்ப அல்லது தமது இஸங்களுக்கேற்ப மட்டுப்படுத்தும் போக்கு வலுவுற்று நிற்கிறது.ஒரு தேசத்தில் தொடங்கி அழிந்து போன அல்லது மாறிப் போன இஸங்களை புதுப்பித்து அல்லது மீளெடுத்து முன்பிருந்த போக்குகள் அல்லது தன்மைகள் மீது சாடுவது ஆரோக்கியமற்றது.

கவிதை என்பது கவிதை தான். அது மரபு வசனம் புது –நவீனம் பின் நவீனம் மாயப் புனைவு நவீனம் கடத்ததென படிமுறை காட்டுவது ஒரு சட்டகப் போக்குக்கு ஏற்புடையதாக இருக்கலாம். ஆனால் கவிதை என்கிற ஒற்றை வடிவத்தில் அவை அனைத்தும் பின் தள்ளப் பட்டவையேயாகும்.

கவிதை உள்ளடக்கத்தில், வெளிப்படுத்தலில், மொழிமைவில், உத்திகளில் என்று மாறுதலுக்குள்ளாவது கட்டாயமான ஏற்புடையது. அதன் பாய்ச்சலென்பது, வரலாற்று நிகழ்வோட்டத்தில் கவிதையை எப்போதும் முன்னிறுத்தியே வந்துள்ளது. எனினும் பாய்ச்சலின் காலடிகள் சுவடழிந்து போன போக்கையும் இதே வரலாற்றோட்டத்தில் காணலாம்.

கவிதை குறித்த காத்திரமான கதையாடல்கள் ஆரோக்கியமானவை. எனினும் கடந்த என்ற சொல் கடக்க முடியா மாயங்களில் முடிச்சிறுகி நிற்கிறதா என்றும் கேட்கத் தோன்றுகிறது.

# 'வகவம்' மின்னிதழ் வண்ணம்

"தரணியெல்லாம் எங்கள் தாயகமாம்'' என்ற இலக்குக் குரலுடன் வகவம் ஸ்தாபகக் குழு படைப்பாக மின்னிதழ் வடிவில் வெளி வந்திருக்கிறது வகவம் 2.

கவிதைப் பனுவல்களின் அச்சூடக வெளியீட்டுச் சிரமங்களைத் தவிர்த்து மின்னிதழில் அழகிய வண்ணத்தில் கவிதைகள் ஒவ்வொரு பக்கத்திலும் வடிவமைக்கப்பட்டுள்ளன. நாற்பது பக்கங்கள் கொண்ட வகவம் மின்னிதழ் வாசிப்புக் கலாசாரத்தின் இன்னொரு பரிமாணமாகும்.



பத்மலோஜினி ஞானசேகரம் வடிவமைப்பும் மேமன் கவியின் நெறிப்படுத்தலும் இதழ் முழுவதும் அழகூட்டி நிற்கிறது.

துவாரகன், நிக்கி கிஓவன்னி (மொழிபெயர்ப்பு கெக்கிராவ சுலைஹா), மெய்யன் நடராஜ், பாவேந்தல் பாலமுனை பாறூக், காரையன் சுதன், பாப்லோ நெருடா (மொழிபெயர்ப்பு இராஜலட்சுமி), ஜன்ஸி கபூர், ஜே.பிரோஸ்கான், மாரிமுத்து சிவகுமார், மு.இ.அச்சி முஹமட், பசன் சஞ்சய குமரதுங்க, கௌசல்யா ஜலத், மஞ்சுள பெரேரா (மொழிபெயர்ப்பு இப்னு அஸூமத்), அஸ்மாபேஹம், அனார், முல்லை முஸ்ரிபா ஆகியோரின் கவிதைகள் இடம்கொள்கின்றன.

வகவம் 2 இல் வகவம் ஒன்று பற்றி தயாளினி விஜயகுமார் எழுதிய குறிப்பு வகவத்தின் தொடர்ச்சிக்கு ஆற்றுப்படுத்துகிறது.

வகவம் மின்னிதழில் இன்றைய அச்சு வழி வெளியீட்டின் சிரமங்கள் குறித்து ஆசிரியம் உரைக்கிறது. மாற்று ஊடக வழியாக மின்னூடகத்தை வகவம் குழு தெரிவு செய்துள்ளமை கவிதை வாசிப்புத் தளத்தின் பாய்ச்சல்.

இதுவரை ஈழத்தில் வெளிவந்த கவிதை மின்னிதழ்களில் வகவம் தூக்கலாய்த் துலங்கும் புதிய முயற்சியாகும்.

ஸ்தாபகக் குழுவின் இலக்கியப் பணி இடையற்றுத் தொடரட்டும்.

**இந்தியாவின் இரும்புப் பெண்மணி, இந்தியாவின் முன்னாள் பிரதமர், அணிசேரா நாடுகளின் தலைவி, இந்திரா காந்தியின் 38 வது நினைவஞ்சலி**
**(31.10.1984 – 31.10.2022)...!**

# இரும்புச் சீமாட்டி



இந்திரா காந்தி ,முழுப்பெயர் இந்திரா பிரியதர்சினி.இந்தியாவின் மூன்றாவது பிரதமரும், இந்தியாவின் முதல் பிரதமருமான ஜவகர்லால் நேருவின் ஒரே மகளும் ஆவார். ஃபெரோஸ் காந்தியுடனான திருமணத்திற்கு பின் இந்திரா பிரியதர்சினி காந்தியாக மாறினார், சுருக்கமாக இந்திரா காந்தி என அழைக்கப்படார். இந்தியாவின் இரண்டாவது பிரதமராக இருந்த லால் பகதூர் சாஸ்திரியைத் தொடர்ந்து சில நாட்கள் தற்காலிகப் பதவி வகித்த குல்சாரிலால் நந்தாவுக்குப் பின்னர் ஜனவரி 19.1966 இல், பிரதம மந்திரியாகப் பதவியேற்ற இவர் மார்ச் 24.1977 வரை பதவியில் இருந்தார். 1977 இல் நடைபெற்ற பொதுத் தேர்தலில் பெரும் தோல்வியடைந்த இவர் மூன்று ஆண்டுகளுக்குப் பின்னர் நடைபெற்ற தேர்தலில் மீண்டும் வெற்றி பெற்றார். 14 ஜனவரி 1980 ல் பிரதமராக மீண்டும் பொறுப்பேற்றுக் கொண்ட இவர் 1984 இல் கொலை செய்யப்படும் வரை பதவியில் இருந்தார்.....

இந்திரா காந்தி ஓர் சிறந்த அரசியல் திட்டமிடலாளரும், சிந்தனையாளரும் ஆவார். அரசியல் அதிகாரத்துக்கான அசாதாரண பற்றை அவர் கொண்டிருந்தார். ஆணாதிக்க மனப்பாங்கைக் கொண்ட இந்திய சமுதாயத்தில், ஒரு பெண்ணிடம் எதிர்பார்க்கப்படும் தன்மைகளுக்கு மாறாக வலுவான அதிகார பலத்துடன் மிகவுயர்ந்த பதவியிலிருந்து நாட்டை வழி நடத்தினார்.ஒரு பிரதம மந்திரியாக, அவருக்குக் கிடைக்கக்கூடிய அனைத்து வளங்களையும் பயன்படுத்தி தனது பலத்தையும் அதிகாரத்தையும் வலுப்படுத்திக் கொண்டார். அவருக்கிருந்த அதிகாரத்தைப் பயன்



படுத்தி, வலு குறைந்த அமைச்சரவைகளை அமைத்துக் கொண்டதாகக் குற்றம் சாட்டுகிறார்கள். இந்திய தேசிய காங்கிரசிலிருந்த பலம் மிக்க முதிர்ந்த தலைவர்களை ஓரங்கட்டினார். இதன் ஒரு அங்கமாக 1969 இல் குடியரசுத் தலைவர் நியமனத்தில் ஏற்பட்ட கருத்து வேறுபாடுகளைத் தொடர்ந்து ஆளும் கட்சியாக இருந்த இந்திய தேசிய காங்கிரஸ் பிளவுபட்டது. இந்திரா காங்கிரஸ் என்று அழைக்கப்பட்ட, இவருடைய தலைமையில் அமைந்த பிரிவு மிகுந்த பலத்துடன் தொடர்ந்தும் ஆட்சியில் இருந்தது.1971 ஆம் ஆண்டு நடந்த தேர்தலில் அவரது கட்சி மீண்டும் ஆட்சியைப் பிடித்தது. அச்சமயத்தில், மேற்கு, கிழக்குப் பாகிஸ்தான்களுக்கு இடையில் ஏற்பட்ட பிணக்கில், கிழக்குப் பாகிஸ்தானின் தனிநாட்டுக் கோரிக்கைக்கு ஆதரவாகப் பாகிஸ்தானுடன் போரைத் தொடங்கி, கிழக்குப் பாகிஸ்தானுக்குள் படைகளை அனுப்பினார். இந்த வெற்றிகரமான நடவடிக்கையினால் கிழக்குப் பாகிஸ்தான், பாகிஸ்தானிலிருந்து பிரிந்து வங்காளதேசம் என்ற தனி நாடாகியது.1975 இல் அவசர நிலையை அறிவித்த இந்திரா காந்தி, அரசியல் சட்டத்தின் 352 ஆவது விதியை பயன்படுத்தி தனக்கான அதிகாரங்களை அதிகப்படுத்திக் கொண்டதன் மூலம் எதிர்க்கட்சிகளை ஒடுக்க முயற்சித்தார் என்று குற்றம் சாட்டப்பட்டார். 19 மாதங்கள் நீடித்த இந்த நெருக்கடி நிலைமை இந்திரா காந்தியின் செல்வாக்கை பெருமளவு பாதித்தது. எனினும் தனது செல்வாக்கை பிழையாக மதிப்பீடு செய்த இவர், தேர்தலை நடத்திப் பெருந் தோல்வியைத் தழுவினார். இவரது சொந்தத் தொகுதியிலேயே தோல்வியடைந்தார். இவருக்கு வாரிசாக வளர்க்கப்படுவதாகச் சொல்லப்பட்ட இவரது இரண்டாவது மகனான சஞ்சய் காந்தியும் தோல்வியைத் தழுவினார்.

எனினும் இவரது கட்சிக்கு மாற்றாகப் பதவியில் அமர்ந்த பல கட்சிக் கூட்டணி, உட்பூசல்கள் காரணமாக அதன் முழுப் பதவிக்காலத்தையும் நிறைவு செய்ய முடியாமல் மூன்று ஆண்டுகளில் கவிழ்ந்தது. இவ்வாறு எதிர்க்கட்சிகளின் இயலாதத்தன்மை வெளிச்சம் போட்டுக் காட்டப்பட்டதனால், அடுத்து நடைபெற்ற தேர்தலில் இந்திராவையே மக்கள் மீண்டும் தெரிவு செய்தனர். இந்திரா தனது முன்னைய தவறுகளிலிருந்து பாடம் படித்துக்கொண்டார். அவருடைய இரண்டாவது ஆட்சிக்காலம் மிதமான அதிகாரத்துவம் கொண்டதாகவே அமைந்தது. எனினும் இவரது இந்த ஆட்சிக்காலம் சுமுகமானதாக அமையவில்லை. இக்காலத்தில் இவருக்கு வாரிசாக வரக்கூடியவரென எதிர் பார்க்கப்பட்ட சஞ்சய் காந்தி தானே செலுத்திய விமானத்தில் விழுந்து நொறுங்கியதில் காலமானார். சீக்கியத் தீவிரவாதம் வளர்ந்துவந்தது. சமய மற்றும் தீவிரவாதத் தலைவராக இருந்த ஜர்னைல் சிங் பிந்தரன்வாலேயின் அதிகரித்து வந்த செல்வாக்கு இந்திய ஒருமைப்பாட்டுக்குச் சவாலாக அமையுமென இந்தியத் தலைவர்கள் அஞ்சினார்கள்.

**(தொடரும்)**



எஸ்.கணேசன் ஆச்சாரி சதீஷ் ...
கம்பளை

**அங்கம் 11**

## முற்போக்கு சிந்தனைகளால் தமிழினத்தை மீட்டெடுத்த பேரறிஞர் அண்ணா

# மதராச பட்டினத்திற்கு "தமிழ்நாடு" என பெயரிட்டவர் அறிஞர் அண்ணா



மேலும் "ஒன்றே குலம். ஒருவனே தேவன்!" என்று ஒரு தெய்வ கோட்பாட்டை கூறி வந்தார். இதனால் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு கடவுள் நம்பிக்கை கொண்ட ஆத்திகர்களின் ஆதரவும் கிட்டியது.

1957இல் மெரீனா கடற்கரையில் இக்பால் மன்ற சார்பில் நடைபெற்ற மீலாத் விழாவில் அறிஞர் அண்ணாவும் கலந்து சிறப்பித்தார். அண்ணா மீலாத் விழாவில் உரையாற்றும்போது□" எங்களை நாத்திகர்கள் என்று பலரும் குற்றம் சாட்டுகிறார்கள். ஆனால் உருவமற்ற ஒரு தெய்வத்தை நாங்கள் என்றுமே மறுத்ததில்லை. உண்மையில் உலகில் நாத்திகர்கள் என்று எவருமே இல்லை. அப்படி ஒரு வேளை இருந்திருந்தால் நாங்கள் அந்த கூட்டத்தை சேர்ந்தவர்கள் இல்லை!" என்று பேசினார்.

அறிஞர் அண்ணாவின் இக்கருத்துக்களால் கடவுள் நம்பிக்கை கொண்ட இந்துக்கள், முஸ்லிம்கள், கிறிஸ்தவர்களின் ஆதரவும் கிடைக்க ஆரம்பித்தது.

1957இல் நடைபெற்ற தேர்தலில் ஆளும் காங்கிரஸ் கட்சியை எதிர்த்து தி.மு.க. களம் இறங்கியது. தேர்தலில் தி.மு.க.விற்கு "உதய சூரியன்" சின்னம் ஒதுக்கப்பட்டது. அறிஞர் அண்ணா காஞ்சிபுரம் சட்ட மன்ற தொகுதியில் போட்டியிட்டார்.

அண்ணா தமிழகத்தின் பல்வேறு இடங்களுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுதேர்தல்பிரசாரத்தில்ஈடுபட்டார். பெரியாருக்கோ அண்ணா மீது கடுமையான கோபம். எனவே அதுவரை காங்கிரஸை எதிர்த்து வந்த பெரியார் தி.மு.க. விற்கு எதிராக பிரசாரத்தில் இறங்கினார்.

பெரியார் காமராஜருக்கு ஆதரவாக செயல்படுவதாக கூறிக்கொண்டு நேரடியாக காங்கிரஸிற்கு ஆதரவாக பிரசாரத்தில் ஈடுபட்டார். அண்ணாவை பல இடங்களில் கடுமையாக விமர்சனமும் செய்தார். ஆனால் அண்ணா தான் அரசியல் ஆசானாகக் கருதிய பெரியாரின் கருத்துக்களை ஒரு போதும் குறை கூறியதே இல்லை. மாறாக எதையும் தாங்கும் இதயத்தோடு அண்ணா பெரியாரின் பேச்சுக்களை புன்னகையோடு ஏற்றுக்கொண்டார். அறிஞர் அண்ணா காஞ்சிபுரத்தில் வெற்றி பெற்றார். மு. கருணாநிதியும் வெற்றி பெற்றார்.காங்கிரஸ் கட்சி 205 சட்டமன்ற தொகுதிகளிலும் திராவிட முன்னேற்ற கழகம் 124 தொகுதிகளிலும் போட்டியிட்டன. தி.மு.க சந்தித்த முதல் தேர்தல் முடிவிலேயே 15 சட்டமன்ற தொகுதிகளில் வெற்றி பெற்றது.

காங்கிரஸ் கட்சி 151 இடங்களில் வெற்றி பெற்றது. தமிழகத்தில் காங்கிரஸ் கட்சி ஆட்சி அமைத்தது. கட்சி தொடங்கி எட்டு ஆண்டுகளிலேயே தி.மு.க தமிழகத்தின் முக்கிய எதிர்க்கட்சியாக உருவெடுத்தது.

சட்ட மன்றில் மக்கள் பிரச்சினைகளுக்கு முன்னுரிமை அளித்து அண்ணா பேசினார்.


அண்ணாவின் சட்டமன்ற உரையைப் பற்றி அன்றைய சபாநாயகர் குறிப்பிடுகையில் "அண்ணாவின் உரையை கேட்டு மகிழும் லட்சக்கணக்கானோர்களில் நானும் ஒருவன்" என்று புகழாரம் சூட்டினார்.

அண்ணாவிடம் இருந்த அருங்குணங்களே அவரை இன்றளவும் மக்கள் மனதில் நீங்கா இடம் பெறச் செய்துள்ளது என்றால் மிகையாகாது. அண்ணா பொதுவாழ்க்கையில் நுழைந்த காலம் முதல் அவரிடம் அரசியல் நாகரீகம் மிகுந்து காணப்பட்டது. அண்ணா, கருத்தளவில் கொள்கையளவில் தன்னுடன் வேறுபாடு கொண்டவரிடமும் அன்பும் பண்பும் காட்டியவராகவே நடந்துகொண்டார்.

அண்ணா எந்த மேடையிலும் சரி, தனிப்பட்ட முறையிலும் சரி எந்தத் தலைவரையும் இழிவாக பேசியதோ, அநாகரிகமாக பேசியதோ இல்லை. அதற்கு எண்ணற்ற உதாரணங்களை கூற முடியும்.

அண்ணா திராவிடர் கழகத்தை விட்டு வெளியேறி திராவிட முன்னேற்ற கழகத்தை ஆரம்பித்த போது, பெரியாரின் ஆதரவாளர்கள் பல மேடைகளில் அண்ணாவை ஏளனமாக பேசி வந்தனர். அந்தக் கட்டத்தில், அண்ணாவின் மீது அன்பு கொண்டவர்கள் பலர் எதிர்த்தரப்பினரை தாக்கி பேசினார்கள்.

**(தொடரும்)**



கலாபூஷணம்
பரீட் இக்பால்...
யாழ்ப்பாணம்



பிரபல சிரேஷ்ட பாடகர்களான பாஸில், கவிக்கமல் இணைந்து வழங்கிய வசந்த கானங்கள் கலந்த தேனும் பாலும் இசை நிகழ்ச்சி கொழும்பு 13 ஸ்ரீ கதிரேசன் மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது. இலங்கை பொன்மனச் செம்மல் M.M.தாஜ்மஹான் இதில் பிரதம அதிதியாகவும் கொழும்பு மாநகர சபை பிரதி மேயர் M. T. M. இக்பால், ஜனாதிபதியின் இணைப்பாளர் ஆனந்தகுமார் ஆகியோர் விஷேட அதிதிகளாகவும் கலைஞர் ராதா மேத்தா, சிரேஷ்ட ஊடகவியலாளர் நசார், பிரபல அறிவிப்பாளர் உவைஸ் சரிப் ஆகியோர் ஊடக அதிதிகளாகவும் பிரபல நடிகை ஈஸ்வரி, கலைஞர்களான ஜோசப் பெர்ணான்டோ, ஷம்மு, ஓவியன் கலை அதிதிகளாகவும் கலந்து கொண்டனர்.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2022 நவம்பர் மாதம் 27ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.